AR
904

தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்

14

அறிஞர் அண்ணா

தம்பிக்கு
அண்ணாவின் கடிதங்கள்

பதினான்காம் தொகுதி

காஞ்சிக் கடிதங்கள் - 1

அறிஞர் அண்ணா

பல்லடம் மாணிக்கம்
தமிழ் நூல் காப்பகம்
திருமுதுகுன்றம்

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

முதற் பதிப்பு : 1988
பதிப்பு உரிமையுடையது

தமிழ் நூல் காப்பகம்
09214
தமிழ் நகர், விருத்தாசலம் - 606 001.

விலை ரூ. 15-00

அச்சிட்டோர்: சாலை அச்சகம், 11, திருவீதியான் தெரு,
கோபாலபுரம், சென்னை-600 086 [92]

முதல் இரண்டு தொகுதிகளின் முதற்பதிப்பின் முன்னுரை

திரு. நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

'அண்ணா தம்பிக்கு எழுதிய கடிதங்கள்' நூல் வடிவம் கொண்டு அழகும் கவர்ச்சியும் ஒருங்கே ஏற்று, என் கைக்கு வரப்பெற்று மிக்க பேருவகையுற்றேன். அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழ் மூலம் அருமைத் தம்பிமார்களுக்கு எழுதிவந்த மூடங்கல்கள் அனைத்தும் நூல்வடிவம் பெற்றால், அந்த நூல், கருத்துக் கருவூலமாகத் திகழப்பெறுமே என்ற வேணவா என் உள்ளத்தில் நீண்ட நாட்களாக எழுந்ததுண்டு. என்னைப் போன்ற பல்லாயிரக்கணக்கான தம்பிமார்களுக்கும் வேணவா கிளர்ந்தெழுந்திருக்கும் என்பது உறுதி. அந்த வேணவாவை இனிது நிறைவேற்றி வைக்கும் அரும் பெருந்தொண்டை, 'பாரி நிலையத்தார்' செய்திருப்பது கண்டு பூரிப்படைகிறேன். பாரி நிலையத்தாரை வரவேற் றுப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்து வன்மையை யும், அவரது எழுதுகோல் முனையிலிருந்து உருப்பெற் றெழுந்து நாடெங்கணும் வெற்றியுலா வரும் கதைகள்—கட்டுரைகள்—நாடகங்கள்—திரைப்பட வசனங்கள்—எழுத்தோவியச் சுவரொட்டிகள், துண்டு அறிக்கைகள் ஆகியவற்றையும், அவற்றின் தமிழ் மணம் மிகச்சிறந்த முறையில் கமழ்வதையும், இனிய ஓசைபயக்கும் சொற்கள் அருவியின் வீழ்ச்சியெனத் தங்கு தடையின்றிப் பாய்ந்து துள்ளிக் குதித்து ஓடுவதையும், கருத்துக்கள் செறிந்து காணப்படுவதையும், உவமை நயங்கள் பெருவாரியாக ஆங்காங்குப் பளிச்சிட்டு மின்னுவதையும், அறிவும் ஆற்ற லும், உண்மையும் உயர்வும், திண்மையும் திட்பமும், சொல்லழகும் பொருளாழமும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு துள்ளிக் குதிப்பதையும், தமிழ் கற் றறிந்த நல்லறிவு படைத்தோர் அனைவரும் நன்கு உணர் வர். தமிழின்பத்தை எல்லா வகையிலும் சுவைக்க விரும்பு வோர், இந்நூலைச் சுவைத்தாலே போதும். எல்லா வகையான இனிய சுவைகளும் இதனுள் பொதிந்து கிடக் கின்றன.

படித்து மகிழ்ந்து பயன் பெறுவதற்குரியவைகள் பலப் பல இருந்தபோதிலும், ஒவ்வொருவரும் கடிதத்தைப் படிப்பதற்குப் பேராவல் காட்டுகிறோம். அஞ்சலை அன்றாடம் வழி மேல் விழிவைத்துப் பார்க்க நாம் தவறுவதில்லை. அஞ்சல் வந்தவுடன் மற்றப் பணிகளையெல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டுப் பரபரப்புணர்ச்சியுடன் அவற்றைப் பிரித்துப் படிக்கிறோம், பலதரப்பட்ட செய்திகளையும் கருத்துக்களையும் அறிந்துகொள்கிறோம். பொதுவாகக் காதலியிடமிருந்தும், நண்பர்களிடமிருந்தும் நெருங்கிய உறவினர்களிடமிருந்தும் வரும் முடங்கல்களைப் படிப்பதில் ஒருவன் எவ்வளவு ஆர்வமும் அக்கறையும் அகமகிழ்ச்சியும் காட்டுவானோ அவ்வளவு ஆர்வமும் அக்கறையும் அகமகிழ்ச்சியும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதங்களைப் படிப்பதிலும் ஒவ்வொருவரும் காட்டுவர். அவ்வளவு கவர்ச்சியும், அறிவுத் தெளிவும் ஆராய்ச்சித் திறனும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதங்களில் காணப்பெறும். அறிஞர் அண்ணா அவர்களின் உயர்ந்த உள்ளத்தை எழுத்துக்களின் மூலம் எளிதில் கண்டறிய இந்நூல் பெரிதும் பயன்படும்.

அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழில் 'தம்பிக்குக் கடிதம்' என்று தலைப்பிட்டு எழுதிய கடிதங்களைப் பத்துத் தொகுப்புகளாகக் கொண்டுவர முயற்சி எடுத்து, இப்பொழுது இரண்டு தொகுப்புகளை வெளியிட்டிருக்கின்றனர். இந்தப் பத்துத் தொகுப்புகளும் தமிழகத்தின் அரிய பெரிய கருத்துக் கருவூலங்களாகும். இப்பொழுது வெளிவந்துள்ள இரண்டு தொகுப்புகளைப் போலவே, விரைவில் ஏனைய எட்டுத் தொகுப்புகளும் வெளிவருவனவாக!

அறிஞர் அண்ணா அவர்களின் சொல்லமுதைக் கொண்டு இலக்கிய விருந்து படைக்க முன்வந்த 'பாரி நிலைய'த்தாரைப் பாராட்டுகிறேன். தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரும் இந்த இலக்கிய விருந்தை உண்டு மகிழ்ந்து, பயன் பெற்று, இனிதுற வாழ்வார்களாக!

4-1-63

—இரா. நெடுஞ்செழியன்

பதிப்புரை

அறிஞர் அண்ணா அவர்கள் தம்முடைய கருத்துக்களையும் சிந்தனைகளையும் தம்பிக்கு என்ற தலைப்பில் கடித வடிவில் அவர் நடத்தி வந்த 'திராவிட நாடு' இதழிலும் 'காஞ்சி' இதழிலும் அவ்வப்போது எழுதி வந்தார்கள். இவற்றில் சில கடிதங்கள் திராவிடநாடு, காஞ்சி பொங்கல் மலர்களிலும் வெளிவந்தன.

இக்கடிதங்கள் அறிஞர் அண்ணா அவர்களையும் அவர் நேசித்த இலட்சக்கணக்கான தம்பிமார்களையும் ஒருங்கிணைத்துக் கலந்து உறவாடி மகிழச் செய்தன.

திராவிட நாடு இதழ்களில் வெளிவந்த கடிதங்களை வெளியிட அண்ணா அவர்களிடமே இசைவு பெற்று, முதல் இரண்டு தொகுதிகளையும் 1963ஆம் ஆண்டில் வெளியிட்டோம். இவை கடற்கரையில் சீரணி அரங்கில் பல ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் வெளியிடப் பெற்றன.

திராவிட நாடு இதழ்களில் வெளிவந்த கடிதங்கள் பன்னிரண்டு தொகுதிகளாக வெளிவந்து நிறைவடைந்தன. காஞ்சி இதழில் அண்ணா தமது சிறை அனுபவங்களைக் 'கைதி எண் 6342' என்ற தலைப்பில் கடித வடிவமாகவே எழுதி வந்தார்கள். அவைகளைத் தொகுத்து, 'கைதி எண் 6342' என்ற தலைப்பில் தனிநூலாக வெளியிட்டோம். இது அண்ணாவின் கடிதங்களின் பதின்மூன்றாம் தொகுதியாகும்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு, 26-7-64 தொடங்கிக் 'காஞ்சி' இதழில் அண்ணா கடிதங்கள் எழுதத் தொடங்கினார்கள். காஞ்சி இதழில் வெளிவந்த முதல் கடிதத்தின் தலைப்பே 'நீண்ட இடைவெளிக்குப் பிறகு' என்பதாகும்.

காஞ்சி இதழில் வெளிவந்த கடிதங்களை வெளியிடத் திருமதி ராணி அண்ணாதுரை அவர்களிடம் இசைவு

பெற்று வெளியிடத் தொடங்கி இருக்கிறோம். பல காரணங்களால் இவைகளை நூலாக வெளியிடுவதிலும் நீண்ட இடைவெளி ஏற்பட்டுவிட்டது. இனித் தடையின்றி இவை விரைவில் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்பொழுது வெளியிடப் பெறும் இந்தத் தொகுதி மொத்த வரிசையில் பதினான்காம் தொகுதியாகும். காஞ்சியில் வெளிவந்த கடிதங்களில் முதல் தொகுதி யாகும், இதில் பத்துக் கடிதங்கள் வெளிவந்துள்ளன. 'காஞ்சிக் கடிதங்கள்–1' என்று தலைப்பிட்டுப் புதிய எண்கள் கொடுத்திருக்கிறோம்.

காஞ்சியில் வந்த கடிதங்களையும். வழக்கம் போலப் புலவர் நா. அறிவழகன் அவர்கள் உள் தலைப்பிட்டுக் கொடுத்தும், கிடைக்காத கடிதங்களுக்கு 'ஜெராக்ஸ்' பிரதி எடுத்துக் கொடுத்தும் பலவாறு உதவினார்கள். டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் பிரதியை நன்கு ஒப்பு நோக்கி அச்சிட்டு உதவினார்கள். இவ்விரு அறிஞர்களுக்கும், காஞ்சியில் வெளிவந்த கடிதங்களை நூல்வடிவில் வெளியிட எங்களுக்கு வாய்ப்பளித்த திருமதி ராணி அண்ணாதுரை அவர்களுக்கும், அழகாக அச்சிட்டு உதவிய சாலை அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி உரியது.

வழக்கம் போலத் தமிழ்ப் பெருமக்கள் இந்நூல் வரிசையினையும் ஏற்று எங்களை ஊக்குவிக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

—பாரி நிலையத்தார்

பொருள் அடக்கம்

கடித எண்	பொருள்	நாள்	பக்க எண்
1.	நீண்ட இடைவெளிக்குப் பிறகு	26.7.64	1
2.	இதயத்தில் பூத்த மலர்	2.8.64	29
3.	அவர்படும் அல்லல்	9.8.64	46
4.	பன்னீர் தெளித்தாலும்	16.8.64	60
5.	நச்சரவு வளர்க்கின்றார்	23.8.64	76
6.	என்னை வாழவிடு, விலைகளைக் கட்டுப்படுத்து!	30.8.64	96
7.	நாலும் நாலும்	6.9.64	110
8.	புதிய படை புறப்படுகிறது!	13.9.64	125
9.	பொற்காலம் காண...!	14.1.65	148
10.	டில்லிக் கடிதம்	21.3.65	177

காஞ்சி கடிதம் : 1

இடைவெளிக்குப் பிறகு...!

இடையில் கடிதம் எழுதாமைக்குக் காரணம்

ஜோரேசுக்கு 'வண்டி'யே 'சர்க்கார் மாளிகை—
எனக்குக் 'காஞ்சி'யே 'திராவிடநாடு'

இந்தி எதிர்ப்புக்கு மக்கள் பாராட்டு

துதி பாடிக் கிடந்தவர்களின் தூற்றலைப்
பொருட்படுத்தாதே!

மூட்டி விடுவோன்—கேட்டு மருள்வோன்—
மன்றத்தான்— தெளிவளிப்பான்—உரையாடல்கள்

கழகம் புயலுக்குத் தப்பி வளைந்திடும் நாணல்

ஆங்கிலமே ஆட்சிமொழி ஆகவேண்டும் என்பார்
கருத்துரைகள்

இந்தி ஆதிக்கத்தைக் கண்டித்தவர்களின் கனிவுரைகள்

தம்பி,

நீண்ட பல நாட்களுக்குப் பிறகு—நாட்களா?—பல திங்களுக்குப் பிறகு மடல் மூலம் உன்னுடன் அளவளாவி மகிழும் வாய்ப்பினைப் பெறுகிறேன். என் இதயத்துக்குப் பெரிதும் வேதனை தந்த இடைவெளி. குற்றம் உன் மீது துளியும் இல்லை. என் நிலை விளைவித்ததே இந்த இடை வெளி. கிழமைதோறும் நாட்டு நடப்புகளைக் காண்பதால் என் உள்ளத்தில் எழும் எண்ணங்களை உன்னிடம் எடுத்துக்கூறி, உன் இசைவு எத்தகைய செயல் முறைக்குக் கிடைக்கும் என்பதனைக்

கண்டறியும் சுவைமிக்க சீரிய முயற்சியாக 'தம்பிக்குக் கடிதம்' எனும் இப்பகுதியைத் துவக்கினேன்—வளர்ந்தது—களிப்புமிகக் கொண்டேன்—உன் மகிழ்ச்சியையும் நான் அறிவேன்.

ஆனால்...?—ஆனால் என்ன அண்ணா! நான் இதழ் பெற மறுத்தேனா? இன்முகம் காட்டத் தவறினேனா? ஒரு கிழமை மடல் வரத் தவறினாலும், ஏன் வரவில்லை? ஏன் வரவில்லை? என்று ஆவலுடன் கேட்காதிருந்தேனா? ஆனால் என்ற ஆபத்தான வார்த்தையைப் போடுகிறாயே! என் மீதா தவறு இருக்கிறது?—என்று, தம்பி! கேட்கத் துடிக்கிறாய், உணர்கிறேன்; ஆனால், அந்தக் கேள்வியுடன் கோபத்தை அல்ல, கனிவினைத்தான் கலந்து தருகிறாய்—என்னிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள ஓராயிரம் தொல்லைகள் நிரம்பிய பணியினைக் குறித்து உனக்கே தெரியுமே. கடுமையான பணியாற்றுவதற்கு இடையிலேயும், உனக்கு மடல் எழுதவும், கதை, கட்டுரை, உரையாடல் போன்ற வடிவங்களில் என் எண்ணங்களை வெளியிடவும் நான் தயங்கினதுமில்லை—அஃது எனக்குப் பளுவான வேலையாகவும் தோன்றினதில்லை—சொல்லப்போனால், மனத்திலே ஏற்பட்டு விடும் சுமையும், அதனாலேற்படும் சோர்வும், உனக்காக எழுதும்போது பெருமளவு குறைந்து போவதுடன், புதிய தெம்பும் பிறந்திடுகிறது—ஆகவே இடையில், இதழ் நிறுத்தப் பட்டதற்குக் காரணம், எனக்கு எழுத நேரமும் நினைப்பும் கிடைக்கவில்லை என்பதுமல்ல, எழுதுவதால் களைப்பும் இளைப்பும் ஏற்பட்டுவிட்டது என்பதுமல்ல. இதழ் நடத்தும் நிர்வாகப் பொறுப்பினைப் பார்த்துக்கொள்ள, முட்டுப்பாடின்றி நடத்திச்செல்ல எனக்கு நேரம் கிடைக்காததும், அதன் காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியுமே, திராவிட நாடு இதழ் நிறுத்தப்பட்டதற்குக் காரணம். எனக்கு மட்டுமே தொல்லைதந்த நிலைமைகளைப் பற்றித் தம்பி! உன்னிடம் சொல்லி, உன் மனத்துக்குச் சங்கடத்தை உண்டாக்க விரும்பவில்லை; பல்வேறு காரணங்களால், 'திராவிட நாடு' நிறுத்தப்பட்டது; பல திங்களாகிவிட்டதால், 'திராவிட நாடு' என்ற பெயருடன் இதழ் நடத்தத் துரைத்தனம் அளித்திருந்த அனுமதி காலாவதி ஆகிவிட்டது. மீண்டும் அதே பெயருடன் இதழ் நடத்தத் துரைத்தனத்தாரை அணுகும் முயற்சி நடைபெற்றவண்ணம் இருக்கிறது—நண்பர்

செழியன் M. P. அதற்காவன செய்வதாகக் கூறியுள்ளார்—என்றாலும், அதற்கான 'உத்தரவு' கிடைத்திட எத்தனை காலமாகுமோ, யார் கண்டார்கள்! துரைத்தனத்தாருக்குத் தான் என்மீது அளவுகடந்த அன்பாயிற்றே!! அறிவாயே!! அதனால், நான் சிறையில் இருந்தபோது, என் இளையமகன் இளங்கோவன், 'காஞ்சி' எனும் பெயரில் கிழமை இதழ் 'இலக்கிய இதழ்' நடத்த—பெற்றிருந்த அனுமதியைப் பயன்படுத்தி, என் பணியினைத் தொடர்ந்திட முனைகின்றேன். 'திராவிட நாடு' இதழ் நடத்தத் துரைத்தன அனுமதி கிடைத்ததும், அந்தப் பெயருடன் இதழ் வெளிவரும்—'காஞ்சி இலக்கிய இதழாகிவிடும். இந்த நல்ல நம்பிக்கையுடன் நான் முன்பு 'திராவிட நாடு, இதழில் தந்து வந்தவைகளை இனி, 'காஞ்சி' இதழ் மூலம் தர உன் இசைவு கிடைத்திடும் என்று எதிர்பார்த்து, பணியினைத் துவக்குகிறேன்.

தம்பி! எப்போதோ படித்த ஒரு வரலாற்றுத் துணுக்கு நினைவிற்கு வருகிறது. தென் அமெரிக்க பூபாகத்தில் மெக்சிகோ நாட்டில் விடுதலைப்போர் நடாத்திய 'ஜோரேஸ்' எனும் மாவீரன், தலைநகர் இழந்து, அரசாங்க அலுவலகம் இழந்து, குதிரைகள் பூட்டப்பட்ட ஒரு வண்டியிலேறி, காட்டுப்பகுதிக்குச் செல்கிறான்; உடன் இருந்த தோழர்கள் கேட்கிறார்கள், ''சர்க்கார் மாளிகை பறிபோய்விட்டதே, இனி சர்க்காரை எங்கிருந்து நாம் நடத்துவது?'' என்று; ஜோரேஸ், பதிலுரைத்தான், ''நாம் இருக்கும் இடம்தான் சர்க்கார் மாளிகை! முன்பு கற்களால் கட்டப்பட்ட மாளிகையிலிருந்து கொண்டு சர்க்காரை நடத்திவந்தோம்; அது மீண்டும் நம் கைவசமாகும் வரை இந்த 'வண்டி'தான் சர்க்கார் மாளிகை!'' என்று.

கோபித்துக்கொள்ளப் போகிறார்கள் தம்பி! பார்! பார்! இந்த அண்ணாத்துரை எத்தனை ஆணவத்துடன் தன்னை ஜோரேசுடன் ஒப்பிட்டுக் கொள்கிறான் என்று. நான் கூறியதிலே எனக்கும் ஜோரேசுக்கும் அல்ல; அந்த மாவீரன் சர்க்கார் மாளிகையாக, வண்டியைப் பயன்படுத்திக்கொண்டது வரையிலே மட்டுமே உவமை என்று கூறி, அவர்களின் கோபத்தைக் குறைத்துக் கொள்ளச் சொல்லிவிடு—தம்பி! ஜோரேஸ், வண்டியைச் சர்க்கார் மாளிகையாக்கிக்

கொண்டதுபோல, நான், நிலைமை காரணமாக,
காஞ்சி இதழை 'திராவிட நாடு' இதழாகப் பயன்
படுத்திக்கொள்கிறேன்.

இரவு ஒரு மணிக்கு விழுப்புரம் கூட்டத்தை
முடித்துக்கொண்டு வீடு திரும்பினேன்—அதற்குப் பிற
கும் தூக்கம் பிடிக்கவில்லை—மூன்று நாட்களாக,
திருச்சி—பெரம்பலூர்—விழுப்புரம் ஆகிய இடங்
களில், இந்தி எதிர்ப்பு அறப்போரில் ஈடுபட்டு, சிறை
சென்று திரும்பிய தோழர்களை வாழ்த்தி வர
வேற்கும் விழாக்களில் கலந்துகொண்டதால் கிடைத்த
உற்சாகம் என்னைத் தூங்கவிடவில்லை. எத்துணை
ஆர்வத்துடன் இருக்கின்றனர் சிறைசென்று வந்துள்ள
நம் தோழர்கள், மக்களின் அன்பு எத்தகைய மன
நெகிழ்ச்சியைத் தருகிறது! சிற்றூர்களிலே எல்லாம்
கூடக்காண்கிறேன் ஒரு புது எழுச்சி, மகிழ்ச்சி. பல
மிகக்கொண்ட ஒரு ஆட்சி, பிடிவாத உணர்ச்சியுடன்
இந்தி ஆதிக்கத்தைப் புகுத்தும்போது, இன்னமும்
போதுமான அளவு இதழ்களின் நல்லாதரவைப் பெற
முடியாத நிலையிலே உள்ள நமது கழகம், துணிந்து
நின்று அந்த ஆதிக்கத்தை எதிர்ப்பது கண்டு, மக்கள்
மனதாரப் பாராட்டுகிறார்கள்.

இவர்களின் எதிர்ப்பும் இல்லை என்றால்...! என்று
எண்ணிப் பெருமூச்செறிபவர்களும்,

இவர்களின் எதிர்ப்பினால் அல்லவா, இந்தி ஆதிக்கக்
காரர்கள், கருப்பஞ்சாற்றிலே குழைத்துத் தருகிறார்கள்
கடுவிஷத்தை என்று கூறுபவர்களும்,

இவர்களின் எதிர்ப்புக் கண்டும், சர்க்கார் தன்
போக்கை மாற்றிக்கொள்ள மறுக்கிறதே என்று கூறி
ஆயாசப்படுபவர்களும்,

பாவம், இளைஞர்கள்! இன்பவாழ்வில் ஈடுபடவேண்
டிய வயதினர்! சிறைக்கொடுமைக்குத் தம்மைத்தாமே
ஆளாக்கிக்கொண்டார்கள்; அவர்கள் சிறையிலே மேற்
கொண்ட இன்னல்களை ஒரு நொடியிலே மறந்துவிடத்
தக்கவிதத்தில், நமது இதயத்திலிருந்து எழுந்திடும்
அன்பினைச் சொரிவோம் என்ற உணர்ச்சி கொள்பவர்
களும்,

நாட்டு மொழி, பாட்டு மொழி, வீட்டு மொழி என்
றெல்லாம் பிறர் பேசுகிறார்கள், விரிவுரையாற்றுகிறார்
கள், போற்றுகிறார்கள், புகழாரம் சூட்டுகிறார்கள், எனி
னும் வேற்றுமொழி வேங்கை எனப் புகுவதுகண்டு விரட்
டிட முன்வருகிறார்களில்லை. இந்த இளைஞர்களோ,
எமது மொழியை அழித்திடவும், எமது வாழ்க்கை நிலை
யினைக் கெடுத்திடவும் வந்திடும் இந்தியினை எத்தனை
இன்னல்கள் எமைத் தாக்கிடக் கிளம்பிடினும், எதிர்த்தே
நிற்போம் என்று சூளுரைத்துச் செயல்படுகின்றனரே;
இத்தகையார் 'இரண்டாங்கட்டிலும்' இன்பத் தமிழ்
அழிப்பார் கூடத்திலும் இருந்திடும் நிலை உளதே; இந்தக்
கொடுமையினை மாற்றிடும் நன்னாளே, பொன்னாள்,
அது எந்நாள், எந்நாள்? என்று ஆவலுடன் கேட்ட
வண்ணமுள்ளனர் பல்லாயிரவர்.

தம்பி! சிறை சென்று திரும்பிடும் தோழர்களில்
பலருக்கு உடல் நலிவு இருந்திடக் காண்கிறேன்—
நானே அப்படித்தான்—ஆனால் உள்ளப்பாங்கோ!
நாம் தூய்மையான, தேவையான, நியாயமான ஒரு
அறப்போரில் ஈடுபட்டிருக்கிறோம் என்ற எழுச்சிமிகு
எண்ணத்தை உள்ளம் ஏந்திக்கொண்டிருக்கக் காண்
கிறேன்—பெருமிதம் கொள்கிறேன்.

சிறையிலே உடல்நலக் குறைவு ஏதேனும் ஏற்பட்
டதோ?—என்று கேட்கிறேன், விழுப்புரம் தொகுதி சட்ட
மன்ற உறுப்பினர் சண்முகம் அவர்களை—அவர் இளைஞர்
அல்ல—அவர் கூறுகிறார், ''அதெல்லாம் இல்லை இருந்
தாலும் பரவாயில்லை''—என்று; கூறும்போது முகத்திலே
புதியதோர் பொலிவு மலரக் காண்கிறேன். மருத்துவமனை
யில் கிடத்தப்பட்டிருந்த அன்பில் தர்மலிங்கம்-இன்றும்
முழு அளவு நலம் பெற்றுவிட்டார் என்று கூறுவதற்கில்லை
—அவரைக் கேட்கிறேன் என்ன? என்று, ''ஒன்றுமில்லை!
நன்றாக இருக்கிறேன்'' என்கிறார்; வழக்கமாக அவர்
பார்வையிலே ஒரு மிரட்சி தெரியும், இப்போது ஒரு புது
விதக் கனிவே பிறந்திருக்கிறது சிறைச்சாலை அறச்சாலை
யாகிவிட்டிருக்கிறது, தம்பி! அங்குச்சென்று திரும்பியவர்
கள் செந்தமிழ்க்குத் தீமை வந்த காலை நாம் நம்மாலான
செயலினைச் செய்தோம் என்ற உணர்ச்சி பொங்கிடும்
நிலை பெற்றுள்ளனர். அறப்போர் வெற்றி ஈட்டித் தரு
கிறது என்பதற்கு இதனைச் சிறந்ததோர் சான்றாக நான்
கொள்கிறேன். சிறைக்கஞ்சா உள்ளமும், சிறைக் கொடு

மைகளைக் கண்டபிறகும் சலிப்புப் பெறாத மனமும் ஏற்பட்டுக்கொண்டு வருவது, கழகத்திற்குக் கிடைத்திடும் புதியதோர் கருவூலமென்பேன்.

இத்தகைய அறப்போர் வீரர்தம் மனப்போக்கு பற்றியே ஆங்கிலக் கவிஞரொருவர்,

கருங்கற் சுவரும் காவற் கூடமாகுமோ
இரும்புக் கம்பியும் பெருஞ் சிறையாகுமோ
தூய்மை மனத்தன் விடுதலை வீரன் புகும்
சிறைச்சாலை தானும் அறச்சாலை ஆகுமே.

என்று கூறினார்.

இத்தகைய மனப்பான்மையின் மாண்பினை அறிந்து கொள்ள இயலாதார் கடாவுகின்றனர், "போராட்டமா! எப்போது வெற்றிபெறும்" என்பதாக.

காகிதத்தால் பூ செய்து, அதற்குக் கவர்ச்சிமிகு வண்ணம்பூசி, சிறிதளவு நறுமணமும் தடவி, அங்காடிக் குக் கூடை கூடையாகக் கொண்டு செல்வது எளிது—நேரமும் அதிகம் பிடிக்காது. ஆனால் அதனை எவர் கொள்வர்? எதற்கு அது பயன்படும்? காகித மலர்க்குவியல் கடை நிரம்ப வைத்திருக்கின்றேன், காணவாரீர்! பெற்றுச் செல்வீர்! பெருமகிழ்வு கொள்வீர்! என்று கூவிக்கூவி விற்றாலும், அந்த இடத்தைப் பூக்கடை என்று எவரும் கூறிடார். எளிதாகச் செய்திடக் கூடியது காகிதமலர்—மல்லியும் முல்லையும், மருக்கொழுந்தும் பிறவும் எளிதிலே கிடைத்திடத்தக்க முறை இல்லை. பாத்தி எடுத்து, பண்படுத்தி, பதியம் வைத்து, பலநாள் பாடுபட்ட பிறகே, மலர் கிடைத்திடும். கரத்திலே முள்தைக்கும், காலிலே கல் தாக்கும், கோடையின் கொடுமை, மாரியின் மருட்டுந் தன்மை என்பவைகளைத் தாங்கிக் கொள்ளவேண்டும், மணமிகு முல்லை பெற; கிடைத்திடின் மணம் இனிமை தரும், கிடைக்கு முன்பு பொறுமையுடன் வேலை செய்தாக வேண்டும்.

நாம் மேற்கொண்டுள்ள செயல், காகிதப்பூ செய்திடுவது போன்றது அல்ல; முல்லை பூத்திடும் பூங்கா அமைப்பது போன்றதாகும். பல்வேறு வகையான வலிவினைத் தேக்கி வைத்துக்கொண்டு, துரைத்தனத்தார், இந்தி ஆதிக்கத்தைப் புகுத்துகின்றனர்; அதனை எதிர்க்கும்

நம்மிடம், தூய்மையும் நேர்மையும், அஞ்சாமையும் துவளாமையும், அவசரப்படாத தன்மையும், நம்பிக்கையும் படைக்கலன்களாக உள்ளன. இந்த இருதரப்புக்கும் இடையில் எழும் 'போராட்டம்', முள்ளு முனையிலே மூன்று குளம் வெட்டிடும் மாயத்தைத் துணைகொண்டது அல்ல; பிடி சாபம்! என்று சபித்திடும் தபோபலத்தைத் துணைக்கொண்டதும் அல்ல. தொடர்ந்து பணியாற்றுவது, துவளாமல் கிளர்ச்சி நடத்துவது, பொறுப்புடன் அறப்போர் நடாத்துவது எனும் முறையில் அமைந்திருப்பது. வெள்ளியன்று விதை தூவி செவ்வாயன்று அறுவடை செய்திடும் விதமாக ஒரு விசித்திர வெற்றியை இதிலே, ஏமாளிகளன்றிப் பிறர் எதிர் பார்க்கமாட்டார்கள். காலம் வரவேண்டும்; காலம் கனியவேண்டும்: காலத்தைக் கனிந்திடச் செய்யவேண்டும், வெற்றியை ஈட்டிட. தம்பி! நமது தோழர்களின் தியாக உணர்வு, காலத்தைக் கனிந்திடச் செய்யும் என்பதிலே எனக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது; நான் சிறைமீண்டு, கலந்துகொண்ட விழாக்கள் என் நம்பிக்கையை மேலும் வலுவுள்ளதாக்கி இருக்கிறது.

ஒரு இயக்கம், எதிர்ப்பைத் தாங்கிக்கொள்ள, சில காலத்திற்கெல்லாம் பயிற்சி பெற்றுவிடும், பக்குவம் பெற்றுவிடும் ஆனால், ஏளனத்தைத் தாங்கிக் கொள்ளும் மனப்போக்கு எளிதில் வளராது; அதிலும் எதையேனும் மென்று தின்றபடி காலத்தைக் கொன்று கிடப்பவர்கள், இடம் தமதாக ஏதேதோ செய்து பார்த்துக் கிட்டாது போகும்போது எட்டடுக்கு மாடியிலே பெட்டி தூக்கும் வேலையேனும் பெற்று, மேலிடம்சென்றுவிட்டேன் என்று நாடகம்புரிபவர்கள், ஏளனமொழியினை எடுத்து வீசிடும் போது, கனகமணிக் கட்டிலிலே படுத்துத் துயிலும் காதற் கிழத்தியையும் அவள் ஈன்ற கனியையும் விட்டுப் பிரிந்து, காரிருளில் கானகம் சென்று, ஊர் அழிக்கப் புறப்பட்ட கடும் புலியை வேட்டையாடச் சென்றிடும் வீரன்போல, இனிக்க இனிக்கப்பேசி, இல்லமதில் இருந்திட வாய்ப்பும் வசதியும் நிரம்பப் பெற்றிருந்தும், கடுஞ்சிறை ஏகியேனும் கன்னித் தமிழ் காத்திடுவோம் என்று கடமை உணர்ச்சியுடன் பணியாற்றி வருபவரை ஏளனம் பல பேசிடும் போது, தாங்கிக்கொள்வதென்பது மிகமிகக் கடினம்—ஆனால், தாங்கிக் கொண்டாலன்றி அந்த இயக்கம் தணலில் தங்கம் போலாவது முடியாது—ஆகவே,

தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும் என்று நான் கூறிய
போது கேட்டுக் கொதித்தவரும் கோபம் கொப்பளிக்கும்
நிலை பெற்றவரும் உண்டு—என்றாலும், என்னிடம்
அவரெலாம் கொண்டுள்ள உள்ளன்பு காரணமாக, என்ன
செய்வது! சொல்கிறான் அண்ணன்! சோற்றுத் துருத்தி
களின் சொல்லம்பைத் தாங்கிக்கொள்வோம்! என்று
முடிவெடுத்து, தாங்கிக்கொள்ளும் உரம்பெற்றுவிட்டனர்.
நமது கழகம் இந்தக் கட்டம் சென்றிருப்பதனை நான்
மிகமிக முக்கியமானதாகக் கொள்கிறேன்.

ஏளன மொழி எரிச்சலூட்டும்-எரிச்சல் நம்மைச்
சுடுசொல் வீசிடுவோராக்கிவிடும்-சுடுசொல் வீசி
டினோ, நாம், சோர்வகல மது அருந்திட முனைவோன்
இறுதியில் தானே மதுக்குடமாகிடுதல்போல, சுடு
சொல் வீசிட முனைந்துவிட்டால், தெளிவு, கனிவு,
அறம், அன்பு, நெறி, நேர்மை யாவும் பட்டுப்போய்
விடும். குறிக்கோள் கெட்டுப்போய்விடும், நாடு
நம்மைக் கைவிட்டுவிட்டு, இவனும் காட்டானாகத்
தான் இருக்கிறான்! ஆந்தை அலறுவதை ஆயிரமுறை
கேட்டிடினும் குயில் தன் குரலோசையை மாற்றிக்
கொள்கிறதா! எவரெவரோ ஏளனமொழியில் பேசு
கிறார், ஏசுகிறார் என்பதற்காக, இவர்கள் வெகுண்டு
அதே முறையை, அதே மொழியை மேற்கொள்வதா?
மேற்கொள்கிறார்கள் எனின், இவர்கள் அவர்கள்
போன்றார் என்பதன்றி வேறென்ன கூறமுடியும்
என்று தீர்ப்பளித்திடும். நமது தோழர்கள் இந்தத்
தெளிவு பெற்றதால், தூற்றுவோர் தூற்றட்டும்,
அதிலும் இவர்கள் துதிபாடிக்கிடந்தவர்கள் இன்று
தூற்றித் திரிகிறார்கள், இதனை நாம் பொருட்
படுத்தத் தேவையில்லை, அவர்கள் நாப்பறை கொட்
டட்டும், நாம் நமது யாழொலியைக் கெடுத்துக்
கொள்ளலாகாது என்ற உறுதிபெற்றுவிட்டனர்.

எதிர்ப்பு, ஏளனம் எனும் இரு கூராயுதங்களும் முனை
மழுங்கிப் போய்விட்டதனை, தம்பி! நாமே காண்
கின்றோம்; களிப்பும் கொள்கின்றோம். சிலர், தமது
முறை பலன்தரவில்லை என்பதனை அறிந்தும், வேறு
முறை அறியாத காரணத்தால், பொய்த்துப்போன
முறையையே மேற்கொண்டுள்ளனர்—இன்னமும். மக்கள்
விரும்பவில்லை, கொள்ள மறுக்கின்றனர் என்பதை

அறிந்த பின்பும் காஞ்சிரம், தன்னிடம் சுவை கூட்டிக்
கொள்ள முடிகிறதோ!

ஆனால், எனக்குத் தம்பி! நம்பிக்கை இன்னமும்
இருக்கிறது. தமது நடையும் முறையும் பலன் தாராத
தனை உணர்ந்து ஓர்நாள் வெட்கித் தலைகுனிந்து தமது
நெஞ்சத்துக்குத் தாமே வேண்டுகோள் விடுத்துக்கொள்ளப்
போகின்றனர், இன்று வாய் வலிக்க வம்புபேசிடுவோர்.

அவர்கள் அந்நிலை பெறினும் பெறாது போயினும்,
ஏளனத்தையும் ஏசலையும் தாங்கிக்கொள்ளும் மனநிலை
நமக்குக் கிடைத்திருப்பதை நாம் மாற்றிக்கொள்ள
லாகாது—புள்ளிமான் காட்டுப்பன்றியின் உறுமலைப்
பெறாது—எந்நாளும்.

எரிச்சலூட்டும் ஏளனம் பலனற்றது கண்டவர்கள்,
இட்டுக்கட்டுவதும், ஒட்டி உருவாக்குவதும், பலன்
தருமென்று கருதி, அந்த 'வித்தை'யையும் செய்து காட்டு
கின்றனர்—அதிலும் அவர்கள் காண்பது தோல்வியே.

போராட்டம் வலிவிழந்துவிட்டது பொலிவிழந்து
விட்டது, போற்றுவார் இல்லை, துணை நிற்பார் இல்லை,
பிசுபிசுத்துவிட்டது மதமதத்துவிட்டது என்றெல்லாம்
பேசிப் பார்க்கின்றனர்.

இந்தியை எதிர்த்து இத்தனை வீராவேசமாகப் பேசு
கிறார்களே இந்த வாய்ச்சொல் வீரர்கள்! கச்சையை
வரிந்து கட்டிக் கொண்டு களம்புகாமல், கவாத்து பழகு
வதும், அணிவகுப்பு நடாத்துவதும், கருத்தறிவதும் என்ற
முறையில் காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறார்களே,
கவைக்குதவாதார்! கண்டீரே! காளையர்காள்! கடுங்
கோபம் எழவில்லையோ உமக்கு! வழி காட்டத் தெரியா
தவர்களை நம்பி நாசமாகிறீர்களே! போர்! போர்! என்று
முழக்கமிடுங்கள்; புறப்படு! புறப்படு! என்று எக்காள
மிடுங்கள்! புறப்படாவிட்டால், வெளியேறுங்கள்!
வீரர்கள் நிரம்ப உள்ள கோட்டம் வாருங்கள்! என்றெல்
லாம் வீரம் பேசினவர்களை நாடு பார்த்தது; நாம்
போரிடமாட்டோம், நமக்கு இல்லை அதற்கான நாடி
முறுக்கு என்று சிலராவது நம்புவார்களா என்று
மோப்பம் பிடித்துக் கிடந்தவர்களையும் நாம் அறிவோம்!
இன்றோ நாம் போரில் ஈடுபட்டிருத்கிறோம் இந்தி ஆதிக்
கத்தால் ஏற்படும் பொல்லாங்கினை எதிர்த்து; துந்துபி

முழக்கினோர், கொம்பு ஊதினோர், **என்ன செய்கின்** றனர்? எதற்காக இந்தப் போராட்டம்—தேவை இல்லை—பொருள் இல்லை—என்று பேசுகின்றனர்!! நாடு நகைத்திடாதிருக்க முடியுமா? நாட்டிலுள்ளோரில் சிலருக்கேனும் தோன்றாதா, "வீரப்பா! வீரப்பா! வெட்டிப் பேச்சு ஏனப்பா! இந்தி எதிர்ப்பு பொது அப்பா! சந்து நின்று நீ சொன்ன தப்பா!! கொளுத்துகிறார் கழகத்தார்! இந்தி ஆதிக்கத்தைக் கொளுத்தி வீரம் நிலைநாட்டப்பா! தூற்றித் திரிவது போதுமப்பா, தொடுத்திடப்பா இந்தி எதிர்ப்புப் போர்!!" என்று கேட்க. ஆனால் யாரும் கேட்கவில்லை — ஏனென்கிறாயோ தம்பி — கேட்பதே நேரக்கேடு என்று கருதுகிறார்கள்! அறப்போரில் ஈடுபடுகிறார்கள் ஆர்வமிக்கோர்; நிலைமை காரணமாக அறப்போரில் ஈடுபட இயலாதவர்கள் ஆதரவு தருகின்றனர்; சிறைசென்று திரும்பிடும் செம்மல்களை வாழ்த்தி வரவேற்கிறார்கள்; கழுத்தை நெரித்துக் கொன்று போடும் துணிவு இந்த நெஞ்சத்துக்கும், வலிவு இந்தக் கரங்களுக்கும் உண்டு என்று முழக்கமிட்டவர்கள் இந்தி ஆதிக்கம் புகுத்திடுவோரின் காற்சிலம்பின் ஓசைபற்றிப் பாடுகின்றனர், ஒய்யாரம் பற்றிப்பேசுகின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் அமைதியான அரசியலில் ஈடுபட்டிருக்கும்போது, வீரதீரம் அற்றது இந்தக் கழகம், வெட்டிப் பேச்சுப் பேசிக்கொண்டிருக்கிறது என்று கூறுவதும், காலமறிந்து கடமை உணர்ந்து, கஷ்ட நஷ்டம் ஏற்கும் துணிவுடன் கிளர்ச்சி நடாத்திடக் கிளப்பிடும்போது, எதற்கு வீண் ஆரவாரம்! எதற்கு இநத அமளி! போராட்டத்திற்குப் பொருள் இல்லை! என்று பேசுவதும், மயக்க மொழி கேட்டு மெய்யென நம்பிக் கொள்பவர்களிடம் சென்று கழகத்தின் கொள்கை, செயல்முறை, கிளர்ச்சி ஆகியவைபற்றி ஐயப்பாடுகளை மூட்டிவிடுவதுமான காரியத்தைத் தமது 'அபாரமான' திறமையைத் துணைகொண்டு அமைச்சர்கள் செய்து பார்க்கிறார்கள்.

போர் என்கிறார்களே, எங்கே நடக்கிறது, போர்!

வெற்றி என்கிறார்களே, எங்கே தெரிகிறது அந்த வெற்றி! எல்லாம் பொய்யுரை! கற்பனை! மனப்பிராந்தி—என்று பேசிப் பார்க்கின்றனர்,

காலமறிந்து, நிலைமை புரிந்து, தன்வலி மாற்றார் வலி சீர்தூக்கிப் பார்த்து, கழகம் தன் செயல் முறைகளை வகுத்துக் கொள்கிறது. வரிசைப்படுத்திக் கொள்கிறது, நிலைத்து நின்று பணிபுரிய, எவ்வப் போது என்னென்ன விதமான முறைகளை மேற்கொள்ள வேண்டுமென்று, திட்டமிட்டுப் பணியாற்றி வருகிறது இந்த முறை காரணமாக, மாற்றார் வெட்டிடும் படுகுழியில் வீழ்ந்து அழிந்துபடாமல், சூது வலையில் சிக்கிடாமல். முன்பின், வலம் இடம், மேல் கீழ், தன்வலி துணைவலி, காலம் நிலைமை என்பவைகளைக் கணக்கெடுத்து, எதனை எப்போது எவ்விதம் எவரெவர் செய்து முடிப்பது என்று திட்டம் வகுத்துக்கொண்டு செயலாற்றுகிறது. இதனைத் திரித்துக் கூறியும் வருகின்றனர், மக்கள் தெளிவு பெறமாட்டார்கள் என்ற தப்பு எண்ணத்தில்.

பொய்! பொய்! முழுப்பொய்! கலப்படமற்ற பொய்—என்று உரத்த குரலிலே கூவினான்—கோபம் அல்ல—கோபம் கொண்டவன் போல! **மூட்டி விடுவான்!"**

எது பொய்? என்ன பொய்? என்று சிறிது அச்சத்துடன் கேட்டான், **கேட்டு மருள்வான்.**

என்ன சொன்னான் உன்னுடைய **மன்றத்தான்?** என்று கேட்டான் **மூட்டிவிடுவான்;** திருக்குளத்தில் செந்தாமரை மலர்ந்து இருக்கிறது, அழகாக! என்று சொன்னானல்லவா? என்றான்.

ஆமாம்! அப்படித்தான் சொல்லக் கேட்டேன் என்றான் **கேட்டு மருள்வான்;**

ஏமாந்து போனாய்! ஏமாற்றி விட்டான்! ஏமாளி யானாய்!! என்று அடுக்கினான் **மூட்டி விடுவான்.**

எப்படி? எதிலே ஏமாந்து போனேன்? **என்று** கேட்டான், **கேட்டு மருள்வான்.**

திருக்குளத்துத் தாமரை இதழ் விரித்து அழகாக இருக்கிறது என்று கூறி உன்னை ஏமாற்றினானே, **மன்றத்தான்.** அதைத்தான் கூறினேன்; கேள் அவனை, இப்போது; தாமரை மலர் இதழ் விரித்து இருக்கிறதா

என்று கேள். அவனைக் கேட்பானேன், வா, என்னோடு, திருக்குளம் செல்வோம்; காட்டுகிறேன், நீயே பார்! தாமரை இதழ் விரித்து இல்லை!! வந்து பார்! என்றான் **மூட்டிவிடுவோன்**, **கேட்டுமருள்வோன்** கிளம்பினான், திருக்குளம் நோக்கி சிறு விளக்கொன்று தேவை—இருட்டு அல்லவா? என்று கவனப்படுத்தினான் **மூட்டிவிடுவோன்** -விளக்குடன் இருவரும் கிளம்பினர், திருக்குளத்தருகே சென்றதும் **மூட்டிவிடுவோன்**, சுட்டிக்காட்டி, பார் நன்றாக! எங்கே, இதழ் விரித்த தாமரை இருப்பதாகச் சொன்னானே உன்னை ஏமாளியாக்க; எங்கே விரிந்த தாமரை? என்று இடித்துக் கேட்டான்.

விரிந்த தாமரை இல்லை—குவிந்த தாமரையே தெரிந்தது.

கேட்டுமருள்வோனுக்கு மெத்த வருத்தம் ஏற்பட்டது. ஏன், **மன்றத்தான்**, தாமரை அழகாக விரிந்து மலர்ந்து காட்சி தருகிறது என்று நம்மிடம் கதை கதையாகச் சொல்லவேண்டும்! சே! இது ஏன் இந்தச் சூதுப் பேச்சு—இதை நம்பி, நாம் பலரிடம், செந்தாமரை விரிந்து மலர்ந்து அழகாகத் திருக்குளத்திலே இருக்கிறது என்று கூறி வைத்தோமே. இப்போது, நாமல்லவா ஏமாளியானோம்—என்று எண்ணி மனம் வெதும்பினான்.

இனியாகிலும் உணர்ந்துகொள், மன்றத்தான் பேசுவது பொய் என்பதை!-என்று கூறிவிட்டுப் புன்னகை செய்தான் **மூட்டிவிடுவோன்**,

எது அப்பா, பொய்? என்று கேட்டபடி வந்தான், **தெளிவளிப்பான்**.

திருக்குளத்தில், செந்தாமரை இதழ்விரித்து, அழகாக மலர்ந்து இருக்கிறது என்று பொய் பேசி என்னை ஏய்த்துவந்தான் **மன்றத்தான்** இங்கு வந்து பார்க்கிறேன், தாமரை குவிந்து கிடக்கிறது, மலர்ந்து, இதழ் விரித்து இல்லை—என்று கோபமும் துக்கமும் கொண்ட நிலையில், பேசினான் **கேட்டு மருள்வோன்**.

தெளிவளிப்பான் கூறினான், **கேட்டு மருள்வோனே**! இது இரவுக்காலமல்லவா? இரவுக்காலத்திலே, தாமரை குவிந்துதானே இருக்கும். உதயசூரியன் ஒளிபட்ட உடன்தானே, தாமரை மலரும். தாமரை மலர்ந்திருக்கிறது என்று **மன்றத்தான்** சொன்னது பொய்யுரை அல்ல. காலையில், தாமரை மலரும், அதைக்கண்டு சொன்னான்! நீயோ, இரவு வந்து காண்கிறாய், **மூட்டிவிடுவோன்** பேச்சினைக் கேட்டுக் கொண்டு. காலையிலே வந்து பார், மலர்ந்த தாமரை காண்பாய்—தாமரை இதழ் விரித்திடக் காலைக் கதிரவன் ஒளிவேண்டும்—அஃது இல்லாத போது, தாமரை குவிந்துதான் காணப்படும். குவிந்து காணப்படுவது, காலத்தின் தன்மைக்கு ஏற்ப, தாமரை விளங்கும் என்ற உண்மையைக் காட்டுவதாகும். இரவுக் காலத்தில் குவிந்த நிலையில் உள்ளதால், தாமரை, மலருவது இல்லை, இதழ்விரிப்பது இல்லை, என்றா முடிவுகட்டுவது!! **மன்றத்தான்** சொன்னது பொய்யல்ல. உதயசூரியன் ஒளிபட்டதும் தாமரை இதழ்விரிக்கும். காலம் வரவேண்டும்! காரிருளில் விரிந்த தாமரை தேடாதே, கலகப் பேச்சுக் கேட்டு மனம் மருளாதே!!—என்றான். **மூட்டிவிடுவோன்** சென்றுவிட்டான்.

காலை மலர்ந்தது. கமலமும் மலர்ந்தது. **கேட்டு மருள்வோன்** அதனைக் கண்டான்—கண்டதால் தெளிவு பெற்றான்.

கமலம் மட்டுமல்ல, கருத்தும் அப்படித்தான்.

உரிய காலம் வரும்போது மலரும். சில காலத்தில் குவிந்த தாமரை போலிருக்கும், உணர்ந்து கொள், என்றான் **தெளிவளிப்போன்**.

அதுபோலத் தம்பி! கழகம் காலமறிந்து காரிய மாற்றுகிறது. அத்தகைய சீரிய முறைப்படி வகுக்கப்பட்டு, செயல் படுத்தப்பட்டு வருவதே, இந்தி எதிர்ப்பு அறப்போர். காலமும் முறையும் அறிந்து, **மாற்றார் மூட்டிவிடுவதற்கு** இரையாகாமல், கழகம் எனும் அமைப்புக்கும் ஊறுநேரிடாமல் பாதுகாத்தபடி நடத்தப்பட்டு வருகிறது இந்தி எதிர்ப்பு அறப்போர். மூட்டிவிடுவோன் காட்டிடும் வழி நடந்தால், கழகம் படுகுழியில் வீழ்ந்துபடும்; வீழ்ந்துபட்டதும், சேற்றுக் குழியில் வீழ்ந்த யானையைச் செந்நாய்க் கூட்டம் கடித்துத் தின்பதுபோல, கழகத் தோழர்களை,

காட்டிக் கொடுப்போரும் மூட்டிவிடுவோரும் காரச் சரக்கினரும் ஈரமற்ற நெஞ்சினரும், சிதைத்துச் சின்னாபின்னமாக்கி இருப்பர், அல்லது தமக்குக் குற்றேவல் புரியும் சிற்றாட்களாக்கிக் கொண்டிருப்பர். இதனை அறிந்ததால் தான் கழகத்தை நடத்திச் செல்வோர், காலத்துக்கு ஏற்ற படி முறையினை மாற்றிக்கொண்டனர்—அது குறித்துக் கடாவினோர், கதைத்தோர், என்னாயினர்!! களம் நிற்கின்றனரோ? இலையே!! கதர் அணிந்துகொண்டு விட்டனர். இவர்கள்தான் நமக்குத் தூபமிட்டவர்கள்.

''விடாதே! தொடுத்திடு போர்! உடைத்திடு தடைச் சட்டத்தை!'' என்றெல்லாம். எதற்கு? கழகம் எனும் அமைப்பு அழிந்துபடும் என்ற நினைப்பில். கழகம் அழிந்துபடுவதால் என்ன ஆதாயம்? கழகம் பெற்று இருக்கும் எதிர்க்கட்சி எனும் ஏற்றமிகு பீடத்தில் தாம் அமர்ந்துகொள்ளலாம் என்ற நப்பாசையில். கழகம் மேற்கொண்ட வேலைத் திட்டம் இந்த ஆசையில் மண் விழச் செய்துவிடவே, மூட்டிவிடுவோர் இனி எதிர்க்கட்சி என்ற ஏற்றம் பெறமுடியாது என்று உணர்ந்து ஆளுங் கட்சியின் ஒளியைப் பெற்றுக்கொள்ளச் சென்றுவிட்டனர். முன்பு கொண்டிருந்த எண்ணங்கள், வெளியிட்ட ஆசைகள், கண்ட இன்பக்கனவுகள் யாவும் பொய்யாய், கற்பனையாய், கனவாய்ப் புகைந்தே போய்விடக் காண்கிறோம். கழகமோ புயலுக்குத் தப்பிட வளைந்திடும் நாணல்போல, நிலைமைக்கேற்ற முறை வகுத்துக் கொண்டு, நிலைத்து நிற்கிறது.

எனவே, தம்பி! நாம் நடத்தி வரும் இந்தி எதிர்ப்பு அறப்போர் குறித்து அமைச்சர்களும் அவர்களின் அணைப்பிலே அகமகிழ்ச்சி பெறுவோரும் எதைக் கூறிக் கொண்டிருப்பினும் நாம் பொருட்படுத்தத் தேவையில்லை—நாம் மேற்கொண்டுள்ள காரியததில் நமக்கு அழுத்தமான, தூய்மைமிக்க நம்பிககை இருநதால். அந்த நமபிககை இருப்பதனால்தான, நாடு மெசசிடும் வதமான அறப்போரினைத் தொடர்நது நடததிக்கொணடு வருகிறோம்.

மொழிக்காக ஒரு கிளர்ச்சியா, போராட்டமா! செச்சே! என்ன மதியீனம்! வாழவழி என்ன என்பதற்குப் போராடுவார்களா, என்மொழி உன்மொழி

என்று சண்டை போட்டுக்கொள்வார்களா என்று பேசுகிறார் காமராசர்.

மொழிப்பிரச்சினை அவருக்கு அவ்வளவு சாமான்யமானதாக, உப்புச்சப்பு அற்றதாகத் தோன்றுமானால், நாட்டு மக்களிடையே மனக்கொதிப்பையும் கசப்பையும் மூட்டிவிடும் மொழிப் பிரச்சினைபற்றி ஏன் வீணாகப் பிடிவாதம் காட்டுகிறீர்கள்—ஆங்கிலந்தான் இருந்துவிட்டுப் போகட்டுமே—தமிழைத்தான் ஆட்சிமொழி ஆக்குங்களேன் என்று, இந்தி ஆதிக்கத்தைப் புகுத்துவதில் முனைந்து நிற்கும் லால்பகதூர்களிடம் எடுத்துச் சொல்லுவதுதானே! சொல்லிப் பார்க்கட்டும்—அப்போது தெரியும் காமராஜர் கண்காட்டும் வழியிலே காங்கிரஸ் செல்கிறது என்ற பேச்சு எத்தகைய இனிப்புப் பூச்சுள்ளது என்பது.

காமராஜர் கருதுவதுபோல, இப்போது எல்லோரும் கூடி ஒன்றுபட்டு நின்று கவனம் செலுத்தித் தீர்த்து வைக்கவேண்டிய பிரச்சினை, சோற்றுப் பிரச்சினை தான் என்றால், லால்பகதூர் இந்தியை ஆட்சிமொழி ஆக்குவதிலே இத்தனை தீவிரமும் பிடிவாதமும் காட்டுவானேன்?

இந்தி முக்கியமான பிரச்சினை அல்ல என்று காமராஜரும்,

இந்தி இரண்டு தலைமுறை கழித்துத்தான் வரும் என்று டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரும்,

பேசுகிறார்கள்—நம்மை மயக்க—உணர்ச்சியை வேறு பக்கம் திருப்பிவிட! ஆனால், ஒவ்வொரு நாளும் ஒரு புது உத்தரவு கிளம்புகிறது டில்லியிலிருந்து, இந்தியின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தவும், வேகத்தை அதிகப் படுத்தவும்.

தூங்கு, ஒரு பயமும் இல்லை. பூனை நடமாடும் சத்தம், வேறொன்றுமில்லை, என்று மாளிகையின் காவலாளி கூறி, மற்றவர்கள் விழிப்புடன் இருப்பதைத் தடுத்து விடுகிறான் என்றால், சூது சூழ்ச்சி அற்ற முறையிலே காவலாளி அவ்விதம் செய்திருந்தால் அவனை ஏமாளி என்போம்; தெரிந்தே

வீட்டாரை ஏய்க்க அவ்விதம் கூறியிருந்தால்,
திருடனுக்கு உடந்தை என்போம்.

இந்திப் பிரச்சினை ஒரு அவசர அவசியப் பிரச்சினை அல்ல என்று பேசுவோரும், இந்தி இரண்டு தலைமுறைக் காலம் வரையில் வராது என்று கூறுவோரும், இந்த இரண்டு வகையில் எந்த வகையினர் என்று கூற இயல வில்லை, தம்பி! ஆனால், எந்த வகையினராக இருப்பினும், நாட்டுக்கு அவர்களின் போக்கு ஆபத்தினையும் கேட்டி னையும் மூட்டிவிடுகிறது என்பதிலே அறிவாளர் எவருக் கும் ஐயப்பாடு இருக்க முடியாது.

பொன்னிழந்து விட்டால் வேறு
பொருள் விளைக்கலாகும்; நாளும்
உண்ணும் சோறிழந்தால் வேறு
உணவு தேடலாகும்; மொழிக்
கண்ணிழந்து விட்டால், வாழ்வுக்
காட்சி காண்பதேது? பின்னர்
மண்ணின் வாழ்வெதற்கு? இதனின்
மடிதல் மேலதன்றோ?

இவ்விதம் கேட்கிறார் கவிஞரொருவர்—இலங்கைத் தீவினிலிருந்து.

கவிஞர் தானே! அப்படித்தான் கேட்பார் என்று கூறுவார்களோ ஒருவேளை, சரி, தம்பி! கற்பனைச் செல்வம் தரும் கவிஞரின் பேச்சுடன், வேறொன்றும் காட்டுவோம்.

இவர் அரசியல் தத்துவம் போதிக்கும் பேராசிரியர், பெயர் பி. கே. எஸ். ராஜா. 1963-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் எட்டாம் நாள், கருத்தரங்கம் ஒன்றில் பேசினார். சோற்றுப் பிரச்சினையா, மொழிப் பிரச்சினையா என்று கேட்கிறாரே காமராஜர், அவர் காணட்டும், பேராசிரி யரின் கருத்தினை.

இந்நாட்டில் உள்ள மக்களிடையே பேசப்படுகிற மொழிகளில், இந்தி சிறுபான்மையோர் மொழியா கும். பெரும்பான்மையான மக்கள் இந்தி பேசாத பகுதியைச் சார்ந்தவர்கள்.

ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும். இந்தியைக் கட்டாயமாகத் திணிப்பதால் இந்தி பேசும் மக்கள் நியாயமற்ற வகையில் முன்னணியில் நலம் பெறுவர்.

முதலாவதாக, தேசிய மொழியின்றி இந்தியா ஒரு நாடாக விளங்குவதை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆட்சியைப் பொறுத்தமட்டில் ஆங்கிலமே நீடிக்க வேண்டும்.

ஆங்கில மொழியின் நுழைவால்தான் இந்தியத் தேசியம் உருவெடுத்தது. இதன் பயனாகவே இந்தியத் தேசியக் காங்கிரசும் தோன்றியது.

கேட்டாயா, கேட்டாயா! ஆங்கிலம், ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டுமாமே. நாட்டுப்பற்று இருந்தால் ஒரு அன்னிய மொழியை ஆட்சிமொழி ஆக்கவேண்டும் என்று இந்தப் பேராசிரியர் பேசுவாரா? ஒரு தேச பக்தனுக்கு, காங்கிரஸ்காரருக்கு இப்படிப்பட்ட கெடுமதி இருக்குமா! ஆங்கிலம் படித்து அதனால் பிழைப்பு நடத்தும் பேர்வழி இவர்; இத்தகையவர் பேச்சை மதிக்கப்போமா, கேட்கப் போமா, பேசலாமா என்றெல்லாம் வெகுண்டெழுந்து கூறுவர்-உண்மைக் காங்கிரசார் அல்ல—ஒட்டிக்கொள்ப வைகள்.

போகட்டும், நமக்கேன் தகறாறு-ஒரு காங்கிரசாரின் கருத்து, அதிலும் ஆங்கிலம் பற்றியுள்ள கருத்தினைத் தான் கூறுவோமே.

ஆங்கிலத்தின் இடத்தை இந்தி வகிக்க வேண்டு மாம்! இதிலே எனக்கு நம்பிக்கை இல்லை.

ஆங்கிலம் இந்த நாட்டின் தேசிய மொழிகளில் ஒன்றாக இருக்கவேண்டும்.

ஒரு காங்கிரசுக்காரரா, மனம் துணிந்து, மரபு மறந்து, ஆங்கிலம்இந்நாட்டுத்தேசிய மொழிகளில் ஒன்றாக இருக்க வேண்டும் என்று கூறினார். ஏ! அண்ணாத்துரை, ஏன் இப்படி ஒரு அண்டப்புளுகு பேசி எமது இதயத்தில் வேதனை மூட்டுகிறாய், நம்மை அடிமைப்படுத்திய ஆங்கில மொழியா, தேசியமொழி! ஏகாதிபத்திய

மொழியா, எமது தேசியமொழிகளிலே ஒன்று! இப்படியும் கூற ஒரு காங்கிரசுக்காரரின் நாக்கு வளைகிறதா! ஐயகோ! என்ன நாக்கய்யா அது! என் செவியில், ஜனகணமனவும் வந்தேமாதரமும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒழிக என்ற முழக்கமும் விழுந்து விழுந்து, புனிதத்தேனைச் சொரிந்தது—அந்தச் செவியிலா இந்தச் செந்தேள் நுழையவேண்டும்! என்னே கொடுமை! என்ன அநீதி! ஆங்கிலம் நமது தேசிய மொழிகளிலே ஒன்றாக்கப்படவேண்டும் என்று சொன்னவர், காங்கிரசில் உறுப்பினராக இருக்கலாம்-புதிதாகப் புகுந்தவராக—பதவிப்பசை தேடிவந்தவராக — இருக்கலாம் — ஆனால் நிச்சயமாக அவர் உண்மையான காங்கிரசுக்காரராக, ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய வீரராக இருக்கவே முடியாது. அது யாரோ ஒரு போலி! ஒரு இடந்தேடி! ஒட்டுச்சரக்கு!—என்றெல்லாம் ஆத்திரம் பொங்கிவழிய, காங்கிரஸ் நண்பர் கூறக்கூடும். அவருடைய ஐயப்பாட்டினையும் போக்கிவிடுவது நல்லதல்லவா, தம்பி! ஆங்கிலம் தேசிய மொழிகளில் ஒன்றாக இருக்கலாம் என்று பேசியவர், புதியவருமல்ல, புசிக்க ஏதேனும் கிடைக்கும் என்பதற்காக நேற்றுப்புகுந்தவருமல்ல — உண்மைக் காங்கிரஸ்காரர்—முன்னணியினர்—மூலவர்களிலே ஒருவர் —நாடாளும் நற்பேறுகொண்டவர், பம்பாய் மாநில முதலமைச்சர் சாவன்! ஆம், தம்பி! இப்போது மத்திய சர்க்காரில் பாதுகாப்பு அமைச்சராக உள்ள அதே சாவன் தான்—நாகபுரியில் பேசினார் மூன்றாண்டுகளுக்கு முன்பு —19—8—61 இதழ் பார்த்தால் புரியும். அவருடைய அந்தக் கருத்தினைப் பாராட்டியும் வரவேற்றும், இந்தியன் எக்ஸ்பிரஸ் கட்டுரை வெளியிட்டது.

> ஆங்கிலத்தை அந்நிய மொழியாகக் கருதினால் அது அவலமாகமுடியும் என்பதை **சாவன்** வற்புறுத்தி அறுதியிட்டுக் கூறி யுள்ளார். உண்மையில் ஆங்கிலம் ஓர் அனைத்துலக மொழி; அறிவு வள மொழி

என்பதாக.

தம்பி! நாம் அதுபோலக்கூட ஆங்கிலத்துக்கு மேம்பாடான இடமளிக்க வேண்டும் என்று வாதாடவில்லை—அதற்காகப் போராடவில்லை; நமது தாய்மொழியாம் தமிழ் மொழியையும் ஆட்சிமொழியாகக் கொள்ளுங்கள், அந்தக்காலம் வருகிறவரையில், வேறோர் பகுதி மக்களின்

தாய்மொழியான இந்தியை இந்தியாவின் ஒரே ஆட்சி மொழி என்று ஆக்கி எம்மை இழிவுபடுத்தாதீர், இன்னல் விளைவிக்காதீர் இழிமக்களாக்காதீர் என்று கேட்டே போராட்டம் நடத்துகிறோம்.

சாவன் போன்ற உண்மையான காங்கிரஸ்காரரின் வார்த்தைக்கு மதிப்பு தரப்பட்டதா? இல்லை!

ஒரு காங்கிரஸ் தலைவருக்கே ஆங்கிலத்தை இழக்கக் கூடாது என்ற எண்ணம் இந்த அளவுக்கு இருக்கிறதே என்பது பற்றி இந்தி ஆதிக்கக்காரர்கள் துளியாவது அக்கறை காட்டினரா? இல்லை! இல்லை!!

மனத்துக்குள்ளாக—சாவன் ஒரு மராட்டியர்—காங்கிரஸ்காரராக இருந்தபோதிலும், அவருக்கு மராட்டியர் என்ற உணர்ச்சிதான் மேலோங்கி இருக்கிறது என்று எண்ணிக்கொண்டிருந்திருப்பார்கள்.

இங்கே சிலர்தான் இந்தியை எதிர்க்கிறார்களே தவிர, ஆயிரக்கணக்கான தென்னாட்டவர் இந்தி படித்துக் கொண்டு வடக்கே வந்திருந்து வாழ்கிறார்கள்—அவர்களுக்கு இந்திமீது வெறுப்பு இல்லை—அவர்கள் இந்தியை எதிர்ப்பதில்லை என்றுகூறி, இந்த நிலையை இந்திக்கு நிரம்ப ஆதரவு இருப்பதற்கு அடையாளம்—சான்று என்று பேசுவோர் உளர். இந்த வாதம் எத்தனை சொத்தையானது என்பதனை எடுத்துக்காட்டி உடைத்தெறிந்திருக்கிறார் ஒருவர்—அவரும் காங்கிரஸ்காரர்-மராட்டியப் பகுதியினர் **சங்கர்ராவ் தேவ்** என்பார்.

> தெற்கே இருந்து வடக்கே மக்கள் வருகிறார்கள்—இந்தி மொழிமீது உள்ள ஆசை காரணமாகவும் அல்ல, அந்த இந்தி மொழி மூலம் பெறக்கூடிய கலாச்சாரத்திற்காகவும் அல்ல; அவர்கள் வருவது பிழைப்புத்தேடி.

> சோற்றுக்காக வருகிறார்கள்! சோற்றுக்காகத் தான் மக்கள் சச்சரவிட்டுக்கொள்கிறார்கள்.

> இன்று இந்தியை மக்கள் மதிக்கவேண்டி வருகிறது என்றால், அது மற்ற மொழிகளை விட மேலானது என்பதற்காக அல்ல, இந்தி படித்தால் பிழைக்க வேலை கிடைக்கும் என்பதால்தான்.

நீங்கள் இந்தியை உங்கள் பிரதேச மொழியாகவும் கொண்டிருக்கிறீர்கள். அதே போது மத்திய ஆட்சிமொழியாகவும் ஆக்கிக் கொள்கிறீர்கள். இது உங்களுக்கு ஒரு ஆதிக்க உயர்வைத் தருகிறது.

ஒன்றை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்; ஒருவன் எவ்வளவுதான் இந்தியையோ வேறு மொழியையோ கற்றுக் கொண்டாலும், அது அவனுடைய தாய்மொழியாக இருந்தாலொழிய, ஒவ்வொரு நாளிலும் இருபத்து நான்குமணி நேரமும் அவன் பயன்படுத்தும் மொழியாக இருந்தாலொழிய, அவன் துரைத்தன அலுவலகங்களில் மேலிடம், உயரிடம் பெறமுடியாது; மற்ற வேலைத்துறைகளிலும் கூடத்தான்.

காமராஜர் மிக்க விருப்பத்துடன் கிளப்புகிறாரே சோற்றுப்பிரச்சினை, அது மொழிப் பிரச்சினையோடு எப்படிப் பிணைந்திருக்கிறது என்பதை சங்கர்ராவ்தேவ் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டினார். அவருடைய பேச்சை மதித்து ஏற்றுக்கொண்டார்களா? அவர்களா! ஆதிக்க நோக்கம் கொண்டவர்கள் அறிவுரை கேட்டு அதன்படி நடந்துகொள்வார்களா!!

இந்தியை ஆட்சிமொழி ஆக்குகிறார்கள் என்ற காரணம் காட்டி, நாட்டிலே ஒரு பகுதியின்மீது மற்றோர் பகுதிக்குக் கசப்பு ஏற்படும்படி செய்கிறார்கள் என்று ஒருமைப்பாட்டு உரை நிகழ்த்துவோர் குற்றம் சுமத்துகிறார்கள்.

சரியாகவோ தவறாகவோ, இந்தி புகுத்துவதற்காக நீங்கள் வரிந்து கட்டிக்கொண்டு நிற்பது, இந்தி பேசாத பகுதி மக்களிடையே ஒரு உணர்ச்சியை மூட்டிவிட்டிருக்கிறது; அதாவது இந்தியாவின் கூட்டுக் கலாச்சாரத்துறையில், மற்ற வலிவுள்ள மொழிகள் செல்வாக்குப் பெறுவதைத் தடுக்கவே இந்திக்காக இப்படிச் சண்டைபோடுகிறீர்கள் என்ற உணர்ச்சி.

ஐயா! தெற்கே உள்ள இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி பலம் வாய்ந்ததாக இருக்கிறது.

ஒரு பகுதிக்கு மட்டுமே சொந்தமான மொழியை (இந்தியை) நீங்கள் தேசிய மொழி என்ற அளவுக்கு அந்தஸ்து தருவதுதான், இந்தி பேசும் மக்களுக்கும்

இந்திபேசாத மக்களுக்கும் இடையே கசப்பை மூட்டிவிட்டிருக்கிறது.

இவ்வளவு வெளிப்படையாகப் பேசியவரும், காங்கிரஸ் கட்சியினர்தான். கொலுவிருக்கக் காங்கிரஸ் கிளம்பியபொழுது இடம் தேடிக்கொண்டவர் அல்ல— சுயராஜ்யக் கிளர்ச்சியில் ஈடுபட்டு, சண்ட மாருதம்போல் சுற்றிப் பிரசாரம் செய்து சிறைக் கோட்டமும் சென்றவர் —ஆந்திர நாட்டு மாதர் திலகம்-**துர்க்காபாய்** அம்மையார்.

குறுகிய மனப்பான்மை கொண்டவருமல்ல—மராட்டியத்துத் தேஷ்முக்கைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்.

அந்த அம்மையாரின் எச்சரிக்கையையாவது, இந்தி ஆதிக்கக்காரர்கள் பொருட்படுத்தினரா? இல்லை!

கடந்த மூன்று வாரத்து நடவடிக்கைகளாலும், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சார்ந்த என் நண்பர்கள் மேற்கொள்ளும் போக்கினாலும் என் உள்ளத்தில் மூண்டு வளர்ந்துள்ள பயத்தை, உள்ளது உள்ளபடி நான் எடுத்துக் கூறாவிட்டால், என் மனச்சாட்சிக்கும், ஆண்டவனுக்கும், என் மாபெருந் தலைவர் மகாத்மா காந்திக்கும் உண்மையாக நடந்து கொண்டவனாக மாட்டேன்.

இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்புவரை, அதிகாரவர்க்கம் பிரிட்டிஷாரிடம் இருந்து, லண்டன் நகரத்தில், பெரிய உத்தியோகங்களுக்கான பரிட்சைகள் நடத்தப்பட்டு வந்த நிலையின்போது, எங்களுக்குச் சந்தேகமும் பயமும் மனத்திலே குடிகொண்டன. வெள்ளையனே உத்தியோக மண்டலத்தில் ஆதிக்கம் வகித்து வந்தான் இப்போது உயர் பதவிகளுக்கான பரிட்சை டில்லியில் நடத்தப்படுவதால், இந்தி பேசும் பகுதிகளான உத்தரப்பிரதேசம் மத்தியப்பிரதேசம் ஆகிய இடத்தவர் உத்தியோக மண்டலத்தில் ஆதிக்கம் பெறப்போகிறார்கள்.

ஏன் உத்தரப்பிரதேசத்து மத்தியப்பிரதேசத்துக்காரர்கள் இவ்வளவு சகிப்புத்தன்மை அற்றவர்களாக இருக்கிறார்கள்?

நாங்களும் மனிதர்களே! உயர்தரமான தேசிய இலட்சியங்கள் எப்படி எங்கள் எண்ணங்களை உருவாக்குகின்றனவோ அதுபோலவேதான் பிழைப்பு நடத்துவதும் வேலை பெறுவதும் எங்கள் உள்ளத்தைப் பாதிக்கின்றன. (இந்தியை ஆட்சிமொழி ஆக்கிவிடுவதானால்) ஒரிசா, அசாம், வங்காளம், தென்மாநிலங்கள் ஆகிய இடங்களைக் காட்டிலும் உத்தரப் பிரதேசத்துக்கும் மத்தியப் பிரதேசத்துக்கும் கூடுதலான சலுகைகள், வாய்ப்பு வசதிகள் ஏற்பட்டு விடுவதைத் தடுக்க என்ன திட்டம் தீட்டப் போகிறீர்கள் —சொல்லுங்கள்.

இவ்விதம் 'அச்சம் தயைதாட்சணியமின்றிக்' கேட்டவர் ஒரிசாவைச் சார்ந்த **தாஸ்** என்பவர்—புகழ்மிக்க காங்கிரஸ் தலைவர். அவருடைய பேச்சுக்கு ஏதேனும் பலன் கிடைத்ததா? இந்தி ஆதிக்கக்காரர்கள் தமது போக்கை மாற்றிக் கொள்ள ஒருப்பட்டனரா? இல்லை! இல்லை! அவருடைய வார்த்தையையும் துச்சமென்று தள்ளிவிட்டு, இந்திதான் ஆட்சிமொழி என்று அரசியல் சட்டத்தில் எழுதி விட்டனர்.

தாஸ், சங்கர்ராவ், துர்க்காபாய் போலக் காரசாரமாக, ஒளிவு மறைவின்றிப் பேசினால், இந்தி ஆதிக்கக்காரர் கோபம் கொண்டு தமது போக்கை மாற்றிக் கொள்ள மறுப்பார்கள்-இதமாக-விநயமாக-கனிவாக நேசப்பான்மையுடன்-அடக்க ஒடுக்கமாக-நல்ல வாதத் திறமையுடன் பேசினால், அவர்களின் போக்கு மாறிடக் கூடும் என்ற எண்ணம்போலும். இன்று பாராளுமன்றத் துணைத்தலைவராக உள்ள S. V. **கிருஷ்ணமூர்த்திராவ்** அவர்களுக்கு; அவர் மிகக் கனிவாகப் பேசினார்.

ஐயா! நான் இந்தியைக் கற்றுக்கொள்ள முயற்சி எடுத்துக்கொண்டேன். என் சொந்த மொழியான கன்னடத்தில், சில இந்திப் புத்தகங்களைக்கூட மொழி பெயர்த்திருக்கிறேன். ஆனால் எனக்கு இந்திமொழி மிகக் கடினமானதாக இருக்கிறது அதனால்தான் இந்தச் சபையில் இந்தியில் பேசும் துணிவு வரவில்லை.

இந்தி பேசும் மக்களுடைய மொழியை, அதன் இலக்கண இலக்கியக் கட்டுக்கோப்புடன் எங்களால் படித்துக்கொள்ள முடியவில்லை. காலம் பிடிக்கிறது,

நான் ஒரு அறைகூவல் விடுக்கிறேன். இங்குள்ள கோவிந்ததாஸ் அவர்களோ, தாண்டன் அவர்களோ, தமிழர்கள் மத்தியில் போய் இருந்துகொண்டு தமிழ் பேசக் கற்றுக்கொள்ளட்டும். அதற்கு அவர்களுக்கு எவ்வளவு காலம் பிடிக்கிறதோ, அவ்வளவு காலம் தேவை, தென்னகத்தில் இந்தியைப் புகுத்துவதற்கு.

இவ்வளவு சாந்தத்துடன், சமரசநோக்குடன் பேசினாரே கன்னடக் காங்கிரஸ் தலைவர் கிருஷ்ணமூர்த்திராவ், இதையாவது, பாவம்! நம்முடைய கட்சிக்காரர்! இந்தி கற்றுக்கொள்வதிலே உள்ள கஷ்டத்தை அனுபவித்துக் கூறுகிறார். அவர் கூறிடும் வாதம் நியாயமாகத்தான் இருக்கிறது; நாம் இந்தியைத் தென்னகத்துக்கும் சேர்த்து ஆட்சிமொழி என்று ஆக்குவது அநீதியாகத்தான் இருக்கும் என்ற உணர்வும் தெளிவும் பெற்றனரா, இந்தி ஆதிக்கக்காரர்கள். அவர்களா! அவர்கள்தான், யார் எதிர்த்தாலும், எதிர்ப்புகளை முறியடித்துவிட்டு இந்தி ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டியாக வேண்டும் என்று துணிந்துவிட்டவர்களாயிற்றே! கேட்பார்களா கிருஷ்ணமூர்த்தி ராவ் அவர்களின் பேச்சை! கேட்கவில்லை!

தம்பி! இந்தி ஆதிக்கத்தைக் கண்டித்து அறிவுரை, தெளிவுரை, கனிவுரை, எச்சரிக்கை தந்தவர்களின் பட்டியல் மிகமிகப் பெரிது; சிலவற்றை மட்டுமே எடுத்தளித்திருக்கிறேன்.

இந்தியை ஆட்மொழி ஆக்கவேண்டும் என்று அரசியல் நிர்ணய சபையில் முனைந்தபோதே அறிவாளர் பலர் இது போலக் கண்டித்தனர், முயற்சியைத் தடுத்து நிறுத்தப் பார்த்தனர், முடியவில்லை.

அதற்குப் பிறகும் தொடர்ந்து பேரறிவாளர் பலர், இந்தி ஆட்சி மொழியாக்கப்படுவதைக் கண்டித்த வண்ணம் உள்ளனர்.

நானறிந்த வரையில் எந்த ஜனநாயக நாட்டிலும் ஒரு குறிப்பிட்ட திட்டத்துக்கு இத்தனை பரவலான முறையிலும் தொடர்ந்தும் கண்டனமும் எதிர்ப்பும் இருந்து அத்தனையும், வேண்டுகோள், முறையீடு, வாதம், விளக்கம், கண்டனம் எனும் எந்த வடிவினதாயினும் அலட்சியப்படுத்திவிட்டு, ஒரு சர்க்கார் தன் போக்கிலே பிடிவாதமாக இதுபோல் இருந்ததில்லை.

00214

இந்தி ஆதிக்க விஷயத்திலே காங்கிரஸ் துரைத்தனம் காட்டிவரும் பிடிவாதம் ஜனநாயகத்தையே கேலிக் கூத்தாக்கி வைத்திருக்கிறது.

உங்களைப் பேச அனுமதித்திருக்கிறார்களே என்பதும், வெளியே விட்டு வைத்திருக்கிறார்களே என்று கூறுவதும், சுட்டுத் தள்ளாமல் இருக்கிறார்களே என்று கூறுவதும், ஆட்சி நடத்தும் வாய்ப்பினைப் பெற்றதனால் ஏற்பட்டுள்ள ஆணவமன்றி, அறிவுடைமை என்று எவரும் கூற முற்படமாட்டார்கள். நெரித்த புருவம், உருட்டு விழி, மிரட்டும் பேச்சு, நெடுநாட்களுக்கு நிலைத்து இருப்பதில்லை.

தம்பி! பலருக்கும் புரியும்படி இதனை எடுத்துக் கூறிடக் கேட்டுக்கொள்கிறேன். இந்தி ஆதிக்கப் பிரச்சினையிலிருந்து, இன்று நமக்கு அமைந்துள்ள அரசு, அறிவாளர்களை எவ்வளவு அலட்சியப்படுத்தி வருகிறது, மக்களின் முறையீட்டினைக் கேட்டும் எத்துணை மமதையுடன் நடந்துகொள்கிறது என்பது புரிகிறதல்லவா! இவ்விதமான ஓர் ஆட்சி முறையையும், அது கடைப்பிடிக்கும் மொழி ஆதிக்கத் திட்டத்தையும் துணிவுடன் எதிர்த்து நிற்பதிலே நாம் பெருமை கொள்கிறோம். பலர் அடக்கப்பட்டுப் போய்விட்டனர். சிலர் அடைக்கலப் பொருளாகிவிட்டனர். வேறு சிலர் 'அமங்கல' நிலை பெற்றுவிட்டனர். நமது கழகமோ, எத்துணைக் கொடுமைகள் தாக்கிடினும். இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நிற்பது என்ற உறுதி தளராமல், தொடர்ந்து அறப்போர் நடாத்தி வருகிறது.

மக்கள் விரைவில் தமது மனத்திலுள்ளதை வெளிப்படையாக எடுத்துக் கூறிடும் இயல்பினைப் பெறுவதில்லை. எத்தனையோ விதமான அச்சுறுத்தல் அவர்களுக்கு. துரைத்தனத்தைப் பகைத்துக்கொண்டால், தொழில்கெடும். வேலை போய்விடும், குடும்பம் சிதறுண்டு போய்விடும், கொடுமைக்கு ஆளாக வேண்டிவரும் என்ற அச்சம் பிடித்தாட்டும் நிலை.

இந்தியோ சிந்தியோ, விருப்பமோ கட்டாயமோ, மெள்ளமெள்ளவோ வேகவேகமாகவோ, எப்படியோ வரட்டும், எதுவோ ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கட்டும், நாம் மாடு மனைபெற்று, மனைவி மக்களுடன், நிம்மதியாக வாழ்ந்திட வழிதேடிக்கொள்வோம் என்று பலர் எண்ணுகின்றனர். காரணம், அவர்கள் காண்கின்றனர், கொடி தூக்கியும் கோல் சுழற்றியும், காங்கிரசாட்சியின் கடைக்கண் பார்வையின் பயனாக, இலட்சாதிபதி ஆவதை! அவன் ஏறும் மோட்டாரின் மெருகு குலையாதிருப்பதையும், இவன் 'ஜாண்' வயிற்றுக்காக உடல் கருத்திட இளைத்திட உழைத்து கிருமிக் கூடாவதையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஆளவந்தாரின் அடிவருடினால் என்னென்ன ஆதாயம் கிடைக்கிறது என்பது புரிகிறது; புரியவே, நாம் ஏன் பொல்லாப்பைத் தேடிக்கொள்ளவேண்டும், என்று ஒதுங்கிடவும், இணங்கிடவும், வணங்கிடவுமான நிலையினைப் பெறுகின்றனர்.

ஒருபுறம் அச்சம் — மற்றோர்புறம் ஆளவந்தாரின் நேசத்தால் கிடைக்கக்கூடிய சுவைபற்றிய எண்ணம் கிளப்பிவிடும் ஆசை—இந்த இரண்டிலிருந்தும் தப்பி, தட்டிக் கேட்க யார் உளர் என்று தர்பார் மொழி பேசிடும் ஆட்சியினரை (இந்தி எதிர்ப்பு அறப்போர்) எதிர்த்து நிற்கும் துணிவும், கடமை உணர்வும் இந்த அளவுக்கு இருப்பதைப் பார்க்கும்போது மகிழ்ச்சி மட்டுமல்ல, மக்களாட்சிமுறை மடிந்து போகாது, மாண்புள்ள தாக்கிட முடியும் அந்த முறையை என்ற நல்ல நம்பிக்கையேகூட ஏற்படுகிறது ஒவ்வோர் விழாவும் இந்த அரிய பாடத்தைத்தான் எனக்கு அளித்து வருகிறது; உனக்கும் அதேவிதமான நிலை என்று எண்ணுகிறேன்.

தமிழுக்கு ஒரு ஆபத்தும் இல்லை. அம்மொழி ஒரு போதும் அழியாது, அது இலக்கியத்தின் மூலம் இறவா வரம் பெற்றுவிட்டது என்று பேசுவதும், பேச்சினைக் கேட்பதும் இனிப்பளிக்கலாம். கவிதைகளை எடுத்துக் காட்டி, உவமை நயமதை உரைத்து, கருப்பஞ்சாற்றினிலும் இனித்திடும் இன்மொழியாம் எமது தமிழ் மொழிக்கு, எவரே இழுக்குத் தேடவல்லார்! தென்றலின் இனிமை, திங்களின் குளிர்ச்சி, தேனின்சுவை, கடலின் அலையோசை, அருவியின் மழலை, குழலியின் இசை, இயற்கை எழில்—எவரேனும் இந்த இயல்பினைக் கெடுத்திட இயலுமோ!! அஃதேபோல, தமிழின் மாண்பினை மடிந்திடச் செய்திடல் எவராலும் இயலாது என்று பேசலாம்—வீரம் குழைத்து. ஆனால், தம்பி! இந்தி மட்டுமே ஆட்சிமொழி என்றாகிவிட்டால், இன்பத் தமிழ் பொலிவிழந்து போற்றுவாரிழந்து, வலிவிழந்து வளம்

இழந்து, என்றோ தீட்டிய ஓவியமாய், எப்போதோ கேட்ட கீதமாய், கனவினில் கண்ட கனியாய்ப் போய் விடும்—வீணுரை அல்ல இது—வேண்டுமென்றே பய மூட்டக் கூறுவதுமல்ல; அரசுக் கட்டிலிலே இந்தி என்று ஆகிவிட்டால், முரசு முழங்கிய தமிழகத்தின் அள்ள அள்ளக் குறையாத சொத்தாக இருந்துவரும் செந்தமிழ், கண்ணகிபோல் கண்ணீர் உகுத்து, கடந்த காலத்தை எண்ணி ஏக்கமுற்று, கசிந்து உருகிப்போய்விடும்.

ஒன்று புரிந்துகொள்ளச் சொல்லு தம்பி! முதற் கட்டம், இந்தி மத்திய சர்க்காரின் ஆட்சிமொழியாவது; அடுத்த கட்டம்? விளக்கவா வேண்டும்! மத்தியில் ஒன்று, மாநிலத்தில் வேறொன்று என்று இருப்பதனால் ஏற்படும் இன்னல் குறித்துச் சிலபல கூறிவிட்டு, மத்திய சர்க்காருக்கு ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்ட இந்தியே மாநிலத்திலும் ஆட்சி மொழியாக இருப்பது தான் வசதி, முறை என்று வாதிட்டு, அது போன்றே செய்தும் விடுவர்.

நமது அமைச்சர்கள் வாளாயிருப்பரோ? என்று கேட்பர், காங்கிரசை நம்பி உள்ளோர்! வேறு என்செய் வர்? வளைவர், நெளிவர், பணிவர், பிறகு ஆதரவாளராகி விடுவர். பார்க்கிறோமே ஒவ்வொன்றிலும், வேளாண் பெருங்குடி மகன், வேறெவரும் பெறாத அளவு பதவி அனுபவம் பெற்ற பெரியவர் பக்தவத்சலனார். இந்தியில் பரிட்சை எழுதத் தேவையில்லை என்றார் ஓர் நாள்; காரணம் காட்டினார், மறுக்கொணாததாக; பிறகோ. லால்பகதூர் அப்படியா? என்றார், இவர் ஆமென்றார், அவர் ஏன் என்று கேட்டார், இவர் காரணம் கூறினார், அவர் கனைத்தார் இவர் கலங்கினார், பரீட்சை இல்லா விட்டால் படித்திட மனம் வராதே என்றார், அது உண்மைதான் என்றார் இவர், ஆகவே, என்று ஆரம்பித் தார் லால்பகதூர், இதோ பரீட்சை வைக்கிறேன் என்று முடித்தாரே முதலமைச்சர்.

இவர் போன்றார், இந்திதான் இங்கும் ஆட்சிமொழி யாதல் முறை என்று டில்லியினர் கூறினால், தாயின் மேல் ஆணை! தாய்த் தமிழைத் தாழவிடேன்! என்றா முழக்க மெழுப்புவர், டில்லியாரின் தாக்கீதினைத் தலைமீது வைத்துக்கொண்டு, இதுவே தகுந்த முறை என்று ஒப்பம் கூறுவர்; கண் கசிந்திடும் தமிழரைப் பார்த்தோ, "ஏன்

அழுகிறீர்கள்? ஆட்சி மொழியாக இந்தி இருந்தால் என்ன? தமிழ் தாழ்வடையுமோ? அகம் என்ன, புறம் என்ன, எட்டுத்தொகை என்ன, பத்துப்பாட்டென்ன, இவைகளைப் படித்திடலாகாது என்று தடுத்திட இயலுமோ! இன்பத் தமிழ், கேவலம் அரசாங்க அலுவலிலே இருக்காதே தவிர, வீட்டிலிருக்கும், அங்காடி யில் இருக்கும், மன்றத்திலிருக்கும், மாதரின் நெஞ்ச மிருக்கும், மழலையரின் மொழியில் இருக்கும், என் உள்ளத்திருக்கும் உன்னிடமும் இருக்கும், ஆகவே தமிழ் மகனே! கவலைகொள்ளற்க! என்று கூறிடுவர், தமிழின் இனிமையினை அறிந்தவனே யானும் என்று கூறி, அதனை மெய்ப்பிக்க,

திருவே என்செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற் ஜோதிமிக்க
உருவே என் உறவே என் ஊனே
ஊனின் உள்ளமே, உள்ளத்தின் உள்ளேநின்ற
கருவே என் கற்பகமே கண்ணே
கண்ணிற் கருமணியே மணியாடுபாவாய், காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் துறையுறையும் அமர ரேறே

என்று பாடிடக்கூடும். பக்கம் நின்று சிலர், என்னே தமிழ்ப்பற்று! என்னே தமிழினிமை! என்று பேசி மகிழ் விக்கக்கூடும்.

இப்போதேகூடச் சிலர் இதுபோல், தமிழின் இனிமை, பெருமை, தொன்மை, மென்மை, வளம் வனப்புப் பற்றி கேட்போர் நெஞ்சு நெக்குருகப் பேசி, இந்தி ஆதிக்கத்தால் தமிழுக்கு ஆபத்து ஏற்படாது என்று வாதாடுகின்றனர்.

மாசறு பொன்னே!
வலம்புரி முத்தே!
காசறு விரையே!

என்றெல்லாம் கொஞ்சுமொழி பேசிய கோவலன்தான் பின்னர், கண்களில் கொப்பளிக்கும் நீரும், காலிற் சிலம்பும் கொண்ட நிலையினளாக்கினான் கண்ணகியை ...மையல் வேறோர் மாதிடம் கொண்டதால்.

எனவே, தம்பி! இவர் போன்றாரின், புகழுரையால் மட்டும் தமிழுக்கும் தமிழர் நல்வாழ்வுக்கும் வர இருக்கும்

ஆபத்தைத் தடுத்திட முடியாது—நாம் மேற்கொள்ளும் அறப்போரின் பலனாக எழும் தியாக உணர்வே தீந் தமிழைக் காத்திடவல்லது. அத்தகைய தொண்டாற்றும் தூயமணியே! உனைக் காண்பதிலும், உன்னுடன் அளவளாவுவதிலும் நான் பெறும் மகிழ்ச்சி, என்னை அந்தத் தொண்டினைத் தொடர்ந்து நடாத்திடத் துணை செய்கிறது. வாழ்க நின் ஆர்வம்! வளர்க உன் தியாக எண்ணம்! வெல்க தமிழ்!

அண்ணன்,



26-7-'64

காஞ்சி கடிதம் : 2

இதயத்தில் பூத்த மலர்

சட்ட மேம்பாடு பற்றிய சில பொதுக் கருத்துக்கள்

சட்டத்தைத்துச்சமென எண்ணுபவர்களின் கூற்றுகளும் அவற்றின் விளக்கங்களும்

இந்தி எதிர்ப்பு அறப்போரும் சிறைச் செலவும்

தம்பி,

ஒரு சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு—அதற்கான பேச்சு எழுந்து வளர்ந்துகொண்டு வருகிறபோது—எவ்வளவு வேண்டுமானாலும் அந்தச் சட்டம் வேண்டாம்—கூடாது—தீது என்று வாதாடலாம், மறுத்துரைக்கலாம், எதிர்ப்புச் செய்யலாம். ஆனால் இவைகளை மீறி ஒரு சட்டம் இயற்றப்பட்டுவிட்டால், பிறகுகூட அதை எதிர்த்துப் பேசிக் கருத்து வேற்றுமையைக் கூறலாம். ஆனால், மீறுவது மட்டும் கூடாது. மீறுவது சட்டத்துக்கு உட்பட்டு நடக்கும் பாங்கினைச் சமுதாயம் கொண்டு ஒழுகவேண்டும் என்று உள்ள நிலையைக் கெடுத்துவிடும். அது கெட்டுப் போய்விட்டால் பிறகு சமூகக் கட்டுக் கோப்பைச் சிதையாதபடி பாதுகாத்து வரும் சக்தி பாழ்பட்டு விடும். அந்தச் சக்தி பாழ்பட்டுவிட்டால் பிறகு நாட்டிலே காட்டுமுறை ஏற்பட்டுவிடும் என்று வாதாடுபவர்கள் இருக்கிறார்கள்.

அதிகாரம் ஊட்டிவிடும் ஆணவத்தின் காரணமாக, பலர் குளறிக்கொட்டியிருப்பதனை மிக மிக நாகரிக

நடையுள்ளதாக்கி, அவர்களின் தூற்றலையும் ஒரு தத்துவ விளக்கம் போன்றதாக்கி நான் தந்திருக்கிறேன்—மேலே.

படு! படு! சட்டத்தை மீறினால் சும்மாவிடுவார் களா!

எதிர்த்தால் பிடித்திழுத்துக் கொண்டுபோய் கொட்டடியில் தள்ளுகிறார்கள்.

பேச்சு என்ன இதுகளிடம்! கூப்பிடு போலீசை! கொண்டுபோகச் சொல்லு சிறைக்கூடம்.

நாங்கள் யார் என்று தெரிந்துகொள்ளாமல், எமக்கு உள்ள அதிகாரம் எப்படிப்பட்டது என்பதை அறிந்து கொள்ளாமல் எங்களையா எதிர்க்கிறாய்? என்ன நடக்கும் என்பதைத் தெரிந்துகொள்!

இவ்விதமாகப் பேசுபவர்கள், சட்டத்தை மீறினால் சங்கடப்படவேண்டி நேரிடும் என்பதனை எடுத்துக் காட்டுகிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம். சட்டத்தை மீறும்போது, சட்டத்தின் பாதுகாவலரின் பிடியில் சிக்குவோம் என்பதும், கொட்டப்படுவோம் என்பதும் எவருக்கும் தெரியும். எனவே அதனை நினைவு படுத்துவதாகக் கூறிக்கொண்டு நிந்தித்துக்கிடப்போர் தமது நீண்ட நாவினுக்கு அதிக வேலை கொடுத்து அலுத்துப்போகத் தேவையில்லை.

சட்டம் சமுதாயக் கட்டுக்கோப்புக்கு இன்றியமை யாதது என்ற அரிச்சுவடி போதிக்கத் தேவையில்லை, அதுபற்றிய பொது அறிவு சமூகத்தில் பரவலாக ஏற்பட்டு விட்டிருக்கும் இந்த நாட்களில்.

சட்டத்தைக் குறித்த தன்மைகளை எந்த அளவுக்கு அறிந்திருக்கிறேன் என்பதை எடுத்துக்காட்ட அல்ல, என்னை நிந்திக்கும்போதுகூட, பொதுத் தத்துவவிளக் கத்தை உள்ளடக்கிப் பேசட்டும் என்பதற்காகவும், அவர்கள் எத்தனை இழிமொழி பேசித் தமது இயல்பினை யும், தம்மிடம் உள்ள சரக்கின் தன்மையினையும் எடுத்துக் காட்டியபடி இருந்தாலும், சேற்றுக் குட்டையிலிருந்தும் சில கெண்டைகளைத் தேடிப் பெறுவதுபோல, அவர் களின் ஆபாசப் பேச்சிலிருந்தும், கிளறி எடுக்கத்தக்கவை களை நான் பெற முயற்சித்திருக்கிறேன் என்பதைக்

காட்டிடவும், சட்டம் பற்றிய சில பொதுக் கருத்துக் களைத் தெரிவிக்கிறேன்.

* * *

சட்டம், ஆட்சி செய்கிறது சட்டம்!

சட்டம் எல்லோருக்கும் பொதுவானது!

சட்டம், எவரையும் கட்டுப்படுத்தக்கூடியது!

சட்டம், வளையாது, நெளியாது; வல்லவனைக் கண்டு ஒளிந்துகொள்ளாது; இளைத்தவன் மீது காரண மற்றுப் பாயாது.

சட்டத்தின் கண்முன்பு அனைவரும் ஒன்றுதான்!

சட்டம், சமுதாய ஒழுங்கைக் காத்து வருகிறது.

சட்டம், சமுதாயம் சின்னாபின்னமாகாதபடி பார்த்துக்கொள்கிறது.

சட்டம், நாட்டிலே காட்டுமுறை புகாதபடி தடுத்து நிறுத்துகிறது.

சட்டம் மக்கள் ஒருவருக்கொருவர் கூடி வாழ்வதிலே தான் பெருமையும் சுவையும் பயனும் பண்பும் இருக்கிறது என்ற பேருண்மையை நிலைநாட்டத் துணை புரிகிறது,

சட்டம், உயிர், உடைமை, உரிமை, அமைதி, ஆகிய வைகளுக்கு ஊறு நேரிடாதபடி பார்த்துக்கொள்ள விழிப் புடன் இருக்கிறது

சட்டம், கோபதாபம், விருப்பு வெறுப்பு, வெறி போன்ற உணர்ச்சிகளால் உந்தப்பட்டு, தகாத செயலில் ஈடுபட்டு, சமூகத்துக்கு எவரும் ஊனம் விளைவித்து விடாதபடி தடுத்துக்கொண்டிருக்கிறது.

சட்டம், மக்களுக்குள்ளாக ஏற்படக்கூடிய தொடர் பையும், மக்களுக்கும் அரசுக்கும் ஏற்படும் தொடர்பையும், மாண்புடையதாக இருக்கச் செய்யும் பெரு முயற்சியில் ஈடுபடுகிறது.

சட்டத்தின் கண்கள் கூர்மையானவை! சட்டத்திற்கு நெடிய கரங்கள்!

சட்டம், கண்ணீர் கண்டு கடமையை மறந்துவிடாது; மயக்குமொழி கேட்டு, வழிதவறிச் செல்லாது.

சட்டம், தன்முன் நிற்பது யார்? நண்பனா? பகைவனா? உற்றார் உறவினனா? உதவி செய்தவனா? ஊரிலே பெரிய புள்ளியா? ஊறு விளைவிக்கக்கூடியவனா? என்ற இவைபற்றி எண்ணித் தடுமாற்றம் கொள்ளாது. செய்தது என்ன? எப்படிச் செய்தான்? யார் சான்று? எத்தகைய குற்றம்? குற்றமற்றவனாக இருக்கக்கூடும் என்று ஐயப்பாடு எழவாகிலும் இடம் இருக்கிறதா? எனும் இவைபற்றித்தான் எண்ணிப்பார்த்து முடிவு செய்யும்.

கலம் நேர்வழி செல்ல உதவும் கருவிபோல, சமுதாயம் ஒழுங்காக இருந்துவரத் துணையாக நிற்பது சட்டம்.

சட்டத்தை மதிக்காமல் சமுதாயத்தில் இடம் பெற்று இருந்திட இயலாது; அனுமதி கிடையாது.

சட்டம், அவரவருடைய விருப்பத்திற்கேற்ற வடிவம் கொள்ளாது—வடிவம், இவ்விதம் இருக்க வேண்டும் என்று உரியவர்கள் கூடி முடிவு செய்தான பிறகு மீண்டும் உரியவர்களே கூடி மாற்றினாலொழிய அமைந்துவிட்ட வடிவம், அனைவரும் ஏற்றுக்கொண்டாக வேண்டியதாகி விடும்.

தத்தமக்கு விருப்பமான முறையில், வாழ்க்கை நடத்தவும், அத்தகைய வாழ்க்கை நடத்துவதற்குத் தேவைப்படுபவைகளைத் தத்தமது இயல்புக்குத் தக்க முறையிலே தேடிப் பெறவும் அவ்விதம் தேடிப் பெற்றவைகளை வேறு எவரும் பறித்துக்கொள்ளாது பார்த்துக் கொள்ளவும், தடுத்திடவும் தேவைப்படும் பாதுகாப்புப் பெற்று, வாழ்ந்துவர ஏற்பட்ட அமைப்பே, சமுதாயம் என்று ஆகிறது.

தனித்தனி விருப்புக்கு ஏற்றபடி அமையும் வாழ்க்கையும், அந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்ளப்படும் முறையும், மற்ற எவருடைய வாழ்க்கைக்கோ, வாழ்க்கை அமைவதற்காக அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கோ, கேடு மூட்டாததாக அமைந்தாக வேண்டும்; அப்போதுதான், சமுதாயம் சாயாமல், சரிந்து போகாமல் இருக்க முடியும்.

ஆகவே, பொதுவாக அனைவரும் வாழவேண்டும், அதற்குக் குந்தகம் ஏற்படாத முறையில், நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டு ஒழுக வேண்டும் என்பதே சமுதாய நெறி—அறவழி ஆகிறது. அதனைக் கட்டிக் காதது வருவதே, சட்டம். எனவே சட்டம், அறவழியை அழியாது பாது காத்துத் தருகிறது. ஆகவே, அறம் நிலைக்க, சட்டம் அச்சாணியாகிறது. அநத அச்சாணியின் ஒழுங்குக்கும் நேர்த்திக்கும், வலிவுககும் ஏற்பததான் சமுதாயத்தின் தரம் அமையும். சமுதாயத்தின் தரம் உயர உயர அங்குக் காணபபடும் சட்டததின் நேர்த்தியும் மேனமை மிககதாகும். சட்டத்தின்படி ஒழுகி வருவதன மூலம் ஏற்படும் வலிவும் பொலிவும், சமுதாயத்தின் தரததை உயர்த்துகிறது; ஆகவே சட்டம், சமுதாயத்தை உருவாக்கி, பாதுகாத்து, வளரச்செய்து, அதனுடைய தரத்தையும் உயர்த்துகிறது.

எந்த அளவுக்கு, ஒரு சமுதாயத்தின் தரம் உயர முடியும் என்று எண்ணிபபார்தத பேரறிவாளர்கள் கூறியிருப்பது, மேலெழுந்தவாரியாகக் கவனிப்பவர்களுககு விந்தையாகக்கூடத் தோன்றும். சட்டங்களே தேவை இல்லாத அளவுக்குச் சமுதாயத்தின் தரம் உயர்ந்து விட்டது என்ற நிலை பிறநதிடவேண்டும் என்கிறார்கள அந்தப் பேரறிவாளர்கள்.

தரம் உயர்ந்துவிட்ட சமுதாயத்துக்குச் சட்டங்கள் தேவையில்லை!

தரம் கெட்டுவிட்ட சமுதாய நிலையிலும் சட்டங்கள் தேவை இல்லை! ஏனெனில், தரம் கெடடுவிடட சமுதாயததில், சட்டஙகள் சரிந்து போய்விடும்!

இது வியப்புக்குரிய செய்தி என்று மட்டும் கருதுவது போதாது; மிக உயர்ந்த நிலையிலும் சட்டம் தேவைப்படாது, மிகக் கேவலமாகிவிட்ட நிலையில் சட்டம் தேவை இல்லை என்பது நகைச்சுவைப் பேச்சும் அல்ல.

இனி மருந்து எதற்கு? என்று நோய் முற்றிப்போய் ஆள் தேறமாட்டான என்று தெரிந்துவிட்ட போதும் கூறுகிறார்கள்; நோய் நீங்கிப்போய், ஆள் நல்ல உடற்கட்டுடன் விளங்கும்போதும் கூறுகிறார்கள்.

இரண்டும் ஒன்று என்றா பொருள்? இல்லை!

அஃதே போலத்தான், சட்டங்களின் அருமை பெருமையை உணர்ந்து, பயனை அறிந்து அதன்படி ஒழுகவேண்டும் என்ற நினைப்போ நிலையோ அற்ற மக்கள் கூட்டத்துக்குச் சட்டத் தொகுப்பு தேவையில்லை; அதுபோன்றே அழுக்காறு, அவா, வெகுளி எனும் கேடுகள் அறவே நீக்கப்பட்டு, அறநெறியினைத் தமது இயல்பு ஆக்கிக்கொண்டுவிட்ட மக்களுக்கும் சட்டம் தேவை இல்லை.

ஆனால், இன்றைய உலகு, இந்த இரு நிலைகளைக் கொண்டதாக அமைந்து இல்லை.

சட்டத்தின் பிடியில் தங்களை ஒப்படைக்க மறுக்கும் காட்டுப் போக்கினரும் அதிகம் இல்லை, அறநெறியினைத் தமது இயல்பு ஆக்கிக் கொண்ட முழுமனிதர்கள் கொண்டதாகவும் சமுதாயம் இல்லை. நிதான புத்தியுடன் இருக்கும் போது எவை எவைகளைத் தகாதன, தீதானவை, கேவல மானவை, கேடு பயப்பவை என்று உணருகிறார்களோ, அதே செயல்களை, அழுக்காறு, அவா, வெகுளி எனும் உணர்ச்சிகளின் பிடியிலே சிக்கி விடும்போது செய்திடும் போக்கினர் நிரம்ப உள்ள நிலையிலேயே சமுதாயம் இருக்கிறது.

ஆமாம், செய்தேன்!
செய்தேன், அதனால் என்ன?
செய்தேன்! நீ யார் கேட்க?
செய்தேன்! என்ன செய்துவிடுவாய்!
செய்தேன்! செய்வேன்!

இவ்விதம் ஆர்ப்பரித்திடும் நிலையினின்றும் மெள்ள மெள்ள விடுபட்டு, தீய செயல்களைச் செய்துவிட்ட பிறகு, தவறு என உணர்ந்து, வருத்தப்படுவது, பயப் படுவது, வெட்கப்படுவது, மறைக்கப் பார்ப்பது, மறுத்துப் பார்ப்பது, மறக்கப் பார்ப்பது என்ற நிலைக்கு, மனிதர்கள் செல்வதற்கே பலப்பல நூறு நூற்றாண்டுகளாயின!!

கொன்று குவித்தேன்!
வெட்டி வீழ்த்தினேன்!
துண்டு துண்டாக்கினேன்!

என்று, பகைவர்களை எதிர்த்திடும் போர்ச் சூழ்நிலையில், பேச்சு எழுகிறது; கேட்போர், பதறுவதில்லை; மாறாக, பாராட்டுகிறார்கள்.

கொளுத்திவிட்டேன்!
கொள்ளை அடித்தேன்!
மானபங்கப்படுத்தினேன்!

என்று கூறுவதைக்கூட, போர்க்காலத்தில், கூச்சமின்றிக் கேட்டுக்கொள்ளும் மனநிலை ஏற்படுகிறது,

ஆனால், இந்த மனநிலை, உள்ளத்திலே மூண்டுவிடும் வெப்பம் குறையக் குறைய மாறத் தொடங்கி, பகை மடிந்த பிறகு, மடிந்துபோகிறது.

புதிய கருத்துகள், புதிய முறைகள், புதிய ஏற்பாடுகள் மிகுதியாக உள்ள இந்நாட்களிலேயும், ஒவ்வொரு பெரும் போருக்குப் பிறகும், கொடுமைகளையும் அழிவுச் செயலையும் வெறுத்தும் கண்டித்தும், மனிதத்தன்மையின் மேம் பாட்டினை வலியுறுத்தியும், பல ஏடுகள் வெளியிடப்படு கின்றன; போர் இனிக்கூடாது, போரற்ற உலகு காண வேண்டும், போர் எழாத சூழ்நிலை அமைக்க வேண்டும், அழிவுக் கருவிகளை அழித்திடவேண்டும், கலந்து பேசிக் கேடு களையவேண்டும், கூடி வாழ்ந்திட முறை காண வேண்டும் என்ற பேருண்மைகள் வலியுறுத்தப்படு கின்றன.

அவ்விதமான பேருண்மைகளை வலியுறுத்துவோர் களைப் பேரறிவாளர் என்று போற்றிடச் சமுதாயம் முன்வருகிறது.

பெரும்போரில் ஈடுபட்டுப் பகைவர்களை அழித்திடப் பல்வேறு கொடுமைகளையும் கூசாது செய்தவர்களே கூட, போர் முடிந்தபிறகு, போர் கொடுமையானது, போர் கூடாது, அழிவு தடுக்கப்படத்தான் வேண்டும், அமைதியான உலகே ஆனந்த உலகு என்று உணர்ந்து பேசுகின்றனர்.

போரில் ஈடுபட்டவர்களுக்கே போர் கூடாது என்பதிலே உண்மையான எண்ணம் ஏற்படும் என்று அறிவாளர் கூறியிருப்பது, இந்தப் போக்கை அறிந்ததால் தான்.

போர் முடிந்தபிறகு மன மாறுதல் ஏற்படுவது போலவே, தனிப்பட்ட முறையிலே எழும் பகை காரண மாக ஒருவன், தீயசெயலைச் செய்துவிட்ட பிறகு, அவன் உள்ளத்திலே பகை உணர்ச்சி மடியத் தொடங்கும்போது, அவனுக்கே, தன்னுடைய செயலைக்குறித்து, ஒரு அரு வருப்பும் அச்சமும் எழுகிறது.

பொதுவாகப் பார்க்கும்போது, கொடுமை செய் வதில், இயற்கையான களிப்பும், பெருமிதமும் கொண் டிடும் காட்டுக்குணம், இன்று பெருமளவுக்குக் குறைக்கப் பட்டிருக்கிறது என்று கூறலாம். காட்டுக்குணம் என்று கூறும்போது, அதிலேயும் இருவகை இருப்பதை உணர லாம்: ஒன்று, பாய்ந்து தாக்கும் கொடுமை; மற்றது, பதுங்கி மாய்க்கும் கயமை!

இன்று, இரண்டாவது வகைக் காட்டுக் குணமே, அதிகமாகக் காணப்படுகிறது. காரணம், தாக்கும் வலிவு குறைந்திருக்கிறது என்பதுடன், தாக்குதலை வெறுப் பார்கள், எதிர்ப்பார்கள், தடுப்பார்கள் என்ற அச்சம் மேலிட்டுவிட்டிருக்கிறது; எனவேதான், பதுங்கிடவும், தாக்கிய பிறகு ஒளிந்திடவும், கேட்கும்போது மறுத் திடவும், பிடிபடும்போது தப்பித்துக் கொள்ளவும் கொடுமை செய்தவன், இந்நாட்களில் முயலுகிறான்.

இந்தப் போக்கு ஏற்படச் சமுதாய அமைப்பும், அதன் விளைவாக ஏற்பட்ட சட்டமும், அந்தச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுத்திடும் திறத்துடன் ஒரு அரசும் காரண மாயின.

எனவே, சட்டம், மனிதனுடைய மனத்திலேயும் போக்கிலேயும், குறிப்பிடத்தக்க ஒரு மாறுதலை ஏற் படுத்தத் துணைபுரிந்திருக்கிறது; கொல்லும் புலிக்குக் கூண்டாக இருப்பது மட்டுமன்றி, புலியின் இரத்த வெறிப் போக்கை ஓரளவு மாற்றியும் இருக்கிறது என்று கூறலாம்.

தனிப்பட்டவர்களுக்குள் ஏற்பட்டுவிடும் பகை யானாலும், இரு நாடுகளுக்குள் மூண்டுவிடும் பகையா னாலும், பகைகொண்ட அந்த இரு தரப்பினரின் வலி வுக்கு ஏற்றபடி, வெற்றி தோல்வி அமைகிறது.

சட்டத்திற்கு உட்பட்ட ஒரு சமுதாயத்தில், ஒருவன், வேறு ஒருவனைக் கொடுமை செய்யும்போது,

கொடுமைக்கு ஆளானவன் பக்கம் சமுதாயம் முழுவதும் துணை நிற்கிறது என்று பொருள்படும்.

கொடுமை செய்தவன், தனியாக்கப்பட்டு விடுகிறான்!

கொடுமைக்கு ஆளானவன் சார்பாகச் சமுதாயம் எழுகிறது; சட்டம் முழக்கம் எழுப்புகிறது; அரசு துணை நிற்கிறது.

கொடுமை செய்தவன் வலிவுமிக்கவனாக இருக்க லாம்; கொடுமைக்கு ஆளானவன், வலிவற்றவனாக இருக் கலாம். அந்த இருவருக்குள் மூண்டுவிட்ட பகையில், சமுதாயம் சட்டத்தின் துணையுடன், தலையிடாதிருக்கு மானால், வலிவற்றவனை வலிவுள்ளவன் வதைத்திடு வான், வலிவற்றவன் அழிக்கப்பட்டுப் போய்விடுவான். ஆனால் சட்டத்திற்குத் தன்னைத்தானே உட்படுத்திக் கொண்ட சமுதாய அமைப்புமுறை இருக்கிற காரணத் தால், அந்த வலிவற்றவனுக்குத் துணையாகச் சமுதாயமே நிற்கிறது; ஒருவன் எத்துணை வலிவுமிக்கவனாக இருப் பினும், அவனுடைய வலிவு, சமுதாயத்தின் கூட்டுவலிவின் முன்பு எம்மாத்திரம்? எனவே, அவன், தன் வலிவினைக் காட்டிட இயலாது! அவன் செய்த கொடுமைக்கேற்ற தண்டனை தரப்படுகிறது; கொடுமை செய்தவன், தன் சொந்த வலிவினைக்காட்டித் தப்பித்துக்கொள்ள முடி யாது போகிறது.

எனவே, சட்டம், வலியோர் சிலர் எளியோர் தமை வதை புரியும் கொடுமையைத் தடுத்திடும் வலிவுமிக்க ஓர் ஏற்பாடாக விளங்கி வருகிறது.

இவ்வளவும், இதற்கு மேலும் கூறலாம், சட்டத்தின் பொருள், பொறுப்பு, பொருத்தம் ஆகியவைபற்றி!

இவைகளை உள்ளடக்கித்தான், சட்டம் ஆள்கிறது என்று கூறுகிறார்கள். சட்டம், தனிப்பட்ட எவரையும் விட வலிவுமிக்கது, எவர் சார்பிலும் நின்றுவிடாமல், வலியோர் எளியோரை வதைக்காதபடி பார்த்துக் கொள் கிறது என்று கூறுகிறார்கள்.

சட்டத்துக்கு அடங்கி நடப்பது—கேவலப்போக்கு என்றோ, கோழைத்தனம் என்றோ கூறுபவர் எவரும் இரார்; ஏனெனில், சட்டம் ஒரு சமுதாய ஏற்பாடு,

எனவே, அந்தச் சமுதாயத்திலே உள்ள ஒவ்வொரு தனி மனிதருக்கும் தன்னுடைய இசைவின் பேரில் அமைந்துள்ள ஏற்பாடே சட்டம் என்று கூறிக்கொள்ள, பெருமைப்பட, உரிமை இருக்கிறது சட்டத்திற்கு உட்பட்டு நடப்பது என்பது, தானும் சேர்ந்து சமைத்துக்கொண்டுள்ள ஒரு சமுதாய ஏற்பாட்டுக்கு, சமுதாய நலனைக் கருதி, உடன்பட்டு ஒழுகி வருவது என்ற பொருள் தருவதால், அது தவறு ஆகாது என்பது மட்டுமல்லாமல், அது தலையாய கடமை என்ற எண்ணம் எழுகிறது.

சட்டம் அவ்விதம்; நாம் என்ன செய்யலாம்?

சட்டத்திற்கு மாறாக நான் ஏதும் செய்வதற்கு இல்லை

என்று கூறிடுவோர், ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில்' அல்லது ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையில், தமது விருப்பு வெறுப்பு எப்படி இருப்பினும், அந்த விருப்புவெறுப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டேனும், சமுதாய ஏற்பாட்டுக்கு ஒத்தபடிதான் நடந்துகொள்ள வேண்டும் என்பதைத் தான் தெரிவிக்கிறார்கள்.

* * *

நாம் என்ன செய்யலாம்? சட்டம் அப்படி!
இப்படியும் ஒரு சட்டமா?
இதற்கும் சட்டம் வந்துவிட்டது!
எடுத்ததற்கெல்லாம் சட்டமா?

சட்டம் என்றாலும் அதிலே பொருத்தம், பொருள் இருக்க வேண்டாமா?

ஆர அமர யோசிச்சிச் சட்டம் போடணும்.
இவருடைய சட்டமப்பா இது!
எத்தனையோ சட்டத்திலே இது ஒன்று.
ஏன், போட்டுவிடேன் சட்டம் இதற்கும்?
சட்டம் போடுவதா பெரிய கஷ்டம்?
அவருக்கென்ன, நினைத்தா போடுவாரு ஒரு சட்டம்!
சட்டம் வருகிறதாம்பா! தெரிந்துகொள்!
சட்டம் போடப்போறாராமே பெரிய சட்ட நிபுணரு!
சட்டம் போட இவனுக்கு என்ன தகுதி இருக்குது?

புரிந்துகொண்டா போடறாங்க சட்டம்?
யாரைக் கேட்டுப் போட்டாங்க இந்தச் சட்டம்?
இவனோட சட்டத்தை எவன் மதித்து நடப்பான்?
இதுக்கும் பேரு சட்டந்தானாம்!
இந்தச் சட்டம் நிலைக்குமா?
இவனோடு தீர்ந்தது இந்தச் சட்டம்!
சட்டம் போட்டுவிட்டா பிரச்சினை தீர்ந்து போச்சா?

எத்தனையோ சட்டத்தைப் பார்த்தாச்சி; விட்டுத் தள்ளு!

இந்தச் சட்டம் தொலையணும்; நாடு உருப்பட வேணும்!

இங்கேதான்யா இப்படிப்பட்ட சட்ட மெல்லாம்!

இப்படிப்பட்ட சட்டம் போட்டவனெல்லாம் என்ன ஆனான்னு தெரியாதா?

நியாயந்தானாய்யா இந்தச் சட்டம்?

கொஞ்சமாவது ஈவு இரக்கமிருந்தா, இப்படி ஒரு சட்டம் போடுவானா?

யார் என்ன செய்ய முடியும் என்கிற ஆணவத்திலே போடற சட்டம்!

சட்டம் போட்டுவிட்டா எல்லோரும் பெட்டிப் பாம்பாகி விடுவாங்கன்னு நினைப்பு!

கண்ணுமண்ணு தெரியாம கொண்டாடினோம்; போடறான் சட்டம்!

சட்டத்தைத்தானே காட்டுகிறே! காட்டு!
சட்டப்படிதானே நடக்குது சகலமும், தெரியுமே!
ஆட்டுக்குப் போடுது சட்டம் ஓநாய்க் கூட்டம்!
வலுத்தவன்கிட்டப் போகுதா இந்தச் சட்டம்?
ஏழை வாழவா இருக்குது இந்தச் சட்டம்?
இல்லாதவனை மிரட்டத்தான்யா சட்டம்!
நல்லதுக்குப் போடமாட்டாங்க ஒரு சட்டம்!
சட்டம் ஒழுங்காகத்தான் இருக்குது! இருந்து?
சட்டம் இருக்குதா? ஆமாம் ஏட்டிலேதானே!!

ஏன்யா, சட்டம் சட்டம்னு பேசி வயற்றெரிச்சலைக் கிளப்பறே!

போய்யா, நீயும் உன்னோட சட்டமும்.

என்னய்யா செய்துவிடும் உன்னோட சட்டம்?

ஆமாம்! மீறப்போறேன் உன் சட்டத்தை! செய்ய முடிந்ததைச் செய்துகொள்ளு, போ!

சட்டம் சட்டம்னு பயந்து சாகச் சொல்றயா?

உயிரைத்தானேய்யா பறிச்சிக்கும் உன் சட்டம்? செய்யட்டும்!!

கிளம்புங்க, நமக்காகச் சட்டமா? சட்டத்துக்காக நாமா? என்பதை ஒருகை பார்த்தேவிடுவோம்!

* * *

தம்பி! முற்பகுதியில், சட்டத்தின் மேம்பாடுபற்றிக் கூறியிருப்பதற்கும், பிற்பகுதியில், சட்டத்தைத் துச்சமென்று கருதும் மனப்போக்கு எழத்தக்கவிதமாக எழுதியிருப்பதற்கும் பொருத்தம் காணோமே—சட்டம் ஒரு சமுதாய ஏற்பாடு என்பதற்கான அழுத்தமான காரணங்களைக்காட்டிவிட்டு. சட்டத்தைக் கேலிசெய்தும் கேவலப்படுத்தியும், மீறத்தக்கது ஒழித்திடவேண்டியது என்ற முறையிலும் எழுதியிருப்பது முறையாகத் தெரியவில்லையே என்று எவருக்கும் கேட்கத் தோன்றும்.

பொறுத்தமற்றதை, முறையற்றதை எழுதும் பழக்கம் எனக்கும் இல்லை என்பதை நீ நன்கு அறிந்திருக்கிறாய்—எனவே, ஏன் நான் இவ்விதம் எழுதினேன் என்று எண்ணிப்பார்த்தால் உண்மை விளங்கும்.

சட்டம், சமுதாய ஏற்பாடாக, கட்டுக்கோப்பு கண்ணியம் ஒழுங்கு நீதி நியாயம், நேர்மை ஆகியவற்றினைப் பாதுகாத்திடத் தக்கதாக அறநெறி மேற்கொள்வதாக அமைந்திருக்குமானால், அப்படிப்பட்ட சட்டத்தை அனைவரும் வரவேற்றுப் போற்றி அதன் கட்டுக்கு அடங்கிச் சமூக மேம்பாடு எழில்பெற ஒழுகவேண்டும்—ஒழுகிவருகின்றனர் மிகமிகப் பெரும்பாலோர். ஆனால் சட்டம், தான்தோன்றித்தனமாக, ஆணவப் போக்குடன், ஆய்ந்து பார்க்காமல், ஆதிக்க வெறிகொண்டு, அக்கிரமத்

துக்குத் துணையாக, அநீதியைக் கொலுவேற்ற இயற்றப்படுமானால், சட்டம் மதிப்பற்றுப்போகும், துச்சமென்று எண்ணுவர், எதிர்த்திட முனைவர்—எதிர்த்துள்ளனர்—எதிர்த்து நிற்பர்.

சட்டம் நோய் தீர்க்கும் மருந்து என்று கொள்வோமானால், அம்மருந்து முறைப்படி செய்யப்பட்டதாக, அத்துறை வல்லுநரின் ஒப்பம் பெற்றதாக, நோய்தீர்க்க வல்லதாக அமைந்திருக்கவேண்டும். அங்ஙனம் தயாரிக்கப்பட்டதாக இருப்பின் கசப்பு, குமட்டல், எரிச்சல் ஏற்படினும் சகித்துக்கொண்டு, நோய்போக அம்மருந்து உட்கொள்வர். பொருள்வகை, செய்முறை அறியாது, கண்மூடித்தனமாக, விளக்கமற்ற நிலையில் விரைவு அதிகம்காட்டி. தயாரித்த மருந்து எனின் அதனை உட்கொள்ளார்—உட்கொள்பவர்க்கு நோயினும் கேடான நிலையே ஏற்பட்டுவிடும்.

சட்டத்தை மீறலாம் என்ற நினைப்பும், மீறவேண்டும் என்ற துடிப்பும், மீறத்தக்க துணிவும் மக்கள்—அல்லது குறிப்பிடத்தக்க பகுதியினர் கொள்ளத்தக்க விதமான கோணற் சட்டத்தை இயற்றிவிட்டு, சட்டம் ஒரு சமுதாய ஏற்பாடு, அதனை மீறலாகாது என்று பேசிப் பயன் இல்லை.

அவ்விதம் செய்யப்பட்ட சட்டங்கள் நிலைத்திருப்பது மில்லை.

எனவேதான், சமூகத்தில், விவரம் அறியாமல், விளக்கம் பெறாமல், ஆர அமர யோசியாமல், தீது பயக்கத்தக்க, தன்மானம் அழிக்கத்தக்க, உரிமையை உருக்குலையச்செய்யத்தக்க, வலியோர்க்குத்துணை நிற்கத்தக்க விதமான சட்டங்களை எதிர்த்து நிற்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன — நடைபெற்றுக் கொண்டு வருகின்றன; நடைபெற்றுத்தீரும்.

சட்டம் இயற்றுவது என்பது எத்தனை பொறுப்பான காரியம் என்பதை உணர்ந்து, தூய நோக்கத்துடன் இயற்றிட வேண்டும்.

சட்டம் இயற்றும் அதிகாரம் எம்மிடம் சிக்கிவிட்டது, இனி எமது விருப்பத்தின்படி சட்டங்களை இயற்றுவோம் என்ற போக்கு அறவே கூடாது. அதனைச் சமூகம் தாங்கிக்கொள்ளாது.

தேவை அறிந்து, சூழ்நிலை தெரிந்து, அனுபவ அறிவையும் அறிவாளர் கருத்தையும் பெற்று, மக்களுக்குப் பெரும்பாதகம் விளைவிக்காத விதமான முறை கண்டறிந்து, சட்டங்கள் இயற்றப்படவேண்டும்; அத்தகைய சட்டங்களை மதித்து நடப்பர்—நடந்து கொள்கின்றனர்.

கனிதரும் மரமாகத்தக்க செடி, தோட்டத்தில் பயிரிடுபவர்களே, அந்தச்செடி, வீட்டுச் சுவரின் இடுக்கிலே தன்னாலே முளைத்துவிட்டால், கல்லி எடுக்கிறார்கள். வேரினைக் கருக்கிடவும் செய்கிறார்கள்.

மக்களின் நல்வாழ்வுக்காக இந்தச் சட்டம் பிறந்திருக்கிறது என்ற நம்பிக்கை எழத்தக்க முறையில் சட்டம் இயற்றவேண்டும்—மீறினால் என்ன ஆகுமோ என்ற கிலி மக்கள் மனத்திலே எழும். ஆகவே, அவர்கள் தண்டனைக்குப் பயந்து அடங்கிக்கிடப்பர் என்று மட்டும் எண்ணிக்கொண்டு, சட்டத்தை இயற்றிவிடுவது, முழு அளவு பலனை நிச்சயம் தாராது. இதை விளக்கிடும் நிகழ்ச்சிகள் வரலாற்று ஏடுகளிலே நிரம்ப இருக்கின்றன.

சட்டத்தை மீறலாமா என்று கேட்கிறார்களே சிலர், அவர்களுக்குக் கூறிடத் தயங்காதே, தம்பி! தேவையான, நியாயமான சட்டங்களை நாங்கள் மதிக்கிறோம். சட்டத்தின் கட்டுக்கு அடங்கி நடந்து கொள்கிறோம். ஆனால், எம்மை இழி மக்களாக்கிவிடத்தக்க கேடு விளைவிக்கும் சட்டம் இயற்றப்பட்டால், அதனை மதித்திட முடியாது, மீறித்தான் நடப்போம், அதற்காக அளிக்கப்படும் தண்டனையை இன்முகத்துடன் ஏற்றுக்கொள்வோம் என்பதனை-தெளிவாக-திட்டவட்டமாக என்று.

எல்லாச்சட்டத்திலும் மேலானது, உயிரானது, புனிதமானது, அரசியல் அமைப்புச் சட்டம் என்கிறார்கள்.

அதனைவிட மேலானது, புனிதமானது, நல்வாழ்வுக்கான மக்களின் அடிப்படை உரிமை.

அந்த உரிமையைப் பறித்திடும் சூதுமதியுடன், சூழ்ச்சித் திறத்துடன், ஒரு ஏற்பாடு செய்துகொண்டு, அதற்குச் சட்டத்தைக் கருவியாக்கிக் கொண்டால், அந்தச் சட்டத்தை எப்படி மதித்திட முடியும், எவர் மதிப்பர், ஏன் மதித்திடவேண்டும்,

இந்த எண்ணத்துடனேயே, இந்த எண்ணம் தரும் தெளிவையும் துணிவையும் துணைகொண்டே, இந்தி எதிர்ப்பு அறப்போர் நடாத்தப்பட்டு வருகிறது. இது சட்டத்தை மீறுவதாகும் என்கிறார்கள் துரைத்தனத்தில் இடம்பிடித்துக் கொண்டவர்கள்; அல்ல! அல்ல! எத்தகைய தீதான, தேவையற்ற, சட்டத்தை இந்தத் துரைத்தனம் எம்மைச் சுமக்கச் சொல்கிறது பாருங்கள் என்று உலகோர்க்கு உணர்த்த நடத்தப்படும் அறப்போர் இது என்கிறோம், நாம்.

தம்பி! சட்டம் பொருத்தம் பொருள் அற்றதாகவும், உரிமைக்குக்கேடு விளைவிப்பதாகவும் இருந்திடும்போது, மக்கள் சட்டம்பற்றி என்னென்ன பேசிக் கொள்வார்கள் என்பது குறித்து நான் குறிப்பிட்டுள்ள பகுதியை மறுபடியும் ஒருமுறை படித்துப்பார். ஒவ்வொரு பேச்சும் ஒரு மனநிலையைக் காட்டிடும்.

நாம் என்ன செய்யலாம், சட்டம் அப்படி!—என்ற பேச்சிலே, ஒரு **ஏக்கம்** தொனிக்கிறதல்லவா? இந்த ஏற்பாடு கெடுதல் மூட்டுகிறது, தெரிகிறது; ஆனாலும், சட்டம் இதுபோலச் செய்துவிட்டார்களே, என்ன செய்வது என்ற ஏக்கம்

இப்படியும் ஒரு சட்டமா? கோபமும் வெறுப்பும் கலந்திருக்கிறது, இந்தக் கேள்வியில்.

இதற்கும் சட்டம் வந்துவிட்டதா? என்று கேட்கும்போதும் **எடுத்ததற்கெல்லாம் சட்டமா?** என்று வினவிடும்போதும், ஒரு துரைத்தனம் கண்டதற்கெல்லாம் சட்டம் போட்டு, மக்களை அதிக அளவுக்குக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது, அந்தத் துரைத்தனத்துக்கு 'அமுல்' செய்வதிலேயே அளவற்ற சுவை இருக்கிறது என்ற கருத்து கலந்து வெளிவருகிறது

பொருளும் பொருத்தமும் அற்ற முறையிலே சட்டம் இயற்றும்போது, மக்கள் வெறுப்படைந்து பேசுகிறார்கள், சட்டம் என்றால் அதிலே பொருத்தம் பொருள் இருக்க வேண்டாமா என்று.

ஆரஅமர யோசித்துச் சட்டம் போடவேண்டும் என்ற பேச்சு எப்போது எழுகிறது! ஒரு பலன் கிடைக்கும் என்று எதிர்பார்த்து எடுத்துரைத்துச் சட்டம் இயற்ற,

நேர்மாறானது விளைவது காணும்போது இப்பேச்சு எழுகிறது.

இவருடைய சட்டமப்பா இது?—என்று கூறும்போது, சட்டம் இயற்றுபவர்கள் மீது தமக்குள்ள அலட்சியத்தை வெளியிடுகிறார்கள். ஆணவக்காரன் அல்லது அசடன்—இவன் சட்டம் இதுபோலத்தான் இருக்கும் என்ற பொருள்பட.

எத்தனையோ சட்டத்திலே இது ஒன்று. அடுக்கடுக்காகச் சட்டங்களைக் குவித்துவைத்திருக்கிறார்கள் தேவையற்று, என்பதைக் குறிக்க இதுபோலக் கூறுகிறார்கள்.

ஏன், போட்டுவிடேன் சட்டம் இதற்கும்?— என்று கேட்பவர், அதிகாரத்திலிருப்பவர், எந்த நியாயம் கேட்டாலும் உரிமை கேட்டாலும் அதை அடக்கிட சட்டத்தைக் கருவியாக்கிக்கொள்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். அத்துடன், அதிகாரத்திலிருப்பவரிடம் மதிப்பு மங்கி வருகிறது என்பதையும் காட்டுகிறார்.

தம்பி, இப்படியே விளக்கம்பெற, ஒவ்வொரு பேச்சையும் படித்துப் படித்துக் கருத்தினை ஆராய்ந்தால், **திகைப்பு வியப்பு, ஏக்கம், வெறுப்பு,** அலட்சியம், **கோபம், எதிர்ப்பு துணிவு** எனும் ஒவ்வோர் வகையான உணர்ச்சியும் இந்தப் பேச்சுக்களிலே உள்ளடங்கி இருப்பதை அறிந்துகொள்ளலாம்.

பொறுத்துப் பார்த்துப் பார்த்து, முறையிட்டால் மாற்றப்படும் என்று எதிர்பார்த்து ஏமாற்றமடைந்து, எரிச்சல் மூட்டப்பட்டு இறுதியில் என்ன நடந்தாலும் நடக்கட்டும் எதிர்த்தே தீருவது என்ற துணிவு பிறந்து, அந்தக் கட்டத்தின் போது தான்,

தலையா போகும்? மீறத்தான் போகிறேன் மீறுவோம் கிளம்புங்கள்!

என்பன போன்ற பேச்சுக்கள் எழுகின்றன; செயலும் நிகழ்கிறது.

இந்த நிலைக்கு மக்களைத் துரத்தக்கூடியதாக, சட்டம் இயற்றக்கூடாது.

இந்த நெறியை ஆட்சியினர் மறந்து, கண் மூடித்தனமாகச் சட்டம் இயற்றினால், அந்தச் சட்டம் ஏட்டில்

இருக்கும், நாட்டிலுள்ள நல்லோர் துணிந்து அதனை மதிக்க மறுப்பர்.

நாம் நடத்திவரும் இந்தி எதிர்ப்பு அறப்போர் இந்த நிலையையே எடுத்துக் காட்டுகிறது; எனவே சட்டம் ஒரு சமுதாய ஏற்பாடு என்ற மேலான கோட்பாட்டை மதித்து ஒழுகும் நமது கழகத்தவர், ஆகாத, தீதான, தேவையற்ற, பொருளற்ற, வேண்டுமென்றே பூட்டப்படுகிற, உரிமை பறிக்கிற சட்டத்தை எதிர்த்து சிறை செல்வதை, ஒரு தீமையை எதிர்த்து நிற்கும் அறம் என்று உளமார நம்பி நடந்துகொள்கிறார்கள். அந்தச் சீரிய செயல், சட்டம் இயற்றுபவர்கள எத்தகைய நெறி நிற்க வேண்டும் என்பதனை அவர்களே, மெல்லமெல்ல ஆனால், நிச்சயமாக உணர்ந்திட வழி ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளேன்.

இத்தகைய நல்ல நோக்கத்துடன் நடத்தப்படும் அறப்போரில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்களில் நானும் ஒருவன் என்று சொல்லிக்கொள்வதிலே நான் பெருமைப்படுகிறேன்; அந்தப் பெருமிதத்தில், எனக்கு! எனக்கு! என்று கேட்டுத் தம்பிகள் பங்கு பெற்றுக்கொள்வது எனக்குப் பெருமகிழ்ச்சி தருகிறது. அந்தப் பெருமையில் தமக்குரிய 'பங்கினை'ப் பெற முனைந்து, நாவலர் நெடுஞ்செழியன் சிறை சென்றிருக்கிறார். என் வாழ்த்துக்களை அவருக்கும், கோவை மாவட்டச் செயலாளர் உடுமலை நாராயணன் மற்றும் பல நண்பர்கட்கும் வழங்கி மகிழ்கிறேன். வாழ்த்துகள் மட்டுந்தானா அண்ணா! என்று கேட்டிடமாட்டாய் என்று எண்ணுகிறேன், தம்பி! ஏனெனில் நீ அறிவாய், அன்பு ததும்பும் ஒரு தாய இதயத்திலிருந்து நான் கொய்து அளிப்பது அந்த வாழ்த்து! அந்த மலரின் மணமும் மாண்பும் நீ அறிந்திருக்கிறாய்!!

அண்ணன்,

2-8-64



காஞ்சிக் கடிதம்: 3

அவர் படும் அல்லல்

காமராசரின் கருத்தைக் குடையும் கழகம்

கழகம் ஆளும் கட்சி ஆகிவிடும் என்பதால் காமராசருக்கு மனக் குமட்டல்

பொதுமக்களின் ஆணைக்கு முன்னால் எந்த ஆர்ப்பரிப்பும் நில்லாது; நிலைக்காது!

பதினேழு ஆண்டு கடந்தும் தீராத சோற்றுப் பிரச்சினை

நல்லவரிடம் பொல்லாத வியாதி

தம்பி,

பைத்தியக்காரர்கள்!
பகற்கனவு காண்பவர்கள்!

பெரிய இடத்திலிருந்து நமக்குக் கிடைத்திருக்கும் 'பட்டங்கள்' இவை! எவ்வளவு உயரத்திலே தூக்கிக் கொண்டுபோய் என்னை உட்கார வைத்தாலும், எத்தனை பலமான குரலிலே பல்லாண்டு பாடினாலும், எத்தனை விதவிதமானவர்களைக் கொண்டுவந்து நிறுத்தி என் பல்லக்கைத் தூக்கச் சொன்னாலும், இந்தப் பாரதம் மட்டுமல்ல, பாரே புகழ்கிறது என்று பாமாலை சூட்டினாலும் என் எண்ணம் மட்டும் திரும்பத் திரும்ப 'அவர்கள்' பற்றியேதான் செல்கிறது, 'அவர்களை'ப் பற்றிப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே! 'அவர்

களை'ப் பற்றிப் பேசினாலொழிய என்நா சுவை பெறுவதில்லை. நீங்கள் ஏதேதோ கேட்கிறீர்கள்,

லாவோஸ் பிரச்சினை என்கிறீர்கள்
காஷ்மீர் நிலைமை என்கிறீர்கள்
பாகிஸ்தான் நிலைமை என்கிறீர்கள்

ஏதேதோ கேட்கிறீர்கள். ஆனால், என் மனம் ஒரே ஒரு விஷயத்திலேதான், நானே எவ்வளவு தடுத்துப் பார்த்தாலும். கட்டுப்படுத்த முயன்றாலும், திரும்பத் திரும்பச் சென்று தாவுகிறது—அந்தப் பயல்களைப்பற்றித்தான் எண்ணுகிறேன், எண்ணுகிறேன், எண்ணியபடி இருக்கிறேன். யாராரையோ எப்படி எப்படியோ மண்டியிடச் செய்துவிட்டேன், கூட்டாளிகளாக்கிக் கொண்டேன்-ஆனால், இந்தப் பயல்களோ......!!

இவ்விதமான கவலைமிகு எண்ணம் கொண்டுள்ள காமராஜர் நமக்கு இந்தக் கிழமை வழங்கியுள்ள பட்டங்கள்,

பைத்தியக்காரர்கள்

பகற்கனவு காண்பவர்கள்

என்பனவாகும்.

காமராஜர், அகில இந்தியக் காங்கிரசுக்குத் தலைவராகிவிட்டார். இனி அவருடைய நேரமும் நினைப்பும், 'அனைந்திந்திய, அதிதீவிர, அதிஅவசர'ப் பிரச்சினைகளிலேயே பாயும் பதியும், இணையும் பிணையும், மற்ற மற்றச் சில்லறைகளைச் சின்னவர்களிடம் விட்டுவிட்டுப் போகிறார்,

மக்களே, ஒழுங்காக இருங்கள்!
மக்களே, ஒன்றுபட்டு இருங்கள்!
மக்களே, உங்களை வாழ்த்துகிறேன்.

மக்களே, உங்கள் வணக்கத்தை ஏற்றுக் கொள்கிறேன்.

நாடு முழுவதும் நன்றாக இருக்க வேண்டும்.

உலகம் முழுவதும் க்ஷேமமாக இருக்க வேண்டும்

என்பன போன்ற உபதேசங்களை அருளியபடி இருந்திடப் போகிறார், அந்த உயர்ந்த நிலைக்கு அவர் சென்று

விட்டார்!!—என்று காங்கிரஸ் வட்டாரத்தினர் பேசிக் கொண்டனர்.

தம்பி! நான்கூடக் கொஞ்சம் அந்தப் பேச்சைக் கேட்டு மயங்கினேன்—இப்போது தெரிகிறது, அவர் எத்தனை அடுக்குள்ள மாடி சென்றாலும், அரசோச்சினாலும், அவருடைய கண்களுக்குத் தெரிவது, கண்களை உறுததுவது, தி.மு.க. என்ற பேருண்மை! அது அவருடைய இயல்பை அல்ல, தி.மு.க.வின் நிலையைக் காட்டுகிறது. எவர் எந்நிலை பெற்றிடினும், அவர் அரசியலில், சந்தித்துத் தீரவேண்டிய சக்தி, சமாளித்தாக வேண்டிய பிரச்சினை, பதிலளித்துத் தீரவேண்டும் என்று கேட்டு நிற்கும் கேள்விக்குறி, தி.மு.க! ஆமாம், தம்பி! அதனால்தான், அவ்வளவு மேலான பதவிபெற்று, பராக்குக் கூறுவோர் படைபெற்று, 'சாந்துப் பொட்டுத் தளதளக்க சந்தனப்பொட்டு மணமணக்க' என்று சிந்து பாடுவார்களே, அதுபோன்ற நிலையினைப் பெற்று, 'தர்பார்' நடத்தினாலும் அவருடைய நினைப்பு, நம்மைப் பற்றி, அவருடைய பேச்சு நம்மைப்பற்றி! எங்கு சென்றாலும், எத்தனை உயர்வு பெற்றாலும், என்ன அதிகாரம் கிடைத்தாலும், எவ்விதமான அமுல் நடத்தினாலும், எவரெவர் வாழ்த்தினாலும், வழிபடடு நின்றாலும், என்னை மறக்க இயலாது உம்மால்! எட்டி எட்டிச் சென்றாலும் உமது மனத்தைத் தொட்டிழுக்கும் நான் எழுப்பிடும் கேள்வி! என்று கூறுவதுபோல, நமது கழகம் காமராஜரின் கருத்தைக் குடைந்தபடி இருக்கிறது. குடைச்சலே, தம்பி! மகா பொல்லாத நோய்! அதிலும் மனக் குடைச்சல் இருக்கிறதே, ஏ! அப்பா! தொல்லை நிரம்பியது, துளைத்தெடுக்கும், படாத பாடு படுத்திவிடும். அந்தக் குடைச்சல் காரணமாக அவர் நம்மை,

பைத்தியக்காரர்கள்
பகற்கனவு காண்பவர்கள்

என்று முச்சங்கத்தினரும் ஒருங்கே கூடிநின்று, தமிழ் மொழிக்கே அணியெனத்தகும சொற்களாம இவை தமைச் சொரிந்த வித்தகரே! வாழ்க! வாழ்க! வளர்க நும் செந்நாப் புலமை! என்று கூறிடுவர் என்று கொலு மண்டபத்துக் கோலேந்திகளும், குழலூதிகளும் கூறிக் குதூகலித்திடத்தக்க முறையில், நம்மை ஏசியுருக்கிறார்.

ஏசக்கேட்டால், அண்ணா! எரிச்சலல்லவா ஏற்படும்? நீ மகிழ்ச்சி காட்டுகிறாயே என்றுதானே தம்பி! கேட்கிறாய். கேட்கத்தான் செய்வாய்! ஒன்று மறந்து விடுகிறாயே, தம்பி! எத்தனை முறை நினைவுபடுத்தினாலும். எனக்கு இத்தகைய பேச்சுகளைக் கேட்டு எரிச்சல் வருவது இல்லையே!! ஏன் இப்படிப் பேசுகிறார்கள்? எந்த நிலையில் இப்படிப் பேசுவார்கள்? என்று இந்தவிதமாக அல்லவா என் எண்ணம் செல்கிறது.

அவ்வளவு பெரியவர், அத்தனை மகத்தான நிலையில் இருந்துகொண்டு, 'கனம்கள்' கைகட்டி நிற்க, கனவான்கள் வாய்பொத்திக்கிடக்க, கொலுவீற்றிருக்கும் நிலையில், நம்மைப்பற்றித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார், நம்மைக் குறித்துத்தான் பேசமுற்படுகிறார் என்றால், நாம் தம்பி! அவருடைய கவனத்தை ஈர்க்கத் தக்க வல்லமையுடன் இருக்கிறோம் என்பது விளக்கமாகிறதல்லவா!! என் மகிழ்ச்சிக்குக் காரணம் அது; பொருத்தமானதா அல்லவா என்பதை எண்ணிப் பார்த்திடு, தம்பி! புரியும், உனக்கும் மகிழ்ச்சி பூத்திடும்.

இப்போதும் தம்பி! நாட்டிலே, பல கட்சிகள் உள்ளன காங்கிரசை எதிர்த்திட. காமராஜரின் கவனம் அந்தக் கட்சிகளின்மீதா செல்கிறது! ''கம்யூனிஸ்டு கட்சி—அசல்—விலைவாசி உயர்வைக் கண்டிக்கப் போராட்டம்—போர் ஆட்டம் அல்ல—நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறது! ஒரு வார்த்தை அதுபற்றி! உஹூம்!! (இதுவரையில்) நினைப்பு வந்தால்தானே? சம்யுக்த சோஷியலிஸ்டு கட்சி (பழய பிரஜாசோஷியலிஸ்டு கட்சி) கிளர்ச்சி நடத்தியிருக்கிறது. ஒரு பேச்சு அதுபற்றி? கிடையாது! மேடை ஏறினால் ''மன்னாதி மன்னா!'' என்று பாடிடுவோர் புடைசூழ்ந்திருக்கும் வேளையில், காமராஜர் பேசும் பொருள் என்ன? தி.மு.கழகம்பற்றி! அவ்வளவு வேலை செய்கிறது, அந்த நினைப்பு!

சிற்றரசர்கள் கப்பம் கட்டுகிறார்கள்! பட்டத்தரசிகள் புன்னகை புரிகிறார்கள். ஆடலழகிகள் ஆடுகிறார்கள், குயிலிகள் பாடுகிறார்கள். இருநதும், பட்டத்தரசனின் முகத்தில் மட்டும் மகிழ்ச்சி இல்லை சோர்ந்து காணப்படுகிறான்; என்ன? என்ன? என்று ஆயிரம் கண்கள கேட்கின்றன! ஒரே பெருமூச்சுத்தான் பதில!! இந்நிலை

என்றால், காரணம் என்ன? மன்னன், மணி மண்டபத்தில் காணும் காட்சி மகோன்னதமானது என்றாலும், அவனுக்கு மருத்துவம் பலப்பல நடாத்தியும் குமட்டல் போகவில்லை என்றால், மன்னன் மனம், மணி மகுடம், சிங்காதனம், சிற்றரசர் பணிவு, சிங்காரிகளின் நெளிவு இவற்றிலா செல்லும்; கோலாகலம் இவ்வளவு இருந்து என்ன பலன், இந்தக் 'குமட்டல் நோய்' என்னைவிட்டுப் போகவில்லையே என்று எண்ணுகிறான்: இது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து, மருந்துக்குக் கட்டுப்படாமல் போய்விடுமானால்.........! அந்த மன்னனுக்கு மலரிலே நெடியும், தேனிலே கசப்பும், தென்றலிலே வெப்பமும் இருப்பதாக அல்லவா தோன்றும்? மனம் படாதபாடு படத்தான் செய்யும்.

அதுபோல, ஆயிரவர் ஆரத்தி எடுக்க, பல்லாயிரவர் பராக்குக்கூற, பட்டத்தரசரெனக் கொலு இருப்பினும், காமராஜரின் மனம் என்ன எண்ணுகிறது? இத்தனை அலங்காரம், ஆடம்பரம், இருந்து என்ன பயன்? அந்தப் பயல்கள், பதினைந்திலிருந்து ஐம்பதாகிவிட்டார்களே! பிளவு, இனி அழிவு என்று கணக்கிட்டோம், வளர்ந்து விட்டார்களே! சென்னை மாநகராட்சியை மறுபடியும் கைப்பற்றி விட்டார்களே, பல நகராட்சிகளைக் கைப் பற்றி இருக்கிறார்களே! இதே பதவி தேடும் வேலையோடு இருந்து தொலைக்காமல் சளைக்காமல் அறப் போராட்ட மும் நடத்தியபடி இருக்கிறார்களே! இவ்வளவுக்கும் இந்தப் பொதுமக்கள் ஆதரவு தருகிறார்களே! தலை காய்ந்ததுகளெல்லாம் கூடிக்கொண்டு, நமது 'தர்பாரை' எதிர்க்கின்ற கொடுமையைக் காணவேண்டி இருக்கிறதே. இந்த இலட்சணத்தில், நாம் அளவு கடந்த செல்வாக்குப் பெற்ற அகில இந்தியத் தலைவராகிவிட்டோம் என்று புகழ்கிறார்கள். சே! சே! சே! என்ன இது! என்ன இது!— என்று எண்ணுகிறார்; ஒரு கசப்பு, குமட்டல் ஏற்படு கிறது!!

பைத்தியக்காரர்கள்.
பகற்கனவு காண்பவர்கள்

என்று ஏசுகிறார்—மனக்கசப்புக்காரணமாக, குமட்டலின் விளைவாக

குமட்டல், தம்பி! கெட்ட வியாதி! உடற்கூறு அறிந் தவர்கள் அதன் இயல்புபற்றிக் கூறுகிறார்கள்.

இதைச் சாப்பிடுங்கள் குமட்டல் போய்விடும்! தேனில் குழைத்துச் சாப்பிடுங்கள், கசப்புத் தெரியாது!! என்று பக்குவம் சொல்கிறார்கள்?

இங்கு நான் குறிப்பிட்டிருப்பது வாயில் ஏற்படும் குமட்டல் அல்ல; மனத்திலே ஏற்படும் குமட்டல்!! இதற்கு மருந்து எளிதிலே கிடைக்காது.

நமது கழக வளர்ச்சி இந்த மனக் குமட்டலை மூட்டி விட்டிருக்கிறது—பலருக்கு! துரும்பாக இளைத்துப் போன வர்களும், மேனி கருத்துப் போனவர்களும் உண்டு, இதனால்.

இருப்பதை இழந்திட மனம் இல்லாத நிலையும், இருப்பது போய்விடுமோ என்ற பீதியும், அவன் பெற்று விடுவானோ இவன் பெற்று விடுவானோ என்ற அச்சமும், இது போய்விட்டால் என்ன செய்வது என்ற ஆயாசமும் அற்ப சொற்பமானவன். யோக்கியதை அற்றவன் என்று நாம் யாரைக் கருதிக் கொண்டிருந்து வந்தோமோ அவர்கள் அல்லவா நல்ல நிலை பெற்று விடுவார்கள் போலத் தெரிகிறது என்ற எண்ணமும் ஏற்படும்போது, மனக்குமட்டல் ஏற்படும்.

அந்தப் பயலா போகிறான் மோட்டாரில்?
ஆமாம், அவரே தான்!

அத்தனை, பெரிய மோட்டாரிலா?எவன் இவனை ஏற்றிக்கொண்டு போகிறான்?

மோட்டாரே அவருடையதுதான்!

மோட்டார்...அவனுடையதா? படாடோபத்தைப் பாரேன்! பயல் எங்கே கடன் வாங்கி இந்தக் கார் வாங்கினான்?

அவர் ஏன் கடன் வாங்கப் பொகிறார்? அவரே பலருக்குக் கடன் தருகிறார்.

இவனா? கடன் தருகிறானா? ஏது? இவனுக்கு ஏது இத்தனை பணம்?

இப்படிக் கேட்டுவிட்டு, மனக்குமட்டல் கொள்பவர் களைக் காண்கிறோம், ஊரில், சில இடத்தில். அந்தக் குமட்டல்காரர், பிறகு தம்முடைய செவர்லேயில் ஏறிக்

கொண்டு, கடற்கரை சென்றால் குளிர்ச்சியா காண முடியும்? நண்பரின் திருமணம் காணச்சென்று அங்கு சுந்தராம்பாள் அம்மையார், கேட்போரின் மனம் உருகும் படி 'வெண்ணீறு அணிந்ததென்ன?' என்று பாடிடும்போது இவர் செவியில் என்ன விழும்? மோட்டார் இவனுக் கென்ன? நன்ற வார்த்தைகள்!!

சாதாரண வாழ்க்கையில் உள்ளவர்களுக்கே ஏற்படக் கூடாது மனக் குமட்டல்—அது நல்ல இயல்பு அல்ல—உள்ளதையும் உருக்குலையச் செய்துவிடும், அதிலும் அரசியல் வாழ்க்கையிலே துளியும் குமட்டல் ஏற்பட்டு விடக்கூடாது—நல்ல நினைப்பே எழாது, நல்ல பேச்சே வராது,

திராவிட முன்னேற்றக் கழகம் வளருகிறது—மகிழ்ச்சி யுடன் பெருமிதத்துடன் கூறுகிறோம்.

ஒரு கட்சியின் வளர்ச்சிக்கு எவை எவை துணை செய்யுமோ, அந்த வசதிகளைப் பெற்றில்லாமலேயே, பொது மக்களின் அன்பு நிறை அரவணைப்பின் காரண மாகவே வளருகிறது.

இந்தக் கழகத்தை, எதிர்க்காதவர் இல்லை, எதிர்க் காத நாளில்லை.

இந்தக் கழகத்தின்மீது வீசப்பட்ட வசை மொழி களைத் திரட்டினால், புராணங்களைவிடப் பெரும் அளவு உள்ள பெரும் ஏடாக்கலாம்,

எனினும், கழகம் வளர்ந்து வருகிறது. வளர்ந்தால் என்ன! வளரக் கண்டு, மனக்குமட்டல் ஏற்படுவானேன்!

காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளை, திட்டங்களைக் கழகம் எதிர்க்கிறது என்பதாலா?

ஆம் என்றால், இதே செயலைச் செய்திடும் பல கட்சி களின்மீது ஏற்படாத கோபம், கசப்பு, கழகத்தின் மீது ஏற்படக் காரணம்? மனக் குமட்டல் அளவுக்கு நிலைமை முற்றிவிடக் காரணம்?

கழகம், வளருகிறது எதிர்ப்புக் கிடையில் என்பது மட்டுமல்ல, பரவலாக ஒரு எண்ணம், நாட்டு மக்களிடம் ஒரு பேச்சு எழுந்துவிட்டிருக்கிறது, அடுத்த முறை

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையக்கூடும் என்ப தாக.

காங்கிரசை எதிர்த்து நிற்கும் வேறு எந்தக் கட்சியை யும் பற்றி இந்தப் பேச்சு எழவில்லை, தி. மு. கழகம் பற்றியே இந்தப் பேச்சு. பரவலாக எழுந்திருக்கிறது.

இது எதிர்க் கட்சி மட்டுமல்ல, ஆளுங் கட்சியாக வரக்கூடிய வகையில் வளரும் கட்சி என்ற எண்ணம் காங்கிரஸ் பெருந்தலைவர்களுக்கே ஏற்பட்டுவிட்டிருக் கிறது. அந்த எண்ணம் காரணமாகவே, மனக்குமட்டல் ஏற்பட்டுவிட்டிருக்கிறது. அந்த குமட்டலின் காரண மாகவே,

பைத்தியக்காரர்கள்.
பகற் கனவு காண்பவர்கள்.

என்று ஏசிப் பேசியிருக்கிறார் அகில இந்திய காங்கிரசின் தலைவர்.

தம்பி! அடுத்த பொதுத் தேர்தலில் என்ன செய்ய வேண்டும் என்பதும், எத்தகைய ஆட்சி அமைய வேண்டும் என்பதும், பொதுமக்களின் கரத்தில் இருக்கிறது, இந் நாட்டின் மன்னர்கள், நாளை அவர்களின் விருப்பத்தின் படி ஒரு அரசு அமைத்துக் கொள்வார்கள். அந்த உரிமை அவர்களுக்கு.

அதுதான் ஜனநாயகம் எனப்படுவது. இந்நிலையில், தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்துவிடப் போகிறதாமே என்று மனக் குமட்டல் கொள்வதால் என்ன பலன்? பொதுமக்கள் விரும்பித் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சிப் பொறுப்பிலே அமர்த்துவார்களானால், அது எப்படிக் குறையுடையதாகும்? ஆட்சியை யாரிடம் ஒப்ப டைப்பது என்ற உரிமை படைத்தவர்களல்லவா பொது மக்கள்? மனக்குமட்டல் கொள்வது எதற்கு?

ஒருவர் பேசியிருக்கிறார் எண்ணிப்பத்து நாள் நடக் குமா, கழக ஆட்சி! என்று,

இன்னொருவர் ஒரு படி மேலே சென்று கூறுகிறார். ''பத்தே நாளில், கழக ஆட்சியைக் கவிழ்த்துக் காட்டு வோம்'' என்று.

உயர்ந்த நிலையிலுள்ள ஒரு காங்கிரஸ் தலைவரிடம் நமது கழகத் தோழர் ஒருவர் பேசிக்கொண்டிருந்தபோது, அந்தக் காங்கிரஸ் தலைவர் கூறினாராம், ''நீங்கள் ஆட்சியைக் கைப்பற்றினாலும், நாங்கள் நொடியில் அதைக் கவிழ்த்து விடுவோம்'' என்பதாக.

இவை நடைபெறுகின்றன என்றே வைத்துக் கொள்வோம். — எல்லாம் பொதுமக்கள் அனுமதி கொடுத்தால் தானே!—யாருக்கு இதனால் நட்டம்? கழகத்துக்கா? இம்மி அளவும் இல்லை!! கழகம், பொதுமக்கள் விரும்பி, அதற்கு எந்த நிலையை அளித்தாலும், எந்தச் செயலைச் செய்திடப் பணித்தாலும், மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் பெற்றிருக்கிறது.

தம்பி! இந்தப் பேச்சுகளிலிருந்து நமக்கு இப்போதிருந்தே, காங்கிரஸ் கட்சி தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வது என்பது குறித்துச் சிந்திக்கத் தொடங்கியிருப்பதிலிருந்தே, காங்கிரசுக்கே ஒரு பலமான எண்ணம் கழகம் ஆளுங் கட்சியாகிவிடும் என்ற எண்ணம் வலுத்துக் கொண்டு வருகிறது என்பது புரிகிறதல்லவா!

அந்த எண்ணம் காரணமாகவே மனக் குமட்டல்.

அதிகாரத்தைப் பெற்றவர்களுக்கு, அதை இழந்திட மனமும் வராது—இழந்துவிடச் செய்யும் ஆற்றல் எவருக்கும் இல்லை என்ற எண்ணமே தடித்து இருக்கும்,

ஆனால் அந்த எண்ணத்தைக் கண்டு, பொது மக்கள் தமது போக்கை மாற்றிக் கொள்ளவும் மாட்டார்கள், உரிமையை இழந்துவிடவும் மாட்டார்கள்.

கோபமில்லாத பழைய காங்கிரஸ்காரர் யாரையாவது பார்த்தால் இதைக் கேள், தம்பி! தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தால் என்னய்யா என்று?

அவருக்கே கூடக் கொஞ்சம் சங்கடம் கலந்த கோபம் முதலில் கிளம்பும்—காங்கிரசின் சேவைபற்றி விளக்குவார்—மரியாதையுடன் அதைக் கேட்டுவிட்ட பிறகு—ஐயா! அந்தக் காங்கிரசா இப்போது இருக்கும் காங்கிரசு? என்று கேள்—சாந்தம் ஏற்படும்—பிறகு மறுபடியும் கேள், தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தால் என்ன தவறு? ஏன் வரக்கூடாது? வரக்கூடாது என்று உங்கள் தலைவர்கள் சிலர்

பேசுகிறார்களே, அது ஏன்? மனக்குமட்டல் கொள்கிறார்களே சரியா? என்று கேட்டுப் பார்.

நாட்டை ஆள நீயா? உனக்கா அந்த அந்தஸ்து!!

நீ யார்? உன் யோக்யதை என்ன? உன்னிடமா நாடு ஆளும் பொறுப்பை ஒப்புவிப்பார்கள்?

நாடு ஆள்வது சாதாரண காரியமா! திறமை வேண்டாமா? தகுதி வேண்டாமா? உனக்கு ஏது அவை?

இப்படிப் பேசுவர்—பேசுகின்றனர்—சிலர். இவர்கள், நடைபெறுவது ஜனநாயகம் என்பதை மறந்துவிட்டுப் பேசுகிறார்கள்.

ஜனநாயகத்தில், நாடாளும் நிலை, பொதுமக்களின் ஆதரவைப் பொறுத்திருக்கிறது, பொதுமக்கள் பார்த்து, ஒரு கட்சியை ஆட்சிப் பொறுப்பிலே இருந்திடச் சொன்னால், அந்த ஆணை ஒன்றே அந்தக்கட்சிக்கு, ஆட்சி நடாத்தும் தகுதி, திறமை, வலிமை யாவற்றையும் தன்னாலே பெற்றுத் தருகிறது!

மோட்டாரில் ஏறிக்கொள்பவன், குடல்தெறிக்க ஓடத்தேவையில்லை-உட்கார்ந்த நிலையிலுள்ள அவனை, மோட்டார் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடம் வேகமாக அழைத்துச் சென்று சேர்க்கிறது.

பொதுமக்களின் 'உத்தரவு' எனும் விசைதான், ஆட்சிப் பொறுப்பில் அமரும் எந்தக் கட்சிக்கும் தகுதி, திறமை, அளிக்கிறது. அந்தப் பொதுமக்களின் உத்தரவு கிடைத்து தி.மு. கழகம் ஆட்சிக்கு வருமானால், தவறு என்ன? என்று விளக்கமாகக் கேட்டுப்பார், தம்பி! நல்ல காங்கிரஸ்காரராக இருந்தால், பொதுமக்கள் பார்த்து கழகத்துக்கு அந்த நிலையை உண்டாக்கினால், அந்தத் தீர்ப்பை ஒத்துக்கொள்ள வேண்டியதுதான் என்று தெரிவிப்பார்,

இந்த ''விடுவோமோ?''க்காரர்களைப்பற்றிக் கவலை வேண்டாம்! பொதுமக்களின் 'ஆணை'க்கு முன்பு எந்த ஆர்ப்பரிப்பும் நில்லாது, நிலைக்காது.

இவ்வளவு தெரிவாக இது தெரியும்போது மனக் குமட்டல் ஏன் ஏற்படுகிறது என்கிறாயா, தம்பி! காரணம் என்ன தெரியுமா? பெரிய நிலைக்குச் சென்று

விட்டதும், தன்னாலே ஒரு எண்ணம், பலருக்கு வந்து விடுகிறது—நம்மால்தான் முடியும்—நம்மால் மட்டுந் தான் முடியும்—நம்மாலன்றி வேறெவராலும் முடியாது—நம்மைவிட்டால் வேறு யார் இருக்கிறார்கள்?—என்ற எண்ணம்.

இந்த எண்ணம், ஒருவிதமான எதேச்சாதிகார மனப்போக்கை வளரச் செய்துவிடும்—அதன் விளைவு—உலகிலேயே தன்னைவிடத் தகுதியும் திறமையும் படைத்தவர்கள் ஒருவரும் இல்லை என்ற நினைப்பு—அந்த நினைப்பு தடித்திடத் தடித்திட, வேறு எவரோ இருக்கிறார்களாம் தகுதியுடன் என்ற பேச்சு கேட்டதும் ஒரு ஏளனம், பிறகு கோபம், பிறகு திகைப்பு, திகில்! இறுதியில் கசப்பு, குமட்டல்!! ஏற்பட்டுவிடுகிறது.

நாமே எதற்கும்! நாமே என்றென்றும்! நாமே எவரையும்விட!—என்ற மனப்போக்கு, அரசியலில், முறை எதுவாக இருப்பினும், சர்வாதிகாரத்தை மூட்டி விடும்

முடிமன்னனுமில்லை, படையுடையோன் ஆட்சியும் இல்லை, இது மக்கள் ஆட்சி என்று விருது கூறிய படியே, ஆட்சியில் அமர்ந்துவிட்ட கட்சி, 'ஒரே கட்சி' ஆட்சியை அமைத்து, இதுவே உண்மையான ஜனநாயகம் என்று பேசுவது அறிவாயல்லவா? எகிப்திலே நாசர்! மற்றவர்கள் பற்றி நினைவுபடுத்திக்கொள்வதா, கடினம்.?

பத்து நாட்களுக்கு முன்பு, கெனியா நாட்டு முதலமைச்சராகியுள்ள **ஜோமோ கெனியாடா** கூறிவிட்டார், கெனியாவில் ஒரே கட்சி ஆட்சி முறை ஏற்படுத்த எண்ணுகிறேன் என்று. கனா நாட்டில், என்க்ருமா! இவர்களுக்கெல்லாம் என்ன எண்ணம்?

நாமே சகல தகுதியும் திறமையும் பெற்றிருக்கிறோம்.

நம்மை விட்டால் வேறு எவரும் இல்லை. இதே முறையில் காங்கிரஸ் தலைவர்களின் போக்கு செல்கிறது என்பதைக் காட்டுவதுதான்,

எதிர்க்கட்சி என்றாலே ஒரு எரிச்சல்

எதிர்க் கட்சி ஆட்சிக்கு வந்துவிடும் என்றாலே மனக் குமட்டல்

ஏற்பட்டிருக்கும் இன்றைய நிலைமை.

தம்பி! நான் இதைக் கண்டுதான் வருத்தம் கொள்கிறேன்—காமராஜர் இரண்டு வார்த்தை நம்மை ஏசி விடுவது பற்றி அல்ல.

ஜனநாயக சோஷியலிச வாரம் கொண்டாடிவிட்டு, எதிர்க்கட்சியாவது ஆட்சிக்கு வருவதாவது! பைத்தியக்காரர்கள் பேசுகிறார்கள்! பகற் கனவு காணுகிறார்கள்! என்று ஏசுவது, ஜனநாயக முறையைப் புரிந்து கொள்ளாமலே, அதற்காக ஒரு விழாக் கொண்டாடிய கேலி நிரம்பிய குற்றமாகி விடுகிறது.

இவனுக்கென்ன யோக்கியதை! அவனுக்கு என்ன தகுதி?—என்று ஒரு கட்சி மற்றொரு கட்சியைக் குறித்துக் கேலி பேசுவது முறையுமல்ல—அந்தப் பேச்சு பலனும் அளிக்காது. பொதுமக்கள், தேர்தலின் போது யோசிக்க வேண்டிய விஷயமிது!

வேறு எவரும் ஆட்சிக்கு வரத் தேவையில்லாத முறையில், பொதுமக்கள் கொண்டாடத் தக்க விதத்தில், ஒரு குறையுமின்றி மக்களை, இன்று உள்ள ஆட்சி வைத்திருக்கிறதா—தகுதி திறமை குறித்து இவ்வளவு பேசுகிறதே என்று பார்த்தால்,

ஆண்டு பதினேழு ஆன பிறகும், இன்றும் முக்கியமான பிரச்சினையாக இருப்பது சோற்றுப் பிரச்சினைதான்!

என்று காமராஜரே சொல்லுவதிலிருந்து, 17 ஆண்டுகளாக இந்த ஆட்சி நடந்தும், மக்கள் இன்னமும் சோற்றுக்கே திண்டாடுகிறார்கள் என்பது மெய்ப்பிக்கப்படுகிறது,

இந்த நிலையில் உள்ள ஒரு ஆட்சி, எம்மைத் தவிர ஆட்சி நடத்தும் தகுதியும் திறமையும் பெற்றவர்கள் யார் என்றா கேட்பது.?

உற்பத்தி பெருகினாலும் விலை குறையவில்லை,

உணவுப் பண்டங்களைப் பதுக்கி வைக்கும் கொடுமை ஒழிக்கப்படவில்லை.

வெளிநாட்டானிடம் 'சோறு' கேட்கும் பஞ்சநிலை போகவில்லை.

ஏறிக்கொண்டேபோகும் விலைகளைக் கட்டுப்படுத்த முடிய வில்லை.

பேச்சுமட்டும் இருக்கிறது, ''மூச்சுவிடாதே! முடி என் தலையில்! அது கீழே இறங்காது!!'' என்று.

எந்தப் பிரச்சினையை இவர்கள், எவரும் கண்டு வியக்கத்தக்க முறையிலே தீர்த்துவிட்டார்கள், எம்மைக் காட்டிலும் தகுதிபடைத்தவனும் இருக்கிறானா நாடு ஆள!!—என்று ஆர்ப்பரிக்க.

தம்பி! உண்மை இதுதான். 17-ஆண்டுகளாகியும், சோற்றுப் பிரச்சினையைக் கூடத் தீர்க்க முடியாத ஒரு ஆட்சியை, மக்கள் எப்படி ஆதரிப்பார்கள்? அந்த மக்களிடம், கழகம் கொண்டுள்ள நேசத் தொடர்புநாளுக்கு நாள் வளருகிறதே. எதிர்காலம் எப்படியோ என்ற எண்ணம் தோன்றுகிறது; தோன்றும்போது மனக்குமட்டல் ஏற்படுகிறது; அதுதான் காரணம்,

பைத்தியக்காரர்கள்
பகற்கனவு காண்பவர்கள்

என்று நம்மை ஏசுவதற்கு.

இந்த முறையிலே, தம்பி! பார்த்திடுவாயானால், அந்த ஏசல் கேட்டு எரிச்சல் ஏற்படாது நமது கழக வளர்ச்சிகண்டு, அதனைக் குலைத்திட எடுத்துக்கொண்ட முயற்சிகள் முறிந்து போகக்கண்டு, மனக்குமட்டல் கொண்டு, காங்கிரஸ் பெருந்தலைவர்கள் உள்ளனர் என்ற உண்மை புரியும்; புரிந்திடும்போது மேலும் உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் பணியாற்றிக்கழகத்தை வலிவும் பொலிவும் மிகுந்ததாக்குவோம்; பொதுமக்கள் காணட்டும் நமது சீரிய பணிகளை! பொதுமக்களின் ஆணைகேட்டு நடந்திடுவோம்!! என்ற உறுதி பிறந்திடும்.

உணவு, உடை, குடியிருப்பிடம், எனும் மூன்று அடிப்படைத் தேவைகளைக் கூட 17 ஆண்டு ஆட்சிக்குப் பிறகும் நிறைவேற்றிக் கொடுத்திட இயலவில்லை

காங்கிரஸ் கட்சியினால் என்பதைப் பொது மக்கள் பெரும் அளவு புரிந்து கொண்டு விட்டிருக்கிறார்கள். புரியவைப்பவர்கள் இந்தக் கழகத்தாரல்லவா என்ற எண்ணம் ஏற்படும்போது மனக்குமட்டல் அதிகமாகிறது.

அதன் காரணமாக, நம்மைப் பைத்தியக்காரர்கள், பகற்கனவு காண்பவர்கள் என்று, காமராஜர் ஏசி இருக்கிறார்.

நல்லவர்!
பொல்லாத வியாதி!

என்று கூறுவதன்றி, வேறென்ன கூறமுடியும், தம்பி! அவர்படும் அல்லல் கண்டு உள்ளபடி பரிதாபப்படுகிறேன்.

அண்ணன்,



9-8-'64

காஞ்சிக் கடிதம் : 4

பன்னீர் தெளித்தாலும்...

ஓ என்ரியின் கதை

கொடுமையிலும் கொடுமை உணவுப் பொருள்களின் விலை ஏற்றம்

விலைவாசி ஏற்றத்துக்குக் கறுப்புப் பணமே மூலகாரணம்

உணவுத்துறையின் மோச நிலைக்கு முழுப்பொறுப்பு காங்கிரஸ் ஆட்சியே!

தம்பி,

ஒரு சீமானின் மகனைப் பற்றிய கதை கூறப்போகிறேன்—ஏழைகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றி அறிந்து, உள்ளம் உருகி, தக்கதோர் பரிகாரம் தேடித் தந்திடவேண்டும் என்ற உள்ளத் துடிப்புக் கொண்ட வாலிபன் பற்றிய கதை.

தகப்பனார் திரட்டிய திரண்ட செல்வத்துக்கு அதிபதியான இந்த மகன், அவருடைய கல்லறையில் கண்ணீர் உகுத்தான்; சொத்தின் அளவுபற்றிக் குடும்ப வழக்கறிஞர் கூறிய விவரம் கேட்டு, வியப்பல்ல, அதிர்ச்சியே அடைந்தான்; மொத்தத்தில் 2,000,000 டாலர்கள் வைத்துவிட்டுச் சென்றார் அந்தச் சீமான்.

ரொட்டிக்குத் தேவைப்படும் கோதுமை வியாபாரத்திலே குவித்ததே அவ்வளவு செல்வமும்; கோதுமை வியாபாரம் என்றால், பெரிய பெரிய கிடங்குகளைப் பல இடத்திலே அமைத்துக்கொண்டு, கோதுமையை மூட்டை மூட்டையாக அடைத்து வைத்துக்கொண்டு பலருக்கும் விற்பனை செய்தது என்பதல்ல பொருள். கோதுமை விளைந்து அறுவடையாகிச் சந்தைக்கு வந்து விலையாகு முன்பே, வயலில் கோதுமைக் கதிர்கள் காற்றினால் அசைந்தாடிக் கொண்டிருக்கும்போதே, இன்ன விலைக்கு, இத்தனை அளவு கோதுமையை, இன்ன மாதத்தில் வாங்கிக்கொள்கிறேன் அல்லது விற்கிறேன் என்று, 'பேரம்' பேசி வைத்துக்கொண்டு, அதிலே இலாபம் சம்பாதிக்கும் முறை.

ஏழை எளியோருக்குத் தேவை ரொட்டிதானே! தேவை மட்டுமா? அதுதானே அவர்களால் பெறமுடியும்; மற்ற மற்ற உயர்ந்த விலையுள்ள உணவுப் பண்டங்களை அவர்கள் எங்கே வாங்கப் போகிறார்கள்? என்ன விலை ஏறினாலும், விலை ஏற்றம் எத்தனை தாறுமாறாக இருப்பினும், ரொட்டி வாங்கித்தானே ஆகவேண்டும். போகப் பொருளாக இருப்பின், விலை ஏறிவிட்டது என்று தெரிகிறபோது வாங்காமல் இருந்துவிடலாம்! இது வயிற்றுக்குத் தேவையான பொருள்—ஏழைகள் பெற்றே தீரவேண்டிய ஒரே பொருள்; எனவே, அநியாய விலையாக இருக்கிறதே என்று அழுகுரலிற் கூறிக்கொண்டாகிலும் வாங்கித் தீரவேண்டிய பொருள்.

இந்தப் பொருளை, இலாபவேட்டைப் பொருளாக்கினான் சீமான்; ரொட்டியின் விலை ஏறிற்று; சீமானுக்குச் செல்வம் குவிந்தது; ஏழைகள் கைபிசைந்துகொண்டனர்; அந்த ஏழைகளுக்காக ரொட்டிக் கிடங்கு—ரொட்டிக் கடை நடத்திய நடுத்தர வகுப்பினர் நொடித்துத் போயினர். சீமானோ சில ஆண்டுகளில் பெரும் பொருள் குவித்துக்கொண்டான்; களவாடி அல்ல, கள்ளக் கையொப்பமிட்டு அல்ல; புரட்டு புனைசுருட்டால் அல்ல, வியாபார மூலம்!

கஷ்டப்பட்டுச் சேர்த்தான் இத்தனை செல்வம் என்றோ, அதிர்ஷ்ட தேவதை அணைத்துக்கொண்டாள், அவன் சீமானானான் என்றோ தானே எவரும் கூறுவர், உலக வாடிக்கை வேறாகவா இருக்கிறது?

மகன், திரண்ட செல்வத்தையும் பெற்றான், அந்தச் செல்வம் எப்படித் திரட்டப்பட்டது என்ற உண்மையையும் அறிந்துகொண்டான். அவன் மனம் என்னவோ போலாகிவிட்டது, ஆயிரமாயிரம் ஏழை எளியோர்களின் வயிற்றில் அடித்தல்லவா அப்பா இவ்வளவு பணம் சேர்த்தார். அந்தப் பணத்துக்கல்லவா நாம் அதிபதியானோம். ஐயோ! பாவமே! எத்தனை எத்தனை ஏழைகள், அப்பாவின் வியாபார முறை காரணமாக கோதுமை விலை ஏறிவிட்டதால், குமுறினரோ, கலங்கினரோ, கதறினரோ, துடித்தனரோ, துவண்டனரோ! அவர்களின் கண்ணீர் அல்லவா, என் கரத்தில் விளையாடும் காசுகளாகி விட்டன. இது அநீதி! இது இரக்க மற்ற செயல்! ஏழை இம்சிக்கப்பட்டிருக்கிறான், அதன் விளைவாகக் கிடைத்த பணம் என்னிடம் குவிந்திருக்கிறது. நான் இதய முள்ளவன்! ஏழைக்கு இரக்கம் காட்டும் எண்ணம் கொண்டவன்! என்னால் கூடுமான மட்டும், ஏழைகளுக்கு இதம் செய்வேன்; அப்பாவின் பேராசையால் அலைக் கழிக்கப்பட்டவர்களை நான் கை தூக்கிவிடுவேன்; என்னிடம் உள்ள செல்வத்தைக் கொண்டு இந்தத் திருத் தொண்டு புரிவேன் என்று தீர்மானித்தான்.

பள்ளியில் அவனுடன் படித்த ஒரு நண்பன், பொருளாதாரக் கருத்துக்களையும் சமுதாயத் திருத்தத் தத்துவங்களையும் நன்றாக அறிந்திருந்தான். கல்லூரியில் அவன் பயிலச் செல்லவில்லை; தகப்பனாரின் நகைக் கடையில் வேலை தேடிக் கொண்டான்; கடிகாரம் பழுது பார்த்துத் தரும் நுட்பமான தொழிலிலும் பழகிக் கொண்டிருந்தான். அவனைத் தேடிவந்தான், சித்தம் உருகிய நிலையினனான சீமான் மகன். விவரம் கூறினான்.

''ரொட்டிக்காக அந்த ஏழைகள் அதிகமாகக் கொடுத்த பணத்தை அவர்களிடம் திருப்பித் தர விரும்புகிறேன். உள்ளம் கொதிக்கிறது உண்மை அறிந்த பிறகு. ஏழையிடம் அநியாயமாகப் பறித்ததைத் திருப்பித் தந்தால்தான் என் மனம் நிம்மதியாகும். இதை எப்படிச் செய்யலாம்; ஒரு யோசனை சொல்லு'' என்று கேட்டான் சீமான் மகன்.

இலட்சியங்களைக் கற்றிருந்த அவன் நண்பன், தீப்பொறி பறக்கும் கண்ணினனானான்; ஏற இறங்கப் பார்த்தான். சீமான் மகனின் கரத்தை இழுத்துப்பிடித்துக் கொண்டு கூறினான்.

''ஏழைக்கு இதம் செய்ய எண்ணுகிறாயா? அது உன்னால் முடியாது. உன்போல அநியாய வழிகளிலே பணம் திரட்டும் பேர்வழிகளுக்கு என்ன தண்டனை தரப்படுகிறது தெரியுமா! நீங்களாக உண்மையை உணர்ந்து, உள்ளம் உருகி, அநீதியைத் துடைத்து இதம் செய்ய வேண்டும் என்று நல்லெண்ணத்துடிப்புக் கொண்டாலும், இதம் செய்யும் ஆற்றல் அற்றுப் போனவர்களாகி விடுகிறீர்கள். உன் நோக்கம் சிறந்தது, ஆனால், வஞ்சிக்கப்பட்ட, இம்சிக்கப்பட்ட ஏழைக்கு இதம் செய்ய உன்னால் முடியாது; காலம் கடந்துவிட்டது; விஷயம் முற்றி விட்டது; ஏழையின் வாழ்வு பாழ்பட்டு விட்டது; உன்னால் விளக்கேற்ற முடியாது'' என்றான்.

சீமான் மகன், இம்சிக்கப்பட்ட ஏழைகள் அனைவரையும் தேடிக் கண்டு பிடித்து, ஒவ்வொருவருக்கும். இதம் செய்திட முடியாதுதான். ஆனால், என்னால் இயன்ற மட்டும், என்னிடம் உள்ள செல்வத்தை இதற்குப் பயன்படுத்துவேன்'' என்றான்.

அந்த நண்பன், அக்கறையற்ற குரலில், ''எத்தனையோ தர்ம ஸ்தாபனங்கள் உள்ளனவே, உன் பணத்தைப் பெற'' என்றான்.

''சீமான் மகனோ, ''கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கும் கதை அல்லவோ அது. வேண்டாம். நான் ரொட்டி வாங்கிக்கஷ்டநஷ்டப் பட்டவர்களுக்கே உதவி செய்ய விரும்புகிறேன்.'' என்றான்.

''கோதுமையை உன் தகப்பனார் மடக்கிப் போட்டு விலை ஏற்றத்தை மூட்டி விட்டாரே அதன் காரணமாக, ஏழைகள் உணவு பெறுவதிலே, ஏற்பட்ட நஷ்டத் தொகையைத் திருப்பித்தர, எவ்வளவு பணம் தேவைப்படும் தெரியுமா?'' என்று கேட்டான். ''எனக்குத் தெரியாது. ஆனால் என்னிடம் உள்ள பணம் 2,000,000 டாலர்கள்'' என்றான் சீமான் மகன். ''கோடி டாலர்கள்'' இருந்தாலும் போதாதப்பா, கொடுமைக்கு ஆளான மக்களுக்கு இதம் செய்ய; நியாயம் வழங்க. அநியாய வழியில் திரட்டப்படும் பணத்தால் முளைத்திடும் ஆயிரத்தெட்டுக் கேடுகளை நீ என்ன அறிவாய்!! ஏழையிடம் கசக்கிப் பிழிந்து வாங்கப்பட்ட ஒருகாசு, ஓராயிரம் தொல்லையை ஏழைக்குத் தருகிறது. உன்னால் முடியாது, தந்தையின் வாணிப முறையின் காரணமாகக் கொடுமைக்கு ஆளான

ஒருவருக்குக் கூட இதம்செய்ய'' என்றுரைத்தான். சீமான் மகனுக் குப் புரியவுமில்லை; இந்தப் பேச்சு பொருளுள்ளதாகவும் தெரிய வில்லை.

''முடியும் நண்பா! முணுமுணுக்காமல், விவரம்கூறு.'' என்று கேட்டான், ''கூறவா! கூறுகிறேன் கேளப்பா, கருணாகரா! அதோ அடுத்த தெருவில் ஒருவன் ரொட்டிக் கடை வைத்திருந்தான்; எனக்குத் தெரியும். பரம ஏழைகள் அந்தக் கடையில் ரொட்டி வாங்குபவர்கள். விலையைத்தான் ஏற்றிவிட்டாரே உன் தகப்பனார்; இவன் ரொட்டியின் விலையை ஏற்றினான்; ஏழைகளால் அந்த விலை கொடுத்து வாங்க முடியவில்லை, கடை தூங்கிற்று; அவன் கடையில் போட்டிருந்த ஆயிரம் டாலர் அடியோடு நஷ்டமாயிற்று. அவனிடம் இருந்த மொத்த ஆஸ்தியே அதுதான். அவ்வளவும் போய்விட்டது'' என்றான்.

அழுத்தந் திருத்தமாகப் பேசலானான் சீமான் மகன், ''அப்படிச் சொல்லு விவரத்தை! வா! உடனே போய், அந்த கடைக்காரன் இழந்த ஆயிரம் டாலரைத் திருப்பிக் கொடுத்து அவனுக்கு ஒரு புதிய ரொட்டிக் கடையும் வைத்துக் கொடுக்கலாம்'' என்றான்.

''எழுதப்பா, செக்! ஆயிரம் டாலருக்கு மட்டுமல்ல; அவன் நஷ்டமடைந்ததால் ஏற்பட்ட விபரீத விளைவுகளின் காரணமாக ஏற்பட்ட நஷ்டங்கள் எல்லாவற்றுக்கும், செக் எழுதிக் கொடு! ஐம்பதாயிரம் டாலர் செக் ஒன்று கொடு! ஏனென்கிறாயா? கடை திவாலாயிற்றா, அவன் அதன் காரணமாகக் குழம்பினான், பித்துப் பிடித்துவிட்டது, அவன் இருந்துவந்த இடத்தை விட்டு அவனை வெளியேறச் சொன்னார்கள், அவன் அந்தக் கட்டடத்துக்குத் தீயிட்டான். ஐம்பதாயிரம் டாலர் பாழ்! அவனோ பித்தர்விடுதியில் அடைபட்டான், செத்தும் போனான். அடுத்த செக் பத்தாயிரம் டாலருக்கு. ஏனா? அவன் மகன், தகப்பனை இழந்ததால் தறுதலையானான்; கெட்டலைந்தான்; அவன்மீது ஒரு கொலைக் குற்றம்; மூன்று ஆண்டுகள் வழக்கு; அதற்கான செலவு நீதித் துறைக்கு, பத்தாயிரம் டாலர். அதையும் நீதானே கொடுக்கவேண்டும்; கொடு.

''சர்க்காருக்கான செலவு இருக்கட்டும்; நமது உதவி தேவையில்லை சர்க்காருக்கு; ரொட்டிக் கடைக்கு

ஏற்பட்ட நஷ்டம் வரையில் கொடுத்திடலாம்; முடியும்'' என்றான் சீமான் மகன்.

''விலை ஏற்றத்தை மூட்டி விட்டதனால் ஏற்பட்ட விபரீத விளைவுகளில், இன்னொன்று பாக்கி இருக்கிறதே! காட்டுகிறேன் வா!'' என்று கூறி அந்த நண்பன் சீமான் மகனை அழைத்துக்கொண்டு, ஒரு முட்டுச் சந்திலிருந்த ஒரு நிலையத்துக்குள் சென்று, அங்கு, சட்டை தைத்துக் கொண்டிருந்த இளமங்கையைக் காட்டினான். அவள் ஒரு புன்னகை உதிர்த்தாள். ''இன்று நாலு டாலர் கிடைக்கும் எனக்கு'' என்றாள் அந்தப் பெண். நண்பன், சீமான் மகனை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

''ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கோதுமைவிலை ஏறி விட்டதே; அந்த விலை ஏற்றத்தை மூட்டியவரின் மகன் இந்த இளைஞன். தன் தகப்பனாரின் செயலால் சீரழிக்கப் பட்டவர்களுக்கு ஏதாகிலும் இதம் செய்ய வேண்டுமென விரும்பி வந்திருக்கிறார்'' என்றான். அந்தப் பெண்ணின் புன்னகை மடிந்தது; முகம் கடுகடுத்தது; எழுந்தாள், சீமான் மகனை நோக்கி வெளியே போ! என்று கூவ வில்லை, கையால் குறி காட்டியபடி நின்றாள்.

தம்பி! கதையை இந்த அளவுடன் நிறுத்திவிட எண்ணுகிறேன். ஏனெனில், என் நோக்கம், இரு இளைஞர்கள், ஒரு மங்கை, இவர்கட்கு இடையிலே ஏற்பட்ட தொடர்பு பற்றிய விவரம் கூறுவது அல்ல. உணவுப் பண்டங்களின் விலை ஏற்றம், சீமான்களின் வாணிப முறையின் விளைவு என்பதைக் காட்டவும், அந்த விலை ஏற்றத்தால் தாக்கப்படும் ஏழைகளுக்கு ஏற்படும் இன்னல், அதிகவிலை கொடுத்ததால் ஏற்பட்ட பண நஷ்டம் மட்டுமலல விபரீதமான பல விளைவுகள் ஏற்பட்டுவிடுகின்றன என்பதையும் எடுத்துக்காட்டவே இந்தக் கதையைக் கூறினேன். கதையும் என் கற்பனையில் உதித்தது அல்ல. அல்லற்படுவோர்களின் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டத்தக்க விதமான சிறு கதைகளைத் தீட்டிய வித்தகர் **ஓ. என்றியின்** கற்பனை; நான் அதிலிருந்து கருத்தினை எடுத்து என் வழியில் எழுதித் தந்திருக்கிறேன்.

ஓ. என்றி, சிறுகதை தீட்டுவதிலே வல்லவர் மட்டுமல்ல; அதிலே விந்தை பல இழைத்தளிப்பவர். இந்தக் கதையிலும், விலைவாசி விஷம்போல் ஏறுவதால்—ஏற்றி

விடப்படுவதால்—விளையும் விபரீதம் பற்றிக் கூறிவிட்டு, ஒரு விந்தையை இழைத்திருக்கிறார். இரக்க மனம் படைத்த சீமான் மகன், இலட்சியம் அறிந்த ஒரு வாலிபன், கொடுமை கொட்டியதால் கொதிப்படைந்த ஒரு குமரி! இந்த மூன்று பேர்களை வைத்துக் கொண்டு, உணவுப் பொருளின் விலையை, இலாபவேட்டை நோக்கம்கொண்ட வணிகர்கள் விஷம்போல ஏற்றிவிட்டு விடுவதனால் ஏற்படும் விளைவுகளை, நாம் உணரவும் உருகவும் செய்துவிடுகிறார்.

பிறகு? பிறகு? என்ன செய்தான் அந்தச் சீமான் மகன்? அந்தக் குமரி? என்று கேட்கிறாய் ஆவலாகத்தான் இருக்கும், அறிகிறேன், **ஓ. என்றியின்** முறை என்ன தெரியுமா, தம்பி! சிறு கதையின் கடைசி இரண்டொரு வரிகளில், யாரும் எதிர்பார்க்காத ஒரு திருப்பம் அளித்து முடிப்பார்! அந்த இரண்டொரு வரிகளில், ஒரு பெரிய தத்துவமே கிடைத்திடும்.

சே! இந்த ஏழைகளுக்கே ஆணவம் அதிகம்!—என்று வெகுண்டுரைத்து விட்டுச் சென்றான் சீமான் மகன் என்று முடித்திடலாம், கதையை.

இலட்சியமறிந்த இளைஞன், சீமான் மகனின் கண்கள் தளும்பக்கண்டு, 'பாவம்! இவன் நல்லவன். இதயம் கொண்டவன். இவனை வெறுக்கக் கூடாது. தகப்பனார் செய்துவிட்டுப்போன கொடுமையை எண்ணி இவன் உள்ளம் உருகிக்கிடக்கிறான்'' என்று பரிந்து பேசினான்; மூவரும் நண்பர்களாயினர் என்று கதையை முடித்திருக்கலாம்.

''என்ன காரியம் செய்துவிட்டோம். உதவி செய்ய வந்த உத்தமனை உதாசீனம் செய்து விட்டோமே! அவன் உள்ளம் என்ன பாடுபட்டிருக்குமோ?'' என்று எண்ணிய பெண், அவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள் என்று முடித்திருக்கலாம். பலவிதமான முடிவுகள். தம்பி! உனக்கும் எனக்கும் தோன்றும். ஆனால் விந்தையான—உலக நடை முறையை விளக்கிடதக்க—முடிவு என்னவாக இருக்கமுடியும் என்பதைக் கண்டறிந்து கூறிடும் திறன் **ஓ. என்றிக்குத்**தான் உண்டு.

இந்தக் கதையின் மூலம் என்ன தெரிவிக்க விரும்புகிறார் ஓ. என்றி.?

சீமான் மகனின் மனமும் திருந்திவிடும்; இம்சை செய்யப்பட்டவர்களுக்கு இதம செய்திடுவான். என்ற கருணை பற்றிய விளக்கமளிக்க அல்ல அவர் விரும்பியது.

ஏழைக்கு இழைக்கப்படும் இன்னலுக்கு, இன்னல் இழைத்தவர்களே பிறகோர் நாள் இதம் செய்திட விரும்பி முன்வந்தாலும், நொந்துபோன ஏழையின் வாழ்வை, இரக்கம், கருணை, உதவி மூலம் மலரச் செய்திட முடியாது. கசங்கிய மலர், மீண்டும் தண்ணீருக்குப் பதில் பன்னீர் தெளித்தாலும். எழில் பெற முடிகிறதா? அதுபோலத்தான்.

இந்தக் கருத்தை விளக்கவே அவர் கதை புனைந்தளிக்கிறார்.

இரக்கம், பரிவு, பாசம், இவை தனிப்பட்டவர்களின் உள்ளங்களில் எழக்கூடும், நத்தையிலும் முத்துக் கிடைப்பதுபோல! ஆனால், ஏழை நொந்த வாழ்வு பெறுவது, ஒரு கொடிய முறை காரணமாக. அந்தமுறையை, தனி ஒருவனின் இரக்கம், பரிவு, தானம், தருமம் போன்றவைகளால் போக்கிடவோ, அந்த முறை காரணமாக ஏற்பட்டுவிடும் விபரீதங்களை நீக்கிடவோ முடியாது. இதைக் கூறும் துணிவே, பலருக்கு ஏற்படாது. **ஓ. என்றி** இதனைக் கூறுவது மட்டுமல்ல, ஒரு சீமானின் மகன், ஏழையிடம் இரக்கம் காட்டும் பயணத்தைத் துவக்கினால், அந்தப் பயணம், எதிலே போய் முடியும், நடக்கக் கூடியது எதுவாக இருக்க முடியும் என்பதை, நகைச்சுவையுடன், ஆனால், அதேபோது இரண்டு சொட்டுக் கண்ணீரும் கிளம்பிடத் தக்கதானதாகக் கூறுவார்.

சரி! கதையை முழுவதும் கூறத்தான் வேண்டும்; கூறிவிடுகிறேன், தம்பி! கூறவேண்டியது அதிகமுமில்லை.

எங்கே நிறுத்தினேன் கதையை? ஆமாம்! அவள் கோபத்துடன், சீமான் மகனை வெளி ஏற்றுகிறாள்; அந்தக் கட்டத்தில்தான் நிறுத்தினேன்.

அடுத்த கட்டம் என்ன தெரியுமா, தம்பி?
இரண்டு மாதங்களுக்குப் பிறகு, அந்தக் கட்டம்.

இலட்சியமறிந்த நண்பன் இருக்கிறானே, அவனைக் காண்கிறோம். ஒரு பெரிய ரொட்டிக் கடை முதலாளி

யின் 'தங்க பிரேம்' போட்ட மூக்குக் கண்ணாடியைச் சரிபார்த்து, எடுத்துக்கொண்டு போகிறான், கொடுத்திட. ஒரு உரையாடல் அவன் காதில் விழுகிறது.

''என்ன விலை, ரொட்டி,''

''பத்துப் பணம்.''

''பத்துப் பணமா? விலை அதிகம். எட்டுப் பணத்துக்கு வேறு இடத்தில் கிடைக்கிறதே!''

திரும்பிப்பார்க்கிறான்,குரலொலி கேட்டு. அதே பெண்; சட்டை தைத்துக் கொண்டிருந்தாளே, விலை ஏற்றத் தால் நாசமாகிப் போனானே சிறு ரொட்டிக் கடைக் காரன் அவன் மகள்; உதவி செய்ய வந்த சீமான் மகனை வெறித்து விரட்டினாளே அதே பெண்!

''ஐயா! நலமாக இருக்கிறீர்களா?''—அவள் கேட்கிறாள்.

''இருக்கிறேன். போய்னீ!'' என்கிறான் இலட்சிய மறிந்தவன்.

போய்னீ என்பது கன்னியின் பெயர்.

''நான் இப்போது திருமதி **கின் சால்விங்!** எனக்கும் கின்சால்விங்குக்கும் போன மாதம் திருமண மாகி விட்டது.'' என்கிறாள் அவள்.

கின் சால்விங் என்பது யாருடைய பெயர் தெரியுமா தம்பி! சீமான் மகன் பெயர்!!

கதை அவ்வளவுடன் நின்றுவிடுகிறது! கருத்து என்னென்ன மலருகிறது எண்ணிப் பார், தம்பி!

ஓ,என்ரியின் விந்தை மிகுதி றமையைக் கூறிடவே கதை முழுவதும் சொல்லி வைத்தேன்—நான் இதிலே உன்னை மீண்டும் மீண்டும் கருத்தில் கொள்ளும்படிக் கேட்டுக் கொள்வது,

விலை ஏற்றங்களில் உணவுப் பொருளின் விலை ஏற்றத்தைப் போன்ற கொடுமைமிக்கது வேறு எதுவும் இல்லை. விலை ஏற்றம் என்பது பெருத்த இலாபத்தை மிகக் குறைந்த நாட்களில் கொள்ளை

போலப் பெறவேண்டுமென்று திட்டமிட்டு, வாணிபத் துறையினர் செய்திடும் சதி.

உணவுப் பொருள் விலை ஏற்றத்தின் காரணமாக அவதிப்படும் ஏழைகளின் வாழ்வு நொந்துபோகும் கொடுமையை நீக்கிட, இன்மொழி, இதமளித்தல், பரிவு காட்டுதல், எனும் முறைகள் பயன்படாது,

விலைவாசி ஏற்றத்தினால் ஏற்படுவது, ஏழைக்குப் பொருள் நஷ்டம் மட்டுமல்ல, பல்வேறு விபரீத விளைவுகள் ஏற்பட்டு விடுகின்றன.

இந்தக் கருத்துகளை உணர்ந்திடச் செய்வதற்கே, இந்தக் கதையைக் கூறினேன்.

உணவுப் பொருள்களின் விலை ஏறிவிட்டது; ஏறிக் கொண்டே இருக்கிறது என்பதைக் காங்கிரஸ் அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது!

கைப்புண்ணுக்குக் கண்ணாடியா! என்று கேட்கத் தோன்றும். என்ன செய்வது, தம்பி! இந்த உண்மையை ஒப்புக்கொள்ளும் மனம், இப்போதுதானே வந்திருக்கிறது, காங்கிரஸ் அரசுக்கு.

ஆண்டு இரண்டாகிறது நமது கழகத்தவர், விலை வாசி ஏற்றக்கொடுமையைக் கண்டு குமுறி எழுந்து, முறை யிட்டுப் பலன் காணாததால், கிளர்ச்சி நடத்தி,சர்க்காரின் கண்களைத் திறந்திட முயன்ற நிகழ்ச்சி. வேலூர் சிறை யிலே நான் அடைபட்டுக் கிடந்தேன், உள்ளம் வெதும்பிய நிலையில்.

உணவுப் பொருளின் விலை விஷம்போல ஏறி விட்டது, ஏழையின் வாழ்வில் இம்சை அதிகமாகிறது.

என்ற உண்மையை ஒப்புக் கொள்ளக்கூட இந்த ஆள வந்தார்களுக்கு மனம் இல்லையே! இது என்ன ஆட்சி!! என்று எண்ணி மெத்த வருத்தப்பட்டேன். நமது தோழர்கள் பல ஆயிரவர் சிறையிலே வாடிக் கிடநத னர்; உள்ளே எத்துணையோ கொடுமைகள்; வெளியே எத்தனை எத்தனையோ ஏச்சுப் பேச்சுகள் எல்லாவற்றை யும் தாங்கிக்கொண்டோம். இரு தோழர்களையும் பறி கொடுத்தோம்; இதயத்திலே தழும்பு பெற்றோம்.

உணவு விலையா ஏறி இருக்கிறது?
ஏறினால் என்ன கேடு வந்து விட்டது?

பணம்தான் புரளுகிறதே தாராளமாக; விலை ஏறினால் என்ன?

கூலிதான் கிடைக்கிறதே ஏராளமாக, விலை ஏறினால் என்ன கஷ்டம்?

அரிசி விலையைக் குறைக்க அரி அர பிரமாவினாலும் முடியாது.

விவசாயி தலையில் கை வைத்தால்தான் அரிசி விலையைக் குறைக்கலாம்.

வளருகிற பொருளாதாரத்தில் விலை ஏறத்தான் செய்யும்,

இவை ஆளவந்தார்கள் அன்று உதிர்த்த பொன்மொழிகளிலே சில!

ஒருவர் மிகத் துணிச்சலுடன் அடித்துப் பேசினார்,

விலை ஏறி இருப்பது நாட்டின் சுபீட்சத்தைக் காட்டுகிறது.

என்று.

ஒருவரும், விலைவாசி விஷம்போல ஏறி இருப்பதை இறக்கத்தான் வேண்டும் என்று கூறவில்லை; விலைவாசி ஏறி இருப்பது இயற்கை, நியாயம், தவறு இல்லை, தீது அல்ல என்று வாதாடினார்கள், நினைவிலிருக்கிறதலலவா, தம்பி!

அப்படியே விலை ஏறி இருந்தாலும், அதைக் குறைக்க, கிளர்ச்சியா வழி? என்று கேட்டவர்களும்,

அப்படியே கிளர்ச்சி செய்வதானாலும், கலெக்டர் அலுவலகத்தின் முன்பு நின்றுகொண்டு விலை குறைய வேண்டும் என்று கூச்சலிடுவதா பயனுள்ள கிளர்ச்சி என்று கேட்டவர்களும்,

அதுதான் கிளர்ச்சி என்று வைத்துக் கொண்டாலும், அதனை ஒழுங்கான முறையில், பலாத்காரமின்றிச் செய்திடும் திறமை இருக்கிறதா என்று கடாவினோரும்,

கிளர்ச்சி ஆபாசமாகப் போய்விட்டதற்குக் காரணம் நான் கூறுகிறேன், கேண்மின்! தலைமை, அவ்வளவு மோசமானது!! திறமையற்றது!! என்று குரலெழுப்பினோரும்,

சட்டசபையில் பேசிடாமல் சந்து முனை சென்று கத்துவதா? இதுவா கிளர்ச்சி? என்று அரசியல் பாடம் போதிக்க முன்வந்தவர்களும், ஏ! அப்பா! எத்தனை எத்தனை பேர்!!

இவர்களை ஜாமீன் கேஸ் போட்டு, உள்ளே தள்ளி வைக்க வேண்டும் என்று முழக்க மெழுப்பினோரும்,

இவர்கள் சிறுபிள்ளைத்தனமாக ஒரு கிளர்ச்சி நடத்திக் கிளர்ச்சிக்கு இருந்து வந்த மதிப்பையே பாழாக்கி விட்டார்களே! இனி எந்தக் கிளர்ச்சியும் செய்யவே முடியாத நிலையாகி விட்டதே! என் செய்வது! என்று சோக கீதம் பாடிக் காட்டியவர்களும்,

வீணான கிளர்ச்சி செய்தார்கள்; அதை அடக்கப் பணம் செலவாயிற்று; அந்தப் பணம் இருந்தால் பத்துப் பள்ளிக்கூடம் கட்டியிருக்கலாம் என்று பொருளாதாரப் பேரறிவைப் பொழிந்தவர்களும்,

உற்பத்தி பெருகுவது ஒன்றுதான் விலைகளைக் குறைத்திடச் செய்யும் ஒரேவழி, நல்வழி, எம்வழி! என்று அகில உலக அறிவைத் தம்மிடம் ஏகபோகமாக வைத்துக் கொண்டிருப்பதாக எண்ணிக்கொண்டு எக்காளமிட்டவர்களும், இருக்கிறார்கள், தம்பி! இங்கேயேதான் இருக்கிறார்கள் — இளித்தவாயர்களாகிவிட்டோம் என்று ஒப்புக்கொள்ள மனமின்றி, அன்று என்னென்ன பேசினார்களோ அவ்வளவையும் விழுங்கிவிட்டு இன்று,

விலைவாசி ஏறிவிட்டது, ஒப்புக்கொள்கிறோம்.

விலைவாசி கட்டுப்படுத்தப் படவேண்டும், ஒப்புக்கொள்கிறோம்.

என்று விநயமாகப் பேசி வருகிறார்கள். நமது கிளர்ச்சியை மதிக்க மறுத்தார்கள்; இன்று அவர்களின் முன்னாள் முடுக்கு மாய்ந்தது; உண்மையை ஒப்புக்கொண்டு தீர வேண்டிய நிலை பிறந்தது.

இதற்காக ஒரு கிளர்ச்சியா? என்று கேட்டபடி இடி முழக்கங்கள், இன்று கிளர்ச்சி நடத்த முனைந்து விட்டோம் என்று முழக்குகின்றனர்,

கலெக்டர் அலுவலகத்தின் முன்பா, கிளர்ச்சி! சேச்சே! விலை குறைக்க அவருக்கு என்ன அதிகாரம்? என்று விவரம் பேசிய வித்தகர்கள் இன்று கலெக்டர் அலுவலகங்களின் முன்புதான் நிற்கப்போகிறார்கள்— முழக்கம் எழுப்பிட!

சேர்ந்து கிளர்ச்சி நடாத்துவோம், வாரீர்! என்று ஒரு சாரார் அழைக்கக்கூடச் செய்கிறார்கள். நம்மைத்தான் தம்பி! நம்மைத்தான்!!

காலங்கடந்தாகிலும் இந்தக் கருத்து எழுந்தது பற்றி எண்ணிடும்போது, சிறையிலே அன்றுபட்ட அல்லல் பற்றிய நினைப்பு மறந்தே போகிறது, விதைத்தது வீண் போகவில்லை என்ற மகிழ்ச்சி பெறுகிறோம்.

கிளர்ச்சி நடத்தத் தெரியாத 'தலைவர்கள்' கொண்டதாமே, தி மு.க...!

இன்னும், மற்றவர்கள் கிளர்ச்சி துவக்கவில்லை, திட்டமிட்டபடி!

இதற்குள், கடைகள் சூறையாடப்பட்டன, கருப்புக் கொடி ஆர்பாட்டம் நடைபெற்றது. கல்வீச்சும் பதிலுக்குத் துப்பாக்கி வேட்டும் நடைபெற்றுவிட்டன. கிளர்ச்சிக்காரர்களிலும் சிலர் மாண்டனர்; போலீசிலும் சேதம்!!

கிளர்ச்சியின் இலக்கணம் பற்றியும், தலைவர்களின் தன்மை பற்றியும், பெருங்குரல் கொடுத்த பெம்மான்கள் அது கண்டு ஒரு வார்த்தை? கிடையாதே! இதோபதேசம்? இல்லை! அறிவுரை? வக்கு இல்லை! வாயடைத்துக் கிடக்கிறார்கள்.

ஒவ்வொருவருடைய வாயும், நம்மைப் பற்றிப் பேசும் போதுதான், வல்லமை பெறுகிறது; மற்ற நேரத்தில்? என்ன இனிப்புப் பண்டத்தைக் கொள்கின்றனரோ புரியவில்லை; கப்சிப்!

போகட்டும், நம்மைப் பொல்லாங்கு சொன்னதால் நமக்கொன்றும் கஷ்டமும் இல்லை, நஷ்டமும் இல்லை,

இன்று கதையில் வரும் சீமான் மகன்போல, இளகிய மனமும், இரக்கப் பேச்சும் காட்டுகிறார்களே, அது ஒரு வித மகிழ்ச்சியைத் தரத்தான் செய்கிறது.

உணவுப் பண்டங்களின் விலை ஏறிவிட்டிருப்பதற்குக் காரணம், உற்பத்திக் குறைவு அல்ல: உற்பத்தியான பொருளைச் சீராக விநியோகிக்கும் முறை இல்லாததே என்று நாம் முன்பு சொன்னோம், நையாண்டி செய்தனர் நாட்டின் நாயகர்கள். இன்று, அதையே, ஒரு கண்டு பிடிப்பு போல எடுத்துக் கூறுகிறார்கள்; பொதுமக்கள் நினைவாற்றல் அற்றவர்கள் என்ற எண்ணத்தில். பொது மக்கள் ஆளவந்தார்களைத் திருப்பிக் கேட்க முடியாதவர்கள்; ஒப்புக்கொள்வோம். ஆனால், தமக்குள் பேசிக் கொள்ளாமலா இருக்கிறார்கள்; நேற்றுவரை இந்த இந்த நேர்மையாளர்கள், விலை ஏற்றத்துக்குக் காரணம் உற்பத்தி போதாது என்றார்கள்; இன்று உற்பத்தியில் குறைவில்லை, விநியோகத்தில் கோளாறு என்கிறார்களே; இவர்களுக்கென்ன, நாளைக்கு ஒரு நாக்கா? வேளைக்கு ஒரு பேச்சா என்று.

விலைவாசி ஏறவில்லை; ஏற்றிவிட்டிருக்கிறார்கள் என்றோம்.

புவிமெச்சும் பொருளாதாரப் போதகாசிரியர் எனத் தம்மைக் கருதிக்கொண்டு, வளரும் பொருளாதாரம் இது, பணப்பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது; அந்நிலையில் விலைவாசி ஏறுவது தவிர்க்க முடியாதது என்று பேசினர்.

இன்று? நந்தா பேசுகிறார்,

> 'திட்டமிட்ட அபிவிருத்தித் துறையில் விலைவாசிகள் ஏற்றம் தவிர்க்க முடியாதது என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது.''

என்பதாக. ஆமாம் என்று ஆளவந்தார்கள் அனைவருமே சொல்கிறார்கள்.

கள்ள மார்க்கெட்—
கொள்ளை இலாபம்—
கறுப்புப்பணம்—

என்று முன்பு நாம் சொன்னபோது,

அபாண்டம்
வீண்புரளி
பழிச்சொல்

என்று பேசினர், நமது வாய் அடக்க. இன்று?

கள்ளப் பணம் எவ்வளவு நடமாடுகிறது எனத் திட்டவட்டமான மதிப்பீடு ஏதும் என்னிடம் இல்லை. ஆனால், பல நூறு கோடி ரூபாய்கள் இருக்கும் என்பது நிச்சயம். சமீபத்தில் விலைவாசிகள் விஷம் போல விறுவிறுவென்று ஏறியதற்கு இந்தத் திருட்டுப் பணம்தான் மூல காரணம்.

குல்ஜாரிலால் நந்தா கூறுவது! குறை கூறும் குப்பன் பேச்சல்ல!! இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நாம் கூறின போது, குமட்டல் எடுத்தது, காங்கிரசாருக்கு; இப்போது நந்தா பேசுகிறார், முன்பு நாராசமாகப்பட்டது இன்று நற்பாசுரமாகத் தோன்றுகிறது!!

இப்போதேனும் ஆளவந்தார்கள், பிடிவாதப் போக்கை விட்டுவிட்டு, பிரச்சினையைக் கவனிக்க முன் வந்தது கண்டு மகிழ்கிறேன், தம்பி! விலைவாசி குறைய, துரைத்தனம் மேற்கொள்ளும் தகுதியான எல்லா திட்டங்களையும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கும் என்ற கருத்தினை நண்பர் மனோகரன், டில்லியில் நடைபெற்ற அனைத்துக் கட்சியின் குழுக் கூட்டத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறார். நாம் இப்போது கவனிக்க வேண்டியது, காங்கிரஸ் கட்சியினரின் முன்னாள் நினைப்புகள், பேச்சுகளை அல்ல; மக்களின் அல்லலை மேலும் வளர விடாதபடி தடுத்திட விலைவாசியைக் குறைத்திட வழி கண்டாக வேண்டும் என்பதிலேதான் அக்கறை செலுத்தவேண்டும்.

அதற்காக, நெருக்கடி நேரத்தில் நாலுபேர் கூடிப் பேசிவிடுவது போதாது என்பதையும், விலைவாசி பிரச்சினையைக் கவனிக்க ஒரு நிரந்தர அமைப்பு வேண்டும், அதிலே, எல்லாக் கட்சிகளும் இடம் பெற வேண்டும் என்பதனையும் நான் தெரிவித்தேன்; அரசினர் அந்தக் கருத்தினை ஏற்றுக்கொண்டது அறிந்து மகிழ்கிறேன் இதற்காக,

என்னென்ன முறைகளைத் துரைத்தனம் மேற்கொள்ளப் போகிறது என்பது விளக்கப்பட்டு, செயல்

படுத்தப்படும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்புமிக்க ஒத்துழைப்பு அளிக்கும்.

ஆனால், பரிகாரம் எது என்றாலும், இதமளிக்கும் திட்டம் யாதாக இருப்பினும், விலைவாசி ஏற்றம் காரணமாக, ஏழை, நடுத்தரக் குடும்பங்கள் பட்ட அவதியின் காரணமாக, ஏற்பட்டுவிட்ட விபரீத விளைவுகளை நீக்கிட இந்த ஆட்சியினரால் முடியாது. கதையில் வரும் சீமான் மகன்போல, இளகிய மனம் காட்டலாம், சிறு கடைக்காரன் பித்தனாகிச் செத்துப்போனான்? அவன் பிழைத்தா எழப்போகிறான்? ஆயிரமாயிரம் குடும்பங்கள், அல்லலைத் தொடர்ந்து அனுபவித்து, வளைந்த வாழ்வினராகிப்போயினர். இதற்குக்காரணமாக இருந்த போக்கும், அந்தப் போக்கினைக் கொண்டியங்கிய காங்கிரஸ் ஆட்சியையும், பொதுமக்கள் மன்னிப்பார்கள் என்று நான் எண்ணவில்லை. உணவுத்துறையில் ஏற்பட்டு விட்டுள்ள மோசமான நிலைமைக்கு, முழுப் பொறுப்பு ஏற்றாக வேண்டியவர்கள் காங்கிரசில் ஆள வந்தார்களே!! இன்று பரிகாரம் தேடித்தருகிறோம் என்று பேசி விடுவது, 'பழைய பாவத்தை'த் துடைத்து விடாது! அது போக்க முடியாத கறை!

உங்கள் ஆட்சியில் தானே,

உணவு விலை விஷம்போல ஏறிற்று.
பண வீக்கத்தால் பல கேடுகள் விளைந்தன.
கள்ளமார்க்கெட் வளர்ந்தது.
கருப்புப் பணம் நெளிந்தது.
கொள்ளை இலாபம் குவிந்தது.
கெய்ரோன்கள் கொழுத்தனர்.

என்று பொதுமக்கள் கேட்டிடத் தவறமாட்டார்கள்! இத்தனை இன்னலை இழைத்து விட்டு, 'எம்மைவிடத் திறமையாக ஆளவும் ஆட்கள் உளரோ!' என்று வேறு பேசுவது கரும்புத் தோட்டம் எதற்கு? காஞ்சிரங்காயினும் இனிக்குமோ கரும்பு? என்று கேட்பது போன்றதாகும்.

அண்ணன்,

அண்ணாதுரை

16-8-'64

காஞ்சிக் கடிதம் : 5

நச்சரவு வளர்க்கின்றார்

பாஞ்சாலத்தில், இராஜஸ்தானத்தில், கேரளாவில், பீகாரில, மைசூரில்—எங்கும் ஊழல் மயம்

கடுங்கோபம் காமராசருக்கு வருவதற்குக் காரணம், களத்தில் நிற்பவர் நாம் என்பதே

நந்தாவின் கைவிளக்கு சதாசர் சமிதி

சந்தானம் கமிட்டியின் கருத்துகள்

பிரதம நீதிபதி மகாஜன் காங்கிரஸ் கட்சிக்குக் கூறியுள்ள புத்திமதிகள்

தம்பி,

காணீர் கண்குளிர காந்திமகான் சீடர் இவர்!
தியாகத் தீயினிலே குளித்தெழுந்து வந்திட்டார்!
தொண்டு செய்வதன்றிக் கொண்டவிரதம் வேறில்லை
பண்டிருந்த பாரதத்தைக் கண்டிடவே உழைக்கின்றார்!
காட்சிக்கு எளியரிவர் கடுஞ்சொல்தனை அறியார்!
ஏழை எளியோர்க்கு ஏற்றமது அளித்திடுவார்!
உழைப்பதற்கே உருவெடுத்தார் ஊதியம் பெறுதற்கல்ல!

தொடமாட்டார் பொன்பொருளைக் கொள்ள மாட்டார் மனமாசு!
பாடுபடும் ஏழைதுயர் பார்த்துப் பதறுகிறார்!
மாடுமனை மக்கள் பெற்று மகிழவழி கண்டிடுவார்!
பாலையெலாம் சோலையாகிப் பைங்கிளிகள் பாடிடவே
செந்நெல் மணிக்குவியல் சேர்த்திடுவார் நாட்டினுக்கு!
உழைப்பை உறிஞ்சிவரும் உலுத்தரை ஒழித்திடுவார்!
மாளிகையின் சீற்றம்கண்டு மன்னர் அஞ்சிடமாட்டார்!
எப்பாடுபட்டேனும் இங்கு இல்லாமை போக்கிடுவேன்!
இதற்கன்றோ இன்னல்பல ஏற்றோம் பல ஆண்டு!
நாட்டினை வாழவைக்க நல் உறுதி கொண்டுவிட்டோம்!
வீட்டை மறந்துவிட்டோம்; பாட்டை வகுத்துவிட்டோம்!
நாட்டினுக்கு நற்செய்தி நவின்றதுடன் நில்லாமல்
நாளும் உழைக்கின்றார் நாம்வாழ, ஆளவந்தார்!

பாசுரம் இதுபோலப் பலப்பல பாடி, பல்லாண்டு கூறி, வரவேற்றனர் மக்கள் காங்கிரஸ் அமைச்சர்களை, விடுதலை விழா முடித்து அவர்கள் நாடாளத் தொடங்கியதும். தன்னலம் இந்தத் தியாகிகட்கு இருக்க முடியாது; மகாத்மாவின் ஒளியிலே இருந்து இருந்து இவர்கள், எவர்க்கும் எழக்கூடிய சுயநலத்தைச் சுட்டெரித்து விட்டார்கள்; பரங்கி மூட்டிய அடக்குமுறைத் தீயிலே வீழ்ந்து வீழ்ந்து இவர்கள் புடம்போட்ட தங்கமாகிவிட்டனர்; இவர்கள் குடிமக்களைக் கசக்கிப் பிழிந்து கோலாகல வாழ்க்கை நடாத்தி வந்த குட்டிக் கோமான்களின் வழிவழி வந்தவரல்ல; குண்டுக்கும் தடியடிக்கும், சிறைக்கும் கொடுமைக்கும் தம்மைத்தாமே பலியிட்டுக் கொள்ளத் துணிந்த தூயவர்கள்; ஏழையுடன் ஏழையாய் இருந்து வந்தவர்கள்; ஏரடிக்கும் சிறுகோலின் மதிப்பை அறிந்தவர்கள்; பசியும் பட்டினியும் கண்டவர்கள்; கோடி கோடியாகக் கொட்டிக் காட்டினாலும் நேர் வழியினின்றும் இம்மியும் வழுவமாட்டார்கள்; இவர்களின் கரத்திலே ஆட்சிப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

என்று
எனவே, ஆடுவமே! பள்ளுப்பாடுவமே!!
கொண்டாடினார்கள்.

மாளிகைகளிலே மந்தகாச வாழ்வு நடாத்திக்
கொண்டு, மக்களின் குரலுக்குச் செவிகொடுக்காமல்
மதோன்மத்தர்களாக இருந்துகொண்டு, தன் செல்வத்
தைப் பெருக்கிக்கொள்ளவே அதிகாரத்தைப் பயன்
படுத்திக்கொண்டு, அண்ணன் தம்பிகளும், மாமன்
மைத்துனரும், அடிவருடி நிற்போரும் ஆனந்த வாழ்வு
பெற வழி அமைத்துக் கொடுத்துவிட்டு, இலஞ்ச இலா
வணத்தில் புரண்டுகொண்டு, ஊழலாட்சி நடாத்திக்
கொண்டு வந்தனரே, உலுத்தர்கள், அவர்கள் அல்ல
இப்போது ஊராள வந்திருப்பவர்கள்; இவர்கள் உத்த
மர்கள், சத்திய சந்தர்கள் ஊர்வாழத் தாம் உழைக்கும்
உயர்ந்தோர், என்றெல்லாம் பேசினர்; போற்றினர்;
அஞ்சலி செய்து அகமிக மகிழ்ந்தனர்.

காங்கிரஸ் அமைச்சர்கள் தவறு செய்யக்கூடியவர்
களாக இருக்கமுடியும் என்று எண்ணுவதே இழுக்கு;
பாபம்; தேசபத்தியின் தூய்மையை உணர்ந்திட முடி
யாத உன்மத்தர்களின் போக்கு என்றெலாம் இடித்
துரைத்தனர், ஆழ்ந்த நம்பிக்கையின் காரணமாக!
ஆளவந்தார்களும், அடக்க ஒடுக்கம் காட்டினர், அன்பு
சொட்டப் பேசினர், மக்களுடன் பழகினர், அவர் மனக்
குறையாதென உசாவினர், தன்னலமற்ற தொண்டாற்ற
முனைந்தனர், தழைத்திடும் அறம் இனி, செழித்திடும்
மக்கள் வாழ்வு, கொழித்திடும் செல்வம் எங்கும் என்று
பலரும் கருதினர்; அந்தி வானத்தின் செந்நிறம் சொக்க
வைத்திடுவது போன்றதோர் நிலை இருந்தது; பிறகோ?
இருள்! காரிருள்! இருளைத் துணைக்கொண்டவர் செய்
திடும் செயல் பலப்பல!!

தெரியும்! தெரியும்! தேசபக்தன் வேடமிட்டு நீர்
நடாத்தும் தில்லு முல்லுகள்!!

தன்னலமற்ற தியாகியோ! யாரறியார் நீவிர்
அடித்த கொள்ளையை! குவித்த பணத்தின் அளவை!!

ஊழல்! இலஞ்சம்! ஓரவஞ்சனை! பழிவாங்குதல்!
இவை உமது முறை!

கள்ளமார்க்கெட் நடத்துவோர் உமக்கு
நண்பர்கள்!

வீடு கட்டிக் கொண்டீர் மாளிகை போல!

விலைக்கு எடுத்துக்கொண்டீர் சர்க்கார் உடை
மையை, மலிவாக!

உற்றார் உறவினருக்கு வழிகாட்டிவிட்டீர்,
கொள்ளை அடிக்க.

தெரியும்! தெரியும்! உம் தில்லுமுல்லுகள்!

இவ்விதம், கொதித்தெழுந்து பேசுகிறார்கள் இன்று
காங்கிரஸ் அமைச்சர்களைப்பற்றி, பல்வேறு இடங்களில்,
பலப்பலர். வெட்டவெளிக் கூட்டங்களில் மட்டும் அல்ல;
சட்டமன்றங்களில்!!

காங்கிரஸ் அமைச்சர்களையா இப்படி ஏசுகிறீர்
கள்? என்று கேட்பவர்களுக்கு, இடித்துரைப்பார் பதிலளிக்
கிறார்கள்: காங்கிரசால் அமைச்சர் ஆனவர்களைக்
கண்டிக்கிறோம், நாட்டுமக்கள் சார்பில்; நல்லாட்சி
வேண்டும் என்பதற்காக; வீட்டு நெருப்பு என்பதற்காக
அதில் வீழ்ந்து புரண்டிடுவார் உண்டோ? என்று கேட்
கின்றனர்.

ஆதாரமற்ற புகார்கள். அரசியல் எதிரிகளின்
அங்கலாய்ப்பு

விஷமிகள் கட்டிவிடும் வீண் புரளி

வேற்று நாட்டானிடம் நாட்டைக் காட்டிக்
கொடுக்கும் துரோகிகளின் தூற்றல் பேச்சு.

இவ்விதமாக, பெருந்தலைவர்கள், கண்டனத்திற்கு இலக்
கான காங்கிரஸ் அமைச்சர்கள் சார்பிலே வாதாடினர்;
திரையிட்டுப்பார்த்தனர்; பூசிமெழுகிப் பார்த்தனர்;
பலன் இல்லை; கண்டனக் கணைகள் சரமாரியாகக் கிளம்
பின, துளைத்தன: புனுகுபூசினர் புண்ணின் நாற்றம்
போகவில்லை; புரையோடிப்போனபிறகு, கெய்ரான்
இருப்பதை ஒப்புக்கொள்கிறார்கள்; எங்கோ ஓரிடத்தில்
எம்மையும் அறியாமல், முளைத்து விட்டிருந்த களை இது;
கழனி முழுதும் அதுவே என்று எண்ணாதீர்கள், மற்ற
இடங்களிலே உள்ளவை, கரும்பு, செந்நெல், கனிவகை
மணி என்று பேசி, ஆத்திரமேலிட்டு எழும் மக்களைச்
சமாதானப்படுத்திட முயலுகின்றனர்.

இன்னமும், கெய்ரான் காங்கிரஸ்காரரே!

இதனை நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை; இப்படிப்பட்டவர் இவர் என்று உயர்நீதி மன்றத்து முதல்வரொருவர் அறுதியிட்டுக் கூறியானபிறகும்,

கெய்ரான் காங்கிரஸ் கட்சியில்தான் இருக்கிறார்.

கெய்ரான் திரட்டிய பெருநிதி அவரிடமேதான் இருக்கிறது.

கெய்ரானின் ஆதரவாளர் காங்கிரசில்தான் உள்ளனர்.

கெய்ரானின் ஆதரவாளர் சட்டமன்றத்திலும் உள்ளனர்.

என்னென்ன காரணம் காட்டினாலும், எத்தனை சமாதானம் சொன்னாலும், எவரெவரைச் சான்றளிக்க வைத்தாலும், **குற்றம் குற்றமே** என்று தாஸ் அவர்கள் துணிந்து, நேர்மையுடன் தீர்ப்பளித்துவிட்டார்கள்.

இதற்குப் பிறகு, கெய்ரான் முதலமைச்சர் பதவியிலிருந்து வெளியேறினாரே தவிர, காங்கிரசை விட்டு அல்ல, பொதுவாழ்க்கையை விட்டும் அல்ல. அவர் இப்போதும் பாஞ்சாலத்துக் காங்கிரசில், குறிப்பிடத்தக்க பெரிய புள்ளி!

அவர்மட்டும் அல்ல, அவர் எந்தத் தவறும் செய்தவரல்ல, அவர்மீது கூறப்படுவன யாவும் வீணான பழி, அரசியல் பகைவர்களின் கோள் என்றெல்லாம் தாஸ் அவர்களிடம் சாட்சி சொன்னவர்களிலே பலர் சட்டமன்ற உறுப்பினர்கள்; அவர்கள் காங்கிரசிலே தான் உள்ளனர்; உயர்தர அதிகாரிகள் பலர்; அவர்கள் இப்போதும் அதிகாரிகளாகத்தான் இருக்கின்றனர். கெய்ரான் ஒருவர் தான் விலகினார்; அவருடைய 'தர்பாருக்கு'த் துணைநின்றவர்கள், ஆட்சியில் பங்குதாரர்கள், பரிந்து பேசியோர், நீதிபதி நேர்மையானது என்று ஏற்றுக் கொள்ள இயலாத பொய்க் காரணம் பல காட்டி அவரைக் காப்பாற்றிட முனைந்தோர் அனைவரும், காங்கிரசிலும் இருக்கிறார்கள், சர்க்காரிலும் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஊழலும் இலஞ்ச இலாவணமும் ஒழிக்கப்பட்டு விடுவதற்கான முழு நடவடிக்கையைக் காங்கிரஸ் அமைப்பு எடுத்துக் கொண்டாகிவிட்டது என்றா பொருள்? நேர்மை உள்ளம் கொண்டவர்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

தம்பி! கெய்ரான் விஷயமாக தாஸ் கமிஷன் அறிக்கை வெளிவந்ததே, இது முதலாவது என்றும் எண்ணிவிடாதே. இதற்கு முன்பு வேறோர் காங்கிரஸ் தலைவரின் பேரில் ஊழல் குற்றம் சாட்டப்பட்டு, விசாரணைக் குழு அமைக்கப்பட்டது; அறிக்கை கொடுத்தார் **விவியன் போஸ்;** அந்தக் காங்கிரஸ் தலைவர் பேரில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் ஆதாரமுள்ளவை என்பதாக. என்ன நடந்தது? அந்தக் காங்கிரஸ் தலைவர் அவர் வகித்திருந்த பதவியினின்றும் விலகிக் கொள்ளக் கேட்டுக்கொள்ளப்பட்டார்; ஆனால், காங்கிரசில் இருக்கிறார்; நீக்கப்படவில்லை!

அதற்கும் முன்னால் அடிபட்ட முந்திரா விவகாரத்தை மறந்துவிட்டிருக்கமாட்டாய். அந்த ஊழல் குறித்து விசாரணை நடத்தி, அந்த நிகழ்ச்சியிலே டி.டி. கிருஷ்ணமாச்சாரியாருக்கு இருந்த தொடர்பு குறித்துக் கருத்து தெரிவிக்கையில், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் வாதம், பேச்சு, ஒப்புக்கொள்ளத் தக்கதாக இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. என்ன நடந்தது அதன் விளைவாக? டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், தாமாகப் பதவி துறந்தார்.

இன்று டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் இந்தியாவின் நிதி மந்திரியாகக் கொலுவீற்றிருக்கிறார்.

முந்திரா விவகாரம் பற்றி விசாரணை நடத்திய **சக்ளா** இந்தியாவின கல்வி மந்திரியாக வீற்றிருக்கிறார்.

சக்ளாவை விடப் பெரிய அந்தஸ்து, அமைச்சர் அவையில் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாருக்கு! என்ன பாடம் இதிலிருந்து தெரிகிறது என்று, நேர்மை பட்டுப் போகாத பழைய காங்கிரஸ்காரரைப் பார்த்துக் கேள், தம்பி! பெருமூச்சுதான் பதிலாகக் கிடைக்கும்.

எம்முடைய ஆட்சியிலாவது ஊழல் நடப்பதாவது! என்று எக்காளமிட்டு வந்தார்கள். ஒவ்வொன்றாக வெடித்துக்கொண்டு வெளியே வருகிறது. இதனைக்கண்டுபிடிக்க ஒரு குழுவே அமைக்கப்பட வேண்டி நேரிட்டு விட்டது.

பாஞ்சாலத்தோடு நின்றுவிடவில்லை, 'பாரத புத்திரர்' என்ற பட்டயம் பெற்றுக்கொண்டு பகற்கொள்ளை அடிப்பவர்களின் கதை; படலம் படலமாக வெளிவந்தபடி இருக்கிறது!

ஜெய்பூரில், ராஜஸ்தானத்துமுதலமைச்சர் **மாகன்லால் சுகாடியா** என்பவர்மீது பாய்ந்து,

> தனக்கும் தன் உறவினர்களுக்கும் இலாபம் தேடிக்கொள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தினார் என்று பலர் பேசியுள்ளனர்.

தாஸ் கமிஷன் போல ஒன்று அமைத்து, முதலமைச்சர் மீது குறிப்பிடும் குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். சோஷியலிஸ்டு கட்சியினர் உம்ராவ் சிங் என்பவர்,

> உதயபூரில் தவறான முறையில் முதலமைச்சர் நிலத்தைப் பெற்று, அதில் இரண்டு இலட்ச ரூபாய்க்கு மேல் பெறுமானமுள்ள வீடு கட்டிக்கொண்டார்,
>
> பாங்கியில், பல இலட்சம் ரூபாய் சேர்த்து வைத்திருக்கிறார் என்று குற்றம் சாட்டிப் பேசியிருக்கிறார்.
>
> தவறு! தவறு! இரண்டு இலட்ச ரூபாய் பெறுமானம் உள்ளது அல்ல. என் வீடு. ஒரு இலட்சம் கூடப் பொறாது. யாரேனும் ஒரு இலட்ச ரூபாய் கொடுப்பதாக இருந்தால், வீட்டையும் நிலத்தையும் தந்துவிட நான் தயார்!

என்று முதலமைச்சர் சுகாடியா முழக்கமிடுகிறார். அதைக் கேட்டு மற்றவர்கள் வாயடைத்துப்போய்விடவில்லை.

> "சம்மதம்! எல்லா எதிர்க்கட்சியினரின் சார்பிலும் நான் முதலமைச்சரின் அறைகூவலை ஏற்றுக்கொள்கிறேன். நாங்கள் ஆளுக்குக் கொஞ்சம் பணம் போட்டாகிலும் கடன் வாங்கியாவது, சுகாடியா கேட்ட ஒரு இலட்சத்துக்குமேல் ஒரு ஆயிரம் ரூபாய் சேர்த்துத்தருகிறோம். வீட்டை விற்கத்தயாரா?

என்று ஒரு உறுப்பினர் கேட்கிறார். சுகாடியா பதில் ஏதும் சொன்னதாகத் தெரியவில்லை.

இந்த ஆண்டு இத்தனை இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை விளைநிலமாக்கினோம்,

இந்த ஆண்டு இத்தனை விதமான புதிய தொழிற்சாலைகளைத் துவக்கி இத்தனை இலட்சம் பேருக்கு வேலை கொடுத்தோம்,

இந்த ஆண்டு கள்ளமார்க்கெட் செய்பவர்களைக் கண்டுபிடித்து, அடக்கி, விலைகளை இந்த அளவுக்குக் குறைந்திடச் செய்திருக்கிறோம்,

இந்த ஆண்டு இத்தனை மருத்துவ மனைகள் அமைத்து, இன்னின்ன வியாதிகளினால் ஏற்படும் கேடுகளைக் குறைத்திட முயன்றிருக்கிறோம் என்றெல்லாம் பேசவேண்டிய இடத்திலே, தம்பி! என்ன பேச்சு நடைபெற்றிருக்கிறது, பார்த்தனையா!!

முதலமைச்சர் அக்கிரம வழியிலே பணம் திரட்டினார், அரண்மனைபோன்ற வீடு கட்டினார்—என்பது பேச்சு!! இவர்கள், காங்கிரஸ் அமைச்சர்கள்! இந்தஇலட்சணமான ஆட்சியைக்கண்டு, மார்தட்டிக்கொள்ளவும், மற்ற எந்தக் கட்சியும் ஆட்சி செய்திடும் ஆற்றல் பெற்றது அல்ல என்று மமதை பேசவும், நாக்கு நீளுகிறது பெருந் தலைவர்களுக்கு, மக்களுக்கு எதுவுமே புரியாது என்று அவர்கள் ஒரு தப்புக்கணக்குப்போடும் காரணத்தால்.

தம்பி! வீடுகட்டிய விந்தையுடன் முடிந்துவிடவில்லை, ராஜஸ்தானத்து ரசாபாசம்.

கம்யூனிஸ்டு கட்சியினரான இரண்டு உறுப்பினர்கள்,

> பதுக்கல்காரர்கள், திருட்டுச் சரக்கு விற்பவர்கள், கள்ள மார்க்கட் நடத்துபவர்கள், கொள்ளை இலாபம் அடிப்பவர்கள்...இவர்களுக்கு முதலமைச்சர் சுகாடியா, தாமே முன்னின்று பாதுகாப்பு அளித்து வருகிறார்

என்று குற்றம் சாட்டினார்கள்.

குல்ஜாரிலால் நந்தா, சாதுக்களைப் படை திரட்டி, சென்று சேகரிப்பீர் செய்திகளை! என்று அனுப்புகிறாராம்! ஏன்? இதோ சட்ட மன்றத்தில், இரு உறுப்பினர்கள், வெளிப்படையாக, விளைவுபற்றி அஞ்சாது, வீரத்துடன் பேசியிருக்கிறார்களே, அவர்களை அழைத்து முழுத் தகவல் தரச் சொல்வதுதானே! அதன்பேரில் விசாரணை தொடங்குவதுதானே! செயல்பட முனைவது தானே! செய்தாரா? செய்வாரா? செய்யமாட்டார்! நந்தா செய்யக்கூடியதெல்லாம், அந்த இரண்டு கம்யூனிஸ்டு உறுப்பினர்களை, இவர்கள் பாதுகாப்புக்கு ஆபத்தை மூட்டுகிறார்கள் என்று கூறி, சிறையில்

போட்டடைப்பதுதான். சுகாடியா சிரித்தபடி, நம் சுகானுபவத்தைக் கெடுத்திடத் துணிந்தவர்கள் தொலைவார்கள் என்றெண்ணி உதயபுரி மாளிகையில் உல்லாசமாக இருந்திடுவார்.

தம்பி! கெய்ரான், சுகாடியா போன்ற, குற்றச்சாட்டுக்கு இலக்காகி உள்ள காங்கிரஸ் அமைச்சர்கள் ஆள முற்பட்டபோது, அவர்களை வாழ்த்தவில்லையா, வரவேற்கவில்லையா, அவர்கள் நாட்டுப் பற்று, தன்னல மறுப்பு, அறிவாற்றல், பண்பு ஆகியவை பற்றிப் பலபடப் பேசவில்லையா, காங்கிரசை நடத்திடும் கர்த்தாக்கள். நிரம்பப் பேசினார்கள்! இன்று! சட்டசபையில் சரமாரியாகக் கிடைக்கிறது சவுக்கடி!!

ஒரு துளி அய்யப்பாடு கிளம்பினாலும், விழித்தெழுந்து, விசாரணை நடத்தி, தவறு இருந்தால் கண்டறிந்து, கேடு களைந்து, கேட்டினுக்குக் காரணமாக இருந்தவர்களைப் பதவியில் இருந்து மட்டுமல்லாமல், கட்சியிலிருந்தே நீக்கிவிட வேண்டியது முறையாக இருக்க, மூலைக்கு மூலை பேசப்பட்டு, நாறி, அழுகி, தானாக நாற்றமடிக்கிற வரையில், குற்றத்தைக் கண்டு பிடிக்கும் வேலை, களை எடுக்கும் வேலை நடைபெறுகிறதா! கிடையாது!! மாறாக, 'கபர்தார்' குற்றம் கூறாதே! உன் குலையை அறுத்தெடுத்து மாலையாக்கிக் கொள்வேன் என்று கூரை மீதேறிக் கூவுகின்றனர்.

இந்த மிரட்டல்களைப் பொருட்படுத்தாமல், துணிந்து நின்று, குற்றம் குற்றமே என்று கூறத்தக்கவர்கள் எத்தனை பேர் கிடைக்க முடியும்? மிகச் சொற்பம்.

கேரளத்து முதலமைச்சர் சங்கர் மீது குற்றச்சாட்டுகளைத் தொகுத்தெடுத்துக்கொண்டு, காங்கிரஸ் தலைவர்கள் டில்லிக்குச் சென்றனர் என்றோர் செய்தி சென்ற கிழமை வெளிவந்தது.

கேரளத்துக்கு எத்தனை முறை எத்தனை பெரிய காங்கிரஸ் தலைவர்கள் சென்று வந்தனர்—சேதி அறிய—பிளவு போக்க— அமைதி காக்க-ஒன்றுபடுத்த-ஒழுங்கு படுத்த!! தொட்டால் பட்டமரம் துளிர்க்குமாமே அந்தக் காமராஜரும் போய்வந்தார்; இன்றைய 'பாரதப் பிரதமர்' லால்பகதூர் சென்று வந்தார், கண்டு வந்தார், நிலைமை சரியாகிவிடும் என்று செப்பிவிட்டு வந்தார்;

மொரார்ஜிதேசாய் போய்வந்தார்; காங்கிரசின் ஒரு செயலாளர் சாதிக் அலி என்பார் போய்விட்டு வந்து, "வெளியே சொன்னால் வெட்கக்கேடு; அப்படி இருக்கிறது கேரளத்தில் காங்கிரஸ் நிலைமை" என்று தெரிவித்தார். இப்போது பட்டியலே தயாரித்துக்கொண்டு, டில்லிப் பட்டணமே சென்று, முதலமைச்சர் சங்கர் மீது இன்னின்ன குற்றச்சாட்டுகள் உள்ளன என்று கூறுகிறார்கள். மாலை வேளையில் மேடை ஏறியதும் எத்தனை பெரிய முழக்கம், இந்த நாட்டை ஆள நாங்களன்றி வேறு யார்? எவருக்கு உளது அந்த யோக்கியதை? என்று!! நாறுகிறது, நாட்டிலே பல பகுதிகளில்; நாக்கு மட்டும் நீளுகிறது, நம்மைவிட்டால் வேறு நாதி இல்லை இந்த மக்களுக்கு என்ற போக்கில்.

ஒன்றன்பின் ஒன்றாக இத்தனை ஊழல்கள் வெளிவருகின்றன என்பதைக் காட்ட மட்டும் அல்ல, தம்பி! மக்களிடம் எவர் எவர்களைப் பற்றி இந்திரன் என்றும், சந்திரன் என்றும், காங்கிரஸ் தலைவர்களால் புகழ்பாடி வைக்கப்படுகிறதோ, அவர்களெல்லாம் என்ன கதியாகிறார்கள், அவர்களைப் பற்றிய முழுஉண்மை ஆராய்ந்து அறியப்படும்போது என்னென்ன விஷயங்கள் வெட்ட வெளிச்சமாகின்றன, அவைகள் எத்துணை மோசமானவைகளாக இருக்கின்றன என்பதையும் விளக்கிடத்தான் கூறுகிறேன். மாசிலாமணிகள் நாங்கள் என்று மார்தட்டிப் பேசுகிறார்களே, காங்கிரஸ் ஆட்சியாளர்கள் பற்றி. இந்த மணிகள் எத்தனை மோசம் என்பது விளக்கப்பட்டுக் கொண்டு வருகிறது.

எதிர்க்கட்சிகளே வேண்டாம் என்று பேசுகிறாரே காமராஜர், சிலரை அழைத்துக்கொண்டும், சிலரை இழுத்துக் கொண்டும், சிலரை ஒழித்துவிடத் திட்டமிட்டுக் கொண்டும் வருகிறாரே, காரணம் புரிகிறதா?

எதிர்க்கட்சிகள் மும்முரமாகப் பணியாற்றி வந்தால் காங்கிரசிலுள்ள கெய்ரான்கள், சுகாடியாக்கள், சங்கர்கள் ஆகியோர் பற்றி எவரேனும் எப்போதேனும் ஏதேனும் விஷயத்தை அம்பலப்படுத்திவிடுவார்கள்; பொதுமக்கள் ஆத்திரம் கொள்வார்கள்; பொதுத்தேர்தலில் விரட்டி அடிப்பார்கள் என்ற கிலி!

தம்பி! பீகாரில் இதுபோலவே புகார்! மைசூரில்,

நிஜலிங்கப்பா மீது குற்றச்சாட்டு. இந்த நிலையில் காங்கிரசாட்சி இருக்கும்போது, கண்டபடி பேசிக் கொண்டிருப்பதும், எதிர்க் கட்சிகளைக் கேவலமாக ஏசுவதும், சரியா, முறையா? என்பதை நடுநிலையாளர் எண்ணிப் பார்த்திடவேண்டும். பொதுமக்களிடம் இத்தனைப் பெரிய அளவிலும், இவ்வளவு நெருக்கமான முறையிலும் திராவிட முன்னேற்றக் கழகம் நேசத் தொடர்பு வைத்துக் கொண்டிருப்பதன் காரணமாக, இங்கு ஆளவந்தார்கள் வெகு விழிப்புடன் இருக்க வேண்டிவருகிறது. துளி சந்தேகம் எழுந்தாலும், விடமாட்டார்கள் கழகத்தார்! ஒரு நடவடிக்கையிலேனும் அழுக்குத் தெரியுமானால் அம்பலப் படுத்தி விடுவார்கள்! மிக விழிப்பாக இருக்கவேண்டும்; அப்பழுக்கற்ற முறையில் நடந்தாகவேண்டும்; இல்லையென்றால் துளைத்தெடுத்து விடுவார்கள் என்ற அச்ச உணர்ச்சி, இங்குள்ள காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு நிரம்ப இருத்கிறது இதனை நான் கூறுவதற்குக் காரணம் நமக்கு நாமே பெருமிதம் காட்டிக்கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல, ஜனநாயகத்தில், ஒரு ஆட்சி நேர்மையாக இருக்கவேண்டுமானால், ஆட்சியில் உள்ளவர்கள், நாம் எதைச் செய்தால் எதிர்க்கட்சியினர் எந்தவிதமாக நம்மை எதிர்த்துத் தொலைத்துவிட முனைவார்களோ என்ற அச்சம் கொண்ட நிலையில் இருந்தாகவேண்டும். அந்த நிலையற்றுப் போகுமானால் பிறகு ஆளவந்தார்கள் சொல்வதெல்லாம் சட்டம்தான், காட்டுவதெல்லாம் வழிதான்! மாற, மீற மக்கள் முயன்றாலும் முடியாது எனவே தம்பி! ஜனநாயகம் வெற்றிபெற, விழிப்புடனும் விறுவிறுப்புடனும் பணியாற்றத்தக்க அளவும் ஆற்றலும், நிலையும் பெற்ற ஒரு எதிர்க்கட்சி இருந்தாக வேண்டும். அந்த நிலை, திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றிருக்கிறது. ஓங்கி வளர்ந்ததெல்லாம் ஒடிந்து வீழ்ந்துவிட்டன: ஓங்காரக் கூச்சலிட்டதுகள், ஒய்யாரக் கொண்டைக்குப் பூவுமுண்டு, ஒயிலாளின் காலுக்குத் தண்டை உண்டு என்று பாடிக்கொண்டு பாங்கி வேலை பார்க்கச் சென்றுவிட்டன, களத்தில் நிற்பவர் நாம்...கடுங்கோபம் காமராஜருக்கு வருவதற்குக் காரணம் அதுவே.

பெரிய இடத்திலே மட்டுமன்றி, எல்லா மட்டங்களிலும் இலஞ்ச இலாவணம்—ஊழல்—நெளிகிறது என்ற பேச்சு எழுந்தபோது கோபம் கொப்பளித்தது காங்கிரசின் கர்த்தாக்களுக்கு. மறுத்தனர், மிரட்டினர்

மழுப்பினர், இறுதியாக ஏதேனும் ஒரு நடவடிக்கை எடுத்தாலொழிய, பொதுமக்கள் மனத்திலே மூண்டுவிட்டுள்ள அருவருப்பை நீக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தனர். இந்தச் சமயத்தில், வேறோர் காலமாக இருப்பின் முனிபுங்கவர் ஆகியிருப்பார் என்று பலர் கருதத்தக்க முறையிலே பேசியும் உபதேசம் செய்துகொண்டும் உள்ள உள்துறை அமைச்சர் நந்தா புறப்பட்டார். இந்தியா முழுவதும் உள்ள போலீஸ் படை அவருடைய கட்டளைக்குக் காத்துக் கிடக்கிறது. பரவலாக நாடெங்கும் அமைந்துள்ள காங்கிரஸ் கமிட்டிகள் உள்ளன. ஜெயப்பிரகாஸ் நாராயணன் இருக்கிறார், கட்சிகள் வேண்டாம் கிராம அரசுகள் போதும் என்று கூறிக் கொண்டு; அவருடைய ஆதாரவாளர்கள் அணியும் ஒன்று இருக்கிறது வினோபா இருக்கிறார், அவருடைய சர்வோதய இயக்கம் இருக்கிறது. இத்தனை அமைப்புகளும் நந்தாவுக்குப் போதுமானதாக, ஆற்றல் கொண்டவையாகத் தோன்றவில்லை; என்ன காரணத்தினாலோ இந்த அமைப்புக்கள், இலஞ்ச ஒழிப்பு வேலையைச் செய்திட முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்படவில்லை. அத்தகைய நம்பிக்கையே இல்லாமல் அவர் எதற்காகப் போலீஸ் படையை நடாத்திச் செல்லும் பொறுப்பில் இருக்கிறார் என்பதும் புரியவில்லை. **ஒளிமிகு மின்சார விளக்கு கைவசம் இருக்க, அதைக் கொண்டு செல்லாமல் மின்மினிகளைப் பிடித்துக் கரத்தில் வைத்துக்கொண்டு அவை விட்டு விட்டுச் சிந்தும் ஒளியின் துணைகொண்டு இருட்டறையில் கருப்புப் பணத்தைத் தேடுகிறார்— கனம். நந்தா!!**

இதற்காக அவர் சாதுக்களைக் கூட்டிவைத்துப் பேசினார்.

சதாசர் சமிதி என்றோர் அமைப்பை நிறுவி, குற்றம் குறைகூற விரும்புவோர், வருக! என்று அழைத்தார்,

இரண்டே ஆண்டுகளில் இலஞ்சப் பேயை விரட்டுவேன், இல்லையேல் நான் பதவியை விட்டு விலகிப் போவேன் என்று நந்தா சபதம் எடுத்துக்கொண்டார். ஆகவே, இரண்டு ஆண்டுகளுக்குள் இலஞ்சத்தை ஒழித்ததாகக் காட்டியாக வேண்டும். ஒரு புதிய அமைப்பு மூலம் இந்தக் காரியத்தைச் செய்யத் தொடங்கினால், அந்த அமைப்பும் அவருடைய ஆதீனத்துக்குக் கட்டுப்பட்டதாக

இருந்தால், இரண்டாம் ஆண்டு முடிகிற நேரமாகப பார்த்து,

இலஞ்சம் வெகுவாகக் குறைந்துவிட்டது, கொடுப் பவர்களுக்கும் குலைநடுக்கம் கண்டு விட்டது; வாங்கு பவர்களுக்கும் கிலிபிடித்து விட்டது.

எடுத்த சபதத்தை நந்தா நிறைவேற்றி விட்டார்!
இலஞ்சப் பேய் ஒழிந்துவிட்டது

என்பதாக நாட்டுக்கு அறிவித்துவிட வழி இருக்கிறது இதற்காகவே நந்தா திட்டமிட்டு இவ்விதம் செய்தார் என்று நான் கூறவில்லை. இவ்விதம் எண்ண இடமளிக் கிறது அவருடைய வேலை முறை என்று கூறுகிறேன்.

வங்கக் காங்கிரஸ் தலைவர் அட்டுல்யாகோஷுக்கு இது கட்டோடு பிடிக்கவில்லை.

வேறு பல காங்கிரஸ்காரர்களுக்கும் இது பிடிக்க வில்லை.

வெளிப்படையாகவே இவர்கள் பேசினர்; வெகுண் டெழுந்தார் நந்தா; சமிதியைக் குறைகூறுகிறவர்களைக் கண்டிக்கலானார். வங்கத் தலைவர் வாளாயிருக்கவில்லை; காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில், இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்கிறார். நந்தா கூறுகிறார், நானாக இந்தச் சமிதியை ஆரம்பிக்கவில்லை, காங்கிரஸ் தலைவர் காமராஜரின் சம்மதம் பெற்றுத்தான் ஆரம்பித்தேன் என்று.

காமராஜரோ, சமிதி பற்றி எதுவுமே பேசத்தேவை இல்லை செயற்குழுவில் என்று கூறிவிட்டார்.

சதாசர் சமிதி அல்லது குழு இலஞ்சப் பிரச்சினையை, மிக எளிதாக, மிக விரைவாக, கடினமான எந்த முறைகளுமின்றியே தீர்த்துவிட முடியும் என்று நம்பிடும் பரிதாபத்தை **'இந்து'** பத்திரிகை எடுத்துக் காட்டியிருக் கிறது.

நாற்பத்து ஐந்தே நாட்களில் 'சதாசர்' தன்னிடம் கொடுக்கப்பட்ட புகார்களைத் தொகுத்து, தரம் பிரித்து, பரிசீலித்து, முடிவுகள் எடுத்து கருத்தையும் கூறிவிட்டது! அந்தக் கருத்து என்னவென்றால், புகார்களின்

எண்ணிக்கை குறைந்துகொண்டு வருகிறது; புகார்களில் பெரும்பாலானவை ஆதாரமற்றவை; என்பதாகும். இதன் படி பார்த்தால், இலஞ்சம் தாண்டவமாடுவதாகச் சொல்வது தவறு என்று ஏற்படும்.

'இந்து' இதழ் இந்த முறையையும் விரும்பவில்லை, இந்த முடிவையும் ஏற்றுக்கொள்ளவில்லை. பொருத்த மான காரணங்களையும் 'இந்து' காட்டியிருக்கிறது.

சர்க்காரால் அமைக்கப்பட்ட **சந்தானம் கமிட்டி**, முறைப்படி ஆராய்ந்து பார்த்து, நிர்வாகத் துறையில் மேல் மட்டத்திலிருந்து அடி மட்டங்கள் வரையில் இலஞ்ச ஊழல் இருக்கிறது என்று கூறி இருக்கிறது.

மத்திய சர்க்கார் அமைத்த தனிப் போலீஸ் பிரிவு 1963-ம் ஆண்டு 4857 புகார்களைப் பெற்றுப் பரிசீலிக்க வேண்டி வந்தது. 1957-ல் 2733 புகார்கள்! 1963-ல் 4857 என்று வளர்ந்து காட்டுகிறது.

புகார்களில் அற்பமானவை, ஆதாரமற்றவை என்று தள்ளிவிடத் தக்கவைகளின் எண்ணிக்கை குறைந்து விட்டது.

இந்தக் காரணங்களைக் காட்டி 'இந்து' நந்தாவின் கைவிளக்கு பயனில்லை என்பதை விளக்குகிறது.

எத்தனை சமாதானம் கூறினாலும், காங்கிரஸ் ஆட்சியில் ஊழலும் இலஞ்சமும் வளர்ந்துவிட்டிருக்கிறது என்பதை மறைக்க முடியாது—மறுக்க முடியாது— பெரியவர்கள் மழுப்பிக் கொண்டிருக்கலாம்.

நிர்வாகத்திலே நெளியும் ஊழலும் இலஞ்சமும் இந்த விதம் இருக்கிறது—கருப்பஞ்சாறு பருகாதே போதை ஏறும், நிலை தடுமாறும் என்று 'காச்சினது' குடித்து விட்டுப் பேசுவது என்பார்களே அதுபோல, இத்தனை ஊழலை வைத்துக்கொண்டே பெரிய தலைவர்கள் பேசு கிறார்கள், நாட்டை ஆளும் யோக்யதை எமக்கன்றி வேறு எவருக்கும் இல்லை என்று.

இலஞ்ச ஊழலை ஒழிக்க வேண்டுமல்லவா? துணிந்து நான் கூறுவதைச் செய்வீர்களா?

முதலில், காங்கிரசின் மேல் மட்டத்தைத் துப்புர வாக்குங்கள். முடியுமா? துணிந்து செய்வீர்களா?

நன்கொடை, இனாம் என்ற எந்தப் பெயராலும் தொழிலதிபர்கள், வணிகர்கள், முதலாளிகள், தொழிற்சாலை நடத்துபவர், சர்க்கரை வியாபாரிகள் டாட்டாக்கள், பிர்லாக்கள், சிங்கேனியாக்கள் போன்றாரிடம் தேர்தல் நிதி வசூலிக்கமாட்டோம் என்று ஆளுங்கட்சி திட்டவட்டமாக அறிவித்துவிட வேண்டும்.

இப்படிப்பட்டவர்களிடம் இருந்து வாங்கப்படும் பணம் பிரம்மாண்டமான அளவுள்ளது.

இந்தப் பணம் அமைச்சர்களையும் காங்கிரஸ் அரசியல்வாதிகளையும் 'குஷி' படுத்தவும், வியாபார சம்பந்தமாக எந்தவிதக் குறுக்கீடுகள் செய்யாமல் இருப்பதற்காகவும் தரப்படுகிறது.

இந்தப் பணம், தாங்களே மனமுவந்து, தர்ம நியாயத்துக்காகவோ, தேச பக்தி காரணமாகவோ தரப்படுகிறது என்று ஒருவரும் நம்புவதில்லை. இந்தப் பணம் ஒருவிதமான இலஞ்சம்தான்.

பர்மிட், லைசென்சு, கோட்டா பெறுவதற்காகத் தரப்படுகிறது.

ஆளுங்கட்சி துணிந்து தன்மீது உள்ள இந்தக் கறையைத் துடைத்துக்கொள்ளட்டும். பிறகு நாட்டிலே ஒரு பரிசுத்தம் ஏற்படும்.

நன்கொடை திரட்டுவதை நிறுத்துவதோடு, காங்கிரஸ் தலைவர்களுக்கு, ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கான ரூபாய் நோட்டுகளை மாலையாகக் கட்டிப் போடுகிறார்களே, அதை நிறுத்திவிட வேண்டும்.

இப்படி 'நோட்டு மாலை' போடுபவர்கள், பஸ் முதலாளிகள் அல்லது மற்ற முதலாளிகள். எதற்காகப் போடுகிறார்கள்? இந்தப் பொதுஜனத் தலைவர்களிடம் கொண்ட அன்பினால் அல்ல! ஏற்கெனவே பெற்ற சலுகைக்காக அல்லது இனிச் சலுகை பெறவேண்டும் என்பதற்காகப் போடுகிறார்கள்.

க்ஷேமநல சர்க்காரில், மந்திரிகளிடம், சலுகைகள் காட்டுவதற்கான அதிகாரம் மிகப் பெரிய அளவில்

இருக்கிறது. **இலஞ்ச ஊழலுக்கு ஆணிவேர் இதிலேதான் இருக்கிறது.**

வணிகர்களுக்கு, தொழிலதிபர்களுக்கு, ஏற்றுமதியாளர் இறக்குமதியாளர்களுக்குத் தேவைப்படும் லைசென்சு, பெர்மிட், கோட்டா ஆகியவைகள் வழங்கும் அதிகாரத்தை மந்திரிகளிடமிருந்து எடுத்துவிடவேண்டும்! அந்த அதிகாரத்தை அரசியல் கட்சிகளைச் சேராத, சுயேச்சையாக உள்ளவர்கள், தொழில் நிபுணர்கள் ஆகியோர் கொண்ட ஒரு குழுவிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அத்தகைய குழுவில் எந்த மந்திரியும் உறுப்பினராக இருக்கக்கூடாது.

அமைச்சர்களும் அதிகாரிகளும், இலஞ்ச ஊழலில் ஈடுபட்டிருப்பவர்கள், சமூக விரோதிகளாகிய கெட்ட பெயரெடுத்தவர்களுடன் குலவக்கூடாது; அவர்கள் நடத்தும் விருந்துகளில் கலந்துகொள்ளக் கூடாது.

காண்ட்ராக்டர்கள், பெரிய வியாபாரிகள், பெரும் பணம் படைத்தவர்கள், பெரிய மோட்டார்கள் உடையவர்கள் இவர்கள் நடத்தும் பானவிருந்து விழாக்கள், விருந்துகள் ஆகியவற்றில் கலந்துகொள்ளாமல் தம்மைத் தாமே தடுத்துக்கொள்வது கஷ்டமாகத்தான் இருக்கும் ஆனால், அப்படிப்பட்டவர்கள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளாமல், பகிஷ்கரிப்பது சமூகத்தில் ஒரு ஆரோக்கியமான சூழ்நிலையை ஏற்படுத்தி வைக்கும்.

சர்க்கார் மாளிகை விழாக்களில் இப்போது நடப்பதுபோல கண்டவர்களை அழைக்கக்கூடாது; இப்படிப்பட்டவர்களை அத்தகைய விழாக்களுக்கு அழைக்கக்கூடாது.

என்ன அண்ணா இது! ஒரே அடியாகக் காங்கிரஸ் மந்திரிகளை, எந்த அதிகாரம் அவர்களுக்கு ஜொலிப்பையும்—மிதமிஞ்சிய மதிப்பையும் தருகிறதோ அதை விட்டுவிடச் சொல்லுகிறாயே! எந்த முதலாளிகளின் நன்கொடை கொண்டு தேர்தலில் வெற்றி பெறுகிறார்களோ அந்தப் பணத்துக்கும் உலைவைக்கிறாயே! இது நடக்கக் கூடிய காரியமா? உன் பேச்சைக் கேட்பார்களா? என்றுதானே தம்பி! கேட்கிறாய்? தம்பி! அவ்வளவு பெரியவர்கள் இப்படி இப்படி நடந்தாகவேண்டும் என்று என்னால்

சொல்லமுடியுமா! ஏழை சொல் அம்பலம் ஏறுமா!! எனக்கும் புரிகிறது உனக்கும் தெரிகிறது, காங்கிரஸ் அரசியல்—தேர்தல் காரியம்—எப்படி நடத்தப்பட்டு வருகிறது என்று. ஆனால், முதலாளிகளிடம் பணம் வாங்காதே! பெர்மிட் கோட்டா லைசென்சு வழங்கும் அதிகாரத்தை விட்டுவிடு! என்று சொன்னால், கேட்பார்களா!! நான் அல்ல தம்பி! இத்தகைய யோசனைகளைத் துணிந்து கூறியது. இந்தியாவின் பிரதம நீதிபதியாக இருந்தவர், **மேகர்சந்த் மகாஜன்** என்பவர் கூறியுள்ளது அது. நேர்மை உணர்ச்சியுடன் அஞ்சாமையும் இணைந்திருப்பவர்கள் மட்டுமே, ஆளவந்தார்கள் புருவத்தை நெரித்து, முணுமுணுத்து, பழிவாங்கத் திட்டமிடக்கூடும் என்று தெரிந்திருந்தும், உண்மையை உரைத்திடுவோம், ஊராள்வோர் கோபித்தால் கோபித்துக்கொண்டு போகட்டும், ஊரார் உண்மை நிலைமையை உணர்ந்தால் போதும் என்ற எண்ணம் கொண்டவர்கள் மட்டுமே இது போலப் பேச முடியும்.

> இலஞ்ச ஊழலுக்கு மூலகாரணமே உங்களிடம் இருக்கிறது. உங்களுக்கும் முதலாளிகளுக்கும் உள்ள கொடுக்கல்—வாங்கலே, எல்லாவித ஊழலையும் உற்பத்தி செய்கிறது.

இவ்விதம் துணிந்து, உண்மையைச் சொன்னவர், **மகாஜன்**.

நம் அனைவருக்கும் தெரிந்ததைத்தான் அவர் சொல்லியிருக்கிறார்; ஆனால், நாம் சொல்லும்போது கட்சிமாச்சரியத்தால் பேசுகிறோம் என்று பொதுமக்கள் எண்ணிக்கொள்ளக்கூடும்; அல்லது பொதுமக்களிடம் ஆளவந்தார்கள் அதுபோலச் சொல்லிவிடக் கூடும்.

மகாஜன் ஒரு கட்சிக்காரர் அல்ல, அரசியல்வாதி அல்ல; காங்கிரஸ் அமைச்சர்கள்பற்றிக் கண்டித்துப் பேசி, அதன் மூலம் 'பெயர்' பெற்று, ஓட்டுவேட்டை ஆட நினைக்கிறவர் அல்ல. நாடு சீர்ப்பட, நிர்வாகம் தூய்மைப்பட, என்ன செய்தாக வேண்டும் என்பது பற்றி ஆர அமர எண்ணிப்பார்த்து, விருப்பு வெறுப்பு அற்ற நிலையில் இருந்து பிரச்சினையை அலசிப்பார்த்து, இதனைக் கூறுகிறார். பொறுப்புமிக்க இடத்தில் இருந்தவர், பொச்சரிப்புக்கொண்ட பதவி தேடி அல்ல.

ஒரு ஆளுங்கட்சி, எதிர்க் கட்சிகளிடமிருந்து 'இடித்துரை' கேட்பது சகஜம்; ஆனால், பிரதம நீதிபதி எனும் மிக உன்னதமான நிலையில் இருந்தவர்—மனம் நொந்து—ஆளுங்கட்சிக்குத் துணிந்து புத்திமதி கூறுவது என்றால், உள்ளபடி அது வியந்து கவனிக்கத் தக்கதாகும்.

எல்லை கடந்துவிட்டது, இனி நமக்கென்ன என்று நம்போன்றவர்கள் இருந்துவிடக்கூடாது, மக்களுக்கு உண்மை நிலைமையை உணர்த்தியாக வேண்டும் என்ற அக்கறையுடன் அவர் ஆளுங்கட்சியை இத்தனை பச்சையாகக் கண்டித்துள்ளார்.

> டாட்டாக்கள், பிர்லாக்கள், சிங்கேனியாக்கள், போன்றாரிடம் பணம் பெறுவது ஒருவிதத்தில் இலஞ்சமே! என்று கூறியிருக்கிறார்.

எதிர்க்கட்சிகள், காங்கிரசுக்கும் முதலாளிகளுக்கும் உள்ள 'பந்தபாசத்தை' எடுத்துக்காட்டிடும்போது, கவனிக்க மறுத்திடும் போக்கினர்கூட, எந்தவிதமான அரசியல், கட்சி நோக்குமற்ற முன்னாள் பிரதம நீதிபதி, நொந்த மனத்துடன், துணிந்து, காங்கிரஸ் கட்சித் தலைவர்களின் போக்கை அம்பலப்படுத்தி, அந்தப் போக்கைப் போக்கிக் கொள்ளாமல், சமிதிவைத்து இலஞ்சப் பேயை ஒழிப்பேன் என்று நந்தா கூறுவது வெறும் கேலிக் கூத்தாகிப் போகும் என்று கூறியுள்ளதை அலட்சியப் படுத்த மாட்டார்கள் என்று எண்ணுகிறேன். தம்பி! அவர் எடுத்துரைத்தவைகளைப் பொதுமக்கள் அறியும்படிச் செய்திடவேண்டிய பொறுப்பு உன்னுடையது. உன்னால் முடியும்.

தேர்தலில் வெற்றிபெறப் பெரும் பணத்தை முதலாளிகளிடம் பெற்றுக்கொண்டால், பணம் கொடுத்த முதலாளிகள், ஒன்றுக்குப் பத்தாக, கொள்ளை இலாபமடித்திடாமல் வேறு என்ன செய்வார்கள்! கொள்ளை இலாபம் பெற, குறுக்குவழி சென்றாக வேண்டிவருகிறது. குறுக்குவழி செல்லும்போது, சட்டம் குறுக்கிட்டாலும், அதிகாரிகள் தடுத்திட்டாலும், காங்கிரஸ் அமைச்சர்களின் நண்பர்கள் என்ற 'கவசம்' இவர்களுக்கு எந்தவிதமான தொல்லையும் ஆபத்தும் வரவிடாமல் பாதுகாப்பு அளிக்கிறது. இலஞ்சமும் ஊழலும் வளராமலிருக்க முடியுமா?

பிரதம நீதிபதியாக இருந்தவரே காங்கிரஸ் ஆட்சியினரின் குட்டுகளை இவ்வளவு வெட்ட வெளிச்சமாக்குகிறார். ஆனால், காங்கிரஸ தலைவர்களோ முடுக்குடன் பேசுகிறார்கள், எம்மைக் குறைகூற என்ன இருக்கிறது? எவருக்கு இருக்கிறது அந்தத் தகுதி? என்று. தகுதி மிக்கவரும், வேதனை தாளாமல், மனத்திலுள்ளதைக் கொட்டி விட்டார். இனியேனும் காங்கிரஸ் தலைவர்கள், சிறிதளவு அடக்க உணர்ச்சி காட்டுவார்களா?

இவர் ஒருசமயம் காங்கிரசுக்குப் பகைவரோ, பிடிக்காதோ காங்கிரஸ் தலைவர்களை என்று எவரும் எண்ணத்தேவையில்லை, தம்பி! அவருடைய கட்டுரையில் துவக்கத்திலேயே, நேருபண்டிதரையும் இன்றைய காங்கிரஸ் தலைவர் காமராஜரையும் பாராட்டியிருக்கிறார்.

ஆகவே அவருடைய பலத்த கண்டனத்துக்குக் காரணம், வெறுப்பு அல்ல, பொச்சரிப்பு அல்ல, கட்சி மாச்சரியம் அல்ல, பதவி பிடிக்கும் நோக்கம் அல்ல, உள்ளத்தில் தோன்றியதை அச்சம் தயை தாட்சணியமின்றிக் கூறியிருக்கிறார்.

என்னென்ன இன்னலை ஏற்றுக்கொள்கிறார்கள் இந்தத் தூயவர்கள் என்று நாட்டின் நல்லவர்கள், காங்கிரசாரைப் பாராட்டிய காலத்தோடு,

என்னென்ன ஊழல் இவர்கள் ஆட்சியில், பதவி பெற என்னென்ன தந்திரம் செய்கிறார்கள், எவரெவரிடமிருந்து எத்தனை எத்தனை பணம் பெறுகிறார்கள், பெற்ற பணத்துக்காக என்னென்ன சலுகைகளைக் காட்டுகிறார்கள் முதலாளிகளுக்கு, சலுகைகளைப் பெற்றுக்கொண்டு அந்த முதலாளிகள் என்னென்ன விதமான முந்திரா வேலைகளைச் செய்கிறார்கள், ஊழலை வளரச் செய்துவிட்டு, சொந்த நலனைப் பெருக்கிக் கொண்டு சொகுசாக வாழ்கிறார்களே, இந்தக் காங்கிரஸ்காரர்கள் என்று பரவலாக எங்கும் பேசப்படும் இந்தக் காலத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சே! நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாமா என்று தோன்றும் நல்ல காங்கிரஸ்காரர் அனைவருக்கும். ஆனால், தம்பி! அவர்கள், நாட்டுக்கு உண்மையை எடுத்துச் சொல்லும் நம்முடைய நாவினை அல்லவா வெட்டிவிடத் திட்டமிடுகிறார்கள்.

எனக்கு ஒரு மகிழ்ச்சி தம்பி! காங்கிரசார் கையாளும் கேடான முறைகளை, அரசியல்வாதிகள் கண்டிப்பதுடன் முடிந்துவிடவில்லை, அரசியலுக்கு அப்பாற்பட்ட அறிவாளரும் கண்டிக்க முன்வந்து விட்டார்கள்; அவர்கள் பேச்சு, மக்களிடையே தெளிவை நிச்சயம் உண்டாக்கும்.

நாம் இதுகாறும் கூறிக்கொண்டு வந்தவைகளை, நாட்டிலே மிகத் தூய்மையான துறையில் மிகப்பெரிய நிலையிலே இருந்து வந்தவரும் கூறுகிறார், நம்மைவிடத் திட்டவட்டமாக என்பதைக் காணும்போது, நாம் நடாத்தி வரும் பணி நியாயமானது, தேவையானது, தூய்மையானது என்பதிலே மேலும் நம்பிக்கை வளரத்தான் செய்கிறது. எனவே நமது பணி தொடர்ந்து நடைபெற ஆர்வம் அதிகமாகிறது.

காந்திமகான் சீடர் இவர் கனதனவான்களுடன்
கூடி, நாடு ஆளும் ஆசையினால் நச்சரவை வளர்க்
கின்றார், அரவு அது தீண்டுவதால் துடிக்கின்றார்
ஏழையரும், துயர் துடைத்துத் தூய்மைகாணத்
தொடர்ந்து நடத்திடுவோம் நமது பணி.

என்று கூறிடத் தோன்றுகிறது. உனக்கு என்ன தோன்றுகிறது, தம்பி!

அண்ணன்,

23-8-'64



காஞ்சிக் கடிதம் : 6

என்னை வாழவிடு! விலைகளைக் கட்டுப்படுத்து!

இரட்சாபந்தன நாளில் இலால்பகதூரிடம் தாய்க்குலம் விடுத்த வேண்டுகோள்.

செஸ்டர் பவுல் கூற்றின் பொருள்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் பயன் தாராமைக்குக் காரணங்கள்

விஷச் சக்கரச் சுழற்சி.

தம்பி,

தாய்க்குலத்தின் தனித்திறமையிலே எனக்கு எப்போதுமே தளராத நம்பிக்கை உண்டு; அந்த நம்பிக்கை மேலும் வளரத்தக்க விதத்திலே ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது; மன நெகிழ்ச்சியையும் ஏற்படுத்தத்தக்க நிகழ்ச்சி அது.

இந்தக் கிழமை, வடக்கே உள்ளவர்கள் ஒரு நோன்பு கொண்டாடுகின்றனர்; அதனை ரட்சாபந்தன தினம் என்கிறார்கள் — நோன்பிருந்து கங்கணம் கட்டிக் கொள்வது.

இந்தத் திருநாளைக் கொண்டாடும் தாய்மார்கள், டில்லிப் பட்டணத்தில் லால் பகதூர் அவர்களைக் கண்டு

தமது வாழ்த்துக்களையும் வணக்கத்தையும் கூறிவிட்டு, அங்குஉள்ள முறைப்படி ஒரு ரட்சையை—நோன்புக் கயிறு—அவருடைய கரத்தில் கட்டினார்கள்,

மரியாதை செலுத்தவும் அன்பு தெரிவிக்கவும் மேற்கொள்ளப்படும் இந்த நிகழ்ச்சியை, தாய்மார்கள் மெத்த அறிவுக் கூர்மையுடன், இன்று நாட்டின் நாயகர் எதனை மேற்கொள்ள வேண்டும் உடனடியாக என்பதனைச் சுட்டிக்காட்டிட ஒரு நல்வாய்ப்பாக்கிக் கொண்டு, ''அண்ணா! இந்தத் திருநாளில் எமக்கொரு பரிசு தர வேண்டும்'' என்று கேட்டனராம்; ''என்ன வேண்டுமம்மா?'' என்று கேட்ட லால்பகதூரிடம் அந்தத் தாய்மார்கள், எமது குடும்பங்களுக்கு அடிப்படையாகத் தேவைப்படும் வசதிகளைச் செவ்வனே செய்து கொடுக்க, உணவு, உடை, கல்வி ஆகியவற்றைப் பெற்று வாழ்வினை நடாத்த, தாங்கள் உடனடியாக ஒன்று செய்ய வேண்டும்; என்னவெனில்,

பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும்.
கள்ளச் சந்தையை ஒடுக்கவேண்டும்.
கலப்படத்தைப் போக்க வேண்டும்

என்று கூறினராம்!

குற்றுயிராகக் கிடக்கும் கணவன் பிழைத்தெழ வேண்டும் என்பதற்காக, கசியும் கண்களுடன் மருத்துவரின் தாள் தொட்டுக் கும்பிட்டபடிக் கேட்பதுண்டல்லவா, ''எனக்கு மாங்கல்யப் பிச்சை தாருங்கள்'' என்று, அது போலவும், பெற்றெடுத்த குழந்தைக்குப் பேராபத்து ஏற்பட்டது கண்டு, மருத்துவரிடம் சென்று, ''என் குலவிளக்கு அணையாதிருக்க வழி கூறுங்கள். ''என் குலக்கொடி பட்டுப் போகாதிருக்க ஒரு மார்க்கம் காட்டுங்கள்'' என்று கெஞ்சி நின்றிடும் முறையிலும், இந்தத் தாய்மார்கள், எமது குடும்பம் சிதையாதிருக்க, எமக்கு வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் கிடைத்திடச் செய்யுங்கள் என்று, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள லால்பகதூரிடம் கேட்டு நின்றனர்.

லால்பகதூர் ஏழைக் குடியில் பிறந்தவர், வாழ்க்கை இன்னல்களை நன்கு உணர்ந்தவர். வாழ்க்கை இன்னல்களை ஏற்றுக்கொள்ளும் துணிவுற்று, குடும்பம் என்பதே

பெரியதோர் சுமை, இதனைத் தாங்கிட நம்மால் ஆகாது என்று ஒதுங்கி விடாமல், ஒண்டிக்கட்டையுமாகி விடாமல் குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, பொறுமையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும், அதனை நடத்தி வருபவர். எனவே, அவருக்கு, ஏழை, நடுத்தரவகுப்பினர் ஆகியோரின் இன்னல்கள் பற்றி நன்கு தெரிந்திருக்க நியாயம் இருக்கிறது. எனவே, ''அண்ணா! எமக்கு உணவு, உடை இவைகளேனும் கிடைத்திடச் செய்திடுவீர்! என்று அந்தத் தாய்மார்கள் கேட்டு நின்றது கண்டபோது அவருடைய கண்களில் நீர் துளித்திருக்கும்,

மாடுமனை கேட்கவில்லை.
ஆடை அணி கேட்கவில்லை.
ஆடம்பரப் பொருள் கேட்கவில்லை.

உணவு—உடை—குடும்பம் நடாத்திச் செல்ல வழி, இவைகளையே கேட்டனர் அந்த மாதர்கள்.

அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில்—நாலாவது ஐந்தாண்டுத் திட்டம்—இருபத்து இரண்டாயிரம் கோடி ரூபாய் செலவிடப் போகிறார்கள் சர்க்கார் — நாட்டை வளப்படுத்த. செல்வம் கொழித்திடும் நிலை காண! தெரியுமா, தம்பி! 22,000 கோடி ரூபாய்.

இந்த நிலையின்போது, அந்தத் தாய்மார்கள் கேட்டிருப்பது, உணவு, உடை இவையே. என்ன அதன் பொருள்? ஆண்டு பதினேழு ஆகியும்,மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைக் காட்டிய பிறகும், எல்லோருக்கும் உணவு கிடைத்துவிட்டது, உடை இருக்கிறது, உறையுள் இருக்கிறது என்று கூறிடத்தக்க நிலை, நாட்டிலே இல்லை. இதனை மறந்த ஒரு தலைவர் இருக்கிறார். அவர் அரசோச்சும் நிலைபெற்றும் இருக்கிறார், அவரிடம் சென்று முறையிடுவோம் என்று தோன்றிற்று அந்தத் தாய்மார்களுக்கு என்பதன்றோ பொருள்.

பாலுந்தேனும் கலந்தோடும்! சுயராஜ்யம் சுகராஜ்யமாக இருக்கும்! தனியொருவனுக்கு உணவில்லை எனும் முறை ஒழிந்திடும்! என்றெல்லாம் காங்கிரசார் எழுப்பிய முழக்கமதைச் செவிமடுத்திருப்பாரன்றோ, இந்தத் தாய்மார்கள். அஃதேபோல் நடந்திடும், நாடு சீர்படும், வாழ்வு வளம்பெறும், என்று எதிர்பார்த்திருந்திருக்கிறார்கள். அவசரப்படேல்! என்றனர், ஆமென்றனர் தாய்மார்கள்.

வித்திடுகிறோம் என்றனர் ஆட்சியினர், முளை காணத் துடித்தனர் தாய்மார்கள்; கதிர் ஒருமுழம் காணீர்! என்றனர் நாட்டின் காவலர், களிநடமிடுவோம் என்றனர் மாதர்கள்; பசிப்பிணி ஒழிந்திடும், வறுமை ஒழிந்திடும் என்று கருதினர். ஆனால், மேலும் மேலும் அறுவடை நடந்தது; நிரம்பி நிரம்பி வழிந்தது களஞ்சியம், ஏழை எளியோர் குடிலில் அல்ல, எத்தர்கள் கட்டிய சூதுக் கோட்டைகளில். வயலின் பசுமை, தொழிலின் மாண்பு என்பவை பொன்னாகிப் பொருளாகிப் பருகுவனவாகிப் பூசுவனவாகி உடுப்பனவாகி உல்லாசமுமாகி, உப்பரிகை வாழ்வோரிடம் சென்று சிறைப் பட்டிடவே, ஏழையர் வறியராயினர், ஏக்கமே அவர்கள் கண்டு பெற்றது. இந்நிலை இவராட்சியின்போது ஏற்பட்டுவிட்டதனை எத்தனை பக்குவமாகச் சுட்டிக்காட்டுகின்றனர் தாய்மார்கள், எமக்கொரு வரம்தாரும்! உயிர் இருந்திட வழி கூறும்!! என்று.

எவரும் மலைத்து நிற்பர் இந்நாட்டில் இந்தப் பதினேழு ஆண்டுகளாகக் கொட்டப்பட்ட பணத்தின் அளவினை அறிந்திடும்போது — எனினும், அத்தனையும் தமக்குப் பயன்படாமல் எங்கெங்கோ சென்றுவிட்டதை உணரும்போது, உள்ளம் நொந்திடத்தானே செய்யும்? அந்நிலை பெற்றவரெனின் அரிவையர், இடித்துரைப்போர் பலர் உளர், நாம் இவர் இதயம் தொட்டிடும் இனிய முறையில் நாடு உள்ள நிலையைக் கூறுவோம் என்று கருதி—மெல்லியலாரன்றோ மாதர் - நோன்புக் கயிறு கட்டிவிட்டு, லால்பகதூரிடம் கேட்டிருக்கிறார்கள்,

விலைகளைக் கட்டுப்படுத்துக
கள்ளச் சந்தையை ஒழித்திடுக
கலப்படத்தை ஒழித்திடுக!

என்று. ஆண்டு பதினேழு ஆகியும் இந்த மூன்று அடிப்படைகளையும் செய்திடக்காணோமே, நாங்கள் எங்ஙனம் குடும்பம் நடாத்துவது? உண்ணும் பொருளில் மண்கலந்து உள்ளதை மறைத்து விலை ஏற்றி, அளப்பதில் நிறுப்பதில் அநியாயம் செய்து எமை அலைக்கழிக்கினறார் அறமறியார், அரசுமுறை அறிந்தவரே! ஏழையின் துயர் ஈதெனத் தெரிந்தவரே! விலைகளைக் கட்டுப்படுத்தி, கள்ளச் சந்தையை அழித்து, கலப்படத்தை ஒழித்து எமைக் காத்திடுவீர் என்று கேட்டனர் அக் காரிகையர்.

பக்ராநங்கல் பாரீர்! தாமோதர் திட்டம் காணீர்! சித்தரஞ்சனின் சிறப்பறிவீர்! பிலாய் ரூர்கேலா பெருமை காணீர்!! என்றெல்லாம் சொல்லிச் சொல்லிப் பதினே ழாண்டுகள் ஓட்டியாகிவிட்டது, இனியும் ஓட்டிய வயிற் றினருக்கு இந்தப்பட்டியல் அளித்திடுதல் புண்ணிலே புளித்ததைத் தெளித்திடுவது போன்ற செயலாகும். எமக்கு வாழவழி செய்து காட்டுங்கள்! இந்த நன்னாளில் எமது வேண்டுகோள் இதுவே! உணவு! உடை! பிள்ளை குட்டிகள் பிழைத்திருந்து படித்திட வசதி! இவைபோதும், இவற்றினை எமக்கு அளித்திடுக!—என்று கேட்டுள்ளனர். இம்மட்டோடு விட்டார்களில்லை மாதர்கள்.

லால்பகதூரின் கரத்திலே அவர்கள், உடன்பிறப் பாளர் எனும் பரிவுணர்ச்சியுடன் கட்டிய 'ரட்சை' இருக் கிறதே, அது புதுவிதமானதாம்! அந்த ரட்சையில் ஒரு குழந்தையின் படம் பொறிக்கப்பட்டிருக்கிறதாம்! அந்தப் படத்திலே

என்னை வாழவிடு!
விலைகளைக் கட்டுப்படுத்து

என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளதாம்!

நிச்சயமாக லால்பகதூரின் நெஞ்சம் நெகிழ்ந்துதான் இருக்கும். படிப்போருக்கே நெகிழ்கிறதே.

முதலாளிகள் கேட்கிறார்கள் லால்பகதூரை; புதிய புதிய யந்திரங்கள் வாங்கிட அன்னியச் செலாவணி உரிமை கொடுங்கள் என்று.

தொழிலதிபர்கள் கேட்கின்றனர், எமக்குக் கடன் கொடுங்கள், வட்டியின்றி அல்லது மிகக் குறைந்த விகிதத் தில் என்று.

குழந்தை கேட்கிறது, என்னை வாழவிடு! விலை களைக் கட்டுப்படுத்து!! என்று.

புதிய மாளிகை கட்ட இரும்புக் கம்பங்களும் 'டன் டன்னாக'ச் சிமிட்டியும் தருக, உடனே—என்று கேட்டிடும் பணம் படைத்தான்கள் உளர்—லால் பகதூர் கண்ட துண்டு,

சென்ற ஆண்டு கிடைத்ததைவிட இவ்வாண்டு கிடைத்த இலாபம் குறைவாக இருக்கிறது; இந்த நஷ்டத்

தால மெத்தக் கஷ்டப்படும் எமக்கு, வரியில் சலுகை செய் தளியுங்கள்; நாங்கள் செல்வத்தைப் பெருக்கிடும் சேவை யில் ஈடுபட்டு இருப்பவர்கள் என்று கேட்டிடும் சீமான்கள் உள்ளனர்; லால்பகதூர் பார்த்திருக்கிறார்.

ஒரு பச்சிளங் குழந்தை என்னை வாழவிடு! விலை யைக் கட்டுப்படுத்து!! என்று கேட்டிடும் காட்சியை அவர் கண்டதில்லை; காண்கிறார்; காணச் செய்தனர் தாய்மார்கள்.

எத்தனை உள்ளம் உருக்கும் நிகழ்ச்சி இது. ஆட்சிப் பொறுப்பில் உள்ளோர், காணக் கூசிடத் தக்கதோர் நிலை நாட்டிலே நெளிகிறது என்பதைக் காட்டிட வன்றோ, குழந்தையின் படம் பதித்த 'ரட்சை'யைக் கட்டி னார்கள் தாய்மார்கள்.

விலைவாசி விஷமென ஏறியபடி இருப்பது, எத்த கைய விபரீதமானது, என்னென்ன கொடுமைகளுக்கு வழி செய்திடக் கூடியது என்பதனை விளக்கிட, அஃது எதிர் காலத்தையே ஆபத்தானதாக்கத்தக்கது என்பதனை எடுத்துக்காட்ட, ஒரு குழந்தை, நான் வாழ வேண்டும், நான் வாழவேண்டுமானால் என்னை வளரச் செய்திட என் குடும்பம் வழி பெறவேண்டும், அந்த வழி கிடைக்க வேண்டுமானால், விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றெல்லாம் கூறிடுவது போல,

என்னை வாழவிடு
விலைகளைக் கட்டுப்படுத்து

என்று கேட்டுக் கொள்வதாக வாசகத்தைப் பொறித்தளித் துள்ளனர்.

கட்டி முடித்த தொழிற்கூடங்கள், அமைத்தாகிவிட்ட தேக்கங்கள், உருண்டு ஒலி கிளப்பும் யந்திரச் சாலைகள் எனும் இவைகளைப் படம் போட்டுக் காட்டித்தான் என்ன பலன், இந்தக் குழந்தையின் படம் கண்வழிச் செல்லாமலேயே எவர் நெஞ்சிலும் சென்று பதிந்து விடு கிறதே! உள்ளத்தை உருக்கிவிடுகிறதே!!

தாயைத்தான் தேடுகிறேன் என்று புலம்பிடும் குழவி யைக் காட்டிலும், உள்ளத்தை உருகச் செய்திடக்கூடிய காட்சி இருந்திட முடியாது என்று இது நாள்வரை நான் எண்ணிக் கொண்டிருந்தேன், தம்பி! இந்தக் காட்சி இருக்

விருத்தாசலம்

கிறதே—படமாக மட்டுமே உளது எனினும்—அதனையும் மிஞ்சுவதாக உளது. நான் பிழைப்பதும் மடிவதும், ஆட்சிப்பொறுப்பின் முதல்வரே! உமது கரத்தில் இருக்கிறது. என்ன செய்து என்னை வாழ வைத்திடுவது என்று எண்ணி வாட்டம் கொள்ளவேண்டாம், நானே சொல்கிறேன் தக்க வழிதனை; விலைகளைக் கட்டுப்படுத்துங்கள், நான் பிழைத்துக் கொள்வேன் என்றன்றோ குழந்தை கூறுவதாகத் தெரிகிறது 'ரட்சை'யில் பொறித்துள்ள வாசகத்தைப் பொருள் பிரித்துப்பார்த்திடும்போது.

எந்த ஒரு ஆட்சியும் இந்த நிலை வந்துளது என்பதனைக் கண்டு கண் கசியாதிருந்திட முடியாது. அதிலும் குடும்பம் நடாத்தி, ஆங்குக் குமுறலும் கொதிப்பும், பசித்தீயினால் பதைப்பும், பிணிக் கொடுமையால் வேதனையும் கிளம்பிடுவதைக் கண்டு மனக் கலக்கம் கொண்ட பழக்கம் பெற்றுள்ள எவருக்கும் கண் கசிந்திடாதிருந்திட முடியாது.

இல்லை! இல்லை! மிகைப்படுத்திக் கூறுகிறார்கள்; உணவு நிலைமை அப்படியொன்றும் மோசமாக இல்லை, விலைகள் ஓரளவு ஏறி இருக்கிறது என்றாலும், பெரிய நெருக்கடி ஏதும் ஏற்பட்டு விடவில்லை என்று இங்கு நாட்டின் நாயகர்கள் பேசுகின்றனர்—எதிர்ப்புக் குரலையும் ஏக்கப் பேச்சினையும் மறுத்திடவும் மறைத்திடவும்.

இலண்டனில் உள்ள இதழ்—இந்திய சர்க்காரிடம் ஆதரவு காட்டும் இதழ்—எழுதுகிறது.

> சீனப்படையெடுப்பின்போது எத்தகைய நெருக்கடி நிலை இருந்ததோ, அதுபோன்றதோர் நெருக்கடி நிலைமை உணவு முனையிலே இன்று இந்தியாவில் ஏற்பட்டுவிட்டிருக்கிறது

என்று. இதனையும் லால்பகதூரின் அரசு மறுத்திடும்; ஆனால், வார்த்தைகள் மறுப்புரைக்குமே தவிர, இந்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எதனைக் காட்டுகின்றன? நெருக்கடி நிலை இல்லாமலா,

> கோதுமை! கோதுமை!
> மேலும் மேலும் கோதுமை!
> அரிசி! அரிசி! மேலும் சிறிதளவு அரிசி!

என்ற 'கோஷமிட்டபடி' இந்தியத் தூதரக அலுவலர்களும் துரைத்தன மேலதிகாரிகளும் பல்வேறு நாடுகள் சென்றபடி உள்ளனர்.

> கேட்டோம், தருகிறார்கள்!
> வருகிறது உணவுப் பண்டம் கப்பல் கப்பலாக!

என்று துரைத்தனம் அறிவிப்பது எதற்காக? அச்சம் கொள்ளாதீர், கவலை காட்டாதீர் என்று கேட்டுக் கொள்ளவன்றோ.

உணவு உற்பத்தி பெருகிவருகிறது! விளைச்சலின் தரம் மிகுந்திருக்கிறது என்று முன்பு பேசிய பேச்செல்லாம் பொய்த்துப் போச்சே.

எத்தனை காலத்துக்கு உணவுப் பொருளுக்காக வெளிநாட்டை நம்பிக்கிடப்பது—வேதனையாக இருக்கிறது—வெட்கமாகக்கூட இருக்கிறது—இனி அந்தப் பழக்கத்தை விட்டொழிக்கத் திட்டமிட்டுவிட்டோம்—வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருளை வாங்கமாட்டோம் என்று முழக்கிய உறுதிமொழிகள் உயிரற்றனவாகிவிட்டனவே.

இப்போது அமெரிக்கா அனுப்புகிறது; பாகிஸ்தான் விற்றிருக்கிறது; தாய்லாந்துக்கு ஆட்கள் போகிறார்கள் அரிசி வாங்க என்று செய்திகளைச் சர்க்காரே தந்தபடி உள்ளனர்.

ஒரு பெரிய பஞ்சம், பெருவெள்ளம், அல்லது மழையே பெய்யாத நிலை, நிலநடுக்கம் எனும் ஏதேனும் ஓர் இயற்கைக் கோளாறு ஏற்பட்டு, ஒரு நாடு சோற்றுக்குத் திண்டாடும்போதும், பெரும்போரிலே சிக்கி வயல்களின் பசுமை காய்ந்து போய்விடும் போதும் வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களைக் கேட்டுப் பெறுவது முறை, நியாயம். ஆனால், அவ்விதமான இயற்கைக் கேடுகளோ, மூட்டிவிடப்பட்ட போரோ ஏதுமின்றியே, நாம், உணவுப் பொருளுக்காக, அமெரிக்கா, பாகிஸ்தான், தாய்லாந்து எனும் பல நாடுகளிடம் தஞ்சம் அடைகிற போது, உதவி பெறுகிறபோது, இங்கு இந்த நிலைமை ஏற்படக் காரணமாக இருந்த அரசிடம் மதிப்பா பிறந்திடும்? அனுப்புகிறார்கள் உணவுப்பொருள்...ஆனால், அவைகளை அனுப்பும்போது எத்தகைய கேலிப் புன்னகை எழுந்ததோ யார் கண்டார்கள்!

அமெரிக்கத் தூதுவர் செஸ்டர்பவுல்ஸ் கூறுகிறார்,

இப்போது நாங்கள் அனுப்பத் திட்டமிட்டிருப்பது நாற்பது இலட்சம் டன் கோதுமை, 300,000 டன் அரிசி. இதுவரை நாங்கள் அனுப்பியிருப்பது 230 இலட்சம் டன் உணவுப் பொருள்'' என்கிறார்.

படிக்கும்போது இந்தச் செய்தி பாகெனவா இனிக்கும்?

இன்று நேற்றல்ல, நெடுநாட்களாக உங்களுக்கு நாங்கள் உணவுப் பொருளை அனுப்பியபடி இருக்கிறோம் என்று சுட்டிக்காட்டுவது—குத்தலுக்காக அல்ல என்றே வைத்துக்கொள்வோம்—பொருளற்றதா?

இப்படி உணவுப்பண்டத்துக்கே திண்டாடுகிறீர்களே! இத்தனைக்கும் விவசாய நாடு என்கிறீர்கள், கிராமங்களே முதுகெலும்பு என்கிறீர்கள், புதிய தேக்கங்கள் கட்டியிருக்கிறீர்கள், அணைகள் பலபல என்று பட்டியல் காட்டுகிறீர்கள், நவீன விஞ்ஞான முறை எனப் பேசுகிறீர்கள், ஜப்பானிய முறை என்கிறீர்கள், சத்து உரம் என்கிறீர்கள் மின்சார இறைப்பு என்கிறீர்கள், சமுதாயநலத் திட்டமென்கிறீர்கள், கூட்டுறவு என்கிறீர்கள், நிலச்சீர்திருத்தச் சட்டம் என்கிறீர்கள், பொறுக்கு விதை, பொலிகாளை, எருக்குழி, மண் அரிப்புத் தடுப்பு என்று பலப்பல பேசுகிறீர்கள், என்றாலும் இந்த ஆண்டுகளில் நாங்கள் டன்களை உங்களுக்கு அனுப்பி இருக்கிறோமே, என்ன ஆயிற்று உங்கள திட்டங்கள்? என்ன கதியாகிவிட்டது கொட்டிய ஆயிரமாயிரம் கோடிகள்—என்றெல்லாம் செஸ்டர் பவுல்ஸ கேட்கிறார் என்றல்லவா பொருள்! சுதந்திர தின விழாவன்று கிடைத்திடும் பொற்பதக்கமா இது? பொறுப்பிலுள்ளவர்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும், போய்ச் சேர்ந்ததுகள் அல்ல!

தம்பி! அமெரிக்கத் தூதர் சொல்கிறார், எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறோம் உணவுப் பொருள். எம்மிடம் தயாராக இருக்கிறது. ஏற்றிச் செல்லும் கப்பல்களும் உள்ளன, தேவைக்கு அதிகமாகவே. ஆனால் நாங்கள் ஏற்றி அனுப்பும் பொருளை இறக்கி எடுத்திட முடியவில்லையே இந்திய சர்க்காரால், நாங்கள் என்ன செய்ய என்று கேட்கிறார். ஆமாம் என்கிறார்கள் லால்பகதூர்கள்; அப்படியானால்......என்று கேட்கிறார்

செஸ்டர்பவுல்ஸ். துறைமுகத்தில் பண்டங்களை இறக்க ......என்று இழுத்துப் பேசுகிறது இந்தியப் பேரரசு. அதற்கான வழிமுறை கூற, உடனிருந்து உதவ நிபுணர்களையும் அமெரிக்காவிலிருந்து தருவிக்கிறேன் என்று கூறுகிறார் செஸ்டர்பவுல்ஸ்.

தம்பி! ஒன்றைத் தெளிவுபடுத்தி விடுகிறேன்—அமெரிக்கா போன்ற வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள் இங்கு வருவதை நான் குறை கூறவில்லை—அதுவும் இல்லையென்றால் உணவு நெருக்கடி பேராபத்தை மூட்டிவிடும். இந்நிலையில், உணவுப் பொருளை இனாமாகவோ கடனுக்கோ, பண்ட மாற்றுக்கோ பணம் பெற்றுக் கொண்டோ கொடுத்துதவுவோர் பலப் பல இலட்சக்கணக்கானவர்களை ஆபத்திலிருந்து காப்பாற்றுகிறவர்கள் ஆகிறார்கள்—அனைவரின் நன்றிக்கும் உரித்தானவர்களாகிறார்கள்; இதனை நான் மறந்திடவுமில்லை, மறுத்திடவுமில்லை; ஆனால், 17 ஆண்டு ஆட்சி நடாத்திய பிறகு. இந்த நிலையைத்தானா நாடு பெற வேண்டும், காங்கிரசின் மூலம் என்று கேட்கிறேன்.

தம்பி! ரேவுத் துறையிலே மூட்டைகளை எப்படி, விரைவாக, இலகுவாக இறக்குவது என்பதற்கு அமெரிக்க நிபுணர்கள் வருகிறார்கள் என்று கூறினேனல்லவா! வருகிற நிபுணர்கள் இந்தத் துறைக்காக மட்டுமல்ல, என்னென்ன துறைகளுக்கு, நிபுணர்கள் அமெரிக்காவிலிருந்து இங்கு வந்தபடி இருக்கிறார்கள், சொல்லவா! கேலிக்காக அல்ல, நாடும், அதற்கு அமைந்துள்ள ஆட்சி முறையும் இருக்கிற இலட்சணத்தைத் தெரிந்து கொள்ளச் செய்வதற்காக.

விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையைக் கண்டறிந்து நிர்ணயம் செய்ய அமெரிக்காவிலிருந்து ஒரு நிபுணர் குழு வருகிறது; தாங்களாக அல்ல; சர்க்காரின் விசேஷ அழைப்பின் பேரில்.

மண் வளம் பெருக்க, பாசன முறையைத் தரமானதாக்க, வடிகால் பிரச்சினையை விளக்கிட, ஒரு நிபுணர் குழு—அமெரிக்காவிலிருந்து; பயிர் கெடுக்கும் பூச்சிகளை அழித்திட, பூச்சி மருந்தை விமான மூலம் தெளித்திட, முறைகூற, உடனிருந்து உதவி செய்ய ஒரு அமெரிக்க நிபுணர் குழு வருகிறது.

புதிய பண்ணைகள் அமைத்திடத் திட்டம் தயாரிக்க ஒரு குழு.

இங்கு நிறைவேற்றப்பட்ட நிலச் சீர்திருத்த சட்டத்தின் பலன்களைக் கண்டறிய ஒரு குழு.

தம்பி! எனக்கே சலிப்பாக இருக்கிறது, முழுப் பட்டிய லைக் கூற. ஒன்றை மட்டும் கூறிவிடுகிறேன்—பொருளும் திட்டமும், நிபுணர்களும் மட்டும் அல்ல, ஆயிரம் பொலி காளைகள் கூட வருகின்றன அமெரிக்காவிலிருந்து.

உணவு முனையில். இதுவரை துரைத்தனம் மேற் கொண்ட முறைகளும் திட்டங்களும் எந்த அளவு பலனற்று, பாழ்பட்டுப் போயிருந்தால், இந்த அளவுக்கு அமெரிக்க உதவி நமக்குத் தேவைப்பட்டிருக்கும் என்பதை மட்டும், எதற்கெடுத்தாலும் எரிச்சல் கொள்பவர்களை விட்டு விட்டு,

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

என்ற பண்பறிந்தவர்களிடம் மட்டுமாவது கேட்டுப்பார்.

திட்டமிடுகிறார்கள், தெளிவில்லை; ஆயிரமாயிரம் கோடிகளை அள்ளி வீசுகிறார்கள், ஓரவஞ்சனை நடக் கிறது, ஒழுங்கீனம் இருக்கிறது, ஊழல் மலிந்திருக்கிறது என்று நம்மைப் போன்றவர்கள் கூறியபோதெல்லாம், காங்கிரஸ் துரைமார்கள், கனைத்தனர், கண் சிமிட்டினர், காகிதத்தில் எழுதப்பட்டிருந்த புள்ளி விவரங்களைப் படித்துக்காட்டினர், நமக்குப் பொருளாதார அறிவு போதுமான அளவுக்கு இல்லை என்று நையாண்டி செய் தனர்—நினைவிலிருக்கிறதல்லவா? இப்போது காங்கிரஸ் அரசில், மேல் மட்டத்திலேயே ஆராய்ச்சி நடத்து கிறார்கள்,

திட்டங்கள் ஏன் போதுமான பலன் தரவில்லை, என்பதுபற்றி,

காங்கிரஸ் தலைவர்களிலே சிலர், திட்டம் தீட்டிய திலே தவறு இல்லை, அதை நிறைவேற்றிய முறையிலே தான் கோளாறு வந்துவிட்டது என்கின்றனர்.

திட்டக் குழுவின் துணைத் தலைவரான அசோக் மேத்தாவோ, இல்லை! இல்லை! நிறைவேற்றிய முறை

களிலே மட்டுமல்ல, திட்டங்களிலேயே கோளாறு இருக கிறது என்று கூறுகிறார்.

தொழில் மந்திரியாக உள்ள சஞ்சீவய்யா, ''திட்டங் களினால் ஏன் தக்க பலன் கிடைக்கவில்லை என்பதைக் கண்டறியவேண்டும். நாம் இதுவரை, திட்டங்கள் வெற்றிபெற, பணம் வேண்டும், மூலப்பொருள் வேண்டும் என்பது பற்றி மட்டுமே எண்ணிக் கொண்டிருந்துவிட் டோம்; ஏமாந்துவிட்டோம்; திட்டங்கள் வெற்றிபெற மக்களிடம் இலட்சிய ஆர்வம் எழவேண்டும்—வயலில் உழைப்பவன், தொழிற்சாலையில் வேலை செய்பவன் எனும் எவருக்கும் திட்டம் வெற்றிபெற நான் பாடுபடு வேன், திட்டத்துக்காக நான் உழைத்தால், எனக்கு இன்னின்னது கிடைத்தாலும் என் வாழ்க்கை வளமாகும் என்ற நம்பிக்கை எழவேண்டும், அவ்விதமான ஆர்வம் வேண்டும். அவ்விதமான ஆர்வம் எழத்தக்க விதமாகத் திட்டங்களின் விளைவுகள் இருந்திடவேண்டும். அது இல்லாததால்தான், திட்டங்கள் மூலமாகக் கிடைக்க வேண்டிய பலன் கிடைக்கவில்லை'' என்று பேசுகிறார்.

திட்ட அமைச்சராக இருந்த நந்தா அவர்களோ, திட்டத்திலே தவறு இல்லை. முறைகளிலே குறை இல்லை, சத்தியம் கெட்டுவிட்டது. இதோ அழைக்கிறேன் சாதுக் களை, அவர்கள் அதர்மத்தை அழித்தொழித்துத் தர் மத்தை நிலைநாட்டுவர் என்று உபதேசிக்கிறார்.

லால்பகதூர், நிலைமைகளைக் கவனித்த பிறகு, சரி சரி, பெரிய பெரிய தொழில்களிலே போய்ச் சிக்கிக் கொள்ள வேண்டாம்; இனி, திட்டத்தில் உடனடியான பலன் தரத்தக்க, மக்களின அன்றாடத் தேவைப் பொருள் களைப் பெற்றுத் தரத்தக்கவைகளிலேயே கவனம் செலுத்த வேண்டும் எனறு கூறுகிறார்.

திட்டத்துக்காகவோ பெரும் பொருள் செலவாகி விட்டது; வெளிநாடுகளில் பெரிய அளவு கடன் வாங்கி யாகிவிட்டது; மக்கள் மீது தாங்க முடியாத வரிச் சுமையை ஏற்றியாகிவிட்டது; விளம்பரமோ அமோக மாகச் செய்தாகி விட்டது; விழாக்களோ ஆடம்பரமாக! கடைசியில் உட்கார்ந்து பேசுகிறார்கள் ஒவ்வொருவராக, முடிவிலே நாட்டுக்குத் தெரிவிக்கிறார்கள்,

திட்டம் போதுமான, எதிர்பார்த்த பலன் தர வில்லை,

எனவே, இனித் திட்டமிடுவதிலும், திட்டத்தை நிறைவேற்றுவதிலும் ஒரு மாற்றம் செய்யப்போகி றோம்

என்று,

திட்டங்களின் மூலமாகக் கிடைக்க வேண்டியவைகள் கிடைக்காது போன நிலையில் வெறும் பணம் மட்டும் தண்ணீர் பட்ட பாடு என்பார்களே, அதுபோலப் புரள ஆரம்பித்ததால், விலைகள் ஏறின. விசாரம் வளர்ந்தது; விலைகள் ஏறவே கூலி உயர்ந்தது; கூலி உயரக் கண்டதும் விலையை மீண்டும் ஏற்றினர்; விலை மேலும் ஏறவே கூலி உயர்வு மீண்டும் தேவைப்பட்டது; இவ்விதம் ஒரு விஷச் சக்கரம் சுழல்கிறது. அதன் கொடிய பற்களிலே நாடு சிக்கிச் சங்கடப்படுகிறது.

பணப் புழக்கம் அதிகமாகி உள்ள அளவுக்குப் பண்டங்களின் உற்பத்தி அளவும் வளர்ந்தால் நிலைமையில் நெருக்கடி ஏற்படாது; பசு தின்னும் தீனி அளவுக்காவது பால் கிடைக்க வேண்டுமே! அவ்விதமின்றி தீனிக்குப் பசுவாக இருந்து, பாலுக்காகச் செல்லும்போது, பசு காளையாகி விட்டால் நிலைமை எப்படி இருக்கும்! அந்த நிலை இப்போது. தம்பி! திட்டங்களுக்காகக் கொட்டிக் கொடுத்தாயிற்று; அதற்காக அவிழ்த்துக் கொட்டப்பட்ட பணம் ஊரெங்கும் உருள்கிறது. ஆனால், அந்த அளவுக்கு பண்டங்கள் பெருகவில்லை திட்டத்தின்படி. எனவே பண வீக்கம்; பண வீக்கத்தால் விலை ஏற்றம்; விலை ஏற்றத்தால் பணத்தின் மதிப்பு சரிந்து விட்டது!

திட்டக் கமிஷனில் உள்ள பொருளாதார நிபுணர் அகர்வால்,

'ரூபாயின் மதிப்பு கட்டுப்படியாகவில்லை' என்கிறார்.

'ரூபாயின் மதிப்பு வீழ்ந்து விட்டது என்றால், என்ன பொருள்? விலைவாசி ஆறு மடங்கு அதிகமாகி விட்டது என்று பொருள். இந்த ஏற்றம் மக்கள் தாங்கக் கூடியதல்ல.'

இதனையும் பொருளாதார நிபுணர் அகர்வால் விளக்கியுள்ளார்.

இந்த நிலையில், தம்பி! தாய்மார்கள், லால்பகதூரிடம் வேண்டுகோள் விடுத்ததிலே தவறென்ன இருக்க முடியும்?

வாழவிடு
விலையைக் குறை!

என்பதுதான் இன்று நாடெங்கும் எழுந்துள்ள முழக்கம்.

ஆனால், எல்லா முழக்கங்களையும்விட, லால்பகதூரின் உள்ளத்தைத் தைக்கத்தக்கதாக, எவர் நெஞ்சையும் நெகிழ்ந்திடச் செய்யத்தக்கதாக அமைந்துவிட்டது, தாய்மார்கள், லால்பகதூருக்குத் தந்த 'ரட்சை' யில் குழந்தையின் உருவத்தைப் பொறித்து, அதிலேயே,

என்னை வாழவிடு!
விலைகளைக் கட்டுப்படுத்து!!

என்றும் பொறித்திருப்பது.

பதினேழு ஆண்டுகளுக்கு பிறகு, நாட்டின் ஆளவந்தார்க்கு, இத்தகைய ஒரு வேண்டுகோள் தரப்படுகிறது. அந்த நிலைக்கு ஆட்சியிலுள்ளோர், நாட்டினைக் கொண்டுவந்து விட்டனர். ஆனால், காமராஜர் கூறுகிறார், 'எம்மையன்றி எவருளார் ஆள!' என்று!! என்ன செய்வது, தம்பி! சிரிப்பதா அழுவதா! தெரியவில்லையே!

அண்ணன்,

30-8-'64



காஞ்சிக் கடிதம்: 7

நாலும் நாலும்

விலைகள் ஏறிவிட்டதற்குக் கூறப்படும் காரணங்கள்

'குழப்பக் கல்லூரி'யில் நேர்மாறான கருத்துகள்

நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் நிலை

ஜனநாயக சோஷியலிசம்:
இருபதாம் நூற்றாண்டின் இணையிலா மோசடி!

தம்பி,

நாலும் நாலும் ஏழு என்று ஒரு மாணவனும், ஒன்பது என்று மற்றோர் மாணவனும் கூறினால், அவர்கள் தலையில் குட்டி, காதைக் கிள்ளி, இப்படிப்பட்ட மர மண்டைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கும் நிலை பிறந்ததே என்று ஆசிரியர் ஆயாசப்படுவார்; பெற்றோர் களோ, எத்தனை கட்டைப் புத்தியாக இருப்பினும் ஆசிரியர் தமது பிள்ளைகளுக்கு அறிவு பிறந்திடச் செய் வார் என்று நம்பிக் கொண்டிருக்கலாம். ஆனால், நாலும் நாலும் ஏழு என்று ஒரு ஆசிரியரும், இல்லை இல்லை ஒன்பது என்று மற்றோர் ஆசிரியரும், வேறொருவர் நாலும் நாலும் ஏழா ஒன்பதா என்று தீர்மானிப்பதற்கு முன்பு 'நாலு' என்றால் எத்தனை என்பதைக் கண்டாக வேண்டும் என்றும் கூறிடும் ஒரு பள்ளிக்கூடம் இருந்தால் என்ன செய்வர் பெற்றோர்? எனனகதி ஆவர் மாணவர்?

எதை வேண்டுமானாலும் சொல்லிவைக்கலாம் என்று உங்கள் அண்ணாதுரை இப்படிச் சொல்கிறானே, நாலும் நாலும் எட்டு என்பதைக்கூட சொல்லிக் கொடுக்கத் தெரியாத ஆசிரியரும் இருப்பாரா! பொருத்தம் இருக்கிறதா அவன்பேச்சில்—பொருள் இருக்கிறதா அவன் தரும் உதாரணத்தில் என்றெல்லாம், நம்மைப் பிடிக்காதவர்கள் கூறத் துடித்திடுவர்; சொல்லிவிடு தம்பி! அவர்கட்கு, அவர்கள் சல்லடம் கட்டுமுன்பே! அப்படி ஒரு பள்ளிக்கூடம் இல்லை! ஆனால் அப்படி ஒரு பள்ளிக்கூடம் இருந்தால் எவ்வளவு வேதனை நிரம்பிய விசித்திரம் தெரியுமோ, அது தெரிகிறது ஆளுங்கட்சியான காங்கிரசில் ஒரே பிரச்சினை பற்றி வெவ்வேறு தலைவர்கள் வெளியிடும் மாறு பாடான கருத்துக்களைக் கவனிக்கும்போது.

எடுத்துக்காட்டுக்கு ஒன்று கூறுகிறேன்.

> இன்று விலைகள் ஏறிவிட்டதற்குக் காரணம் உற்பத்திக் குறைவுதான்.

என்கிறார் ஒரு காங்கிரஸ் தலைவர்! பெரிய தலைவர் தான்!!

> வணிகர்களின் இலாபவேட்டையால் ஏழைகள் கொடுமைப்படுததப்படுகிறார்கள் என்று வீரமாகப் பேசிய உணவு அமைச்சர் சுப்பிரமணியமே,
>
> நிரந்தரமான பரிகாரம் உணவுப் பொருள் உற் பத்தி அதிகமாவதிலேயே இருக்கிறது.

என்று பேசுகிறார்—பேசத் தலைப்பட்டிருக்கிறார்.

> சே! சே! சே! விலைகள் ஏறிக்கொண்டிருப்பது உற்பத்தி பெருகாததாலா? யார் சொல்வது அப்படி! பைத்தியக்காரத்தனமான பேச்சு! உற்பத்தி பெருகி இருக்கிறது, சந்தேகமே இல்லை. ஆனால், உற்பத்தி யான உணவுப் பொருள் சந்தைக்கு வருவதிலே, வேண்டுமென்றே தாமதம், வினியோக முறையில் குறை ஏற்பட்டுவிடுகிறது—ஏற்படுத்தி விடுகிறார்கள் பண முதலைகள்—

என்று பேசுகிறார் மற்றொருவர். இவரும் பெரிய காங்கிரஸ் தலைவர்—கிருஷ்ணமேனன், தம்பி! ஒரு காலத்தில் ,நேருவின் வாரிசு' என்று கொண்டாடப்பட்டு வந்தவர்—

அவர் பதவி இழந்ததும் இங்கேகூட இழுத்த இழுப்புக்குச் சென்றிடும் இயல்பினர் சிலர், விருந்து வைத்து விழா நடாத்தி, இனி எமது வேலை, மீண்டும் இவரைப் பதவியில் ஏற்றி உட்காரவைத்துப் பக்கம் நின்று பார்த்துப் பரவசம் பெறுவதே! என்றுகூடப் பேசி வந்தார்களே, நினைவிலிருக்கிறதா! அதே கிருஷ்ணமேனன்தான! அடித்துப் பேசுகிறார், உற்பத்தி குறையவில்லை, விநியோக முறையிலேதான் கோளாறு என்று.

இந்தனை இடர்ப்பாட்டுக்கும் மூல காரணம் என்ன? அதனைக் கண்டறியாது ஏதேதோ பரிகார முறை தேடிப் பயன் என்ன? இப்போது எழுந்துள்ள பிரச்சினை, உற்பத்திக்கும் விநியோகத்துக்கும் இடையே மூண்டுவிட்ட தகராறு அல்ல. கள்ளச் சந்தை, பதுக்கல் இவைகளால் ஏற்பட்டு விட்டதல்ல, இந்தக் கேடு. ஜனத்தொகை பெருகிவிட்டது, கட்டுக்கு அடங்கவில்லை; இப்போது மூணடு விட்டுள்ள போட்டி உணவு உற்பத்திக்கும் மக்கள் உற்பத்திக்கும் இடையிலே! உணர்க! உணர்க! இந்த இரு உற்பத்திகளும் ஒன்றை ஒன்று மல்லுக்கு இழுக்கின்றன. மக்கள் உற்பத்தி வளர்ந்தபடி இருக்கிறது. நெருக்கடி அதனால்தான்! விலை ஏற்றம் அதனால் தான்!!

இவ்விதம் உருக்கமும் புள்ளி விவரமும் கலந்த உரை யாற்றுகிறார் காங்கிரசில் உள்ள தலைவரொருவர், கனைத்துக்கொண்டு; கண் சிமிட்டிக்கொண்டு எழுந்திருக்கிறார் இன்னோர் காங்கிரஸ் தலைவர்,

'குடும்பக் கட்டுப்பாடு—கருத்தடை—இதுவா பரிகாரம் இன்றைய நெருக்கடிக்கு, மதியீனம்! மதியீனம்! சோறு போட வழி தெரியாததற்காக, மக்களைக் கொன்றுவிடத் திட்டமிடுகிறீர்களா! கொலை பாதக மல்லவா! குழந்தைகள் பிறவாமல் தடுத்திட வேண்டும் என்று திட்டமிடுகிறீர்களே, ஆண்டுக்கு ஆண்டு குழந்தைகள் பிறக்காவிட்டால், இந்த நாடு கிழவர்கள் நாடாகிவிடுமே! பிறகு? எல்லோரும் மந்திரிகளாகிவிட வேண்டியதுதான்!'

என்று ஏளனம் செய்கிறார் — இடித்துரைக்கிறார்—கருத்தடைத் திட்டம் கூடாது என்கிறார், காங்கிரசின் பெருந் தலைவர்களிலே ஒருவர் கிருஷ்ணமேனன்.

சகல ரோக நிவாரணியைக் கையிலே வைத்துக் கொண்டு, பயன்படுத்தத் தெரியாமல் விழிக்கிறீர்களே! இத்தனை இன்னலும் மூட்டியவர் எவர்? தனிப்பட்ட முதலாளிகள், அவர்களைத் தலையில் தட்டி உட்கார வைத்திடாமல், சமதர்மத்தை அமுல் நடத்தாமல், கடப்பாரையை விழுங்கிவிட்டுச் சுக்குக் கஷாயம் சாப்பிடுவதுபோல, முதலாளித்துவத்தைக் கட்டி அணைத்துக்கொண்டு, களைத்துவிட்டோம், இளைத்து விட்டோம் என்று கைபிசைந்து கொள்கிறீர்களே உடனே, சோஷியலிசத்தை நடைமுறைக்குக் கொண்டு வாருங்கள்! பிறகு, பாருங்கள், எல்லாத் தொல்லைகளும் பஞ்சு பஞ்சாகிப் பறந்திடும்.

இவ்விதம் எழுச்சியுடன் பேசுகிறார் இந்தியப் பேரரசின் அமைச்சராக இருந்து விலகிய **மாளவியா** எனும் மாபெருந் தலைவர்—காங்கிரஸ் தலைவர்!! எழுந்திருக்கிறார் மற்றோர் காங்கிரஸ் தலைவர், ஒருமுறை சூழ இருப்போரைப் பார்க்கிறார்.

எதற்கும் தலையாட்டித் தலையாட்டி எல்லாக் காரியத்தையும் கெடுத்துக்கொண்டோம். மனத்தில் பட்டதை ஒளிவு மறைவு இல்லாமல் பேசவேண்டும். பேசுகிறேன். சோஷியலிசம் சர்வரோக நிவாரணி அல்ல! சோஷியலிசத்தினால் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. தவறு! தவறு!!

இவ்விதம் பேசியவரும் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரே—மைசூரில் முதலமைச்சராக இருத்தவர், அனுமந்தய்யா என்பவர்.

துரிதமான, துணிவுமிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்கிறார் ஒருவர்.

ஆர அமர யோசித்து, விளைவுகள் என்னென்ன நேரிடக்கூடும் என்று பார்த்து. மெள்ள மெள்ளத் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறார் இன்னொருவர்.

இப்போதைய நெருக்கடி போக்கிட உடனடியாக அதிக அளவு உணவுப் பொருள் வெளிநாடுகளிட

மிருந்து வரவழைத்தாக வேண்டும் என்று கூறுகிறார் ஒருவர்.

வரவழைக்கிறோம். வருகிறது. அமெரிக்காவி லிருந்தும், தாய்லாந்து, கம்போடியா ஆகிய இடங் களிலிருந்தும். பாகிஸ்தானிலிருந்துகூட வருகிறது என்கிறார் லால்பகதூர்.

அவமானம்! அவமானம்! இவ்வளவு ஆண்டு சுயராஜ் யத்துக்குப் பிறகுமா சோற்றுக்காக வெளிநாட்டா னிடம் பிச்சை எடுப்பது? கேவலம்! கேவலம்! அதிலும் பாகிஸ்தானிடமிருந்து உணவுப் பொருள் பெறு கிறோம் என்று கூறுவது கேட்க வெட்கப்படுகிறேன், வேதனைப்படுகிறேன் என்று பேசுகிறார், **காட்கில்** எனும் பழம் பெரும் காங்கிரஸ் தலைவர்.

சர்க்காரே உணவு தானிய வாணிபத்தை மேற்கொள்ள வேண்டும், அப்போதுதான் கொள்ளை இலாபமடிப் போரின் கொட்டத்தை அடக்க முடியும் என்று ஒருவரும் சர்க்கார் உணவு தானிய வாணிபத்தை மேற்கொள்ளக் கூடாது, வகையாகச் செய்திட முடியாது, நெருக்கடி அதிகமாகிவிடும் என்று மற்றொருவரும் நேர்மாறாகப் பேசுகின்றனர். இருவரில் எவரையும் பகைத்துக்கொள்ள வேண்டாம் என்ற நோக்கம் காட்டி, வணிகர்களை அடி யோடு ஒழித்துக்கட்ட அல்ல, சர்க்கார் உணவு தானிய வாணிபத் துறையில் ஈடுபடுவது—ஈடுபடப்போவது முழு அளவில் அல்ல-ஒரு அளவுக்குத்தான்-வணிகரும் இருப்பர்-சர்க்காரும் வணிகர் வேலை பார்க்கும்—இது கொள்ளை இலாபத்தைத் தடுக்க-வாணிப முறையைச் செம்மைப் படுத்த—சீர்குலைக்க அல்ல என்று கனம் சுப்பிரமணியம் கூறுகிறார்.

உரங்கள் விவசாயிகளுக்குக் கிடைத்திட வழி செய்யுங் கள் என்று கேட்கிறார் ஒருவர்.

கடலைப் பிண்ணாக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலே 45 கோடி கிடைத்ததாமே சென்ற ஆண்டு, அதனை இந்த ஆண்டு அதிகமாக்க வழி செய்க என்கிறார் வேறொருவர்.

சதாசர் சமிதி மூலம் ஊழலையும் இலஞ்சத்தையும் ஒழித்துக்கட்ட முடியும்—கட்டப்போகிறேன்—கட்டிக் கொண்டு வருகிறேன் என்று பேசுகிறார் நந்தா.

சதாசர் சமிதியா! அதிலே இலஞ்சப் பேர்வழிகள் நுழைந்து கொண்டுள்ளனராமே! போலீஸ்படை இருக்க எதற்காக இந்தக் காவிப்படை என்று கடுங்கோபத்துடன் கேட்கிறார், வங்கநாட்டுக் காங்கிரஸ் தலைவர் (அடுத்து அகில இந்தியக் காங்கிரசின் தலைவராகப் போகிறவராம்) **அடுல்யா கோஷ்.**

காமராஜ் திட்டம் கவைக்குதவாது என்கிறார் ஒருவர், அதுதான் கைகண்ட மருந்து என்கிறார் மற்றொருவர்.

தம்பி! இப்போது யோசித்துப் பார்க்கச் சொல்லு, நாலும் நாலும் ஏழு என்று ஒரு ஆசிரியரும், ஒன்பது என்று மற்றொருவரும், கூட்டுவது பிறகு பார்ப்போம், முதலில் நாலு என்றால் என்ன? எவ்வளவு? அதைத் தீர்மானிப்போம் என்று வேறொருவரும் பேசிடும் பள்ளிக் கூடம்போல இருக்கிறதல்லவா!! தம்பி, அத்தனை பெரிய வர்கள் கூடிப் பேசிய இடத்தைப் பள்ளிக்கூடம் என்று சொல்வதா என்று கோபித்துக்கொள்ள எவரேனும் கிளம்பினால், நமக்கேன் வீண்பகை—பள்ளிக்கூடம் என்பதை மாற்றி அவர்களுடைய நிலையின் உயர்வுக்கு ஏற்ற வேறு பெயரளித்துவிடுவோம்—கல்லூரி என்று கூறுவோமே—குழப்பக் கல்லூரி என்று பெயரிடுவோம்.

அட பைத்தியக்காரா! இதைப்போய்க் குழப்பம் என் கிறாயே! இதுதான் கருத்துப் பரிமாறிக்கொள்ளுதல்! இது தான் ஜனநாயகம்! பேச்சு உரிமை! எவரும் தமது மனத் துக்குச் சரியென்று பட்டதை அச்சம், தயை தாட்சணிய மின்றி எடுத்துக்கூறிடும் உரிமை இது வழங்கப்படுவது எமது ஸ்தாபனமாம் காங்கிரசிலேதான்! இதன் அருமை பெருமையைத் தெரிந்துகொள்ள இயலாமல், இதனைக் குழப்பம் என்று பேசுகிறாய், குறை இது என்று ஏசு கிறாய்! ஒரு ஜனநாயக அமைப்பிலே இதுதான் அழகு! என்று கூற முற்படுவர். தெரியும்.

ஆனால், தம்பி! நாலும் நாலும் எட்டு என்பது போன்ற அடிப்படையிலே ஆளுக்கொரு பேச்சுப் பேசு வது, ஜனநாயகமாகாது-கருத்துக் குழப்பத்தைத்தான் காட்டும்; கொள்கைக் குழப்பத்தைத்தான் காட்டும்.

இன்று காங்கிரசிலே திட்டவட்டமான கருத்துக் கொண்டு எல்லோரும் ஈடுபட்டு இல்லை. பணபலம்,

பதவிபலம், விளம்பரபலம் மிகுதியாக உள்ளது என்ற காரணத்தால், அதிலே புகுந்துகொண்டு அதிகாரம் பெறலாம், ஆதாயம் பெறலாம் என்ற நோக்கத்துடன் எவரெவரோ சேர்ந்துவிட்டனர்—ஒரே கட்சி என்று ஒப்புக்குக் கூறிக்கொள்கின்றனரேயொழிய—அடிப்படைப் பிரச்சினைகளிலேயே வெவ்வேறு கருத்துகளை, முரண்பாடான கருத்துகளைக் கொண்டவர்கள்—ஒட்ட முடியாதவர்கள்—வெட்டிக்கொண்டு போகவேண்டியவர்கள்—உள்ளனர். உற்பத்தியாளர்களின் சார்பில் பேசுகிறேன் என்று நிலத்திமிங்கலங்களுக்காக வாதிடுபவர்களும் உள்ளனர் காங்கிரசில்; விநியோகமுறை செப்பனிடப்பட வேண்டும் என்ற சமதர்மக் கருத்தினரும் உள்ளனர் அதே காங்கிரசில். முரண்பாடுகளை மூடி மறைத்து வைத்துக்கொண்டு எவரெவருக்கு எந்தெந்தச் சமயத்தில், எந்தெந்த இடத்தில் வாய்ப்புக் கிடைக்கிறதோ, ஆங்கு தமது கருத்தினைச் செயல்படுத்திப் பயன் பெறுகின்றார்.

எனவேதான் தாமதம், தெளிவின்மை, துணிவின்மை, திரித்திடுதல் எனும் கேடுகள் காங்கிரஸ் மேற்கொள்ளும் திட்டங்களிலும், இயற்றும் சட்டங்களிலும் நெளிகின்றன.

இத்தனை முரண்பாடுகளையும் கவனித்து, எந்தக் கருத்தினரையும் இழந்திட மனமில்லாததால், அவரவரும் என் கருத்தும் இதிலே இருக்கிறது, என் நோக்கமும் இதிலே ஈடேறுகிறது என்று மகிழ்ச்சி கொண்டிடத்தக்க விதமாக, கலப்படமான முறையிலே சட்டம் ஏட்டிலே ஏறுகிறது—பெருந் தாமதத்துக்குப் பிறகு.

சட்டம்—திட்டவட்டமற்று, தெளிவற்று அமைந்து விடுகிறது. வழக்கு மன்றத்திற்குப் பெருவிருந்து கிடைக்கிறது.

சட்டம் செயல்படத் தொடங்கும்போது மேலும் இடர்ப்பாடுகள் எழுகின்றன—திரித்துவிட வழி கிடைப்பதால், சட்டத்தினால் கிடைத்திட வேண்டிய முழுப் பலனும் கிடைத்திடுவதில்லை. ஏட்டிலே முற்போக்கான சட்டம் இருந்தும் நாட்டிலே அதற்கேற்ற பலன் கிடைக்காமலிருப்பது இதனால்தான்.

பொதுப்படையாகப் பேசினால் சிலருக்குப் புரிவது கடினம் என்றால், தம்பி! காங்கிரஸ் அரசு இயற்றியுள்ள

நிலச்சீர்திருத்தச் சட்டத்தையே, எடுத்துக்காட்டாகக் கொண்டு, நான் கூறியிருப்பது எத்தனை பொருத்தமாக இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம்.

நிலச் சீர்திருத்தச் சட்டம் என்பது, தம்பி! சமதர்மப் பொருளாதாரத் திட்டத்துக்கு அடிப்படையாக அமைவது. ஆயினும், காங்கிரஸ் அரசு இந்தச் சட்டத்தை, சமதர்மப் பொருளாதார அடிப்படை என்று கூறிடக்கூட அச்சப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த அச்சத்திற்குக் காரணமும் இல்லாமற் போகவில்லை. பல ஆயிரம் ஏக்கர் நிலத்துக்கு அதிபர்களான பட்டக்காரர்கள், பாளையக்காரர்கள், இராமநாதபுரம் ராஜா, செட்டி நாட்டு ராஜா, வாண்டையார், வலிவலத்தார், நெடும்பலத்தார், மூப்பனார், செய்யூரார், சூணாம்பேட்டையார் இலஞ்சியார், சங்கரண்டாம் பாளையத்தார், கடவூரார், காட்டுப்புத்தூரார், ஒரக்காட்டார், பாண்டேசுரத்தார், வேட்டவலத்தார் எனும் இன்னோரன்ன பிற நிலப் பிரபுக்களைக் காங்கிரசில் நடுநாயகங்களாக வைத்துக் கொண்டு, சமதர்ம அடிப்படையான நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வருகிறோம் என்று கூற எப்படித் துணிவு பிறந்திட முடியும்? நெடுங்காலம் நிலச் சீர்திருத்தத்தை, நடைமுறைக்கு ஏற்றதல்ல, தேவையற்றது, பலன் கிடைக்காது என்று கூறி எதிர்த்து வந்தனர் நிலப் பிரபுக்களின் மனம் மகிழ. ஆனால், எதிர்க் கட்சிகள், இந்தப் பிரச்சினையை வைத்துக்கொண்டு வளரவும் கிளர்ச்சி நடத்தவும் முற்படக் கண்டு, மக்களை இனியும் அடக்கி வைத்திருக்க முடியாது என உணர்ந்து, நிலப் பிரபுக்களிடம் நிலைமைகளை எடுத்துக் காட்டி, இன்னின்ன முறைகளால், நீங்கள் உமது நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம், அதற்கெல்லாம் இடம் வைத்துச் சட்டம் இயற்றி விடுகிறோம் என்று கூறிச் சம்மதம் பெற்று, உச்ச வரம்புச் சட்டம் இயற்றப்பட்டது.

தம்பி! உழுபவனுக்கே நிலம் என்ற முழக்கம், ஆட்சியிலிருந்த காங்கிரசை மிரட்டும் அளவுக்கு ஓங்கி வளரும் நிலை கண்டு, இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது; உள்ளூரச் சமதர்ம நோக்கம் கொண்டு அல்ல.

எனக்கு நன்றாக நினைவிலிருக்கிறது, இன்று 'ஜனநாயக சோஷியலிசம்' பேசும் இதே காமராஜர், நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன்பு, நிலச் சீர்திருத்தத்தையே எதிர்த்துப் பேசியது.

உழுபவனுக்கு நிலமாம்
உழுபவனுக்கு நிலம்!
இருப்பவனுக்கு வீடு!
ஏறுபவனுக்கு ரயில்!

இப்படிக் கேலி பேசினவர்தான் காமராஜர். இறுதிவரையில் எதிர்த்துப் பார்த்து, எவ்வளவு தாமதம் ஏற்படுத்தலாமோ அவ்வளவும் செய்து பார்த்து, கடைசியில், ஏராளமான விதி விலக்குகள் வைத்து, இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தைச் செய்தனர். இந்த விதி விலக்குகளைக் காரணமாகக் கொண்டு, நிலப் பிரபுக்கள், தமது ஆதீனத்திலிருந்த நிலத்தைப் பிரித்துப் பிரித்து பல்வேறு காரியங்களுக்காக என்ற பெயரால்—கோயில் கட்டளை என்பதிலிருந்து கல்லூரி நடத்துவது என்பது வரையில் பல பெயரால்—எழுதிவைத்துவிட்டு, சட்டத்தால் தங்கள் ஆதிக்கம் எந்தவிதத்திலும் பாதிக்கப்படாதபடி தம்மைப் பாதுகாத்துக் கொண்டனர்-காங்கிரஸ் அரசின் துணைகொண்டு. சட்டம் ஒரு கேலிக் கூத்தாக்கப்பட்டுப் போயிற்று.

எவரொருவரிடமும் இவ்வளவுக்கு மேல் நிலம் இருக்கக்கூடாது என்ற ஒரு சட்டம் அமுலுக்கு வந்திடுவதால், ஏற்படக்கூடிய புரட்சிகர மாறுதல், இங்கே ஏற்படாமல் போனதற்குக் காரணம் இதுவே.

மீண்டும் அந்தச் சட்டத்தின் ஓட்டைகளை அடைத்திடவும், உருப்படியான பலன் கிடைக்கத்தக்க விதமாகச் செயல்படுத்தவும், விதிவிலக்குகளை நீக்கிடவும், போலி ஏற்பாடுகளை உடைத்திடவும், முற்போக்காளர் ஆட்சியில் அமர்ந்து எங்கே செய்துவிடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாகவே, இத்தனை பக்குவமாக நமது நலனைப் பாதுகாத்து வரும் காங்கிரஸ் கட்சியே ஆட்சியில் நீடித்து இருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன், நிலப்பிரபுக்கள் காங்கிரசில் இடம் பிடித்துக்கொண்டு, ஊட்டம் கொடுத்துக்கொண்டு வருகின்றனர்.

நிலச்சீர்திருத்தச் சட்டம் பயனற்றுப் போய்விட்டது என்பதனைக் காங்கிரஸ் அரசின் அழைப்பின் பேரில் இங்கு வந்து நிலைமைகளைக் கண்டறிந்த அமெரிக்க ஆய்வாளர்களே கூறிவிட்டனர்.

சட்டம் ஓட்டைகள் நிரம்பியதாக இருக்கிறது.

சட்டத்தைச் செம்மையான முறையில் செயல்படுத்தவில்லை.

செம்மையாகச் செயல்படுத்த வேண்டும் என்ற ஆர்வமே இல்லை.

அவ்விதமான சட்டம் ஒன்று இருக்கிறது என்ற நினைப்பே அற்றவர்களாக அதிகாரிகள் உள்ளனர்.

இவ்விதம் அந்த ஆய்வாளர்கள் கூறிவிட்டனர். சட்டம் செய்துவிட்டோம், நாங்கள் சமதர்மிகள் அல்லவோ! என்று காங்கிரஸ் அரசினர் கூறுவதும், சட்டத்தை ஏற்றுக்கொண்டுவிட்டோம், நாங்கள் மட்டும் என்ன, சமதர்மிகள் அல்லவா!! என்று நிலப்பிரபுக்கள் பேசுவதும், சமதர்மம் பூத்துவிட்டது, அதன் மணம் என் நாசியிலே புகுந்துவிட்டது, ஓடோடிச் சென்று அந்த மலரினைப் பறித்துச் சூடிக்கொள்வேன், ஆடுவேன், பாடுவேன், எவரேனும் ஏனென்று கேட்டால் சாடுவேன் என்று கூறிச் சிலர் காங்கிரசுக்குள் ஓடுவதும் இப்போது புரிகிறதல்லவா?

தம்பி! இப்போதும் நாட்டிலே உள்ள மொத்த நிலத்தில் பாதி அளவு, நூற்றுக்குப் பத்துப்பேர் என்று சொல்லக்கூடியவர்களான பிரபுக்களிடம்தான். இது நான் தயாரித்த கணக்கு அல்ல; ஆய்வாளர்கள் அளித்தது. சமூகத்தில் மேல் மட்டத்தில் உள்ள குட்டிக் குபேரர்களிடம் மொத்த நிலத்திலே ஐந்திலே ஒரு பாகம் சிக்கிக் கொண்டிருக்கிறது.

இந்தநிலை, ஜமீன்களை ஒழித்துவிட்டோம், நிலத்துக்கு உச்சவரம்பு கட்டிவிட்டோம் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளப் பயன்படும் சட்டங்கள் இயற்றிய பிறகு!!

இதுபோலத்தான், தயக்கம், தடுமாற்றம், தாமதம் ஆகிய கட்டங்களைத் தாண்டி, பணம் படைத்தோரின் மனம் நோகாதபடியும், ஆதிக்கம் கெடாதபடியும், சலுகை சரியாதபடியும் பாதுகாப்புத் தேடிக் கொடுத்து, ஒப்புக்கு ஒரு ஓட்டைச் சட்டத்தைச் செய்துவிட்டு, ஒய்யாரமாக முழக்கமிடுகிறார்கள், சமதர்மம்! ஜனநாயக சோஷியலிசம்!! என்று. அதனைப் பட்டக்காரரும் பாளையக்காரரும் ஒப்புக்கொள்வது மட்டுமல்ல, மேலும்

உரத்தகுரலில் முழக்கமிடுகிறார்கள், ஜனநாயக சோஷியலிசம் என்று.

பெரும்பெரும் நிலப்பிரபுக்களும், கோடீஸ்வரர்களான தொழிலதிபர்களும், வெளிநாட்டு முதலாளிகளுடன் கூட்டாகப் பெருந்தொழில் நடத்துபவர்களும், காங்கிரசில் கூடி நின்று, ஜனநாயக சோஷியலிசம் பேசுவது, இருபதாம் நூற்றாண்டின் இணையிலாத அரசியல் மோசடி என்று நான் சொன்னால், கடுமையாகக் கூறிவிட்டேன் என்று யாரும் எண்ணிக் கோபிக்கக்கூடாது— எத்தனையோ வார்த்தைகளை, கடுமை என்பதற்காக வேண்டாமென்று ஒதுக்கிவிட்டு, கடைசியாக நான் பயன்படுத்தியிருப்பது மோசடி என்ற வார்த்தை. அதைவிட நாகரிகமான வேறு வார்த்தை கிடைக்கவில்லை, இந்த நிலைமையை விளக்க. எனக்கு எவரையும் புண்படுத்த விருப்பம் ஏற்படுவதில்லை—திருடனைக்கூட நான் நடுநிசி உழைப்பாளி என்று கூறத் தயார். ஆனால் இந்த நிலைமையை விளக்க 'மோசடி' என்ற பதத்தைக்கூட உபயோகிக்கா விட்டால், உண்மையைத் துளியும் விளக்கிட முடியாது.

இந்த அரசியல் மோசடி நடத்தப்பட வேண்டியதற்காகவே, முரண்பட்ட கருத்துகளைக் கொண்டவர்கள், காங்கிரஸ் முகாமில் இருக்கிறார்கள்—ஒவ்வொரு அடிப்படைப் பிரச்சினையின்போதும், முரண்பாடு நெளிகிறது. முடிவிலோ, எவருக்கு எந்த நேரத்தில் வலிவு மிகுந்திருக்கிறதோ அவர் பக்கம் அனைவரும் நிற்கின்றனர்; எந்த நேரம் பார்த்துக் கவிழ்த்துவிடலாம் என்ற நினைப்புடன்.

எனவே, கருத்து வேறுபாடும், அதனைத் தாராளமாக வெளியிடுவதும் எமது ஜனநாயகத்தின் மாண்பு என்று மார்தட்டிக் கூறுபவர்கள் கிளம்பும் போது, இதனை நினைவிலே கொண்டிட வேண்டுகிறேன்.

இனித் தம்பி! இத்தகைய அடிப்படை விஷயத்திலேயே அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் ஆளுக்கு ஒரு விதமாக, முரண்பட்டுப் பேசுகிறார்களே, இதனை ஜனநாயகப் பண்பு என்று கூறுபவர்களைக் கேட்டுப் பாரேன், இந்த அளவுக்கு வேண்டாம், மிகச் சாதாரணமான அளவுக்கு,—இப்படிப்பட்ட அடிப்படைப் பிரச்சினையில் அல்ல, மிகச் சாதாரணப் பிரச்சினையில்—வேறு கட்சிகளில், தலைவர்கள் வெவ்வேறு கருத்துகளைப் பேசினால், இந்தக் கண்ணியவான்கள் எனனென்ன கூறுகிறார்கள்—எமதத்றகு முடிச்சுப் போடுகிறார்கள்! கொஞ்சம் யோசித்துப் பார்க்கச் சொல்லேன்!!

வேலூரில் மாநாடு நடத்தலாம் என்று நண்பர் நடராசனும், போளூரில் நடத்தலாம் என்று சுப்பிரமணியமும் கூறுவதாக வைத்துக்கொள் தம்பி! இந்தப் பெரிய கட்சியில் உள்ளவர்களுக்கு எவ்வளவு 'சின்னப் புத்தி' வந்து விடுகிறது—நடராசன்—சுப்பிரமணியம் லடாய்! மாநாடு நடத்துவதில் தகராறு! பிளவு! பிளவு! குழப்பம்! குளறல்!! ஏ! அப்பா! கொட்டை எழுத்துக் கோமான்களும், நெட்டுருப் பேச்சாளரும், நெரித்த புருவத்தினரும் என்னென்ன பேசுவார்கள்! பேசினர்!! இதோ, தம்பி! உணவுப் பிரச்சினையிலே இருந்து ஊழல் பிரச்சினைவரை, சதாசர் சமிதிப் பிரச்சினையிலே இருந்து சமுதாய நலத் திட்டம் வரையில், கருத்தடைப் பிரச்சினையிலே இருந்து காவல் படைப் பிரச்சினை வரையில், இத்தனை முரண்பாடு பேசப்படுகிறதே, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில், ஒரு வார்த்தை பேசச் சொல்லு, பார்ப்போம்! என்னய்யா வேடிக்கை இது, நாலும் நாலும் ஏழு என்கிறார் ஒருவர், ஒன்பது என்கிறார் மற்றொருவர், இந்த இலட்சணத்தில் இருக்கிறதே உங்கள் கட்சிக் கோட்டைக்குள்ளே பிளவு, தகராறு, பேதம் என்று—சே!சே! இது பிளவும் அல்ல, பேதமும் அல்ல—இது தான் உண்மையான ஜனநாயகம் என்று கூறுவர்! கூறுவரா? முழக்கமே எழுப்புவர்!

வேறொரிடத்திலே உள்ள ஒரு காங்கிரஸ் முகாமிலே, தம்பி! இந்த ஜனநாயகத்தை மேலும் சற்று விறுவிறுப்பாக நடத்திக் காட்டினராம்! அந்த ஜனநாயகத்தின் அருமை பெருமையை உணர முடியாத ஒரு காங்கிரஸ் தலைவர்.

> என்மீது பாய்ந்து சட்டையைப் பிடித்திழுத்து அடித்தார்

என்று மற்றொர் காங்கிரஸ் தலைவர்மீது புகார் செய்திருக்கிறார்.

இப்படி பலாத்காரம் — வன்முறை — நடக்கலாமா என்று கேட்டுப் பார் தம்பி! உடனே பதில் பளிச்சென்று

கிடைக்கும் ''இது வன்முறையா! சே! சே! இது அன்புப் பெருக்கு!'' என்று.

பத்திரிகைகளில் விவரம் கொடுத்திருக்கிறார்— அகில இந்தியக் காங்கிரஸ் தலைவரிடமும் புகார் தரப்பட்டிருக்கிறதாம்— கமிட்டிக் கட்டடத்திலே நடைபெற்ற 'காங்கிரஸ் ஜனநாயகம்' பற்றி.

'அடித்துப் பேசினார்' என்று எழுதுவதுண்டல்லவா? ஒரிசாவில் நடைபெற்ற கமிட்டிக் கூட்டத்தில், ஒருவர் பேசினார்— இன்னொருவர் அடித்தார்!!

தம்பி! ஒரு புதிய 'கதாநாயகரை'க் கண்டெடுத்து, பொட்டிட்டுப் பூமுடித்துக்கொண்டு வந்து காட்டினார்கள் மக்களிடம்.

இதோ பாருங்கள் இந்த நாயகனை!

கட்டுடல் காணுங்கள், கண்ணொளி பாருங்கள்.

இவர் இளைஞர்! ஏறுநடை! எதற்கும் அஞ்சா உள்ளம்!

ஆபத்துகள் இவருக்குப் பூச்செண்டு! ஆற்றல் இவருக்கு அபாரமாக உண்டு!

எதிரிகளை முறியடிப்பதில் இவருக்கு இவரே இணை,

வீழ்ந்துகிடந்த காங்கிரசை நிமிர்த்தி விட்டார்!

வீரட்டி விரட்டி அடித்து வெற்றிகொண்டார், காங்கிரசை எதிர்த்தோரை.

பொருளாதாரப் பிரச்சினைகள் இவருக்குக் கற்கண்டு.

தொழில் நிபுணர்! நாட்டுக்குத் தோன்றாத் துணைவர்,

வாதிடுவதில் வல்லவர்! வரிந்து கட்டிப் போரிடுவதில் திறமை மிக்கவர்.

நேருபண்டிதரே இவரிடம் யோசனைகள் கேட்கிறார்; அத்தனை நுண்ணறிவு இவருக்கு.

டில்லி அரசாங்கப்பணிமனையில் இவருக்கென்று ஒரு தனி இடம் உண்டு! அங்கு இவர் விருப்பம்போல் செல்வார், உணர்ந்ததை உரைப்பார், அதனைத் துரைத்தனம் ஏற்றுக் கொள்ளும்.

இவ்விதமாகவெல்லாம், அர்ச்சனைகள் செய்து அரங்கமேற்றினர்; அவரும் ஆடினார் வேகமாக, காங்கிரசின் எதிரிகளைச் சாடினார் மும்முரமாக, காமராஜர் புகழையும் பாடிக் காட்டினார், கழகத்தை ஒடுக்கிட வழியும் கூறினார், அமெரிக்கா சென்றார், 'பாரதம்' உய்ந்திடும் வழி கண்டறிய. தேர்தல் களம் நின்றார், வென்றார், முதலமைச்சர் ஆனார்! ஒரிசாவின் பட்நாயக் தம்பி, நினைவிற்கு வருகிறதா!

அவர்மீதுதான் புகார் கிளம்பியிருக்கிறது; 'அடிதடி ஜனநாயகம்' நடத்தினார் என்று.

ஒவ்வொன்றுக்கும் காங்கிரஸ் தலைவர்கள் ஒரு புது 'வியாக்யானம்' கொடுக்கிறார்களே, இவர் என்ன வியாக்யானம் தருவாரோ, யார் கண்டார்கள்!

> சீனப் பகைவன் தாக்கினால், என் நண்பரால் தடுத்துக் கொள்ள முடிகிறதா, தாங்கிக் கொள்ள முடிகிறதா என்று பரீட்சை பார்க்கவே பாய்ந்தேன், அடி விழுந்திருக்கும் போலிருக்கிறது அவசரத்தில். இதனை நான் தாக்கினதாக நண்பர் எண்ணிக் கொண்டார்; இது தாக்குதல் அல்ல; தேசியப் பாது காப்புத் துறைக்கான பயிற்சி!!

இப்படி ஒரு விளக்கம் கொடுப்பாரோ என்னவோ யார் கண்டார்கள்!!

இவ்விதமாகவெல்லாம், தம்பி! அந்த இடத்து விவகாரம் இருந்து கொண்டு வருகிறது. ஆனால், பேச்சு

மட்டும் இருக்கிறது, எம்மை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள் ஆட்சி நடத்த? என்று. நாலும் நாலும் ஏழா ஒன்பதா என்று விவாதிப்பது போன்ற நிலையிலும் 'அடிதடி ஜனநாயக' முறையிலும் இருந்து கொண்டே. பேச்சு மட்டும் இத்தனை சத்தத்துடன் இருக்கிறது. இரவல் நகைக்கே இத்தனை குலுக்கென்றால் சொந்தத்தில் நகை என்றால் சுருண்டு விழுவாள் போல இருக்கிறது என்று பேசிக்கொள்வார்கள், கொச்சையாக—அவ்விதம் இருக்கிறது இவர்கள் விவகாரம். ஆனால் தம்பி! அவர்கள் ஆட்சி செய்கிறார்கள். நீயும் நானும், மாறி மாறி இவர்களால் 'கைது' செய்யப்படுகிறோம்; சிறையில் தள்ளப்படுகிறோம்!! தெரிந்து கொள்!

அண்ணன்,



6-9-64

காஞ்சிக் கடிதம் : 8

புதிய படை புறப்படுகிறது!

நந்தாவின் சாதுக்கள் படை

நயனதாராவின் கேலியும் கிண்டலும்

சாது சன்னியாசிகள் பற்றிய மீராபென்னின் கருத்துகள்

தம்பி,

பகைவர்கள் படை எடுத்துப் புயலெனப் புகுந்திட முனையும்போது, நாட்டைக் காத்திடவும் பகையை முறியடித்திடவும் வகுக்கப்படும் போர்முறைகளில் வல்லவர்கள், எந்தப் படையை எந்த முறையில் எந்த நேரத்தில் எவ்விதமான போரிட எங்கு அனுப்பிவைப்பது என்பது குறித்து எடுத்திடும் முடிவினைப் பொருத்தே வெற்றியா தோல்வியா என்பது இருக்கிறது.

படைகள் போரிடத்தான் உள்ளன; எந்தப் படையிலும் பயிற்சி பெற்ற போர் வீரர்களே உள்ளனர்; அதிலே எவருக்கும் ஐயம் இல்லை. ஆனால் பெற்றிடும் பயிற்சியில், வகையும் தரமும் உண்டு. எந்தப் படையினரும் எதிர்த்துப் போரிடுவதிலே அஞ்சாது நின்றிடவும் ஆபத்தைத் துச்சமென்று எண்ணிடவும் இயல்பும் பயிற்சியும் பெற்றுள்ளனர். ஆனால், படையில் ஒவ்வோர் பிரிவினருக்கென்று ஒவ்வோர் விதமான பயிற்சி தரப்படுகிறது. ஒவ்வோர் விதமான போர் முறைக்கும் அதற்குத் தக்கதான பயிற்சி இருக்கிறது.

கோட்டை கொத்தளங்களைத் தாக்குவது, கோட்டை கொத்தளங்களைத் தாக்குதலிலிருந்து காத்திடுவது எனும் இருவேறு செயலிலும், தீரம் வீரம் நிரம்பத் தேவை; ஆனால், இருவேறு செயல்களிலே ஒவ்வொன்றுக்கென்று ஒவ்வோர் முறை உளது; அந்த முறையில் பயிற்சி பெற்றார்க்கே அந்தத்துறையும் பணியும் தந்திடுதல் வேண்டும், முழுப் பயன்பெற.

வாள் வீச்சிலும் பழக்கம் உண்டு எனினும், இவன் வேல் எறிவதில் தன்னிகரற்றவன் எனின், அன்னானை அதற்கே அனுப்பி வைத்தால் வெற்றி ஈட்டிட வழி செய்ததாகும். வாட்போர் அறியானோ இவ்வீரன்! அறிந்துள்ளான்! எனவே. வாட்போர்ப் படையிலே சேர்ந்து போரிடட்டும் என்று கட்டளையிடலாம்; அவனும் வாளினைச் சுழற்றிப் போரிடலாம்: ஆனால், அவன் வேல் எறிவதனால் கிடைத்திடும் பலன் கிடைத்திடாது.

அன்பும் அறமும் நிலவிட வேண்டும், பண்பு மிகுந்திட வேண்டும் என்பதிலே நாட்டம் கொண்டவரே, வள்ளுவர். எனினும், அறம் அழிப்போரும் பண்பு கெட்டோரும், அமைதி குலைப்போரும், ஆகா வழி நடப்போரும் உள்ளனரே; அவர்களால் அமளி மூட்டப்பட்டு விடுமானால், அறவுரை கூறிடல் பயனளிக்காதே; எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெற்றன்றோ இன்னல் விளைவித்தவர்களை அடக்கிட இயலும் என்பதனை எண்ணிப் பார்த்திட மறுத்தாரில்லை; மாறாக, அது குறித்து எண்ணி எண்ணிப் பார்த்து ஏற்புடைய கருத்துகள் பலவற்றைக் கூறியுள்ளார். அந்தக் கருத்துகளைக் காணும்போது, என்னே இந்த வள்ளுவர்? வாலறிவன் நற்றாள் தொழுவது பற்றித்தான் கூறினார், அதிலே வல்லவர் என்று எண்ணிக் கொண்டோம்; இதோ போர் முறை குறித்து இத்துணை நுண்ணறிவு கொண்டு வழி காட்டுகின்றாரே, போர்க்களம் பல கண்டவரோ! என்று எண்ணிடுவோம், வியந்திடுவோம். அஃது அவருடைய தனிச் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு.

இன்னவன் இதனை முடித்திட வல்லவன் என்பதனைக் கண்டறிந்து, அதனை அவனிடம் விடல்—என்பதனை எல்லாத் துறைகளுக்கும் ஏற்றதெனக் கூறி வைத்தார்; அஃது போர்முனைத் துறைக்கும் பொருந்தும்;

எனினும், போர்முறை குறித்தே ஆய்வுரை பல கூறியுள்ளார்.

இருக்கட்டும் அண்ணா! இப்போது எதற்காகப் போர்முறை பற்றிப் பேசுகிறாய்—நாம் நடாத்தி வருவதோ அறப்போர் - நம்மை எதிர்ப்போர் நடத்திடுவதோ அக்கப் போர்—நீ கூறிடத் தொடங்கியதோ களம் நின்று போரிடும் முறை பற்றி; எதற்காக? என்று கேட்கின்றாய்! கேட்பது மட்டுமா தம்பி! அண்ணன்தான் பயந்தவன் ஆயிற்றே. பாரேன் போர்முறை பற்றி இத்தனை பேசிடும் வேடிக்கையை என்றெண்ணி உள்ளூரச் சிரித்திடவும் செய்கின்றாய்! அறியேனா!!

தம்பீ! இன்று எனக்குப் போர்—போர் முறை—படை—படை வகை—பயிற்சி—பயிற்சிக்கேற்ற படைவகை—என்பன பற்றிய எண்ணம் பிறந்தது. மலாசியாவைத் தாக்கிடச் சுகர்ணோ முனைகிறார் என்றோர் பக்கம் செய்தி! வியட்நாமில் அமளி — குழப்பம்—என்றோர் செய்தி! அமெரிக்கக் குடியரசுத் தலைவராவதற்காகத் துடித்திடும் கோல்ட்வாட்டர் என்பவர், பொதுவுடைமை நாடுகளுடன் போரிட்டாக வேண்டும் என்று வெறிப் பேச்சுக் கிளப்பிடும் செய்தி! இப்படிப் பல பார்த்ததால் எனக்கும் போர் பற்றிய எண்ணம் பிறந்தது போலும் என்று எண்ணிக் கொண்டிருப்பாய். என் எண்ணம் இந்தச் செய்திகளைக் கண்டதனால் எழுந்ததுமல்ல. வேறென்ன என்கிறாயோ! புதியதோர் படை புறப்படுகிறது-வாளேந்திப் போரிட அல்ல—புனிதப் போர் புரிய! அது பற்றிப் படித்தேன்—அருமையான ஓர் ஆய்வுரையும் இதுகுறித்து வெளிவந்திருந்தது. பார்தேன்; பார்த்திடவே, போர் பற்றிய பொதுவான எண்ணம் எழுந்தது.

தம்பி; பெருமழையால் ஏரி குளம் குட்டைகள் நிரம்பி எங்கும் சேறும் சகதியுமாகிவிட்டால், தவளைக் கூட்டத்துக்குக் கொண்டாட்டமல்லவா! கேட்போர் காதினைத் துளைத்திடத்தக்க கூச்சல் எழுப்பும், தூக்கத்தைக் கெடுக்கும்,

ஒரு குற்றமும் நாம் செய்தோமில்லை, இந்தத் தவளைகள் நமக்கு இத்தனை தொல்லை கொடுத்திடத் துணிந்தனவே? எத்தனை பெரிய சத்தம்! ஓயாத கூச்சல்! காதைத் துளைத்திடும் சத்தம்! என்ன எண்ணிக் கொண்டன இந்தத் தவளைகள்! கூச்சலிடுவதிலே நம்மை மிஞ்சு

வார் எவரும் இல்லை என்று எண்ணிக்கொண்டு, மண்டைக்கனம் கொண்டுவிட்டனவோ! வலிய வம்புக்கு இழுக்கின்றனவே! விடக்கூடாது இந்தத் தவளைகளை!! என்று எண்ணி, ஒருபடை திரட்டிக்கொண்டு கிளம்பி, தவளைகள் கூச்சலிடும் குளம்குட்டை ஓரம் நின்று நாமும் கூச்சலிடுவோம், உரத்த குரலில்; ஓயாமல்! நமது குரலொலி தமது குரலொலியைவிடப் பயங்கரமான அளவு உளது என்பதனை, இந்தப் புத்திகெட்ட தவளைகள் உணரட்டும்; உணர்ந்து வெட்கத்தால் வாயடைத்துப் போகட்டும் என்று கூறிக்கொண்டு, அதனையே போர்முறையாக்கிக் கொண்டு, 'கூவும்படை'யாகிக் கூச்சல் கிளப்பிடுவார் உண்டோ!! இல்லை! ஆளுக்கொரு கல்வீசித் தவளைகளைக் கொன்று போடுவோம் என்று கிளம்பிடுவார் உண்டோ! இல்லை என்பாய், பொதுவாக, அதுபோல் செய்திட ஒரு திட்டம் போட்டுக்கொள்வார் இல்லை. ஆனால், பிரான்சு நாட்டிலே இவ்விதமான வேலைத்திட்டம் இருந்தது, புரட்சிக்கு முன்பு. ஆமாம், தம்பி! வேடிக்கை அல்ல நான் கூறுவது; வரலாற்றிலிருந்து எடுத்தளிக்கும் துணுக்கு. சீமான்கள் கொட்டமடித்துக் கொண்டிருந்த நாட்கள்! சாவு வரவில்லையே, சர்வேசா! என்று ஏழைகள் அழுது கிடந்தகாலம். தவளைகள் கூச்சல் கிளப்புவதால் சீமானின் தூக்கம் கெடுமல்லவா? சீமானின் தூக்கம் கெட்டால், உடம்பு என்னாவது! அவன் உடம்பு போனால் நாட்டின் உயிர் எப்படி இருக்கும்!! இவ்விதமான எண்ணம் அரசியல் கருத்தாக இருந்துவந்த காலமது. அப்போது இரவுக் காலங்களில், சீமான் பஞ்சணையில் படுத்திடுவான்; காடு கழனியாக்குபவர்கள், கல்லும் தடியும்கொண்டு தவளைகளைத் தாக்கியபடி இருப்பராம், இரவெல்லாம்; கூச்சலிடும் தவளைகளைக் கொல்வராம். இது, சீமானின் தூக்கத்துக்கான பாதுகாப்புப் படை! என்ன தருவார் சீமான்? என்றா கேட்கிறாய்! கொல்லாமல் விட்டுவைத்திருக்கிறாரே, போதாதா!!

செருக்குமிக்க சீமான்கள் காலத்துப் படைபோன்றதோர் படை இதுபோது எங்கேனும் அமைந்துளதோ, அதுபற்றியோ அண்ணா! நீ கூறுவது என்று கேட்கிறாய். இல்லை, தம்பி! இல்லை! நான் குறிப்பிடும் படை, சீமான் அமைத்தது அல்ல; சீமான்களுக்காகவும் அல்ல! ஏழைகளுக்கு இதம் செய்ய ஏழை பங்காளர் அமைத்த படை!!

எது அது என்கிறாய். பொறு. கூறுகிறேன்; கூறுமுன் வேறோர் படை ஒன்று காட்டுகிறேன்.

தஞ்சைத் தரணி! அதனை வடபுலத்து முஸ்லீம் மன்னர் படை தாக்க வருகிறது: பாய்ந்து வருகிறது, பெரும்படை—போரிடுவதிலே ஆற்றல் மிகக் கொண்ட படை.

தஞ்சை மன்னன் கைகட்டி வாய்பொத்தி இருப்பானோ! நாடு காத்திடும் கடமை உணர்ச்சி அற்றவனோ மன்னன்!!

கை ஒலி எழுப்பினான், எதிர்வந்து நின்றனர் ஏவலர். கட்டளையிட்டான். கடுகிச் சென்றனர் நிறைவேற்ற.

படையொன்று கிளம்பிற்று; பறித்திட, ஒடித்திட, குவித்திட, வீசிட, பரப்பிட!

எதிரிகளைக் கண்டதுண்டமாக்கி வீசிட, அவர்களின் படைக்கலன்களைப் பறித்திட, வாட்களை ஒடித்திட, தஞ்சை மன்னனின் கட்டளை பெற்ற படை முனைந்தது என்று எண்ணுகின்றாய்.

தம்பி! ஒடித்தனர் பறித்தனர், வீசினர்!! ஆனால், எதிரிப்படையினரை அல்ல — பகைவர்களை அல்ல. காடென வளர்ந்திருந்த துளசிச் செடிகளை!!

ஏன்? என்கிறாய். மறுகணம் எண்ணிக் கொள்கிறாய், எதிரி அறியாவண்ணம் பாய்ந்து சென்று தாக்கிடப் புது வழி அமைக்கின்றனர் போலும், அதற்கே காடழித்துப் பாதை போடுகின்றனர் என்றெண்ணிக் கொள்கின்றாய். அது அல்ல நடந்தது. துளசிச்செடிகளைப் பறித்தெடுத்துச் சென்று எதிரிப்படை நுழையும் பாதையிலே வீசிடுக! பரப்பிடுக! துளசியைக் காலால் மிதித்துக்கொண்டு வருவது 'மகாபாபம்!' இதனை உணர்ந்து பகைப்படை வந்தவழியே திரும்பிப் போய்விடும்!! இது மன்னன் கட்டளை—போர்முறை.

இதனை நான் வரலாற்றுச் செய்தி என்று கொண்டிடவுமில்லை கூறிடவுமில்லை. அந்த நாள் நிலையினைக் காட்டிடக் கட்டிவிடப்பட்ட கதை என்றே கொள்கின்றேன்; ஆனால், கருத்தே அற்றது இது என்று தள்ளிட

மாட்டேன்—ஏமாளி மன்னன் இதுபோல், பொருளற்ற போர் முறையை மேற்கொள்வான் என்ற கருத்தினைத் தருவது இந்தக் கதை.

துளசிச்செடி, இந்து மார்க்க வைதீகர்கட்கு, மகிமை வாய்ந்தது; புண்யம் பெற்றுத்தருவது. கண்களில் ஒத்திக் கொள்வதும், தலையில் சூடிக்கொள்வதும் நீருடன் கலந்து பயபக்தியுடன் உட்கொள்வதும், இந்து மார்க்கத்திற்கு ஏற்பட்டது. துளசி மாலையாமே மகாவிஷ்ணுவுக்கு!!

துளசியை மிதித்துவிட்டால் போதும், பாவம் ஏழெழு ஜென்மத்துக்கும் விடாது! சாஸ்திரத்தைக் கூறினேன், தம்பி! சாஸ்திரத்தை!!

இப்படி உள்ள ஒரு சாஸ்திரம் பொருள் உள்ளது, தேவைப்படுவது என்று வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும், தம்பி! இந்து மார்க்கத்து வைதீகர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்த நம்பிக்கையை, முஸ்லீம் படை மதிக்குமா, ஏற்றுக்கொள்ளுமா என்று அந்த மன்னன் எண்ணிடவில்லை. வீசு துளசியை! விரண்டோடுவர் பகைவர்!! என்று கட்டளையிட்டார். பச்சைப் பசேலென ஏதோ தெரிவது கண்டு, பகைவர்களின் குதிரைப்படை மேலும் வேகமாகப் பாய்ந்ததாம், அந்த மன்னனின் ஆட்சி வீழ்ந்ததாம், சொல்கிறார்கள்.

எதிரிப் படையை விரட்ட வழியிலே துளசியை வீசினதுபோல, இப்போது நாட்டிலே தலைவிரித்தாடும் அக்கிரமத்தை ஒழிக்க, அநீதியைத் தொலைக்க, ஒரு புதுப் படை புறப்பட்டிருக்கிறது. எது அந்தப் படை? எவர் திரட்டியது? எங்கு உளது? என்று கேட்கிறாயோ, தம்பி! முதலில் எங்கு உளது? எது அந்தப் படை? என்பதற்குப் பதில் கூறிவிடுகிறேன். **'காஞ்சி'** இதழின் அட்டைப் படத்தை ஒருமுறை பார்! பார்த்தனையா? என்ன காண்கிறாய்? சாதுக்களை அல்லவா!! அந்தப் படைதான் தம்பி, புதிதாகக் கிளம்பியுள்ள படை! நந்தா திரட்டி அனுப்பியுள்ள படை!! ஊழல், ஒழுங்கீனம், இலஞ்சம், கொள்ளை இலாபம், கள்ளச்சந்தை, புரட்டு புனைசுருட்டு எனும் சமூகக் கொடுமைகளை எதிர்த் தொழித்திடுக என்று கட்டளையிட்டு. நந்தா இந்தச் சாதுக்கள் படையினைத் திரட்டி அனுப்பிவைக்கிறார்.

உள்துறை அமைச்சர் இந்த நந்தா நல்லெண்ணம் மிகக்கொண்டவர், நாணயமானவர் என்கிறார்கள். சமூகக் கேடுகளைக் களைந்தாக வேண்டும் என்ற உறுதி கொண்டவர்; சூள் உரைத்துச் சுறுசுறுப்பாகப் பணியாற்ற முனைந்திருக்கிறார். அதற்காக அவரை எவரும் பாராட்டுவர். நோக்கம் நேர்த்தியானது! ஆனால், முறை? துளசி அல்லவா கொட்டச் சொல்கிறார் பகைவர் நுழையும் பாதையில்! சட்டம், போலீஸ் ஆகியவைகளின் கண்களில் மண்ணைத் தூவிடும் கைதேர்ந்தவர்களைக் கண்டறிந்திட, காவி கட்டிய ஜெபமாலைகளை அல்லவா ஏவுகிறார். வேண்டும் வேண்டும் பெரும் பொருள் வேண்டும்! பிறர் பொருள் எனினும் பிழையிலை, வேண்டும்! உழைத்திடாமலே பொருள் குவித்திட உண்டு பல வழி, அனைத்தையும் அறிவோம்! என்று கூறிடும் கொடியவர்களை அடக்க. பணம் ஆட்கொல்லி! பாபச் சின்னம்! வாழ்வு மாயை! ஓர் வஞ்சக வலை! உலகு மாயை, அழியத்தக்கது, அழியாதது ஒன்று உண்டு, அது அங்கே! நிர்மலமான ஆகாயத்தை நோக்கு, நீசத்தனமிக்க உலகை நம்பாதே!! என்ற உபதேசம் பெற்றும் கொடுத்தும், கட்டற்று, கவலையற்று, காசு பணம் வேண்டும் என்ற அவசியமற்று, காலைக் கட்டிக்கொண்டு அழும் மனைவியும், காகூவெனக் கூவி அழும் குழந்தைகளும், கடன்பட்ட நெஞ்சமும் கொண்டிடாத காவிக் கோமான்கள்தானா கிடைத்தார்கள்! துளசி வீசுகிறாரே நந்தா, பகைவன் நுழையும் பாதையில்!!

சாதுக்களைக் கண்டதும் காலில் வீழ்ந்திட, கன்னத்தில் போட்டுக்கொள்ள, வரம் கேட்டிட, சமாராதனை நடத்திட, இன்றும் இங்கு நிரம்பப்பேர் உள்ளனர்— இல்லை என்று கூறிடவில்லை. அதிலும் வடக்கே உள்ள சாதுக்கள் ஒரு படை அளவு உள்ளனர்—படை வீரர் போன்ற கட்டுடலும் இருக்கிறது; பார்த்துமிருக்கிறேன்.

தம்பி! அரித்துவாரத்தில் பார்த்தேன், அழகிய கங்கைக்கரை ஓரம் முழுவதும், அரண்மனைகளோ என்று வியந்திடத்தக்கதான மடங்கள்-சாதுக்களுக்கு எத்தனை சாதுக்கள் எத்தனை நாட்களுக்கு, என்னென்ன கேட்டாலும் தந்திட, வழிபட்டிட, அங்கு ஏற்பாடுகளைச் செய்துவைத்துள்ளனர் சீமான்கள், சிற்றரசர்கள், வணிகக் கோமான்கள், வாழ்வுக்கலை வல்லவாகள்! மாலை வேளையில், இந்தச் சாதுக்கள், ஒரு கவலையுமற்று—

(இந்த உலகம்பற்றிய கவலை) உலவுகிறார்கள். ஒரு சமயம் அவர்களுக்கு ஏற்படக்கூடிய கவலை மேலுலகம் பற்றியதாக இருக்கலாம்-மேலுலகில் இங்கு உள்ளது போன்ற ஏற்பாடுகள் உண்டோ இல்லையோ என்ற கவலை.

கோதுமையும், நெய்யும், சர்க்கரையும், பருப்பும், பாலும் பழமும் கிடைக்கிறது ஒவ்வொரு வேளையும். பரமனைப்பற்றிய தியானத்தில் ஈடுபடுகிறார்கள். ஏன் முடியாது!! பசிப்புலி அடக்கப்பட்டதும், புண்ணியம் பற்றிய நினைப்பு சுரக்கிறது. சாதுக்கள்போல 'சம்சாரி கள்' இருக்க முடிகிறதா! பாலுக்குச் சர்க்கரை கூட அல்ல, கூழுக்கு உப்பு போதுமான அளவு இல்லையே என்ற கவலை குடையும்போது, சாதுவாக இருக்க முடிவ தில்லை, சாமான்யர்களால்—கோபம் தாபம், குமுறல் கொதிப்பு, பகை பயம், அடிமைத்தனம் அக்கிரம நினைப்பு எல்லாம் குடிபுகுந்து விடுகின்றன—போக்கிரியா கிறான், திருடனாகிறான், வெறியனாகிறான், வெகுண் டெழுகிறான், சாதுவாக இருக்க முடிவதில்லை. சாது வின் வாழ்க்கை நிம்மதியாக இருப்பதற்கான பொறுப்பை மற்றவர்கள் ஏற்றுக்கொள்வதால், சாது சாதுவாக இருந் திட முடிகிறது. வாழ்ந்திட வழி அமைத்துக் கொடுத்திட வேறு சிலர் பொறுப்பேற்றுக் கொள்வதனால், இவர்கள், வாழ்வு என்றால் என்ன? அது உண்மையா, மாயையா? இவ்வுலக வாழ்வு நித்தியமா அநித்யமா? என்பன பற்றிச் சிந்திக்கவும்—சிரவணம் செய்யவும் முடிகிறது.

இந்த நிலையிலேயும், சாதுக்கள் சாதுத்தன்மையை விட்டு வெகுதூரம் விலகி, காமக்குரோத மதமாச்சரியங் களால் ஆட்டுவிக்கப்படும் வெறித்தன்மை கொண்டு விடுவது பற்றிய செய்திகளும் அடிக்கடி வெளிவருகின்றன.

பெரியசாமிக்கு விஷம்கொடுத்த சின்னசாமி, பீடத் தைப் பெயர்த்தெடுத்த சாமி, பெண்ணைக் கடத்திச் சென்ற சாமி, மண்ணில் பொன்னை மறைத்த சாமி, மரக்கறி உணவை மறுத்த சாமி, கரியைப் பொன்னாய் ஆக்கும் சாமி, காளியை ஏவல் கொள்ளும் சாமி, காட்டு மாளிகை கட்டிடும் சாமி, கன்னியர் கலங்கிட நடந்திடும் சாமி, கோர்ட்டு வாசலில் இருந்திடும் சாமி, கொடுத்ததை மறைத்திடும் குட்டிச் சாமி, கிருமிக்கூடாய் ஆகிடும் சாமி என்று எத்தனை எத்தனையோ வகையினர் உளர்.

வடக்கே நடைபெறும் கும்பமேளாக்களின்போது, தம்பி! இந்தச் சாதுக்கூட்டம் கோலாகலமாகப் பவனி வருவதுண்டு. பல்லக்கில் ஏறிடும் சாமி, குதிரை ஏறிடும் சாமி, யானைமீது அம்பாரி அமைத்து அதிலே பவனி வந்திடும் சாமி, உடலை மறைத்திட உடை தேடாது, உள்ளது காண்க என உலவிடும் சாமி, முகாம் அமைத்து முழங்கிடும் சாமி, யாகம்வளர்த்திடும் பெரிய சாமி இவ்விதம் பலர் அரசோச்சுகின்றனர், அந்தக்கும்பமேளாக் களில். உடை அணியா உருவங்களைத் தெரிசிக்க, விழுந் தடித்துக்கொண்டு செல்லும் இலட்சக்கணக்கான பக்தர் களில் சிலர், இடிபட்டு மிதிபட்டுச் செத்தனர் என்றும் செய்தி வந்திருக்கிறது.

உள்ளதில் கெட்டது எதுவோ அது மட்டுமே உன் கண்களில் படுகிறது; உண்மைச் சாதுக்களே இல்லையோ என்று என்னைக் கேட்பர், தம்பி! நான் சொல்லக்கூடியது இதுவே. உண்மைச் சாதுக்கள் மிக மிகக் குறைவு, உடையார் சாதுக்களாக உள்ளோரே மிக அதிகம்; உண்மைச் சாதுவைக் கண்டறிவதும் கடினம் என்று குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் சென்ற கிழமைதான் பேசியிருக்கிறார்—திருத்தணியில் என்று நினைக்கிறேன்.

உண்மைச் சாதுவைக் கண்டுபிடிக்கிறோம் என்றே வைத்துக்கொள். அவர்கள், நந்தா கூறிடும் வேலை களையா மிக முக்கியமானது எனக் கருதுவர். ஜீவாத்மா வுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பின் தன்மை, மகிமை ஆகியவற்றிலே மனத்தைச் செலுத்திக்கொண்டு இருக்கும் சாதுக்களிடம் நந்தா, நியாய விலைக்கும் அநியாய விலைக்கும் உள்ள தாரதம்மியத்தைப் பற்றி யும், சந்தைக்கும் கள்ளச்சந்தைக்கும் உள்ள தொடர்பு பற்றியும் ஆராய்ந்தறிந்து நல்வழி காட்டுக! என்று கூறினால் என்சொல்வர்! 'பாலகா! உலக மாயை எனும் இருளில் சிக்கிச் சீரழிகிறாய்! சந்தை என்கிறாய் கள்ளச் சந்தைஎன்கிறாய்! பொருள் என்கிறாய் விலை என்கிறாய்! இந்த உலகமே சந்தை! கள்ளச் சந்தை! மாயச்சந்தை! பரம்பொருளன்றி மற்றவை பொருளே அல்ல! இதனை அறிந்திட நீ தரவேண்டிய விலை நிராசை! போ! போக போகாதிகளில் ஈடுபடும் சுபாவத்தை மாற்று! இந்திரியச் சேட்டைகளை அடக்கு! இகத்தை மற! பரத்தைத்தேடு! ஓம் தத்சத்!' என்று கூறுவரேயன்றி, ஒயிலூர் கடைத்தெரு

வில் ஒன்பதாம் நம்பர் கடையில் அறுபது மூட்டை சீனியை ஒளித்துவைத்திருக்கிறான் கங்காதரன் என்ற தகவலைச் சேகரித்துக்கொண்டு வந்து தருவார்களா!

உண்மைச் சாது இந்த உலக விவகாரத்தில் தன்னைச் சிக்கவைத்துக் கொள்ளமாட்டார்.

சிக்கவைத்துக்கொண்டு சீர்செய்வேன் என்று செப்பிடும் சாது உண்மைச் சாதுவாக இருந்திட இயலாது.

என்றாலும், குல்ஜாரிலால் நந்தா மெத்த நம்புகிறார், சாதுக்கள் படை திரண்டால் சகல கேடுகளும் ஒழிந்திடும் என்று அவ்வளவு நம்பிக்கை துளசியின் மகிமையில்! வீசுகிறார் பகைவன் நுழைந்திடும் பாதையில்.

தம்பி! உங்கள் அண்ணாதுரைக்குச் சாது சன்னியாசிகள் என்றாலே பிடிக்காது, அதனால் இதுபோலக் கூறுகிறான் என்பர் சிலர்.

நான் கூறியிருப்பதைவிட வேகமாக, வெளிப்படையாக, சாதுக்களைப் படைதிரட்டும் ஏற்பாட்டினைக் கண்டித்துச் சிந்தனையைத் தூண்டிச் செம்மைப்படுத்தத் தக்க சீரிய முறையில் இந்தக் கிழமை இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில், **நயனதாரா சாகால்** என்பார் ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார்.

திருமதி விஜயலட்சுமி பண்டிட் திருமகளார் ஒருவருக்கு நயனதாரா என்று பெயர்; கட்டுரையாளர் அவர்கள்தான் என்று எண்ணுகிறேன்.

துணிவும் தெளிவும் துள்ளுகிறது நயனதாராவின் கட்டுரையில்! இடித்துரைக்க ஏளனத்தையே கருவியாக்கிக் கொண்டுள்ளார். இலட்சியமணமும் கமழ்கிறது கட்டுரையில்; புத்துலகம் காணவேண்டும் என்ற துடிப்பு பளிச்சிடுகிறது.

> எந்த நவயுக உலகில் ஓரிடம் பெற நாம் போராடிக்கொண்டு வந்தோமோ, அந்த உலகு வேகமாக, வண்ணம் மிகக்கொண்டதாக மாறிக்கொண்டிருக்கிறது—ஜெட்விமான வேகத்தில் செல்கிறது. வேறெந்தக் காலத்தைக் காட்டிலும் நன்மை மிக அதிகமாக அறைகூவி அழைத்திடும் இந்தக் காலத்தில், உலக கிருகத்தில், விஞ்ஞானம் புரட்சியை— ஏற்படுத்தியபடி இருக்கிறது; இந்தச் சூழ்நிலைக்கு ஏற்றபடி ஆகிக்கொண்டு வருகின்றனர், எங்கெங்கும் உள்ள மக்கள்—ஆனால், நாம் அல்ல! நாம் மீண்டும், பழய கட்டைவண்டிக் காலம் போதுமென்ற நினைப்புக் கொண்டு, கர்நாடக யுகத்தை நோக்கிப் பயணம் செய்யத் தொடங்கிவிட்டோம்—பின்னோக்கி!! மூடு பனி விலகுகிறது தற்காலிகமாகத் தேசிய அரங்கிலே புதிய நட்சத்திரமாக, சாது வந்துள்ளார், காண்பீராக!!

துவக்கமே தம்பி! துணிவு துள்ளும்விதமாக அமைந்துவிடுகிறது.

> கட்டைவண்டிக் காலம்
> பின்னோக்கிப் பயணம்
> கர்நாடக யுகம்

என்று இடித்துரைக்கிறார், நயனதாரா. கடுமையான கோடைவெப்பத்தைத் தணித்திடும் பூங்காற்றுப் போல, ஒதியமரங்களுக்கு மத்தியில் ஓர் சந்தனத் தருபோல, ஓட்டை ஒடிசல்களுக்கு மத்தியில் கிடந்திடும் ஓர் நல் முத்துப் போல, பழமை, பண்டைப்பெருமை, பரதேசிகளின் பரிபாலனம் என்பனபற்றி எல்லாம் பெரிய இடத்துள்ளார் பேசிடும் இந்த நாட்களில், உலகம் விஞ்ஞானத்தின் உன்னதத் தன்மையினைத் துணைகொண்டு வேகமாக, முன்னேற்றப் பாதையிலே செல்கிறதே, உதவாக்கரைகளே பெற்றதையும் இழந்துவிடும் பேதைமைபோல, அடைந்துள்ள ஓரளவு முன்னேற்றத்தையும் இகழ்ந்துவிட்டுப் பின்னோக்கிச் செல்கிறீர்களே! கட்டை வண்டிக் காலத்தின்மீது மீண்டும் மோகமா? என்று கேட்கிறார். கோபம் பொத்துக்கொண்டுதான் வரும், பழமை விரும்பிகளுக்கு. அதிலும் இடித்துரைப்பது என்போன்றவன் எனில், எரிதழலாகுவர். ஆனால், கட்டுரையாளரோ, நானல்ல.

> பின்னோக்கி நடத்திடும் இந்தப் பயணத்தில் ஒரு கட்டம் சென்றிடுவோம்—நமது நிர்வாகத் துறைகளிலே சாதுக்கள் வேலைக்கு அமரும் கட்டம்!

நமது வெளிநாடுகள் குறித்த விவகாரத்துறையிலும்!! என்று கூறிக் கேலி செய்கிறார் நயன தாரா.

போகிற போக்கைப் பார்த்தால் இவ்விதந்தான் இருக்கிறது என்பதைச் சிலரேனும் உணர முடிகிறது. பற்றற்றவர்கள் சாதுக்கள், இவர்களைப் பரிபாலனத் துறையில் ஈடுபடுத்தினால், ஊழல், ஒழுங்கீனம், இலஞ்சம் போன்றவைகள் நெளியாது என்றும் எண்ணிடத் தோன்றும். ஊழலையும் ஒழுங்கீனத்தையும் இலஞ்சத்தையும் முறைகேட்டினையும் கண்டறிந்து ஒழித்திட வல்லவர்கள் சாதுக்களே என்ற எண்ணம், வளர வளர ஊழலைச் செய்திடுவோர் எவர்? சம்சாரிகள்! ஏன்? அவர்கள் ஆசைக்கு ஆட்பட்டவர்கள்! ஆசைக்கு ஆட்பட்டவர்கள் வேலைகளில் உள்ள மட்டும், ஊழல் இருக்கத்தான் செய்யும் எனவே, ஆசைகளைத் துறந்த சாதுக்களை, சர்க்கார் அதிகாரிகளாக்கிடுவோம்—ஊழல் ஏற்பட வழியே எழாது என்ற எண்ணம் உருவாகிடத்தான் செய்யும். எங்கும் எவரும் இதுபோல எண்ணிட மாட்டார்கள் என்றுரைப்பர், தம்பி! இதுபோல எண்ணியது மட்டுமல்ல, இதற்கொப்பான ஒரு ஏற்பாட்டையே மேற்கொண்டார் இங்கிலாந்து நாட்டில் கிராம்வெல் எனும் பட்டமற்ற மன்னன்—பாதுகாவலன்.

பொருளாசை கொண்டோர் புனிதப் பணியாற்றிட மாட்டார்கள்—புனிதப் பணியாற்றி வரும் பாதிரிமார்களைக் கொண்டே ஆட்சி முறை கண்டிடல் வேண்டும், அவர்களே அறநெறி அறிந்துரைப்பர், அப்போதுதான் அறநெறி வழுவாத நிலை ஆட்சியிலும் சமூகத்திலும் இருக்கும் என்று திடமாக நம்பிய கிராம்வெல், பாராளுமன்றத்தைத் திருத்தி அமைத்தார்-பாதிரிமார் பார்லிமெண்ட் என்றே பெயரிடப்பட்டது அதற்கு; வரலாறு.

எனவே, சாதுக்களைச் சர்க்கார் நடத்திட அழைப்பாரோ! என்று கட்டுரையாளர் கேலிக்காக இதுபோல் கூறுகிறாரே என்று ஐயம் கொள்ள வேண்டாம். தங்கு தடையின்றி, கேட்பார் மேய்ப்பாரின்றி, இந்தப் பின்னோக்கிச் செல்லும் பயணம் மேற்கொள்ளப்படுமானால், கட்டுரையாளர் குறிப்பிடும் கட்டம் பிறந்திடக்கூடும். கிராம்வெல் செய்தே பார்த்தார். நடந்தது என்னவெனில், ஆட்சி மன்றத்தில் அமர்ந்ததும், பற்றற்ற பாதிரிமார்கள் தத்தமது விருப்பு வெறுப்பினைக் காட்டிடவும் அதற்காக வாதிடவும், போரிடவும் முனைந்து, பாராளுமன்றத்தைப் படுகளமாக்கிவிட, கிராம்வெல் கலக்கமும் துக்கமும் கொண்டு, அந்தப் பார்லிமெண்டையே கலைத்துவிட்டு,

புனிதப் பணியாற்றிடப் பழையபடி ஆலயம் சென்றிடுக என்று அவர்கட்குக் கூறி அனுப்பிவிட்டார். உளவறியும் படை, போலீஸ் படை, கட்சித் தொண்டர் படை ஆகியவைகளால் சாதிக்கமுடியாத செயலைச் செய்திடச் சாதுக்கள் படையினால் முடியும் என்று நம்பிடும் நந்தா, அதே சாதுக்களால் மட்டுமே ஒழுங்கான, ஊழலற்ற ஆட்சி நடத்தமுடியும் என்ற நம்பிக்கையும் கொள்ள ஏன் தயங்கப்போகிறார்? அதனால்தான் கட்டுரையாளர் கூறினார், இனி, சர்க்காரின் நிர்வாக அலுவலகங்களில், —வெளிவிவகாரத் துறையிலும்-சாதுக்களே நியமிக்கப்படும் காலக் கட்டம் பிறந்திடக்கூடும் என்று.

> மாஸ்கோவிலும், வாஷிங்டனிலும், ஆசியப் பகுதியில் உள்ள சில முக்கியமான தூதராலயங்களிலும், சாதுக்களே கொலுவிருக்கக்கூடும்—எதிர்காலத்தில்—பழமையை நோக்கி நடந்திடும் எதிர்காலத்தில்!

என்று கூறியிருக்கிறார், கட்டுரையாளர்.

முற்போக்காளர்கள், இதனை ஏளன மொழி என்பர்; ஆட்சிப் பொறுப்பில் உள்ளோர் இதனை எரிச்சல் மூட்டும் பேச்சு என்பர்; கேலி செய்து அறிவு புகட்டும் நேர்த்தியான முறையிலே அமைந்த பேச்சு இது என்று நான் கருதுகிறேன்.

சாதுக்கள் இவ்விதம் சகல துறைகளையும் நிர்வகிக்கக் கிளம்பிடும் போக்கை வகுத்திட முற்படுவது பிற்போக்குத்தனம் என்று கண்டித்திடும் இக்கட்டுரையாளர், இன்று சகல துறைகளிலும் நடைபெற்றுக் கொண்டுள்ள நிர்வாக முறை சிறந்ததாக இருக்கிறது என்று கூறவில்லை—அதிலே காணப்படும் தவற்றையும் கண்டிக்கிறார்—கேலி மொழியால்.

> சாதுக்களை வெளிநாடுகளில் தூதராலயங்களில் நியமிப்பது நல்லதுகூட

என்கிறார். இதென்ன, சாதுக்களை நியமிக்கலாம் என்று பரிந்துரைப்பதுபோல் தோற்றமளிக்கிறதே இந்தப் பேச்சு என்று எண்ணி ஆயாசப்படுவீர்கள். ஆனால், இன்றுள்ள நிலையைக் கேலி செய்யவே இது போல் கூறுகிறார்.

இன்று தூதராலய அதிபர் தூங்கி விழுகிறாரல்லவா, தாம் அளித்திடும் விருந்துகளின்போது, அதனைவிட மேலாக இருக்கு மல்லவா, சாது, அதிபர் ஆனால்! ஆசியப் பகுதியிலே வேலை பார்க்கச் சொன்னால் மறுத்துவிடுகிறார் அல்லவா, தூதராலய அலுவலர்; மனைவி, பாரிஸ் அல்லது ரோம் நகரில் வாழ்ந்திடவே விரும்புகிறார் என்ற காரணத்துக்காக, அதைவிட மேல்தான், சாது தூதராலய அலுவலராகி விடுவது.

சாதுவுக்குக் குடும்பம் இல்லை, எனவே, சுக வாழ்வுபற்றிய நினைவு எழக் காரணமில்லை.

விருந்தளிக்கமாட்டார்; வாழ்க்கைச் சுவையால் வசீகரிக்கப்பட்டு வீழ்ந்திடமாட்டார். ஏனெனில், வாழ்வே மாயம்! என்பதல்லவா, சாதுவின் சித்தாந்தம்!!

கடுங்குளிர் தாக்கிடும் இடங்களில் மட்டுமே சாது அதற்குத்தக்க உடை அணிந்திடுவார்; பருவமாற்றத்தின் விளைவுகளையும் கட்டுப்படுத்திவிடுவாரேல், உடைச் செலவும் இல்லை! சர்க்கார் பணம் விரயமாகாது.

நிர்வாகத் துறையில் சாது இடம்பெற்று விடுவாரானால், மகத்தான மாறுதல் ஏற்படுத்தி விடுவார்—நாட்டவர் அனைவரும் சமாதி நிலை அடைவர்!

விழித்தெழுந்திடும்போது, செத்துக்கிடப்போம், அல்லது நாம் சமாதி நிலையில் இருந்த போது நாட்டைப் பிடித்துக்கொண்ட வேற்றவரின் காலின் கீழ் சிக்கிக்கிடப்போம். இருப்பினும், சாது மனப்போக்கின் காரணமாக இதனைப் பொருட்படுத்த மாட்டோம்; நடப்பது நிசமல்ல, நமக்கல்ல என்று எண்ணிக் கொள்வோம்.

இவ்விதமாகத் தம்பி! இன்றுள்ள நிலையையும், எதை நோக்கி நாம் இழுத்துச் செல்லப்படுகிறோமோ அந்த நிலையையும், மாறிமாறித் தாக்குகிறார்; முரட்டுத்தனமான தாக்குதல் அல்ல; மிக நேர்த்தியான முறையில்; உயர்தரமான நையாண்டி நடையில்.

உணவுப் பிரச்சினை குறித்துக் காங்கிரஸ் மேற்கொள்ளும் நடவடிக்கை சரியானதாக, பலன்தரத்தக்கதாக இல்லை என்ற கருத்தினையும் கட்டுரையாளர் விளக்கிவிட்டு, அதன் தொடர்பாக, சாதுக்கள் பற்றிய நையாண்டியை மேலும் தருகிறார்.

உணவு நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்தநேரம், சாதுக்களை நாம் நாடிடப் பொருத்தமான நேரமே! உணவு நெருக்கடி போக்கிட உற்பத்தியைப் பெருக்குவது, இறக்குமதி செய்வதுகூடத் தேவைப்படாதல்லவா! (உபவாசம் இருந்திட) உணவு தேவை இல்லை என்று கூறிடத்தக்க நினைப்பு அருளுவர் சாதுக்கள்!!

சாதுக்களை நாடி அவர் துணையுடன் துரைத்தனம் நடத்த முனைந்து விட்டோமானால் உலகில் நமது நாட்டுக்குத் தரப்பட்டுள்ள இடம் என்ன என்பது பற்றியோ, காமன் வெல்த் மாநாட்டிலே நாம் பின் வரிசையில் தள்ளப்பட்டுக்கிடந்திட நேரிட்டது பற்றியோ, உலக நாடுகளிலே நமக்கு உற்ற நண்பர்களாக அதிகம்பேர் இல்லை என்பது பற்றியோ ஆப்பிரிக்க பூபாகத்தில் சீனா பாசவலை வீசுவது பற்றியோ, காஷ்மீர் குறித்துத் தான் கொண்டுள்ள போக்கே நியாயமானது என உலகினை நம்பவைத்திடப் பாகிஸ்தான் எல்லா விதமான முயற்சிகளிலும் ஈடுபடுவது பற்றியோ நாம் ஏன் கவலை கொள்ள வேண்டும்! உலகம் உண்மை என்று எண்ணுபவர்கள் இவைபற்றி எண்ணிக் கவலைப் படட்டும். (சாதுக்களால் நடத்திச் செல்லப்படும் நிலைபெற்ற) நமக்கு உலகம் வெறும் புகை! மாயம்! உலகை மறந்திடுவோம். உலக விஷயம் குறித்து எண்ணிக் காலத்தை வீணாக்குவானேன்!!

இவ்விதம் கிண்டல் செய்கிறார் நயனதாரா! சாதுக்கள் ஒரு நாட்டின் அரசினை நடத்திச்செல்ல இடமளித்தால் மக்கள் என்ன கதி பெறுவர் என்பதனை எடுத்துரைக்கிறார்.

உலகம் மாயை, வாழ்வு அநித்யம் என்ற நம்பிக்கையும், உண்டு உலவிட வேண்டும் என்று எண்ணாமல் உபதேசம் கேட்டுச் சமாதிநிலை அடைய வேண்டும் என்ற நோக்கமும் கொண்ட சமூகமாக்கப்பட்டு விடுவோம், சாதுக்களைத் துரைத்தனம் நடத்தச் சொன்னால்

என்பதனை எடுத்துரைக்கிறார். பிறகு சாதுக்கள் உண்மையாகவே நாட்டுக்கும் சமூகத்துக்கும் நல்ல தொண்டாற்ற விரும்பினால், அதற்கு ஏற்ற இடம், நிர்வாகத்துறை அல்ல என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார். என்னென்ன செய்யலாம் இந்தச் சாதுக்கள் என்பது பற்றியும் கூறுகிறார்.

> இந்து மார்க்கத்தில் மூண்டுவிட்டுள்ள அழுக்குக் குட்டைகளை ஒழித்திடப் புனிதப் போர் தொடுக்கட்டும்,
>
> திருக்கோயில்களிலே ஊழல் ஆட்சி நடத்தும் பூஜாரிகளின் புரட்டுகளை அம்பலப் படுத்தட்டும்.
>
> மார்க்கத்தைத் தவறான வழியிலே நடத்திச் செல்வதை, வறுமை, அறியாமை ஆகியவற்றின் பிடியிலே சிக்கியுள்ள மக்களைச் சுரண்டிடும் கொடுமையைக் கொதித்தெழுந்து எதிர்த்திடட்டும்,
>
> தீண்டாமையை எதிர்த்துப்போரிடட்டும்!

தம்பி! இந்த அளவுக்குத் துணிந்து நீயோ நானோ கூறினால், எத்தனை ஆத்திரம் பீறிட்டுக்கொண்டுவரும், பழமை விரும்பிகளுக்கு, எண்ணிப்பார்! மதத்திலே ஊழல்கள் நெளிகின்றன, போக்குவார் இல்லை; சுரண்டல் நடக்கிறது, தடுப்பார் இல்லை; மூடத்தனம் மூடுபனியாகக் கிடக்கிறது, அறிவு ஒளி அளித்திடுவார் இல்லை. சாதுக்கள் இந்த நிலையை மாற்றிடப் புனிதப் போர் புரிந்திடவேண்டும்; அதற்கு ஏற்றவர்கள் அவர்கள் என்ற கருத்துடன் கட்டுரையாளர் எழுதுகிறார்.

> மதத்துறையைவிட்டு வெளியே வேறு துறைகளிலும் சாதுக்கள் ஈடுபட விருப்பம் கொண்டால், நமது நகரங்களிலே உள்ள குப்பை, கூளம் அழுக்கு அனாசாரம் ஆகியவற்றைப் போக்கிடும் பணியினை மேற்கொள்ளட்டும்

என்கிறார். சாதுக்களுக்கும் கோபம்வரும், மார்க்கக் காவலர்க்கும் மன உளைச்சல் ஏற்படும்: என்ன அக்கிரமம் குப்பை கூளங்களை அகற்றிடும் வேலையையா செய்யச் சொல்கிறீர், மன அழுக்கைப் போக்கிட அவதரித்துள்ள மகான்களை என்று வெகுண்டுரைப்பர், என்ன செய்வது,

கட்டுரையாளர் இவர்களின் கடும் கோபத்தைப் பொருட்படுத்துபவராகத் தெரியவில்லை, தயக்கம் தடுமாற்றமின்றி, அச்சம் கூச்சமின்றிக் கூறுகிறார்.

> வீதிகளிலே குவிந்து கிடக்கும் குப்பைகளை அப்புறப்படுத்த,
>
> சுவர்களிலே ஒட்டப்பட்டுக் கிடக்கும் ஆபாசச் சுவரொட்டிகளைக் கிழித்தெறிய,
>
> வீதியிலே திரிந்துகொண்டிருக்கும் நாய்களை விரட்ட,
>
> ஊருக்கு நல்ல குடி தண்ணீர் கிடைத்திடும் வழி தேட,

இந்தப் பணிகளில் ஈடுபட முன் வரட்டும் சாதுக்கள் என்று கூறுகிறார்.

நாடும் சமூகமும் நல்ல நிலைபெற, எதிர்காலம் ஒளிமிக்கதாக இருந்திட, விஞ்ஞானத்தின் துணைகொண்டு, இன்னலைக்கண்டு அஞ்சாத மனப்பான்மையுடன் பணியாற்றி முன்னேற்றம் காணவேண்டுமேயன்றி, சாது சன்னியாசிக் கூட்டத்திடம் கைகட்டி வாய்பொத்தி நின்று, காட்டுமிராண்டிக் காலத்தை நோக்கிப் பின்னோக்கிச் சென்றிடக் கூடாது; நேரு பண்டிதர் நமக்கு அளித்துச் சென்ற அறிவுரை அதுவே; அவர் காட்டிய வழி நடப்போம்; மக்கள் காண அவர் உரைத்த இலட்சியங்களைக் காட்டுவோம். முன்னேற்றப் பாதையிலே நாம் நடைபோட நமக்கெல்லாம் துணிவு அளித்த நேருவின் உருவத்தை மக்கள் காணட்டும், கர்நாடகக் காலத்துக்கு நம்மைத் தள்ளிச் செல்லும் சாதுக்களின் உருவத்தை அல்ல—என்று மிக உருக்கமாகக் கூறுகிறார். நந்தாவின் உள்ளம் நொந்துபடும்—சாதுக்கள் கோபித்துக் கொள்வர் என்றாலும் உள்ளத்தில் பட்டதை உரைத்திடுவேன் என்கிறார் கட்டுரையாளர்.

தம்பி! சாது சன்யாசிகளைப் படைதிரட்டி, நாட்டிலே நெளியும் கேடுகளை ஒழித்திடப் போரிடும்படி நந்தா கூறுவது கேட்டு, முற்போக்காளர் அனைவரும் நயனதாரா வெளியிட்டது போன்ற கருத்தினையே பெறுவர், கவைக்குதவாத திட்டமாக இருக்கிறதே உள்

துறை அமைச்சர் தீட்டியது என்று எண்ணிக் கவலை கொள்வர்.

தம்பி! எத்தகைய படையிடம் எத்தகைய போர் வகையைத் தந்திட வேண்டும் என்றறிந்து அவ்விதம் செய்தால் மட்டுமே, வெற்றி பெற்றிட முடியும் என்று கூறினேன்—நந்தா திரட்டிடும் சாதுக்கள் படை ஊழல் இலஞ்ச ஒழிப்புக்கு ஏற்றது அல்ல என்பதனை விளக்கிக் காட்டியுள்ளார் நயனதாரா.

சிற்சில காலத்தில் சிற்சிலருக்கு, கேடு களைந்திட வேண்டும் என்பதிலே ஆர்வம் எழுகிறது, செயல்பட முனைகின்றனர். ஆனால், அவர்கள் மேற்கொள்ளும் முறையும், திரட்டிடும் படையும் பயனற்றதாகி விடுவதால் வெற்றி கிடைப்பதில்லை.

இத்தாலி நாட்டிலே ஓர் காலத்தில், சமூகம் முழுவதும் கேடுகள் மிகுந்திருந்தன. ஒழுக்கம் அழிக்கப்பட்டுக் கிடந்தது. இதனைக் கண்டார், வேதனை மிகக் கொண்டார், இந்த நிலையினை மாற்றியாக வேண்டும் எனத் துடித்தார், செயலில் ஈடுபட்டார் ஒரு சிலர்.

அவருடைய ஆர்வம் போற்றிடத் தக்கது—ஐயமில்லை.

அவருடைய அறிவுரையை மறுப்பார் எவரும் இருந்திட முடியாது. அருளாளர் என்றும் அவரைக் கொண்டாடினர். பெயர் **சவனரோலா.**

பொய்யும் புரட்டும் ஒழிந்திட, அநீதியும் அக்கிரமமும் அழிந்துபட, புனிதப்போர் தொடுத்தார் சவனரோலா! படை திரட்டினார் அப்புனிதப் போருக்காக.

படை எது தெரியுமா? தம்பி! சன்மார்க்கத்தை மதித்திடும் ஆர்வமிக்க தொண்டர் படை. போர் முறை?

கருப்புடை அணிந்து வலம் வருவர், புனிதப்போர் நடாத்திடும் படையினர் நகரத் தெருக்களில்—வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு, தலைமயிரைப் பிய்த்துக் கொண்டு கதறியபடி.

> தர்மம் அழிகிறதே தடுப்பார் இல்லையோ!
> அக்ரமம் நெளிகிறதே அழிப்பார் இல்லையோ!
> நீதி சாய்கிறதே, கேட்பார் இல்லையோ!

என்றெல்லாம் புலம்பியபடி வலம் வருவராம்.

வெற்றி கிட்டியதா என்றுதானே கேட்க விரும்புகிறாய் தம்பி! எப்படிக் கிட்டும்! அக்கிரமக்காரன்தான் கண்ணீர் கண்டு கலங்கமாட்டானே! இதயம் இருந்தால் தானே, இளக! உள்ளம் உறங்காதிருந்தால்தானே, உருக!! சவனரோலாவின் படை, பார்ப்போருக்கு இரக்க உணர்ச்சியை மட்டும் தந்திட உதவிற்று. சமூகக் கேடுகள் ஒழிந்துபட உதவவில்லை.

நந்தா உருகுகிறார், உள்ளம் துடிக்கிறது, ஊழல் மலிந்து கிடப்பது கண்டு; ஆனால், அதனை ஒழித்திட அவர் மேற்கொள்ளும் முறை, எனக்குத் தம்பி! துளசியைப் பகைவன் நுழையும் வழியிலே வீசிவைத்த மன்னனையும், மாபாவிகளைத் திருத்த மாரடித் தழுதிடும் படையைத் திரட்டிய சவனரோலாவையுந்தான் நினைவிற்குக் கொண்டு வருகிறது. நான் கூற எண்ணிய கருத்துக்களை நயனதாரா என்பவர், எனக்கு ஏற்படக்கூடியதைவிட அதிகத் துணிவுடனும் தெளிவுடனும் எடுத்துரைத்தார்—நான் அதனை எடுத்துரைத்தேன்.

சாதுக்களை, தம்பி! நந்தா மனிதப் பிறவியிலிருந்து மாறுபட்டவர்கள் என்று எண்ணுகிறாரோ, அல்லது மேம்பட்டவர்கள் என்று கருதுகிறாரோ எனக்குத் தெரியவில்லை.

சாதுக்களின் இயல்பும் நடவடிக்கையும், நிலையும் நினைப்பும் எப்படி உளது என்பதைக் கண்டறிந்து உண்மையை உணர்ந்திடத்தக்க விதமாக, நந்தாவுக்கு சாதுக் கூட்டத்திடம் எத்தனை எத்தனை ஆண்டுகளாக நெருங்கிய நேசமிகு தொடர்பு உளதோ அதனையும் நானறியேன்.

ஆனால் ஆண்டு பல, சாது சன்னியாசிகளிடம் நெருங்கிய தொடர்புகொண்டு, தூய்மையைத் தேடிய, ஒருவர்—சாதுக்கள் குறித்துக் கண்டறிந்து கூறினது பற்றி முன்னம் நான் படித்திருக்கிறேன்.

சாது சன்னியாசிகள் என்றாலே கட்டோடு பிடிக்காதவரின் கருத்து அல்ல.

மதம் பொய், பூஜாரிகள் புரட்டர்கள் என்று எண்ணிடும் வழி தவறியவர்களின் வார்த்தை அல்ல. சீலம் பெறவேண்டும், அதனைப் பெற்றிட ஏற்ற இடம் சாது

சன்யாசிகளின் சன்மார்க்கக் கூடங்களே என்று ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு, அவர்களிடம் பயபக்தியுடன் நடந்துகொண்டு வந்தவரின், கண்டுபிடிப்பு, நான் குறிப்பிடுவது. குப்பை கூளங்களைக் கிளறி இந்த நாட்டு மதத்தை இழிவுபடுத்த வேண்டும் புனிதத் தன்மையைப் பாழாக்க வேண்டும் என்ற கெடுமதி கொண்டவரின் கலகப் பேச்சல்ல—இந்து மார்க்கத்தைத் தழுவிக்கொண்டு எல்லையிலாப் பரம்பொருளைக் கண்டிட ஏங்கித் தவித்திட்ட ஓர் அம்மையாரின் மனக் குமுறல் நான் குறிப்பிடுவது. அமெரிக்க நாட்டிலிருந்து இங்கு வந்த மேயோ அல்ல—பிரிட்டிஷ் நாட்டிலிருந்து இங்கு வந்து, இந்த நாட்டைத் தாயகமாக்கிக் கொண்டு, பேரையும் வாழ்க்கை முறையையும் மாற்றிக் கொண்ட ஓர் மாதரசியின் கண்டன உரை. போன மாதக் கப்பலில் வந்து இறங்கிப் பத்து நாள் நாட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு, சீமை திரும்பிச் சென்று அரைகுறை அறிவினைக் காட்டிக் கொள்ளும் அவசரப் புத்திக்காரரின் அகம்பாவப் பேச்சு அல்ல. **மீராபென்** என்று தன் பெயரை மாற்றிக்கொண்டு, 'இந்தியக் கோலத்தை'ப் பெற்றுக்கொண்டு, மகாத்மா காந்தியின் 'சிஷ்யை' ஆகி, அவருடைய ஆசிரமத்தில் இடம்பெற்று, 'ஆத்ம சக்தி'யின் அருமையினை உணர்ந்து, அதற்கேற்றபடி தமது வாழ்க்கையினை ஒழுங்குபடுத்திக் கொண்ட உத்தமி என்று காங்கிரசின் பெருந்தலைவர்கள் கொண்டாடி வந்த அம்மையாரின் கொதித்த உள்ளத்தில் இருந்து கிளம்பிய சொற்கள். சாது சன்னியாசிகளிடம் சர்வேசனைக் கண்டறியும் 'பரம இரகசியம்' இருக்கிறது, அவர்களின் உபதேசம் கேட்டு உயர்ந்திடலாம் என்று மீராபென், சாதுக்களைக் கண்டு வழிபடலானார். திருத்தலங்கள் பலவற்றிலே இருந்து வந்த சாதுக்களைத் தரிசித்தார்—ஜென்ம சாபல்யம் ஆகவேண்டும் என்பதற்காக. ஆனால் என்ன கண்டறிந்து கொண்டார்? அவரே கூறட்டும், தம்பி!

"1947ம் ஆண்டிலிருந்து 1950ம் ஆண்டுவரை, **ரிஷிகேசத்**துக்கு அருகிலுள்ள **பசுலோக்** எனும் இடத்தில் இருந்து வந்தபோது, சாதுக்கள் பிரச்சினையிலே உள்ள அசங்கியம் அவ்வளவையும் கண்டறிய வேண்டி வந்தது.

என் காதுக்கு எட்டிய விஷயங்களைக் கேட்டு நான் திடுக்கிடலானேன். தீர விசாரித்தறிவது என்

கடமை என்று உணர்ந்தேன். நான் அதுபற்றி விசாரிக்க விசாரிக்க மேலும் மேலும் அதிகமான அக்கிரமம், கொடுமைகள் நெளிவதைக் கண்டேன். சூதாட்டம், குடி, கூத்தி, கொலை இவைகளிலே மூழ்கிக்கிடந்தனர் சாதுக்கள். புனிதவான்களின் தலம் என்று மக்களால் நம்பப்படும் **ரிஷிகேஸ்** அரக்கர்களின் இருப்பிடம் என்பதை அறிந்து கொண்டேன்.

தம்பி! சாதுக்களைப்பற்றி, சாந்தமுனிவர் என்று சான்றோர் கொண்டாடிய காந்தியாரிடம் சிஷ்யையாக இருந்த மீராபென் கூறியது இது. பத்திரிகைகளில் அறிக்கையே வெளிவந்தது. இந்துஸ்தான் டைம்ஸ் இதழ் இது குறித்து எழுதிற்று, மீராபென் கூறுவது போலவே நிலைமை இருக்கிறது என்று. அந்த இதழின் ஆசிரியர் மகாத்மாவின் மைந்தர்—தேவதாஸ் காந்தி.

பூலோக மாயையிலிருந்து விடுபட்டு, சாலோக சாமீப சாயுச்யப் பதவி பெற்றிட, அநித்ய வாழ்வை அகற்றிக் கொண்டு நித்திய வாழ்வு பெற, நிலையில்லா இன்பத்தை உதறிவிட்டுப்பேரின்பம் பெற, மருள் மூட்டிடும் பொருளை எறிந்துவிட்டுப் பரம்பொருளைக் கண்டிட வழி கூறிடும் மகான்கள், காவி கட்டிய இந்தச் சாதுக்கள் என்று நம்பிச் சென்றார் மீராபென் அம்மையார்; சாதுக்களின் தலைமைப் பீடமோ என்று எவரும் எண்ணிடத்தக்க ரிஷிகேசத்துக்கு, அங்கு அம்மையார் கண்டது,

சூதாட்டம்
கற்பைச் சூறையாடல்
கொலை
குடிவெறி

தம்பி! ஆண்டு பலவற்றுக்கு முன்பு நான் எழுதிய 'வேலைக்காரி'யில் கொலைக் குற்றத்திலிருந்து தப்பித்துக் கொள்ளக் கொடியவன் ஒருவன் சாது வேடமிட்டுக் கொண்டு ஆசிரமம் நடத்தி அங்கு அழகிகளை மலராகக் கொண்டு காமவேளுக்குப் பூஜை செய்து வந்தான்; அவனை உண்மைச் சாது என நம்பிக்கிடந்த ஒரு வாலிபன், யோகியாக வேடமணிந்து கிடந்தவன் போகி என்பதைக் கண்டறிந்து குமுறி, கொதித்தெழுந்து, கண்டனச் சொற்களை வீசினான் என்று எழுதியபோது, எத்தனை

எத்தனை கண்டனம் என்மீது! எத்துணை எரிச்சல் கொண்டனர் பழமை விரும்பிகள். மீராபென் கூறிடும் நிலைமைக்கு என்ன பதில் கூறுவர்!

> பத்து ஆண்டுகள் பொறுத்துப் பார்த்தேன். சாதுக்கள் உலகம் தன்னைத்தானே திருத்திக் கொள்ளும் என்று, அதற்கான நேர்மைமிக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்த்துக் கிடந்தேன்.
>
> ஆண்டு பல கழித்து நான் ரிஷிகேஸ் செல்கிறேன். காண்பது என்ன? அவ்விடம் முன்பு போலவே பாபக்கூடமாக இருந்திடக் கண்டேன். பதறிப் போனேன். காவி உடையைக் காணவே சகிக்கவில்லை.

சாதுக்களின் 'கோட்டம்' எத்துணை தீமைகளின் பிறப்பிடமாக இருப்பிடமாக இருந்து வருகிறது என்பதனை எடுத்துக்காட்டியதுடன் விடவில்லை மீராபென்; இத்தகைய சாதுக்களை அரசு ஆதரிப்பது அக்கிரமம் என்பதையும் கூறினார்.

> புனித ஸ்தலங்கள் என்பவைகளிலே புனிதவான்கள் என்று உலவிக்கொண்டுள்ள சாதுக்களைத் திருத்தி நல்வழிப்படுத்திட வேண்டிய அவசரப் பிரச்சினையைக் கவனியாமல், சர்க்கார் இந்தச் சாதுக்களை உற்சாகப்படுத்தி ஆதரவு காட்டுவது தவறு என்பது என் கருத்து.

இந்தக் கண்டனத்துக்குப் பிறகேனும் நிலைமை திருந்தியதா என்றால், இல்லை. இதற்குப் பிறகும் கும்பமேளாக்களிலே உடையற்று உலா வருகிறார்கள் இந்தச் சாதுக்கள். அவர்களுக்குள்ளே அமளி மூள்கிறது! அருவருக்கத்தக்க தீயசெயல்களில் ஈடுபட்டனர் என்று சிலர் பிடிபடுகின்றனர்; தண்டனை பெறுகின்றனர். மற்றவர்களோ மகேசன் அருளால் நாம் பிடிபடவில்லை! என்று எண்ணி, பூஜா மாடத்தில் கோலாகல வாழ்வு நடாத்தியபடி உள்ளனர்.

ஒழுக்கக் கேட்டினை ஒழித்திடச் சாதுக்களைப் படை திரட்டி அனுப்புவதற்கு முன்பு நந்தா, சாதுக்களிடம் நெளிந்திடும் ஒழுக்கக் கேட்டினைப் போக்கிட வழி என்ன

கண்டார், வெற்றி எந்த அளவு பெற்றார்! கரிக்கட்டையைக் கொண்டு உடலழுக்கைப் போக்கிட முனைகின்றாரே!! முறையா?

> பாதையிலே காவி உடையினன் வரக் கண்டால், புரட்டன் வருகிறான் என்று மக்கள் உடனடியாக உணர்ந்து உரைக்கின்றனர். கண்மூடித்தனமாகச் சாதுக்களை வழிபட்டு வந்த, சாமான்யர்களுக்குக் கூட. சாதுக்கள் பற்றிச் சந்தேகங்கள் எழும்பிவிட்டன.

என்று எழுதுகிறார் மீராபென்; நந்தா மட்டும் துளியும் சந்தேகப்படவில்லை, சஞ்சலப்படவில்லை, சாதுக்கள் படை திரட்டிப் புனிதப் போர் நடத்தி வெற்றி காணலாம் என்று எண்ணுகிறார்!

இந்தப் படை கொண்டு எந்தப் புனிதத்தைக் காண்பாரோ நானறியேன்; ஒன்று மட்டும் புரிகிறது தம்பி! நந்தா உலவிடும் காங்கிரஸ் வட்டாரத்திலேயே, நகைத்துப் பேசிடும் விஷயமாகிவிட்டது இவர் சாதுக்களைப் படை திரட்டிடும் செயல்.

என்றாலும் அவர் அமைச்சர்-படை அமைக்கிறார்.

துளசியை வீசினானாமே மன்னன்! தடுத்திட முடிந்ததா, கேட்டிடும் துணிவு பிறந்ததா!

எனவேதான், தம்பி! நந்தாவின் இந்த முயற்சியைத் துணிவுடன் கண்டித்து எழுதிய நயனதாராவின் கட்டுரையைக் கண்டு, வியந்து பாராட்டினேன்—உன்னிடமும் கூறினேன்,

அண்ணன்,



13-9-'64

காஞ்சிக் கடிதம்: 9

பொற்காலம் காண...!

தெற்கு முனையிலே ஏற்பட்ட பெருவிபத்து

எடுத்துரைக்கும் எதனையும் மதித்திட மறுக்கும்போக்கு

என் தம்பி மணம் பரப்பிடும் மலர்

இந்தியா முதலாளிகளின் முகாம்

கண்டு கருத்தறிதல் கடினம்; எனினும் தேவை

குப்பை கூளம் பற்றிய ஜான் மேஸ்பீல்டின் கவிதை

தம்பி,

தமிழக மக்கள் தனிச் சிறப்பளித்துக் கொண்டாடி மகிழ்வுபெறும் திருநாள், பொங்கற் புதுநாள். எங்கிருந்தோ ஓர் புத்தெழில், இந்த விழாவன்று அரசோச்ச வந்திடும் விந்தை, சிந்தைக்கு இனிப்பளிக்கக் காண்கின்றோம். இன்னல் மிகுந்த வாழ்வில் பின்னிக்கிடந் திடும் நிலையினிலுள்ள மக்களையும், இன்றோர்நாள், கன்னல் கண்டு பேசிட, செந்நெல் குவிந்திருக்க, செவ் வாழை அருகிருக்க, உழைப்பின் பயனாக உருவான பண்டமெலாம் நிறைந்திருக்க, மாடுகன்றுகளும் மேனி மினுக்குடனே, பொங்கிடுவது நாங்கள் தந்திடும் பாலன்றோ எனக் கேட்பதுபோல் உலவிவர, இந்நாள் இதயம் பாடிடும் நாள்! இஞ்சியும் மஞ்சளும் இயற்கை தந்த அணிகலன் என்பதனை உணரும் நன்னாள்

என்றெண்ணி, மகிழ்வுதனைப் பெற்றுத்திகழ்தல் இயற்கை; பொருத்தமுங்கூட.

நிறைவாழ்வு, கனிச்சுவை போன்றுளது: அதனை நித்தநித்தம் பெற்றிடும் வாய்ப்புக் கிடைக்கப் பெறா தோரும், இன்றோர்நாள், எழில் மாளிகைதனை எட்டிப் பார்த்துக் களிப்படையும் 'இல்லாதான்' போல, இன்ன விதமெல்லாம் இருந்திட்டால், வாழ்வு சிறந்திடும், பயன் மிகுந்திடும், நாடு பொலிவு பெறும், வையகம் கண்டு பெருமைப்படும் என்று எவரும் எண்ணி மகிழத்தக்க இன்பநாள்.

இந்நாளில், தமிழ் மரபறிந்த எவரும், அறிதுயிலி லிருந்தபடி அண்டந்தனைக் காக்கும் அரி தங்கும் வைகுந்தமும், ஆடுவதில் வல்லவர் யார்! அறிந்திடுவோம் வந்திடு! என்று உமைதனை அழைத்து, மானாட மழுவாட முக்திக்கு வழிதேடும் பக்தர்கள் மனமாட ஆடிடும் சிவனாரின் கைலையும், இவளழகா அவளழகா? எவள் இன்று எம்முனிவன் தவம் கலைக்க? என்று தேவர் பேசிப் பொழுதோட்டும் இந்திரபுரியும் பிறவும்பற்றிப் பேசிடுவது மில்லை, எண்ணமும் கொள்வதில்லை.

தாள ஒலி அல்ல, தையலரின் சிலம்பு இசைக்கும் ஒலி தன்னோடு போட்டியிட்டு, கட்டழகி பெற்றெடுத்த இன்ப வடிவத்தை எடுத்தணைத்து, முத்தமிடும் இளஞன் எழுப்பிவிடும் இச்சொலிக்கும் போட்டி எழ, கண்டு கருத்தறிந்து. பண்டு நடந்ததனை எண்ணி எண்ணிப் பாட்டன் சிரித்திட, இடையே விக்கல் இருமல் கிளப்பி விடும் ஒலியும், இன்னோரன்ன ஒலியே, இசையாகிடக் காண்கின்றோம் இத்திருநாளில்.

இந்த யுகந்தினிலே, இந்தத் தேசந்தன்னில், இன்ன குலத்தினிலே அவதரித்த மன்னவனும், அவனைக் கெடுக்க வந்த அசுரனும் போரிட்டபோது, மன்னவன் முற் பிறப்பில் மாதவம் செய்தான் எனவே அன்னவனை ரட்சித்து அசுரனைக் கொன்றிடுதல் முறை என்று, திருமாலும் 'சக்கரத்தை' அனுப்பிவைக்க, வந்தேன்! வந்தேன்! என்று துந்துபி என முழக்கி, வந்ததுகாண் திகிரி, அழிந்தான் அசுரன்; அந்தநாள், இந்நாள்; பண்டிகைநாள்! இந்நாளில், பாகும் பருப்பும் பாலினிற் பெய்து பக்குவமாய்ச் சமைத்து, சக்கர வடிவமாக்கி,

உண்டு உருசிபெறுவதுடன் உத்தமர்க்குத் 'தானமாக'த் தருவோர்கள் அடுத்த பிறவியிலே அரசபோகம் பெறுவார்கள். அத்திரி அருளியது அதிகிரந்தமொன்று, அதிலிருந்து பிரித்தெழுதி அளித்திட்டார் மாமுனிவர், அவர் வழியில் வந்தவரே இன்று புராணம் படிப்பவரும், என்றெல்லாம் கதைத்திடும் நாள் அல்ல. வலிந்து சிலர் இதற்கும் கதை கூற முனைந்தாலும், எவர்க்கும் அஃது இனிப்பதில்லை; நெஞ்சில் புகுவதில்லை; இஃது பொங்கற் புதுநாள்! தமிழர் திருநாள்! அறுவடை விழா! உழைப்பின் பெருமையை உணர்ந்து நடாத்தப்படும் நன்றி அறிவிப்பு விழா! என்ற இந்த எண்ணமே மேலோங்கி நிற்கிறது; பெருமிதம் தருகிறது; மகிழ்ச்சி பொங்கி வழிகிறது; ஆகமும் முகமும் மலருகின்றன; வாழ்வின் பொலிவு துலங்கித் தெரிகிறது.

இந்த உலகத்தின் எழில் யாவும் பொய்யல்ல, மெய்! மெய்! எனும் உணர்வும், அந்த எழிலினையும் பயன் தனையும் நுகர்ந்திடவும் வளர்த்திடவும் முனைதல் மாந்தர் கடன் என்ற மெய்யறிவும், அந்தக் கடமையினைச்செம்மையாய்ச்செய்து முடிக்க ஆற்றல் மிகவேண்டும், அவ்வாற்றல் கூட்டு முயற்சியினால் மிகுந்து சிறப்பெய்தும் என்றதோர் நல்லறிவும், இருள் நீங்கி ஒளி காண்போர் இதயம் மலராகி இன்புற்றிருப்பது போல், நல்வாழ்வுதனைக் குலைக்கும் நச்சரவு போன்ற நினைப்புகளும், நிலைமைகளும், நிகண்டுகளும் அமைப்புகளும் நீடித்திருக்கவிடல் நன்றல்ல, நலம் மாய்க்கும் என்பதறிந்து, அறிவுக் கதிரினையே எங்கெங்கும் பரவச்செய்து எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடலே இயற்கை நீதி எனக் கொண்டு பணிபுரியும் ஆர்வமும், பெற்றிடப் பயனபடும் இந்தப் பொங்கற் புதுநாள்.

இயற்கைச் செல்வங்கள் என்னென்ன இங்குண்டு, அவை தம்மைப் புத்துலக நுண்ணறிவால் மேலும் பயன் அளிக்கும் விதமாக, திருத்தி அமைத்திட என்னென்ன முறை உண்டு என்பதெல்லாம் எண்ணி எண்ணி மகிழ்ந்திடலாம், இந்நாள் நமக்களிக்கும் நற்கருத்தைப் புரிந்துகொண்டால். புனலாடி, பொன்னார் இழை அணிந்து, பொட்டிட்டுப் பூமுடித்து, பாற்பொங்கல் சமைத்து அதில் பாகுகலந்து, பாளைச் சிரிப்புடனே பரிவுமிக்காள் தந்திட, சுவைத்திட இதழிருக்க வேறு தரும் விந்தைதான் எதுக்கோ என்று கேட்டிட இயலாமல் குறும்புப் பார்வையினால் அவன்கூற, பெற்றோர் அதுகண்டு பேருவகைதான் கொள்ள, இல்லமுள்ளார் எல்லோரும் இன்புற்று இருந்திடுதல் பொங்கற் புதுநாளின் பாங்கு; மறுக்கவில்லை. ஆனால், முழுப்பாங்கு என்றதனை மொழிந்திடமாட்டேன் நான்; தித்திக்கும் சுவையுடனே, சிந்திக்கவும் வைக்கும் எண்ணங்கள் பற்பலவும் பொங்கி வருவதுதான் இந்நாளின் தனிச்சிறப்பு, முழுப்பாங்கு. மலரின் எழில் கண்டு மகிழ்வது மட்டும் போதாது, மணம் பெறவேண்டு மன்றோ! அதுபோன்றே பொங்கற் புதுநாளன்று மனை தொறும் மனைதொறும் காணப்படும் கவர்ச்சிமிகு கோலம் - புறத்தோற்றம் - கண்ணுக்கு விருந்தாகிறது. ஆனால், அது மட்டும் போதாது; கருத்துக்கும் விருந்து வேண்டுமன்றோ! உளது உணர்பவர்களுக்கு உணர்பவர்களே, பொங்கற் புதுநாளின் முழுப்பயனையும் பெற்றவராவர். உடன்பிறந்தோரே! நீவிர், அந்நன்னோக்கத்துடன் இத்திருநாளின் தன்மையினை உணர்ந்து பயன் பெற வேண்டுமெனப் பெரிதும் விழைகின்றேன்.

திருநாளின் தன்மையை மட்டுமல்ல, காணும் ஒவ்வோர் பொருளிலும், தெரிந்திடும் புறத்தழகு மட்டும் கண்டு போதுமென்றிருத்தல் ஆகாது; அப்பொருளின் உட்பொருளை, மெய்ப்பொருளை அறிந்திடுதல் வேண்டும். அந்த நுண்ணறிவே, நாம் காணும் பொருள்களின் முழுத் தன்மையையும் துருவிக் கண்டிடவும், காண்பதனால், பயன் பெறவும் வழி காட்டுகிறது. பொருளின் புறத தோற்றத்தை மட்டுமல்ல, அவைகளின் தன்மையினையும் பயனையும் நுண்ணறிவுடன் கண்டவர் தமிழர்! இன்று தமிழ் பேசிடுவோர் என்று பொதுவாக எண்ணிவிடாதே தம்பி! நான் குறிப்பிடுவது, தமிழராக வாழ்ந்த தமிழர்களை.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்று வள்ளுவர் கூறிச் சென்றார்.

காலைக் கதிரவன், மாலை மதியம், ஆடிடும் பூங்கொடி, பாடிடும் அருவி, கொஞ்சிடுங் கிள்ளை, துள்ளிடும் வெள்ளி மீன், மருண்டவிழி மான், ஒளிவிடும் விண்மீன், சிரித்திடும் முல்லை, பேசிடும் புறாக்கள், பழமுதிர் சோலை, வளமிகு வயல்கள், எதுதான், தம்பி! அழகாக இல்லை! எதுதான் தம்பி! இன்பம் தராதிருக்

கிறது? வா!வா! என்று வாயால் அல்ல, சிறு கரத்தால் அழைத்திடும் குழவி காண்போன் களித்திடுவது போலத் தான், முற்றிய கதிர்நிரம்பிய வயலின் ஓரத்தில் சென்றிடும் உழவனுக்குக் காற்றால் அசைந்தாடும் பயிர் மகிழ்ச்சி அளிக்கிறது. அந்தி நேரத்துச் செவ்வானத்தைக் கண்ட துண்டா? கண்டிருப்பாயே! எப்படி அந்த அழகு? உன்னைப்போய்க் கேட்கிறேனே! உன்னை முதன் முதலாகக் கண்டபோது உனக்கு வாய்த்தவளின் முகம் வெட்கத்தால் சிவந்திருக்குமே, நீ அதை அல்லவோ எண்ணிக் கொண்டிருக்கிறாய்!! இருப்பினும் இதனைக் கேட்டிடு தம்பி! எழிலோவியம் நிரம்ப உளது நம்மைச் சுற்றி! ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் வகையான அழகு ததும்புகிறது. ஆனால் அந்தப் புறத்தழகு மட்டுந்தான், அவை நமக்களித்திடுகின்றன என்றால், அவை பெருமைக் குரியனவாகா. புறத்தழகு காட்டிநமை மகிழ்விப்ப துடன், அவை, தமது தன்மையின் காரணமாக நமக்கு மிகுந்த பயனையும் வழங்குகின்றன! நம் வாழ்வு சிறப் படைய அவை துணைசெய்கின்றன! சிறப்படையவா!! வாழ்வே, அவை நமக்கு வழங்கிடுகின்றன.

வானத்திலே தோன்றிடும் வண்ணக் குழம்பு, காணற் கரியதோர் ஓவியம்; ஆமாம்; ஆனால், கண்ணுக்காக மட்டுமோ அஃது உளது? இல்லை, தம்பி! கருத்துக்காக! என் அழகைக் கண்டிடு, இதயம் மலர்ந்திடும்! என்று மட்டும் கூறி, மையல் ஊட்டிடும் 'சாகசக்காரி' அல்ல, இயற்கையாள்! என்னைக் கண்டிடு, அறிந்திடு, முழுவதும் உணர்ந்திடு, என் தன்மையினை ஆய்ந்து பார்த்திடு, பயன் பெறு!!—என்று கூறிடும் வள்ளல் அந்த வனிதை!

இயற்கையாள் நமக்களித்த எண்ணற்ற பொருள்கள் பெற்றோம்; இன்றவை மனையில் மங்கலம் தந்திடக் காண்கின்றோம். ஆயின், இப்பொருள் தம்மைப் பெற்றோர் எத்தனைபேர் என்ற கணக்கினை மறக்க லாமோ, அதற்கான காரணம் அறியாதிருக்கப்போமோ! மண்மகள் தந்தாள் இந்த மஞ்சளும் மாபலாவும், வாழை யும் வழங்கினாளே, செந்நெலும் பிறவும் அந்தச் செல்வி யின் கரத்தால் பெற்றோம்; பெற்றதால் பெற்றோம் இன்பம்; பெறுகின்றனரோ அதனை மற்றோர் என்று எண்ணிடத் தவறல் தீது; ஏனெனில், இயற்கை அன்னை, இங்கு இவை தம்மைத் தந்தது. எவரும் இன்புற்றிருக்க; சிலருக்குப் பலவும், பலருக்குத் துளியுமற்ற பாழ்நிலைக்

காக அல்ல. இத்தனை தந்த பின்னும், இத்தரைமீதில், எத்தனை எத்தனையோ மாந்தர், என் செய்வோம் என்றழுதும், இல்லையே என்று கூறி இடும்பையின் பிடி யில் சிக்கித் தத்தளித்திடுதல் கண்டு, தாங்கிக் கொள்வது தான் உண்டோ! மெத்தவும் கோபம் கொண்டு, சிற்சில நேரந் தன்னில், அடித்துக் கேட்கின்றாள் போலும், அட மடமகனே! உன்னை நம்பி நான் தந்தேன் எல்லாம்! நலிகின்றாரே பல்லோர்! இது உன்றன் கயமையாலே!! ஆகவே, உன்னை உன்றன் கொடுஞ் செயலுக்காக வேண்டி தாக்குவேன், பார்! என் ஆற்றல்! என்று பெரு மழை, பேய்க்காற்று, கடற் கொந்தளிப்பு, நிலநடுக்கம் எனும் கணைகளை ஏவுகின்றாள் போலும். இந்நிலையில், விழாவென்று சொல்லிடவோ இயலவில்லை, விழியில் நீர்த்துளிகள்-உனக்கும் எனக்கும், உள்ளம் படைத்தோர் அனைவருக்கும்.

விண்ணிருந்து மண்ணுக்கு வளமூட்ட வந்த மாமழை யைப் போற்றுகிறோம்; போற்றினார் இளங்கோ அன்றே! மண்மீது உள்ளனவும், அவை நம்பி வாழ்ந்திடும் மாந்தரும், அழிந்துபட, மலையென அது கிளம்பி, பெருங் காற்றை உடன்கொண்டு பேரிழப்பை மூட்டினதே, பேச் சற்றுத் திகைத்துக் கிடக்கின்றோம் மூச்சற்றுப் போயினர் பல்லோர் என்றறிந்து.

கடல் சீறி எழுவானேன், கடுங்கோபம் எதனாலே அந்தோ! ஒரு தீதும் செய்திடாத மாந்தர்களை கொல்வா னேன்!

எத்தனையோ பிணங்கள் மிதந்தனவாம்; நோயாளி தாக்குண்டு, மருந்து தேடித்தானுண்டும், பிழைத்தெழ முடியாமல், பிணமாவர்; தவிர்த்திட முடிவதில்லை. அது போன்றதோ இஃது? இல்லை! இல்லை! ஒரு துளியும் இது போல நடந்திடக் கூடுமென்று, எண்ணம் எழாநிலையில் இருந்தவர்கள், துயின்றவர்கள், பிணமானார்; அழிவு தனை ஆழ்கடலும் ஏவியதால்,

முறிபடு தருக்களும், இடிபடு மனைகளும், உடைபடும் அமைப்பும்,ஓலமிடும் மக்களும், புரண்டோடி வந்திடு புனலும், இழுத்து அழித்திடு சுழலும், அம்மவோ! கேட்டிடுவோர் நெஞ்சு நடுக்குறு விதத்தன என் செய்வர் அந்த மக்கள்; மூழ்கினர்; மூச்சற்றுப் போயினர். சேதி கேட்டிடும் அனைவருக்கும் நெஞ்சில் பெருநெருப்பு, விழியில் நீர்க்கொப்பளிப்பு.

எத்தனையோ இன்னல்களைக் கண்டு கண்டு, அவை
தம்மால் தாக்குண்டு, எதிர்த்து நின்று வடுப்பெற்று
வாட்டம் ஓட்டிடுவோம் வாழ்வின்பம் பெற்றிடுவோம்
என்று உழல்கின்றார், ஏழை எளியோர்கள். அறம்
மறந்த நிலையினிலே சமூக அமைப்புள்ள காரணத்தால்,
ஆயிரத்தெட்டுத் தொல்லை, அவர்கட்கு. பிழைக்க
வழியில்லாதார், உழைத்து உருக்குலைந்தார், நம்பிக்கை
தேயத் தேய நலிவுற்றார், இத்தகையோர் மெத்த உண்டு
பெருமூச்செறிந்தபடி; உயிரோடிருக்கின்றார் ஓர் நாள்
வாழ்வு கிடைக்கும் என்று. வறுமையின் தாக்குதலும்
அகவிலையின் போக்கதனால் ஏற்படும் அலைக்கழிப்பும்
நீதிகிடைக்காமல் அவர்கள் பாதி உயிரினராய் உள்ளதுவும்
அறிவோம் நாம்; அறியும் அரசு. எனினும், பொழுது
புலருமென்று பொறுத்திருந்து வருகின்றார்; அவர்
போன்றோர்க்கு, ''வாழ்வு கிடைக்குமென வாடிக்கிடப்
பதுமேன்! வற்றிய குளத்தினிலே வண்ணத்தாமரை காண்
பதுவும் இயலுமோதான்! உழலுகின்றாய் உயிர்காக்க;
உலவுகின்றாய் வாழ்வு கிடைக்குமென்று; உண்மையை
நான் உரைக்கின்றேன், கேள்! உனக்கு வாழ்வளிக்கும்
வழி காண, இன்றுள்ள உலகுக்கு நேரமில்லை, நினைப்பு
மில்லை; எதிர்பார்த்து ஏமாந்து இதயம் நொந்து செத்
திடுவாய்; சாகுமுன்னம், அணு அணுவாய் உன் எண்ணந்
தன்னைப் பிய்த்திடும் ஏமாற்றம் மூட்டிவிடும் வாட்டம்;
அதனால் உழல்வானேன் வீணுக்கு; உ'நண்டோடி
வந்துன்னை அணைத்துக் கொள்கின்றேன்; ஆவியைத்
தந்துவிடு; அமைதிபெறு!'' என்று கூறியதோ, கொக்
கரித்துப் பாய்ந்து வந்த கொடுமை மிகு அலையும்! வாழ
வைத்திடுதல் எளிதல்ல; வல்லமை மிகவும் வேண்டும்;
சாகடித்திடவோ எளிதிலே இயலும், வா! வா! என்றுகூறி
மேல் கிளம்பிக் கொதித்துவந்த அலைகள், மாந்தர் உயிர்
குடிக்கும் நச்சரவுகளாயின அந்தோ!! பிணமாகி மிதந்த
அந்த மாந்தர் உள்ளந்தன்னில் என்னென்ன எண்ணங்கள்
உலவி இருந்தனவோ, எவரறிவார்! மணவாளனாவதற்கு
ஏற்றவர்தான் அவர்! பெற்றோர் மகன் மனத்தைக்
கண்டறிந்தே செய்கின்றார் இந்த ஏற்பாட்டினை, பெறு
வேன் நான் மன நிறைவு என்றெண்ணி மகிழ்ந்திருக்கும்
மங்கையரும் இருப்பரன்றோ, கத்தும் கடல் அனுப்பப்
பாய்ந்து வந்து அலை கொத்திக்கொண்டு சென்ற பல்
லோரில்! பூவும் மஞ்சளுடன் போனவர்களும் உண்டே!
தாய் இது, கனியும் விரைவினிலே என்று கூறத்தக்க பருவ

முடன் அழகு தவழ் உருவினரும், அலைக்கு இரையாகிப்
போயிருப்பர்! அரும்புகள் பலப் பலவும் அழிந்திருக்குமே.
தள்ளாடும் நடையெனினும், தாத்தா! என்றழைத்திடும்
மழலை மொழிக் குழவியுடன் மாதரசியும் மகனும் இருக்
கின்றான் என்ற எண்ணம் களிப்பளிக்க இருந்து வந்த
பெரியவர்கள் பற்பலரும் மடிந்திருப்பர், உயிர் குடியா
முன் மடிந்திடேன் என உரைத்து எழும்பி வந்த அலை
களாலே! என்னென்ன நடந்திருக்கும், எத்தகு ஓலம்
எழும்பியிருந்திருக்கும், உயிர் தப்ப ஏதேது முயற்சிகளைச்
செய்திருப்பார், எல்லாம் பயனற்றுப் போயின என்று
ணர்ந்து, இறுதியாய், இதயத்திலிருந்து அலறல் எவ்விதத்
தில் பீறிட்டுக் கிளம்பி வந்திருக்கும் என்பதனை எண்ணி
டும்போதே, உள்ளம் நைந்துவிடுவது போலாகிறது, என்
செய்வோம்; பேரிழப்பை எண்ணி, பொங்கிடும் கண்ணீ
ரல்லால், தந்திட வேறென்ன உண்டு; பொறுத்துக்கொள்க
என்று, இழந்தனனே என் மகனை! இழுத்துச் சென்ற
துவே என் அரசை! வாழ்வளிக்க வந்தவனை வாரிக்
கொடுத்துவிட்டுப் பாழ்மரமானேனே, பாவி நான்!
என்றெல்லாம், பதறிக் கதறிடுவோர்க்கு அவர் ஓலம்
கேட்டு, காலம் மூட்டி விட்ட கொடுமையிது எனக்கூறி,
கண்ணீர் சொரிவதன்றி, பிறந்தவர் இறந்தே போவர்,
இறப்பும் ஓர் புது வாழ்க்கையின் பிறப்பாம் என்றெல்லாம்
'தத்துவம்' பேசிடவா இயலும்? நாமென்ன, முற்றுந்
துறந்துவிட்டோம் என மொழியும் முனிவர்களோ!
இல்லையன்றோ! இருந்தான் பலகாலும், பெற்றான் பல
நலனும் நோய் வந்துற்று மறைந்தான், மறையுமுன் மாடு
மனையுடனே மகிழ்ந்திருக்கும் விதமாகப் பெரியதோர்
குடும்பத்தை அமைத்தான் சீராக என்று கூறிடத்தக்க
நிலையினிலே இறந்துபடுவோர்க்காகக் கூட இதயமுள்
ளோர் கண்ணீர் சிந்திடுவர், கவலைகொண்டிடுவர்.
தெற்கு முனையிலே நேரிட்ட பேரிழப்புக் கண்டோம்,
மரணம் இயற்கை என்று கூறி எங்ஙனம் ஆறுதல் பெற
இயலும்! இது, எந்தமிழ் நாட்டினிலே, என்றும் நடந்தி
ராத, சிந்தையை வெந்திடச் செய்யும் பெருவிபத்து,
பேரிழப்பு! ஆறுதல் கூறுவதோ, பெறுவதுவோ எளிதல்ல.

கொடும் அலைக்குப் பலியானோர் விட்டுச் சென்ற
குடும்பத்து மற்றவர்கள் தம்மை நம் உற்றார் உறவினர்
என்று கொண்டு, அழித்தது அலை, அரசு அணைத்தது
என்றவர் எண்ணும் வண்ணம், உயிர் குடித்தது அலை

வடிவிலே வந்த கொடுமை, வாழ்வளித்தனர் அன்னையாகி இவ்வரசு எமக்கு என்று கூறத்தக்க விதத்தில் அரசு திட்டமிட்டுத் தக்கனவற்றை விரைந்து செய்தளிக்க வேண்டும். நாட்டினர் அனைவருமே, ஒருமித்துக் கேட்டிடுகின்றனர் அரசை, வீடிழந்து, தொழிலிழந்து, பெற்றோர் உற்றார் இழந்து, பெற்றெடுத்த செல்வந்தனை இழந்து அழுது கிடக்கின்ற மக்களுக்கு, புதுவாழ்வு, முழுவாழ்வு நல்வாழ்வு அளித்திட, பொருள் அளவு அதிகமாமே என்றெண்ணி மருளாமல், பரிவுடன் அவர் நிலையைப் பார்த்து, நலன்தேட முனைந்திடுதல்வேண்டும் என்று. அழிவு ஒருநாள், அழுகுரல் ஆறுநாள், வேண்டுகோள் ஒருநாள், ஆகட்டும் பார்க்கலாம் என்று சிலநாள், பிறகு 'அதது அததன்' வழிப்படி சென்றிடும் என்ற முறையிலே எண்ணத்தை ஓட விட்டுவிடாமல், தமிழக மக்கள் மனம் குளிர, பிறநாட்டவரும் கேட்டு மகிழத்தக்க விதத்தில், அரசு செயலாற்ற வேண்டுகிறோம். செய்வர் என்று எண்ணி, அந்த நம்பிக்கை தன்னையே ஒளியாக்கிக் கொண்டு, இருண்ட கண்களில் அதனை ஏற்றி, விழாவினுக்குரிய இந்நாளில், தமிழகத்தோர்க்கு என் கனிவுமிகு வாழ்த்துக்களைச் செலுத்துகின்றேன்.

அணைத்த கரம் அடிக்கிறது, ஆனால், அடித்தது போதுமென்றெண்ணி மீண்டும் அணைத்துக்கொள்கிறது போலும். தம்பி! இயற்கையாள் தந்திடுவனவற்றைப் பெற்று, வாழ்வில் ஏற்றம் பெற்று, சிலர் மட்டும் வாழ்ந்திருத்தல், நன்றன்று. நாம் எவைஎவை பெற்று இன்புற்றிருக்கின்றோமோ, அவைதமை அனைவரும் பெற்று மகிழ்ந்திடுவதே முறை, அதற்கே உளது இயற்கைச் செல்வம். பொங்கற் புதுநாளன்று இக் கருத்து நம் நெஞ்சில் ஏற்கவேண்டும், ஊறவேண்டும். கனியெலாம் சிலருக்கு, காய்சருகு பலருக்கு; ஒளியில் சிலர், பாழ் இருளில் பலர்; வாழ்வார் சிலர். வதைபடுவார் பலர்; எனும் நிலைகாண அல்ல; இத்தனைக் கோலம் காட்டி எண்ணற்றனவற்றை ஈந்து, என்றும் இளமையுடன் இயற்கையாள் கொலுவீற்றிருப்பது. அதிலும் தம்பி! இன்பத் தமிழகத்தினிலே, இயற்கையாள் தீட்டிவைத்துள்ள கோலம், எண்ண எண்ண இனிப்பளிப்பதாக உளது. நாமணக்கப்பாடிய நற்றமிழ்ப் புலவோரின் பாக்களில் காண்கின்றோம், பற்பல படப்பிடிப்பு.

இயற்கைப் பொருள் ஒவ்வொன்று பற்றியும் மிகுந்த நுண்ணறிவுத் திறனுடன் புலவர்கள் கூறியுள்ளனர்; மலை, மரம், மடுவு, அலை, அடவி, கலம், புலம், அருவி, வாவி, குளம், எனும் எவை பற்றியும் அந்நாளில் தாம் கண்டனவற்றைச் சுவைபட எடுத்துக் கூறியுள்ளனர் புலவர் பெருமக்கள். இயற்கையின் எழில், அந்த எழிலைக் காட்டும் பலவடிவங்கள், வகைகள் இவை மட்டும் காணக் கிடைக்கும் பட்டியலல்ல அந்தப் பாக்கள். விளக்கின் ஒளி கொண்டு வேறு பொருளைக் காட்டிடும் பான்மைபோல, இயற்கைப் பொருள்களைக்கொண்டு, இன்னுரை, நல்லுரை, வாழ்வு முறை என்பனவற்றை எடுத்துக் காட்டியுள்ளனர். இவையாவும், தம்பி! அன்றோர் நாள்!! இன்று அந்த 'அந்தநாள் சிறப்பினை' மீண்டும் கண்டிட ஓர் சீரிய முயற்சியினில் ஈடுபட்டுள்ளனர் இந்நாளில். விழிப்புற்ற, கற்ற தமிழ் மறவாத, மரபழிக்கும் மாபாதகம் வெறுத்திடும் தமிழ்ப் புலவோர். இடையிலேயோ! உயர உயரச் சென்றுவிட்டோம்! கொண்டு சென்று விட்டனர் தமிழர்களை! முல்லை பறித்திடச் சென்ற மங்கையை, வேழம் விரட்ட விருது பெற்ற வீரன் கண்டனன் என்ற கதை கூறினரன்றோ அந்தநாள் புலவோர்! ஓ! ஓ! இது மட்டுந்தானோ கூற இயலும் இவர்களால், நாம் கூறுகின்றோம் கேளீர் 'மேல் உலக'க்காதை என்று அழைத்தனர் இடையில் வந்தோர்; பாரிஜாதம் காட்டினர், பாற்கடல் காட்டினர், பாசுபதம் காட்டினர், பற்பல விந்தைகளைக் காட்டினர், தமது கதைகளில்! உள்ளதை மறந்தனர் தமிழர்! உருவாக்கப்பட்டனவற்றைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டனர். அதன் காரணமாகவே, பல்வேறு விழாக்கள்—பண்டிகைகள்—தமிழகத்திலே மேற்கொள்ளப்பட்டன. பொங்கற் புதுநாள் அது போன்றதல்ல, இது நமது விழா; நம்மை நாம் உணர உதவும் விழா; இடையிலே படர்ந்தனவற்றை நீக்கி, தமிழரின் உள்ளத்தை மாசறு பொன்னாக்கி, ஒளிவிடு முத்து ஆக்கிடத் தக்க நன்னாள். பொங்கிற்று! பொங்கிற்று! பொங்கலோ பொங்கல்! என ஒலி எழுப்பி விடுவதனால் மட்டும் அல்ல! நான் முன்னம் கூறியுள்ளபடி, பொருள் உணர்ந்து பாடம் பெறுவதனால்!!

பெற வேண்டுவனவற்றைப் பெற்றிடும் முயற்சியில் ஈடுபடுவதிலே ஏற்படக்கூடியது ஆர்வம்; இருந்ததை, இடையில் இழந்ததை மீண்டும் பெற்றிட எடுத்துக்

கொள்ளப்படும் முயற்சி இணையற்ற எழுச்சியை ஊட்டி விடுமன்றோ? அந்த எழுச்சிபெற்ற நிலையில், பொங்கற் புதுநாளை, புதுமையினைச் சமைத்திடும் பேரார்வம் பொங்கிடும் நாளாகக் கொண்டுள்ளனர். எனவேதான் தம்பி! நாட்டு வளம்பற்றி, மக்கள் நிலை குறித்து, அரசு முறைபற்றி, அறநெறி குறித்து, தாழாத் தமிழகம் என்ன கருத்துக் கொண்டிருந்தது என்பதனைக் கண்டறியும் ஆர்வம் மிகுந்துளது. இந்த ஆர்வத்தை மேலும் பெற்றிடச் செய்திட வேண்டும், பொங்கற் புதுநாள். இயற்கைச் செல்வம் இத்துணை பெற்றிருந்த இன்பத் தமிழகத்தில் இன்னல் கப்பிக் கொண்டிருக்கக் காரணம் என்ன என்று கண்டறிய வேண்டாமோ? கண்டறிய, உலகின் பல்வேறு இடங்களிலே இயற்கையாள் அளித்துள்ளன யாவை? ஆங்கு உள்ளோர் அவற்றினை எம்முறையில் பயன்படுத்தி ஏற்றம் கண்டுள்ளனர்? அம்முறையில், நாம் பெறத்தக்க அளவு யாது? பெற்றிடும் வழி என்ன? என்பனவற்றை அறிந்திட வேண்டுமன்றோ? வேண்டுமாயின், உலக நாடுகளின் வரலாற்றினை ஓரளவாகிலும் நாம் அறிந்திட வேண்டுமே? அறிகின்றோமா? மாலை நேரத்தில் மாபெரும் நகரங்களில் கூடி மக்கள் கூட்டம் இதுபோது பல்வேறு நாடுகளின் வரலாறுபற்றிய விரிவுரையையா கேட்டுப் பயன் பெற்று வருகிறது! இல்லையே! போகப்போகும் இடம்பற்றிய கதைகளை அல்லவா, இருக்கும் இடத்திலே இடரும் இழிவும் நீக்கிடும் முயற்சியை மேற்கொள்ளாத மக்கள் கேட்டு இன்புறுகின்றனர். இந்நிலையில் நாட்டவர் இருந்திடின், உலகின் நிலையினை உணர வழி ஏது, உணர்ந்து நம் நாட்டை நமக்கேற்ற நிலையினதாக்கிடும் முயற்சியில் ஈடுபடுவது ஏது?

இங்கு வயலின் அளவு மிகுதி, விளைச்சலின் அளவு குறைவு என்கிறார்கள்,

பொருள்கள் இங்கு மிகுதியும் பெற்றிடலாம். ஆனால் பெற்றோமில்லை என்கிறார்கள்.

பெருகிடும் பொருளைக்கூட. சீராகப் பகிர்ந்தளித்தால் சமூக நலன் மிகும்; செய்யக் காணோம் என்கின்றார்கள்.

முப்புரம் கடலிருக்கிறது. ஆனால், கப்பல் வாணிபம் தேவைப்படும் அளவு இல்லை; மிகமிகக் குறைவு என்கின்றனர்.

இரும்பு கிடக்கிறது புதைந்து; ஆனால், எஃகு ஆலை தான் அமைக்கப்படவில்லை என்கின்றார்கள்.

கத்தும் கடல்சூழ்ந்த இடம் இது; எனினும், மீன்பிடி தொழிலும் வளரக் காணோம் என்கின்றார்கள்,

பொது அறிவு வளம் மிக்கவர் இவர் என்கிறார்கள், எனினும், புத்தறிவு பெற்றிடவில்லை என்று கூறுகிறார்கள்.

விழி உண்டு பார்வை இல்லை; வாயுண்டு பேசும் திறனில்லை; வளமுண்டு, வாழ்வு இல்லை; இதுபோல, நம் நாடு பற்றிப் பேசிடக் கேட்கின்றோம்.

ஏன் இந்த நிலை? எதனால் இம் முரண்பாடு? எவரு செய்த செயலால் இந்தச் சீரழிவு? என்பதனைக் கண்டறிய வேண்டாமோ? வளரவேண்டிய முறையிலும் அளவிலும் பயிர் வளரவில்லை என்றதும் உழவன், தம்பி! என்னென்ன எண்ணுகிறான்? என்னென்ன கேட்கின்றனர் அவனை, பூமிநாதர்கள்!!

நாடுமுழுவதிலும் இன்று உள்ளதோர் நலிவுநிலை குறித்து, காரணம் கண்டறிய, கேடுகளைந்திட, நலம் விளைவித்திட நன்முயற்சியில் ஈடுபட வேண்டாமோ? இல்லையே, அந்த நன்முயற்சியும், ஒருவரிருவர், சிறு குழுவினர் மேற்கொண்டால் பலன் மிகுந்திராது, கிடைப்பதும் அவர்க்கு மட்டுமன்றோ போய்ச் சேரும்? நாடு வளம் பெற, பெற்றவளம் அனைவருக்கும் பயன்பட, பயன்படும் முறையை எவரும் பாழாக்காதிருந்திட, தனித் தனியாக முயற்சி செய்யப்படுவது, வளர்ந்து விட்டுள்ள சமுதாயத்திலே முடியாததாகும். இதற்கான முயற்சியினை மேற்கொள்ள வேண்டுவது, அரசு.

அரசு, தம்பி! அமைந்து விடுவது அல்ல. நாம் அமைப்பது. அரசு நடாத்துவோரும், இதற்கென்று எங்கிருந்தோ எல்லாவிதமான ஆற்றலையும் பெற்றுக் கொண்டு இங்கு வந்தவர்கள் அல்லர்; நம்மில் சிலர், நமக்காக, நம்மாலே நமைஆள அமர்த்தப்பட்டவர்.

பொருள் என்ன? விதைக்கேற்ற விளைவு! அரசு அமைத்திடும் திறம் நமக்கு எவ்விதம் உளதோ அதற்கு ஏற்பவே அரசு! எனவே, நாட்டு வளம்காண அரசு முயற்சியில் ஈடுபடல் வேண்டும் என்று கூறிவிட்டு, நாம் கைகட்டி வாய்பொத்திக் கிடந்திடின் பயன் இல்லை; நல்லரசு அமைத்திடும் முயற்சியினைத் திறம்பட மேற்கொண்டு அதிலே நாம் வெற்றி பெற்றிடல் வேண்டும். உழவன் பெற்ற வெற்றிகளன்றோ உன்னைச் சுற்றி இன்று! செந்நெலும், காயும் கனிவகையும், உண்பனவும் உடுப்பனவும், பூசுவனவும் பூண்பனவும்!! அவன் பெற்ற வெற்றிக்காக எத்துணை உழைப்பினை நல்கினான், நாடு முழுவதும் வளம்பெற, ஓர் நல்லரசு அமைத்திட வேண்டுமே, அந்தப் பணிக்காக நாம் எத்தனை அளவு உழைத்துள்ளோம்? அதுகுறித்து நம்மக்கள் எந்த அளவு தமது சிந்தனையைச் செலவிடுகின்றனர்? சிந்தனையில் எந்த அளவு தெளிவு பெற்றுள்ளனர்? தெளிவு பெற்றிடத்தக்க நிலையில், எத்தனை பேர்களுக்கு வாழ்க்கை அமைந்திருக்கிறது? எண்ணிப் பார்த்திடும்போது தம்பி! ஏக்கம் மேலிடும். ஆனால், ஏக்கம் மேலிட்டு ஏதும் செய்ய இயலா நிலையினராகிவிடின் நாடு காடாகும்; மக்கள் பேசிடும் மாக்களாவர். எனவே, அந்த ஏக்கம், நம்மைச் செயல்புரிய வைத்திடும் வலிவாக மாறிடவேண்டும்; மாற்றிட வேண்டும். உலகிலே பல்வேறு நாடுகளில், இடர்ப்பட்ட மக்கள், இழிவு நிலையினில் தள்ளப்பட்ட மக்கள், துக்கத்தால் துளைக்கப்பட்டு, ஏக்கத்தால் தாக்கப்பட்டு, இதயம் வெந்து, இடுப்பொடிந்து ஏதும் செய்ய இயலாத நிலையினராகி விட்டவர்போக, சிலர் - மிகச்சிலர் - துணிந்து எழுந்தனர், எதிர்த்து நின்றனர், வெற்றி கண்டனர். பெருமூச்சிலிருந்து புன்னகை பிறந்தது! சிறைக் கோட்டங்களிலிருந்து மக்களாட்சி மன்றங்கள் அமைந்தன. வெட்டுண்ட தலைகளிலிருந்து கொட்டிய இரத்தத் துளிகள், கொடுமையை வெட்டி வீழ்த்தும் கூர்வாளாயின!

இதுபோல் ஆகும் என்பதனை அன்றே உணர்ந்து உரைத்தார் பொய்யா மொழியார்.

ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்

என்பதாக. கொடுமைக்கு ஆளான மக்கள் கொட்டிய கண்ணீர், ஆதிக்கக் கோட்டைகளைத் தூளாக்கிடும் வெடி குண்டுகளாயின. வரலாறு காட்டுகிறது, வல்லூறை

விரட்டிய சிட்டுக்குருவிகளின் காதையை! நமது மக்களுக்கு இதனை எடுத்துக் கூறுவார் யாருளர்! கூறாதது மட்டுமா! கருங்குருவி மோட்சம் பெற்ற காதையும், கரிவலம் வந்த சேதியுமன்றோ அவர்கட்கு இசை நயத்துடன் கூறப்பட்டு வருகிறது.

தம்பி! ஊர்ந்து செல்லும் ஆமையைக்கூட, பாய்ந்து செல்லும் புரவிகள் பூட்டிய வண்டியில் வைத்தால், போய்ச் சேரவேண்டிய இடத்திற்கு விரைவாகவும் எளிதாகவும் போய்ச்சேரும். இங்கு நாம் ஆமைகள் பூட்டிய அலங்கார வண்டியில் பாய்ந்தோடவல்ல குதிரையை ஏற்றிவைத்து, ஒரு விந்தைப் பயணம் நடத்திப் பார்க்கிறோம். கனி பறித்துச் சாறு எடுத்துப் பருகிடுவார் உண்டு; முறை; தேவை. இங்கு நாமோ, கனி எடுத்துச் சாறுபிழிந்து, அந்தச் சாற்றினைக் காய்கள் மேல் பெய்து தின்று பார்க்கின்றோம்.

இந்த நாட்டிலேதான் தம்பி! இந்த இருபதாம் நூற்றாண்டில், இத்தனை திரித்துக் கூறுவதும் இருட்டடிப்பிலே தள்ளுவதும், இட்டுக் கட்டுவதும், இழிமொழி பேசுவதும் தாராளமாக நடத்திச் செல்ல முடிகிறது, ஆதிக்கக்காரர்களால். இங்கு நாம் மனிதத் தன்மைக்காகவும், பகுத்தறிவுக்காகவும் வாதாடினால், நாத்திகப் பட்டத்தைச் சுமத்திவிடுவதும்,

ஒற்றுமைப்பட வேண்டும், பேதம் கூடாது, அதனை மூட்டிடும் ஜாதிகள் கூடாது என்று பேசினால், சமுதாயக் கட்டினை உடைக்கிறோம் என்று பழி சுமத்துவதும்,

பெண்ணை இழிவுபடுத்தாதீர் என்று பேசினால், ஒழுக்கத்தைக் கெடுக்கிறோம் என்று ஓலமிடுவதும்,

ஏழையின் கண்ணீரைத் துடைத்திடுக! என்று கூறினால், வர்க்கபேதமூட்டிப் புரட்சி நடத்தப் பார்க்கிறான் என்று பேசிப் பகை மூட்டியும்,

ஆட்டிப் படைக்கும் அளவுக்கு அதிகாரத்தை ஓரிடத்தில் குவித்து வைத்துக் கொள்வது நல்லதல்ல; அதிகாரத்தைப் பரவலாக்கிடுக! என்று கூறினால், அரசு அமைப்பை உடைக்கப் பார்க்கிறான் என்று கொதித்தெழுந்து கூறியும், நாம் மேற்கொள்ளும் முயற்சிக்கு மக்களின் நல்

லர் தரவு கிடைத்திடுவதைத் தடுத்திடும் நோக்குடன் செய்து வருகின்றனர்.

தம்பி! தம்பி!! தூய தமிழுக்காகப் பேசிப்பார்! ஓ! இவனுக்கு 'மொழி வெறி' என்று கூறிக் கிளம்புவர் கோலோச்சும் குணாளர்கள்.

சங்கத் தமிழ் மணக்கும் தமிழகத்தவர்க்கும் சேர்ந்தா இந்தியெனும் ஆட்சிமொழி என்று கேட்கின்றோம்; தேச பக்தி அற்றவர்கள் என்றன்றோ தூற்றப்படுகின்றோம்?

கண்ணீர் வடித்திடுகின்றனரே பல லட்சம் தமிழர் கடல் கடந்து சென்றுள்ள நாடுகளிலே, கொடுமையாளர் களால் என்று பேசும்போது, இந்தியாவுக்கும் வெளி நாடுகளுக்கும் பகைமூட்டுகிறான்; பாதுகாப்புச் சட்டத் தின்படி இவனைப் பிடித்தடைக்க வேண்டும் என மிரட்டு கின்றனர்.

தொழில்கள் மிகுதியாக நாட்டின் ஓர் பகுதியில் குவிந்திடல், பொருளாதார ஏற்றத்தாழ்வை உண்டாக் கிடும்; எனவே, புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கும் தென் னகத்தில் புதுப்புதுத் தொழிலைத் துவங்கிடுக! என்று கூறிடுவோரை 'பாரதப் பண்பு' அற்ற மாபாவிகள் என்று ஏசுகின்றனர்.

தொழிலில், பெருத்த வருவாய் தரத்தக்கனவற்றை எல்லாம் முதலாளிகளிடம் விட்டுவிடுகின்றீர்களே, இதுவோ சமதர்மம் என்று கேட்டிடின், இவன் தொழில் வளர்ச்சியைக் கெடுக்க முயலுகிறான் என்று கூறுகின் றனர்.

சர்க்கார் துவக்கி நடத்தும் தொழில்களில், தக்க வருவாய் பெறவில்லையே! இது முறையல்லவே! என்று பேசிடின், இவன் சர்க்கார் துறையை வெறுப்பவன், சுதந்திரக் கட்சியினனாகிறான் என்று கலகப் பேச்சை மூட்டிவிடுகின்றனர்.

கண்மண் தெரியாமல் கடன் வாங்கிக்கொண்டு போகிறீர்களே, இது பெருஞ்சுமையாகிவிடுமே, எதிர் காலச் சந்ததி இடர்ப்படுமே! என்று கூறிடின், நாடு வளம் பெற வழிதேடினால் இவன் குறுக்கே நிற்கிறான் என்று குறைகூறுகின்றனர்.

விலைகள் ஏறியபடி உள்ளனவே என்றால், இதைக் கூறி, அரசியல் இலாபம் தேடப் பார்க்கிறான் என் கிறார்கள்.

ஊழல் மலிந்திருக்கிறதே, ஊடுருவிக் கிடக்கிறதே என்றால், எத்தனையோ நாடுகளில் இதுபோல என்று சமாதானம் கூறுகின்றனர்.

தம்பி! எடுத்துரைக்கும் எதனையும் மதித்திட மறுக் கின்றனர்; திரித்துக்கூற முற்பட்டுவிடுகின்றனர். ஏடுகளிலே மிகப்பல இதற்குத் துணைசெய்கின்றன. இந்நிலையில், இவ்வளவு பேர்களாகிலும், துணிந்து பேசு கின்றனரே என்பது உள்ளபடி பாராட்டி வரவேற்கப்பட வேண்டியதே.

நாடே போர்க்கோலம் பூண்டுவிடும் நேரத்தில், நானும் அதில் கலந்திருந்தேன் என்று கூறிக்கொள்வதிலே கிடைத்திடும் பெருமை அதிகமில்லை; இன்று நம்முடன் நாட்டவரில் பலர் இல்லை, நல்லறிவு கொளுத்தி நல்லாட்சி காணப் பாடுபடும் கடமையுடன் பணியாற்ற வேண்டிய இதழ்களில் பல இல்லை என்ற நிலையில், எவர் வரினும் வாராதுபோயினும், இன்னலுடன் இழிவு சேர்ந்து வந்து தாக்கினும், இவன் நமக்காகப் பாடுபடு கிறான் என்பதனைக் கூறிடவும் பலருக்கு நினைப்பு எழாது போயினும், எத்தனை சிறிய அளவினதாக இப்படை இருப்பினும், இதிலே நான் இருந்து பணி புரிவேன்; என் இதயம் இடும் கட்டளையின்படி நடந்திடு வேன்; என் நாட்டைக் கெடுக்கவரும் எதனையும், எவரின் துணைகொண்டு வந்திடுவதாயினும், எதிர்த்து நிற்பேன், சிறைக்கஞ்சேன், சிறுமதியாளர்களின் கொடுமைக் கஞ்சேன், செயலில் வீரம், நெஞ்சில் நேர்மை. உறுதிகொண்டிட்டேன், செல்வேன் செருமுனை நோக்கி என்று சென்று அணிவகுப்பில் சேர்ந்துளரே அவர்க்கே பெருமை அளவிலும் தரத்திலும் மிகுதி! மிகுதி!

அத்தகைய அணிவகுப்பில் தம்பி! நீ உள்ளாய்; அகமகிழ்ச்சி எனக்கு அதனால்; உன் ஆற்றல் நானறி வேன், நானிலம்' அறியும் நாளும் வந்தேதீரும். பூத்த மலரிலெல்லாம் வாசம் உண்டு; நுகர்வோர் குறைவு என்றால், மலர்மீது அல்ல குற்றம். இதோ இந்தப் பொங்கற் புதுநாளன்று, எத்தனையோ இல்லமதில், என் அப்பா சிறை சென்றார்! என் அண்ணன் சிறை சென்றான்! என் மகன் சிறை சென்றான்! செந்தமிழைக்

காத்திடவே, சிறை சென்றான் என் செம்மல்! என்று பேசிப் பெருமிதம் அடையத்தான் செய்வர். பலப் பல இல்லங்களில், பாற்பொங்கல் இன்றிங்கு, பண்பற்ற ஆட்சியாளர் என் மகனை இங்கிருக்க விட்டாரில்லை; இருட்சிறையில் அடைத்திட்டார்; இருப்பினென்ன! கண் கசிய மாட்டேன் நான், கடமை வீரனவன்! காட்டாட்சி போக்குதற்குப் போரிட்டான்; மகிழ்கின்றேன் என்று கூறிடுவர், தமிழ் மரபு அறிந்ததனால்.

பொங்கற் புதுநாளில் எத்தனையோ இல்லமதில், இணைந்து நம்மோடு இல்லாது போயிடினும், நம்மைப் பற்றி எண்ணாதார், இல்லை என்று கூறிடலாம். மக்களைத் தாக்கிடும் கேடு எதுவானாலும், கேட்டிட முன்வருவோர் கழகத்தார்! ஆமாம்! அவர்கள் கேட்ட உடன், பாய்கின்றார் அரசாள்வோர், எனினும் பயமும் கொள்கின்றார்; பாவிமகன் கழகத்தான் பற்பலவும் கூறித்தான், அம்பலப்படுத்தி நம் ஆட்சிக்கு ஆட்டம் கொடுத்தபடி இருக்கின்றான் என்றஞ்சிக் கிடக்கின்றார் ஆளவந்தார் எனப்பேசிச் சிரித்திடுவர். புள்ளினம் கூவினதும், பூக்கள் மலர்ந்ததும், புறப்பட்டான் கதிரவனும், புறப்படுவோம் துயில்நீங்கி என்று எல்லா மாந்தருமா கிளம்புகின்றார்? கிளம்பாதுள்ளோர் கண்டு கதிரவன் கவலை கொள்ளான். பாடிடவோ மறவாது புள்ளினந்தான், மலர்ந்து வரவேற்கும் பூக்களுமே! தம்பி! கதிரவனாய், கானம் பாடிடும் வானம்பாடியாய், மணம் பரப்பிடும் மலராக நீ இருக்கின்றாய். மட்டற்ற மகிழ்ச்சி எனக்கு, மாசற்றது உன் தொண்டு என்பதனால், நாம் ஈடுபட்டுள்ள பணி எதனையும் எடுத்தாய்ந்து பார்த்திட்டால், தூயது அப்பணி, அறிவாளர் வழிநின்று ஆற்றுகின்றோம் அப்பணியினை என்பதனை அறிந்திடலாம். வந்து புகுந்து கொள்ளும் இந்தியினை எதிர்க்கின்றோம்; இடரில் தள்ளுகிறார் இந்திக்குத் துணைநிற்போர்; இழித்துப் பேசி விட்டு எனக்கென்ன சுவைப்பண்டம் என்று கேட்டு நிற்கின்றார் மாற்றார் தொழுவத்தில், மரபழித்தார்; ஆயினுமென்! நம் கடமைதனை நாம் செய்தோம் என்ற மனநிறைவு நமக்கு இன்று; நாளை வரலாற்றில் அதனைப் பொறித்திடுவர். எதிர்த்தாய் என்னபயன்? இந்தி ஏறும் அரியாசனம் என்பது உறுதியன்றோ! என்று கேட்பாரும் உளர்; கெடுமதியால் நடமிடுவோர் கேட்டிடட்டும். கேலியாம் அம்மொழியும் நம் விலாவை வேலாகக்

குத்தட்டும்; ஈட்டியாய் அப்பேச்சு நம் இதயத்தில் பாயட்டும்; இருக்கும் வீரம் பன்மடங்கு கொப்பளித்து எழட்டும்; தூற்றுவோர் தூற்றட்டும், தொடரட்டும் நமது பணி என்போம் நாம். மலக்குழி கண்டேன் நான், ஒதுங்கி நடக்கின்றேன். மலமே உனக்கு மணமளிக்குதே அந்தோ! என்றுகூட நாம் அன்னவரைக் கேட்டிடல் வீண் வேலை. எதிர்த்து வந்த சிறுத்தையினை எதிர்த்து நின்றேன் வீரமாய் நான்; என் உடலில் அதன் கீறல். பற்கள் படிந்துள்ள நிலைதான்; குருதி கசிகிறது உண்மை; சொல்ல நான் துடிதுடித்தேன், எனைத்தாக்கி ஓடிப் பதுங்கி, உறுமிக்கிடக்கிறது அச்சிறுத்தை? கூடி அதனைத் தாக்கிக் கொன்றுபோட வாராத கோழையே! என்னை நீ கேலிவேறு செய்வதுவோ! சிறுத்தையின் வாயினிலே கசியும் செந்நீரைப் பானமாய்ப் பருகும் ஈ, எறும்பு, பூச்சி, நீ! என்று கூறிடலாம் ஏசித்திரிவோரை! வீண்வேலை! நேரம் இல்லை! நம்மாலானவற்றை நாம் செய்தாக வேண்டும்; நாமிருந்தும் இந்திக்கு எதிர்ப்பு இல்லை என்ற பேச்சு எழவிடோம், இது உறுதி.

மொழித் துறையினிலே புகுத்தப்படும் அக்கிரமம் நிறைந்த ஆதிக்கம், அத்துடன் நில்லாது. காலிலோ கரத்திலோ எந்த இடத்திலே கருநாகம் தீண்டிடினும், உடலெங்குமன்றோ விஷம்பரவி உயிர் குடிக்கும். அஃதே போல, மொழித் துறையினிலே ஆதிக்க நச்சரவு பதித்திடும் பல்லினின்றும் கக்கிடப்படும் நஞ்சு, தமிழரின் உடல் முழுவதிலும் பரவும்; வாழ்வு அழியும்.

மொழி ஆதிக்கம், நிர்வாக ஆதிக்கத்துக்கு இடமேற்படுத்தும், அஃது பொருளாதார ஆதிக்கத்திற்கு வழிகோலும், பிறகோ தமிழர் அரசியலில் அடிமைகளாகி, அல்லற்படுவர். இதனை அறிந்தோர் கூறி வருகின்றனர்; ஆலவட்டம் சுற்றிடுவோர் மறுத்துப் பேசி, ஆளவந்தார்களை மகிழவைக்கின்றனர்.

எமக்கேன் விடுதலை!! விடுதலை பெற்றால் நம்மைக் காத்திடும் பொறுப்பினை எவர் ஏற்றுக்கொள்வர்? வேலைக்கு வழி ஏது? சோற்றுக்கு வழி ஏது? செத்துவிடத்தான் இது வழி. ஆகவே, விடுதலை வேண்டாம்!! வெள்ளை எஜமானர்களின் பாதமே நமக்குப் பாதுகாப்பு என்று நீக்ரோக்களில் சிலரைப் பேசவைத்தனர் வெள்ளை

வெறியர்கள்..., விடுதலைக் கிளர்ச்சியைத் துவக்கிய நாட்களில்.

இங்கு நம்மிடையே உள்ளோரில் சிலர் இந்தி ஆட்சி மொழியானால் என்ன என்று கேட்கும் போது, தம்பி! எனக்கு அந்தப் பழைய நிகழ்ச்சிதான் நினைவிற்கு வருகிறது. உடலிலேயேதான் நோய் தங்கி இருந்து, உடன் இருந்தே கொல்லுகிறது; பாசி, குளத்திலேயே தான் உண்டாகிறது; களை, வயலிலேயேதான் முளைக்கிறது, காட்டிக் கொடுப்போரும் அது போன்றே நமது சமுதாயத்திலேயே உள்ளனர், மினுமினுப்புடன், மிடுக்குடன், துரைத்தனத்தாரின் மேய்ப்புத் தேய்ப்புப் பெற்று!! காட்டுக்குதிரைக்கு ஏது, தங்கமுலாம் பூசப் பட்ட கடிவாளம்? இல்லையல்லவா! நாட்டிலே, பூட்டு வார்கள் விலையுயர்ந்த கடிவாளம் குதிரைக்கு எதற்கு? நாம் ஏறிச் செல்லும் வண்டியை அக்குதிரை இழுத்துச் செல்ல வேண்டுமே! காண்போர் எப்படிப்பட்ட விலை உயர்ந்த குதிரை என்று கண்டு அதனை உடையவரைப் பாராட்ட வேண்டுமே...அதற்காக! அதுபோல, தமிழரில் சிலர் உளர்.

தம்பி! மொழிப் பிரச்சினைபற்றி நான் குறிப்பிட்ட தற்குக் காரணம் இந்த ஆட்சி, எப்படி யெப்படி ஆதிக்கத்தைப் புகுத்துகிறது என்பதனை எடுத்துக் காட்டிட மட்டுமல்ல; வித்தகர்களின் பேச்சுக்கும் மக்களின் மனக் குமுறலுக்கும் ஒரு துளியும் மதிப்பளிக்காத மமதை கொண்டதாக இருக்கிறதே இந்த அரசு, இவர்களிடமிருந்து எவர்தான் எந்த நியாயத்தைத்தான் எதிர்பார்த்திட முடியும்!... என்பது குறித்து எண்ணிடும் போது ஏற்படக்கூடிய திகைப்பையும் எடுத்துக் காட்டத்தான்.

தம்பி! அதோ காண்கிறாயே, கொதி வந்ததும். சோற்றைப்பார்க்கிறார்கள்; அரிசி, சோறாகி இருக்கிறது. அரிசிதானே! அதனுடன் கலந்த கல்லுமா? இல்லையே! கல் கல்லாகவே தான் இருக்கிறது, எத்தனை தீ அதனைத் தாக்கிடினும். வேகக்கூடியதைத்தான் வெந்திடச் செய்யலாம். அடுக்களை எடுத்துக்காட்டும் இந்தப் பாடம் அரசியலுக்கும் பொருந்தக் கூடியதே. இந்த பானை, வேகும் பண்டம் கொண்டதல்ல, இது வெந்து சுவை தரும் பண்டமாகும் என்று எத்தனை நேரம்

நெருப்பை எரியவிட்டாலும் வீணாகித்தான் போகும், என்பது. எனவே இந்த வேகாச் சரக்கை எடுத்து வீசி விட்டு வேறுகொள்ளவேண்டும். இன்றுள்ள போக்குடனும் இயல்புடனும் இவ்வரசு இருந்துவருமானால் நாம் இருக்க விட்டுவைத்திருப்போமானால் — எந்த ஒரு பிரச்சினைக்கும். சிக்கு நீக்கப்பட்டு மக்கள் மகிழத்தக்க 'பரிகாரம்' கிடைத்திடாது.

உணவுப் பிரச்சினை, விலைஏற்றப் பிரச்சினை, தொழில்வளம் சீராக அமையும் பிரச்சினை, வறுமையை ஓட்டும் பிரச்சினை, உரிமைப் பிரச்சினை எனும் எதுவாக இருப்பினும், ஒரு ஆணவம், ஒரு அலட்சியப் போக்கு, எல்லாம் எமக்குத் தெரியும் என்ற முடுக்கு, எவர் எம்மை என்ன செய்துவிட முடியும் என்ற இறுமாப்பு, இவைதான் தலைவிரித்தாடுகின்றன. இதனை ஒவ்வொன்றிலும் பார்க்கிறோம் தம்பி! இலங்கைவாழ் மக்களைக் காட்டிக் கொடுக்கும் ஒப்பந்தமும், பர்மாவாழ் மக்களைப் பதைக்கப் பதைக்க அந்த அரசு இங்கு ஓட்டிவிட்டதனைப் பார்த்துக் கொண்டு சிறுவிரலையும் அசைக்காது இருக்கும் போக்கும் எதனைக் காட்டுகின்றன? இந்த அரசு மக்களின் நலன்களை, உரிமையினை, வாழ்வை, துச்சமென்று கருதித் துவைத்திடும் இருப்புக்கால் கொண்டது என்பதைத் தானே!!

இந்நிலையுள்ள ஓர் அரசு, நான் குறிப்பிட்டுள்ள முறைப்படி இயற்கைப் பொருளை நுண்ணறிவுடன் விஞ்ஞான முறைப்படி பயன்படுத்திச் செல்வம் பெருகிடச் செய்து, பெருகிடும் செல்வத்தை அனைவரும் சீராகப் பெற்று, இல்லாமை, போதாமை எனும் கேடுகளையப் பெற்று, எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடத் தக்க புது முறையை, பொற்காலத்தை அமைத்திடவா முனையும்! வீண், அந்த எண்ணம். அதற்கு ஏற்றது இந்த அரசு அல்ல! சாறு, கரும்பில் கிடைக்கும்! மூங்கிற் கழியில் கிடைத்திடுமோ!

இதனை இன்று உணர்ந்து, சமுதாயத்தின் அழுக்குகளும் இழுக்குகளும் நீக்கப்படத்தக்கதான முறை கண்டு நடாத்தும் ஓர் அரசு அமைத்திடும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

ஓடப்பர் உயரப்பர் எனச் சமுதாயம் பிளவுபட்டிருக்கும் நிலையை மாற்றிடவேண்டும், எல்லோரும் ஒப்பப்பர் ஆகிடவேண்டும் என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்,

"அதைத்தானே நாங்கள் செய்து வருகிறோம், சமதர்மத் திட்டமிட்டு" என்கிறார்கள் ஆளவந்தார்கள்.

இவர்கள் மேற்கொள்ளும் சமதர்மத்தைக் கண்டு நாம் கவலைப்படத் தேவையில்லை, இவர்களின் சமதர்மம் நமது உரிமைகளையும் நமக்குள்ள சலுகைகளையும் பாதுகாத்திடும் சமதர்மம்! ஆகவே, முதலாளிகளே! சமதர்மம் என்ற சொல் கேட்டு மிரண்டிடாமல் இந்தியாவில் எத்தனை எத்தனை ஆயிரம் கோடி முதலையும், அச்சமின்றிப் போட்டுத் தொழில் நடத்திடுவீர்!... என்று அமெரிக்க நாட்டு முதலாளிகளுக்கு, அந்நாட்டு அரசியற் பெருந்தலைவர்கள் கனிவாகக் கூறுகிறார்கள்; அமெரிக்கக் கோடீஸ்வரர்கள், இந்தியா போன்ற 'சந்தை' வேறு இல்லை என்று கூறிப் பேரானந்தம் கொள்கின்றனர்.

அமெரிக்க 'முதல்' வேறு எங்கும் ஈட்டிக் கொடுத்திடாத அளவு 'வருவாய்' இந்தியாவிலே அவர்களால் பெறமுடிகிறது. பெயர் சமதர்மம்!!

நாற்பதனாயிரம் தொழில் வணிகக் கோட்டங்கள் இணைந்த பிரிட்டிஷ் தொழில் அமைப்பு, இதுபோன்றே, "நாம் இந்தியா மேற்கொண்டுள்ள சமதர்மத் திட்டம் பற்றிக்கவலையோ அச்சமோ கொள்ளத் தேவையில்லை. சமதர்மம் என்று அவர்கள் சொல்லுவதாலே நாம் தொழிலிலே போட்டிருக்கும் முதலுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்பட்டுவிடாது." என்று கருத்தறிவித்திருக்கிறது.

பொருள் விளங்குகிறதல்லவா தம்பி! நோஞ்சான். பயில்வான் என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கிறான், அவ்வளவுதான்! முதலாளிகளின் முகாம் இந்தியா... அதற்குப் பெயர், சமதர்மம்!!

உண்மை நிலை இதுபோல இருப்பதனால்தான் இவர்கள் நடத்திக் கொண்டுவரும் திட்டம், பணக்காரர்களுக்கே பெரிதும் பயன்பட்டு விட்டிருக்கிறது. மகனாலோபீஸ் குழு (துரைத்தனமே அமைத்தது) இதனை எடுத்துக்காட்டியும் விட்டது. ஆகவே, ஏழையை வாழவைத்து, எல்லோரும் பொங்கற் புதுநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிடத்தக்கதோர் நிலையைக் காண வேண்டுமானால், இன்றுள்ள அரசை நம்பிக் கொண்டிருந்தால், ஏமாற்றமடைவோம். கவனித்துப் பார், தம்பி!

இஞ்சி போடவேண்டிய இடத்தில் மஞ்சளைப் போடுகிறார்களா என்று! அந்தப் பக்குவத்தைக் கவனி! ஒரு வேளைச் சோற்றுக்கு இவ்வளவு பக்குவம், முறை, தெளிவு, முயற்சி வேண்டும். முந்தானை கொண்டு அந்த வியர்வை முத்துக்களைத் துடைத்துக் கொள்ளக்கூட நேரமின்றி உன் குயிலாள் வேலை செய்த பிறகுதான் தம்பி! உனக்குப் பொங்கல், பால், பழம். உழைப்பு! முறையான உழைப்பு! பக்குவமான முறை! இடமறிதல்! நேரமறிதல்! அளவறிதல்'...இத்தனையும் வெறும் சொற்கள் அல்ல!! இவைகளின் வடிவங்களே, மனையிலே காண்கின்றாய்! புதிய சமுதாயம் படைத்திட, இவைகளைக் கண்டு கருத்தறிதல் வேண்டும்.

கண்டு கருத்தறிதலோ கடினம்; ஆனால் தேவை; மிக மிகத் தேவை. அறிந்ததை மற்றவர்கட்கு எடுத்துரைத்தல் அதனினும் கடினம்; மிகமிகத் தேவை.

நாடு வாழ்ந்திட, மக்கள் ஏற்றம்பெற, நம் ஆன்றோர்கள் சான்றோர்கள் கூறியன யாவை என்பதனை ஆய்ந்தறிய இவ்விழா நாளில் முயன்றிட வேண்டும்.

இன்றுள்ள புத்தறிவினர் கூறியுள்ளனவற்றினை அன்றிருந்த நம் ஆன்றோர்கள் கூறியுள்ளனர் என்பது, கண்டு, கண்சிமிட்டி மகிழ்ந்திருப்பது மட்டும் பயன் தராது. அன்று முதற்கொண்டு சொல்லியும் இன்றுவரை அம்மொழி வழி நாம் நடந்தோமில்லையே என்றெண்ணி வெட்கித் தலைகுனிதல் வேண்டும்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே நமக்கு வள்ளுவர் கூறியுள்ளார். கூறி? ஜாதிகள் இல்லையடி பாப்பா என்று இந்நாளில் பாரதியார் கூறிக் காட்ட வேண்டியதாயிற்று. அதற்குப் பிறகும், ஜாதிப் பிடிப்பும் பித்தமும் நீங்கியபாடில்லையே! பேழையில் பொருளை அடைத்து, பேதையொருவன் அதன்மீதே, பட்டினி கிடந்த நிலையில் சாய்ந்திருந்தான் என்றால்—அப்படி ஒரு கதை சொன்னால்—வியப்படைகினறோம், அறிவுப் பேழை இங்கு...ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே!! எனினும் எத்தனை பேதம், பிளவு, மதியற்ற போக்கு, குருட்டுப் பிடிவாதம், முரட்டுவாதம், சே!!

தம்பி! இதனை எண்ணிடும்போது உள்ளபடி வெட்கம் விலாவினைக் குத்திடுகிறது.

ஆகவே, அன்றிருந்தோர் கூறிச் சென்ற அரிய கருத்துக்களையும், இன்றுள்ள நூலோர் தந்திடும் நற்கருத்துக்களையும் அறிந்து. மற்றவர்க்கும் அறிவித்து அதற்கேற்ப, நமது முறைகளை, ஏற்பாடுகளைத் திருத்தி அமைத்துக் கொள்ளவேண்டும். மாக்கோலம் போடக் காண்கிறாயே, உன் மனத்தை வென்றாள்! வெண்குழம்பினைக் கலயத்திட்டு, தரைதனைக் கூட்டித் துப்புரவாக்கி, என்ன வரைவது எனத் தேர்ந்தெடுத்துத் திட்டமிட்டு, கோலம் போட்டிடக் காண்கிறாய்—வெண்குழம்பைக் கீழே கொட்டிவிட்டு நடப்போர் கால்பட்டுப் பட்டு ஏதேனும் ஓர் கோலம் உண்டாகட்டும் என்றா இருந்து விடுகின்றாள் உன் ஏந்திழை! இல்லையே? சமுதாயம் புதுக்கோலம் கொள்ள, நீயும் நானும் இன்னமும் என்ன வண்ணக் குழம்பு தேவை? எத்தகைய வட்டிலில் இடுதல் வேண்டும்? என்பது குறித்தே கூட, ஒரு திட்டவட்டமான எண்ணம் கொண்டிடத் தயக்கப்படுகிறோமே! புத்துலகு சமைத்திட எங்ஙனம் இயலும்?

நமக்கு நெடுங்காலத்துக்குப் பிறகு, அடவி நிலையினின்றும் விடுபட்டு, நாடு கண்ட இனத்தவரெல்லாம் இன்று தத்தமது நாட்டினைப் புதுமைப் பூங்காவாக்கிப் பொலிவுடன் திகழ்கின்றனர். நாமோ, வித்திடும் செயலைத் தானும் முறையாக மேற்கொண்டோமில்லை. சமூக அமைப்பிலும் செயலிலும் நெளியும் கேடுகளைக் கண்டித்திடும் துணிவுடன் நம் பேச்சும் எழுத்தும் உள்ளனவா? இல்லை! ஒரு சிலர் துணிவு பெற்றிடினும், பாய்கின்றனர் அவர்மீது; பாவி! பழிகாரன்! பழைமையை அழிக்கின்றான்! பாபக் கருத்தைப் புகுத்துகின்றான்! நாத்திகம் பேசுகிறான்! வகுப்பு வெறி ஊட்டுகிறான்!! என்றெல்லாம் கதைக்கின்றனர். ஜாதிப் பிடிப்புகளையும் அவைகளுக்கான மூடக் கோட்பாடுகளையும், 'புதிய நாடுகள்' என்று நாம் வெகு எளிதாகக் கூறிவிடுகின்ற இடங்களில், எத்தனை காலத்துக்குமுன்பே, எத்துணைத் துணிவுடன் தாக்கினர், தகர்த்தனர் என்பதனை அறியும் போது, வியப்படைகிறோம்.

ஏழையர்க்காக வாதாடினவர்கள், செல்வபுரிக் கோட்டைகள்மீது தாக்குதல் நடாத்தியவர்கள்; மூட நம்பிக்கைகளை முறியடித்தவர்கள் அங்கெலாம் இருநூறு ஆண்டுகட்குமுன்பே வீரஞ்செறிந்த பாக்களை இயற்றினர்; புரட்சிக் கருத்தினை அளித்தனர்.

இங்கோ, அந்த முனையில் பணியாற்றத் துணிபவனை, பாரதப் பண்பாட்டை அழிப்பவன், பக்தி நெறியைப் பழிப்பவன் என்றெல்லாம் ஏசிப் பேசிடக் கிளம்புகின்றனர்.

1873-ம் ஆண்டு பிறந்தவர் ஆங்கிலக் கவிஞர் ஜான்மேஸ்பீல்டு என்பார். சங்கத்தில் பயின்று, சீமான்களின் அரவணைப்புப் பெற்றுக் கவி பாடி அரங்கேற்றினவர் அல்ல! கப்பலில் கூலி வேலை செய்துவந்தவர். மற்றும் பல கடினமான உழைப்புகளைச் செய்து பிழைத்து வந்தவர்-அவர் ''நான் கவி பாடுவேன்; யாருக்காக? ஏழைக்காக!'' என்ற கருத்துப்பட ஒரு கவிதை இயற்றினார். அன்று இருந்த அறிவாளர்களிடையேயே அக்கவிதை புரட்சியை மூட்டிவிட்டது என்கிறார்கள்.

எவரைப் பற்றிப் பாடப் போவதில்லை என்பதனை முதலிலேயே தெரிவித்து விடுகிறார் மேஸ்பீல்டு:

வாழ்வின் சுவைதன்னை
வகையாய்ப் பல்லாண்டு
உண்டு உடல் பெருத்து
ஊழியர் புடைசூழத்
தண்டு தளவாடமுடன்
தார் அணிந்து தேரேறும்
அரசகுமாரர், அருளதிபர்
தமைக் குறித்து அல்ல!

புலவர் கவிபாடுகிறார் என்றால், அது, மன்னனை அல்லது அருளாளனைப் புகழ, போற்றத்தானே இருக்க முடியும் என்ற எண்ணம் அழுத்தமாக இருந்திருக்கிறது. 1873-ம் ஆண்டல்லவா! அதை அறிந்து, மேஸ்பீல்டு நான் உங்களுக்குப் பழக்கமான கவிஞன் அல்ல, நான் புதுமைக் கவிஞன்—நான் மன்னனைப் பற்றியுமல்ல, தேவாலயத்து அதிபனைப்பற்றியும் அல்ல பாடப் போவது!!—என்று தெரிவிக்கிறார்.

''அரசகுமாரர்
அருளாலய அதிபர்
தமைக்குறித்து அல்ல!

என்ற துவக்கமே, துணிவு நிரம்பியது. கவிவாணர்கள் நெடுங்காலமாகப் பாடிக்கொண்டு வந்த முறையை

நீக்கிவிட்டு, நீ புது முறையில் பாடப்போகிறாயோ? எவரைப்பற்றி? என்று கேட்பார்கள் அல்லவா! கூறு கிறார்!!

இன்னல்தரு ஈட்டிவளையத்துள்
ஆண்டுபல இருந்தோர்
ஏனாதானோக்கள்
எச்சிற் கலையங்கள்
சாவுவரும் வரையில்
சளைக்காது போரிட்ட
கந்தலுடைக்காரீர்
களம் கிளப்பும்
தூசி ஓசையுடன்
ஓலம் உளம்மருட்ட
மண்டை உடைபட்டோர்
கண் புண்ணானோர்

இவர்களைப்பற்றித்தான் நான் பாடப்போகிறேன் என் கிறார். இவர்கள் இன்னலைக் கண்டவர்கள், இழிநிலை யில் தள்ளப்பட்டுள்ளவர்கள், இவர்களை மற்றவர்கள் கவனியாமல், பூபதிகளைப் பாடிக்கொண்டிருந்து வந்தனர்; நான் இந்த

ஏனோதானோக்கள்
எச்சிற்கலையங்கள்

என்று ஒதுக்கிவிட்டிருக்கிறீர்களே, அவர்களைப்பற்றித் தான் பாடப் போகிறேன் என்று தெரிவித்துவிட்டு, மேலும் எந்தவிதமான ஐயப்பாடும் ஏற்படக்கூடாது என்ற எண்ணத்துடன்

மார்பகம் தன்னில்
விருதுகள் மின்னிட
பரிஏறிப் படைகாணப்
பவனி வரும்
படைத்தலைவனாம்
மன்னனின் செல்லப்பிள்ளை

இருக்கிறானே, அவனைப்பற்றிப் பாடப்போவதில்லை என்று கூறுகிறார்; மன்னன் தனக்கு விருப்பமான ஒருவனைப் படைத்தலைவன் ஆக்கிவிடுவான்; வீரன் என்பதற்காக அல்ல! அவன் மன்னனின் செல்லப்பிள்ளை

என்பதால்! அந்தப் படைத்தலைவன், விருதுகள் பதித்த ஆடம்பர உடை அணிந்துகொண்டு, கெம்பீரமாகக் குதிரை மீதமர்ந்து வருவான், படைவரிசையைப் பார்வையிட! வழக்கமாகக் கவிஞர்கள், இவர்களைப் பாராட்டுவர், புகழ் பாடுவர்.

இவர்கள் அல்ல உள்ளபடி பாராட்டுப்பெற வேண்டி யவர்கள். போரிட்டு மடிந்தவர்கள் வேறு வேறு! இந்தத் தலைவன் காட்சிப்பொருள்! இவனையா நான் பாடுவேன்! இவனை எனக்குத் தெரியாதா! வீரனா இவன்? இவன் மன்னனின் செல்லப் பிள்ளை! என்று கேலிமொழியால் துளைக்கிறார் மேஸ்பீல்டு—துளைத்துவிட்டுக் கூறுகிறார், நான் பாடப்போவது எவரைப்பற்றித் தெரியுமா?

எவர், அவர்? என்று
எவரும் அறியா நிலையினர்!
ஏறு நடைபோட்டு
வெற்றி கண்டார்!
இளைஞர்!

இவர்களைப் பற்றி என் கவிதை! என்கிறார். ஏன்? ஒரு போரிலே மும்முரமாக ஈடுபட்டு, குருதிகொட்டி, வெற்றி ஈட்டியவர்கள் இந்த இளைஞர்கள்—ஆடம்பர உடையுட னுள்ள படைத்தலைவன் அல்ல! நான் அந்தப் 'போலி' யைப் புகழமாட்டேன் என்கிறார்.

கொலு இருக்கும்
கோவை அல்ல!

என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விடுகிறார். போர் குறித்த புகழ்ப் பாட்டு என்றால், கொலு இருக்கும் மன்னனைப் பற்றித்தான் மற்றவர்கள் பாடியிருக்கிறார் கள்—இது நாள்வரை. நான் அப்படி அல்ல!

குடிமகனாய் உள்ளோன்
ஊர்சுற்றும் உழைப்பாளி
தோள்குத்தும் முட்கள் நிறை
மூட்டைதனைச் சுமப்போன்,
தாங்கொணாப் பாரந்தனைத்
தூக்கித் தத்தளிப்போன்
கலத்தில் பணிபுரிவோன்
உலைக்கூடத்து உழல்வோன்

ஏதோ இசை எழுப்பி அதனால்
இனிமைபெற எண்ணுபவன்
ஏரடிப்போன்!
தூக்கம் தொட்டிழுக்கும்
துயர் கக்கும்
கண்கொண்டான்.

இவர்களைப்பற்றி நான் பாடுவேன் என்கிறார். இனி மேலா பாடவேண்டும்; இதோ பாடியே விட்டாரே,

தூக்கம் தொட்டிழுக்கும்
துயர் கக்கும்
கண்கொண்டான்

என்ற வரிகள் அந்த ஏழையின் நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டிவிடுகிறதே! மேஸபீல்டுடைய இதயந் தன்னில் எவரெவர் இடம்பெற்றுள்ளார் என்பது விளக்க மாகிறதே. இந்தக் கனிவு, மற்றவர்களால் புறக்கணிக்கப் பட்டுப்போன, ஏழை எளியோர்க்காக, உழைத்து உருக் குலைந்தோருக்காக! ஏழையிடம் இந்தக் கனிவு காட்டாத கவிவாணர்களை அலட்சியமாகக் கருதுகிறார்; ஒதுக்கித் தள்ளுகிறார்;

மற்றவர் பாடட்டும்
மகிழ்ச்சி தரும்
மாடு மது குறித்து!

என்று இடித்துரைக்கிறார். செல்வவானைப் பற்றி அவனு டைய சிங்கார வாழ்வு பற்றி, அவன் மந்தகாசம் பற்றி, அவன் மாளிகையிலுள்ள மதுவகை பற்றிப் பாடுகிறார் களே, அவர்களைக் குறித்து மேஸ்பீல்டுவுக்கு அத்துணை எரிச்சல். அவர்கள் பாடட்டும் அவை பற்றி என்று ஒதுக்கித் தள்ளிவிடுகிறார்.

என் பாடல்
குப்பை கூளம் பற்றி
குப்பன் சுப்பன் குறித்து

என்று அறிவிக்கிறார். இவர்களைப் பற்றிய கவிதையிலே கவர்ச்சி இருக்காதே, மெருகு இருக்காதே என்று கேட்பவர் உளர் என்பது தெரியுமல்லவா இந்தப் புதுமைக் கவிஞனுக்கு?

அவர்கள் இசையினிலே
வண்ணம் புகழுடன்
பொன் மின்னும்,

என்று கூறுகிறார். பளபளப்பு, மெருகு, இவை தேவையா! அவர்கள் இசையிலே கிடைக்கும், போய்ப் பெற்றுக் கொள், அவைதான் பெறத்தக்கன என்று கருதினால்— என்ற கருத்துப்படக் கூறுகிறார்; கூறிவிட்டு,

பிடிசாம்பல்
வாய்க்கரிசி
இவைபற்றி என் பாடல்!
குளிர்கொட்ட
மழைவாட்ட
குமுறிக்கிடப்போர்
விழி இழந்தோர்
முடமானோர்
இவர்பற்றி என்கவிதை!
இஃதே என் காவியம் காண்!

என்று தெரிவிக்கிறார்.

தம்பி! 1873-ம் ஆண்டு பிறந்த ஆங்கிலக் கவிஞர் இந்த அளவுக்கு ஏழைக்காகப் பரிந்து பேசிட முனைந் திருக்கிறார்:

இருபதாம் நூற்றாண்டில் இருக்கின்றோம்; இந்தக் காலத்திலாவது நாம் இடர்ப்பட்டு, இழிவு படுத்தப்பட்டு இல்லாமையால் தாக்கப்பட்டுக் கிடக்கும் எளியோர்க்கு நல்வாழ்வு கிடைப்பதற்கான முறையில் ஓர் அரசுமுறை அமைத்திடும் முயற்சியில், ஈடுபட வேண்டாமா!

செந்நெல் மணியினைக் காணும்போது தம்பி சேற் றிலே இறங்கி உழுது அதனை விளைவித்த உழவனை நினைவிற்கொள்ளவேண்டும். பாலையும் பாகையும் பழத்தையும் சுவைத்திடும்போது, இவற்றைப் பெற முடியா நிலையிலுள்ள எளியோர்களை வாழ வைத்திட வேண்டும் என்ற எண்ணம் தோன்றிவிடவேண்டும். உழைப்பின் உயர்வுபற்றிப் பேசிவிடுதல் மட்டும் போதாது. உழைப்பவன் உருக்குலைய அவன் தந்த செல் வத்தில் சிலர் புரண்டு கிடந்திடும் சீர்கெட்ட நிலையை மாற்றிட வழிகாண வேண்டும். இயற்கை வழங்கிடும்

பொருளின் அளவும், தரமும், வகையும் மிகப்பெரிது, அரசுமுறை நேர்மையானதாக்கப்பட்டால், எல்லோரும் இன்புற்றிருக்கும் பொற்காலம் கண்டிடலாம், இந்தத் திருநாளன்று, அந்தக் குறிக்கோளைக் கொண்டிட வேண்டுகிறேன்.

இன்னல் பல பின்னிக் கிடந்திடும்; எனினும் இன்றோர் நாளாகிலும் அவைதமை மறந்து, இன்புற்று வீறுடன் நடாத்தி மகிழ்ச்சி பெற்றிட வேண்டுகிறேன். உனக்கும் உன் மனையுளாருக்கும் என் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களை வழங்கி மகிழ்கிறேன். வாழ்க வளமெலாம் பெற்று! வாழ்க தமிழகம் உன் வல்லமைத் தொண்டினாலே!!

அண்ணன்,



14-1-65

காஞ்சிக் கடிதம் : 10

டில்லிக் கடிதம்

பத்திரிகை நிருபர்கள் மாநாடு: வினா—விடை

இந்தியை ஆட்சி மொழி ஆக்குவதையும் பரப்புவதையும் ஆட்சியாளர் விட்டுவிட வேண்டும்.

பக்தவத்சலனாரின் வேடிக்கைப் பேச்சு

எங்களுக்கு எந்த மொழி மீதும் வெறுப்பு இல்லை

பதினான்கு தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாக வேண்டும்.

தொடர்பு மொழியாகத் தமிழ் இருக்கலாம்.

துக்க நாளில் வன்முறை எழக் காரணமாய் இருந்தவர்கள் காங்கிரஸ் தலைவர்களே.

இலால்பகதூரின் பேரப் பிள்ளை ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்பதாகக் கேள்வி.

தம்பி,

நாவலர் நெடுஞ்செழியன் அவர்களிடம் தொலைபேசி மூலம் பேசி முடித்தவுடன் எழுதுகிறேன்-மாணவர்கள் கல்விக்கூடங்களுக்குச் செல்லாமலிருக்கிறார்கள் என்ற செய்தி அறிந்து வேதனையுடன் எழுதுகிறேன். மொழிப் பிரச்சினையில் இயல்பாகவே அமைந்துவிட்டிருக்கிற

சிக்கல்களையோ, இந்திக்கு ஆதரவான அணியினர், ஒரு சாதகமான, சமரசச் சூழ்நிலை எழவிடாதபடி தடுக்க, வன்முறைக் கிளர்ச்சிகளையும், அமளிகளையும் தென்னகம் மேற்கொண்டு விட்டிருக்கிறது என்பதைக் காட்டி வாதாடி, சிக்கலை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதனையோ, மொழிப்பிரச்சினைக்குத் தீர்வுகாண, மிக மிகப் பொறுப்புணர்ச்சியும் பொறுமை உணர்ச்சியும் தேவைப்படுகிறது என்பதனையோ உணர மறுத்து மாணவர்கள் இவ்விதமான போக்கினை மேற்கொண்டிருப்பது, தாங்கிக்கொள்ள முடியாத வேதனை தருகிறது. நாவலர் மாணவர்களுக்கு விடுத்த வேண்டுகோள் இன்று மாலை வானொலி மூலம் அறிந்து ஆறுதல் அடைந்தேன். அவர் கேட்டுக்கொண்டதுபோலவே நானும் மாணவர்களைக் கேட்டுக்கொள்வதாக இதழ்களில் அறிக்கை வெளியிடும் படிக் கேட்டுக்கொண்டேன்.

இங்கு, நான்கு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில், நான் பேசியதில், தொடர்பு—பொருத்தம் நீக்கிச் சில பகுதியை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு, முதலமைச்சர் பக்தவத்சலம் சட்டசபையில் பேசியது குறித்தும், அதற்கு மதியழகனும் தாமும் தக்க விளக்கம் அளித்ததுபற்றியும் நாவலர் கூறக் கேட்டேன்.

என் பேச்சிலே துண்டு துணுக்குகளைத் தூக்கி வைத்துக்கொண்டு, காங்கிரஸ் தலைவர்கள் விளையாடுவது இது முதல் தடவை அல்ல; ஒவ்வொரு தடவை அவர்கள் இந்த விதமான விளையாட்டிலே ஈடுபடும்போதும், ''இதோடு தொலைந்தான் பயல்! இதோடு கழகம் ஒழிந்தது!'' என்று எக்களிப்புக் கொள்ளுவதை நாடு நன்கு அறியும்.

''உங்கள் அண்ணாதுரை இந்திக்குச் சம்மதம் தெரிவித்துக் கையெழுத்துப் போட்டு விட்டான், தெரியுமா!'' என்று முன்பு ஒருமுறை காங்கிரஸ் தலைவர்கள் மேடை தவறாமல் பேசியது எனக்கு நினைவிலிருக்கிறது. சட்டசபையிலே நான் திட்டவட்டமாக, நான் அவ்விதம் கையெழுத்துப் போட்டேனா? என்று கேட்டபோதுதான், அப்போது அங்கு அமைச்சராக இருந்த சுப்பிரமணியம்,

''இல்லை! கையெழுத்துப் போடவில்லை'' என்று தெரிவித்தார். அதுவரையில் ஒரு பத்துநாள், விளையாடிக் கொண்டிருந்தார்கள். அதிலே அவர்களுக்கு ஒரு தனிச் சுவை! அனுபவித்துவிட்டுப் போகட்டும்.

மொழிப்பிரச்சினையிலே உள்ள சிக்கலைப்பற்றியும், தமிழகம் கொந்தளித்துக் கொண்டிருப்பதையும், அது குறித்துத் தக்கவிதமான கவனம் செலுத்தாமல், மேல் மட்டத்தில் உள்ளவர்கள் இருப்பதையும் எண்ணி எண்ணி வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் எனக்கு, காங்கிரஸ் தலைவர்கள் செய்வதுபோன்ற விளையாட்டிலே ஈடுபட நேரமுமில்லை, நினைப்பும் எழவில்லை.

கிட்டத்தட்ட ஒருமணி நேரம் பேசினேன். பலன்? என்ன கிடைக்கும் என்று எனக்கே தெரியவில்லை. லால்பகதூர் அவர்களின் பேச்சிலே, இதுபற்றிக் குறியும் தென்படவில்லை; கோடிட்டும் காட்டவில்லை. இந்த நிலை இங்கு, ஆளவந்தார்களின் அணியில்.

ஆனால், முன்பு நான் புதிய திருப்பம் என்ற கட்டுரையில், குறிப்பிட்டுக்காட்டிய 'சூழ்நிலை' பொதுவாகப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுகளில் தெரிகிறது.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு உள்துறை அமைச்சர் நந்தாவைக் கண்டு, மொழிப்பிரச்சினையில் ஒரு நல்ல தீர்வு கண்டாகவேண்டும் என்று வற்புறுத்தி இருக்கிறார்கள். இரண்டொருவர் அதுபற்றி என்னிடமும் பேசினார்கள் நம்பிக்கையுடன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை இந்தச் சமயம் பார்த்து அழித்துவிட, காங்கிரசிலே சிலர் துடியாகத் துடிக்கிறார்கள் என்பதற்கும் குறிகள் தென்படுகின்றன.

மாநிலங்கள் அவையிலே நான் பேசியதன் முழுவடிவம் கிடைக்கப் பெற்றிருக்கக்கூடும் என்று நம்புகிறேன். இந்தியாவின் பல பகுதிகளிலும் உள்ள இதழ்கள் கூடுமானவரையில் இந்தப் பேச்சை வெளியிட்டிருக்கின்றன—

அந்தந்தப் பத்திரிகை மேற்கொண்டிருக்கும் கொள்கைப் போக்கிற்கு ஏற்பத் தலைப்புகளிட்டும்-வெட்டி ஒட்டியும்-வெளியிட்டன. இது இயற்கை என்பது புரிவதால் எனக்கு எரிச்சல் எழவில்லை.

முதலமைச்சர் அளிக்கும் விளக்கம், சில இதழ்களில் முதலமைச்சரின் உறுதி என்ற தலைப்பிலும், வேறு சில இதழ்களில் முதலமைச்சரின் பிடிவாதம் என்ற தலைப்பிலும் வெளிவருவது காண்கிறோம் அல்லவா? அது போல, அவரவர்களின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ற தலைப்புகளுடன், என் பேச்சை இதழ்கள் வெளியிட்டுள்ளன. ஆனால், ஒரு இதழும், அடியோடு இருட்டடிப்புச் செய்துவிடவில்லை.

இந்தப் பேச்சினால் ஏற்பட்ட சமாதானச் சூழ்நிலை காரணமாகத்தான் பத்திரிகை நிருபர்கள் மாநாடு நடத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்தது.

பத்திரிகை நிருபர்கள் மாநாடு என்றால், நாம் சொற்பொழிவு நடத்த நடத்த, நிருபர்கள் குறிப்பு எடுத்து, இதழ்களில் வெளியிடுவது என்பதல்ல. பல இதழ்களின் நிருபர்கள் வருகிறார்கள்; கேள்வி மீது கேள்வியாகத் தொடுத்தபடி இருக்கிறார்கள்; அவற்றினுக்கு நாம் அளிக்கும் பதில்களைக் குறித்துக்கொண்டு போய், தத்தமது இதழ்களில் எந்தப் பகுதி தமக்குத் தேவை என்று அவர்களுக்குத் தென்படுகிறதோ அவைகளை வெளியிடுகிறார்கள்.

அன்று நடந்த நிருபர்கள் மாநாட்டில், எனக்குத் துணையாகத் தோழர் செழியன் இருந்தார்; அவருடைய இல்லத்தில்தான் நடைபெற்றது மாநாடு.

முப்பது நிருபர்கள் இருக்கும் வந்திருந்தவர்கள்; ஒரு மணி நேரத்திற்கு அதிகமாகவே நடைபெற்றது.

இத்தகைய நிருபர்கள் மாநாட்டில், மடக்குவது, குறுக்கிடுவது போன்ற முறைகளில் தேர்ச்சி பெற்ற நிருபர்களிடம், மிகத் தெளிவாகவும், அதிகமான பர

பரப்புக் காட்டாமலும் பேசவேண்டும். அன்று நான் நடந்துகொண்ட முறை குறித்து விவரமறிந்தவர்கள் பாராட்டியது கேட்டு மகிழ்ச்சியடைந்தேன். ஆனால், நான் அப்போதே, திருமதி செழியனிடம் சொன்னேன், ''எல்லாவற்றையும் விட்டுவிட்டு, தமிழ் நாட்டில் சில இதழ்கள், அண்ணாத்துரை இந்தியைப் பரப்ப ஒத்துக் கொணடான்'' என்று மட்டும் வெளியிடும், பாருங்கள்'' என்று சொன்னேன், இதழ்களின் போக்கு எனக்கும் தெரியுமல்லவா! நானும் ஒரு பத்திரிகை நடத்துபவன் தானே!! நான் கூறியபடியேதான் சில இதழ்கள் வெளியிட்டன. முதலமைச்சர் பக்தவத்சலமும் அதை வைத்துக் கொண்டுதான் பேசியிருக்கிறார் என்று தெரிகிறது.

இதுவும் ஒரு நல்லதற்கே பயன்படுகிறது; ஏனெனில், அன்று நடைபெற்றது முழுவதையும் எழுத ஒரு தூண்டு கோல் கிடைத்திருக்கிறது! நிருபர்கள், எவரெவர், என்னென்ன கேள்விகளை, என்னென்ன நோக்கத்துடன் கேட்டனர் என்பதனையும், அவற்றினுக்குப் பதில் அளிக்கும் முறையில் நான் என்னென்ன கருத்துக்களை எடுத்துக் கூறினேன் என்பதனையும் கூறிக் கொள்ள ஒரு நல்ல வாய்ப்பு.

இந்து இதழிலே மட்டும், குத்திக் கிளறி ஒரு நிருபர் கேட்டபோது அறைகூவலாக அண்ணாதுரை, இந்தியை ஆட்சி மொழி ஆக்குவதை சர்க்கார் விட்டு விட்டு, சர்க்கார் முன்னின்று இந்தி பரப்புவதை விட்டுவிட்டு, மக்களின் அமைப்பே இந்தியைப் பரப்ப முனைந்து, என் உதவியை நாடினால், செய்கிறேன் என்று கூறினார் என்று வெளியிட்டிருக்கிறது.

இந்து வெளியிட்டிருக்கிற முறையிலிருந்து, (1) சர்க்கார் இந்தியை ஆட்சி மொழியாக்குவதை விட்டுவிட வேண்டும் (2) இந்தியைப் பரப்ப சர்க்கார் முனையக் கூடாது என்பவைகளை நான் வலியுறுத்தி இருப்பது நன்கு விளங்கும்.

நமக்குத் தேவை, (1) இந்தியை ஆட்சிமொழி ஆக்கும் முயற்சியை சர்க்கார் கைவிட்டுவிட வேண்டும் என்பது (2) இந்தியைப் பரப்ப சர்க்கார் தனி அக்கறை காட்டும்

போக்கும் நிறுத்தப்படவேண்டும் என்பது. இந்த இரண்டும் சர்க்காரால் கைவிடப்பட வேண்டும்; ஐயா! இதனைச் செய்ய உம்மால் முடிந்து, செய்துவிட்டு வந்தால், பிறகு இந்தி பரப்புவதற்கு உதவி கேளும், செய்கிறேன் என்று நான் கூறியிருக்கிறேன்.

என்னிடம் அந்தக் கேள்வியைக் கேட்ட நிருபர், சாஸ்திரி சர்க்காரிடம் பேசி, இந்தி ஆட்சிமொழி ஆக்கும் திட்டத்தைக் கைவிட்டுவிடச் செய்யவேண்டும் முதலில்! செய்கிறாரா பார்ப்போமே!! அந்த முறையில், I will take up the challcnge—நான் அந்த அறைகூவலை ஏற்றுக்கொள்கிறேன் என்ற முன்னுரையுடன் நான் பேசினேன். இதை விடத் தெளிவாகப் பேசியிருக்க முடியாது என்றும் நம்புகிறேன். இதனை வைத்துக்கொண்டு முதலமைச்சரா கட்டும், மற்றவர்களாகட்டும், வேடிக்கை பேச என்ன காரணம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. போகட்டும். எத்தனையோ விதமான கலக்கத்தில் சிக்கிக் கிடப்பவர்களுக்கு, என் பேச்சு, சில விநாடி வேடிக்கைக் குப் பயன்படுவது பற்றி மனக்குறை கொள்வானேன்? நடந்தது முழுவதையும் அறிந்துகொள்ளும் வாய்ப்புப் பெறுபவர்கள், உண்மையை அறிந்துகொள்வார்கள்.

இந்தி எதிர்ப்பு இயக்கம் நடத்திடத் தொடங்கிய நாள்தொட்டு, நாம் தெளிவாக, ஒன்று கூறி வருகிறோம்: எங்களுக்கு எந்த மொழி மீதும் வெறுப்பு இல்லை; இந்தியை நாங்கள் அந்த விதத்தில் எதிர்க்கவில்லை; அது இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆக்கப்படுவதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம் என்பதனைத் திட்ட வட்டமாகத் தெரிவித்திருக்கிறோம்.

நமது கழகத்தின் தீர்மானம் தேசீய மொழிகளெல்லாம் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்பதாகும். அந்தப் பதினான்கு மொழிகளில் இந்தியும் ஒன்று.

இந்தியை அந்தப் பதினான்கு மொழிகளில் ஒன்று என்று கொள்ளமாட்டோம், கொள்ளக்கூடாது என்று நாம் சொன்னதுமில்லை; சொல்லப்போவதுமில்லை; சொல்லுவதில் நியாயமுமில்லை.

நாம் சொல்லி வருவதெல்லாம், இந்தி, இந்தியாவின் ஒரு பகுதியினரின் தாய்மொழி, அதனை இந்தியாவின் ஆட்சிமொழி என்று ஆக்குவது அடாது, ஆகாது, பெருந் தீது; அது இந்தி பேசாத மக்களை அநீதிக்கு ஆட்படுத்தும், இரண்டாந்தரக் குடிமக்களாக்கும். ஆகவே, அதனை ஒப்பமாட்டோம், எதிர்க்கிறோம் என்பதாகும்.

இந்த அடிப்படை மாறாது என்பது மட்டுமல்ல, நாம் மட்டுமே கூறிக்கொண்டு வருகிற இந்த அடிப்படையை இன்று வேறு பலரும் ஏற்றுக்கொள்ளத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

நான், மாநிலங்கள் அவையில் பேசியானதும், பிற்பகல், இந்தியின் தீவிரக் கட்சியான ஜனசங்கத்தைச் சார்ந்த வாஜ்பாய் பேசினார். அவர் என்னையும் நான் சொன்ன கருத்துக்களையும் பலமாகத் தாக்குவார் என்ற நப்பாசை பலருக்கு இருந்தது.

அவரோ, அண்ணாதுரை சொல்லுகிற பதினான்கு தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்ற திட்டத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று பேசினார்.

வாஜ்பாய், மாறுபட்டது எதிலே என்றால், 14-மொழிகளும் ஆட்சி மொழிகளாகக் காலம் பிடிக்கும்; அதுவரை ஆங்கிலம் தொடர்ந்து இருக்கட்டும் என்பதிலே தான். அவருடைய கருத்து இப்போதே 14 மொழிகளும் ஆட்சி மொழிகளாகி விடட்டும், ஆங்கிலம் அகற்றப் படட்டும் என்பது.

இதிலே நமக்கு என்ன ஆட்சேபம்! நாளைக்கே நமது தமிழ் மொழி, இந்தியாவின் ஆட்சி மொழியாகி அரியணை ஏறினால், ஆங்கிலம் நமக்கு ஆட்சிமொழியாக இருக்கவேண்டிய தேவை என்ன இருக்கிறது!

இந்தி இந்தியாவின் ஆட்சி மொழி ஆக்கப்பட வேண்டும் என்ற சர்க்கார் கொள்கை விடப்பட்டு, இந்திக்காகச் சர்க்கார் பணம் செலவிட்டுப் பரப்பும் முயற்சியை நிறுத்திக்கொண்டு, பதினான்கு மொழிகளும் இந்தியா

வின் ஆட்சி மொழிகள் என்று சட்டமாக்கப்பட்டு, அதன் படி நமது தமிழ் மொழி ஆட்சிமொழி என்ற நிலை பெற்று, பிறகு இந்தியைப் பரப்ப, மக்கள் அமைப்பு முயற்சி எடுத்துக் கொள்ளும்போது என் உதவி கிடைக்குமா என்று என்னை ஒருவர் கேட்கும்போது. கிடைக்கும் என்று கூறுவதிலே என்ன தவறு காண்கிறாரோ முதலமைச்சர், எனக்குப் புரியவில்லை.

அந்த நாள் வருகிறபோது,இந்தியை இங்குப் பரப்பும் முயற்சி மட்டுமல்ல, தமிழ்மொழியைப் பிற இடங்களில் பரப்பும் முயற்சியும் நடந்துவரும்.

இப்போதே, தென்னக மொழிகளில் ஒன்றை, இந்தி மாநிலத்தவர் படித்துக்கொள்ள வேண்டும் என்ற பேச்சு எழவில்லையா! நானேகூடச் சொன்னேனே, மாநிலங்கள் அவையில் பேசும்போது, தமிழ் கற்று, அம்மொழியில் உள்ள இலக்கியச் சுவையைப் பருகினால், வாஜ்பாயே கூட, தமிழ்தான் தொடர்பு மொழியாக இருக்கவேண்டும் என்று ஏற்றுக்கொள்ளுவார் என்று. உடனே அவர் என்ன துள்ளிக்குதித்தெழுந்து, ''முடியாது!! முடியாது! அப்போதும் தமிழ் மொழியைத் தொடர்பு மொழியாக ஏற்றுக்கொள்ள முடியாது'' என்றா பேசினார்? இல்லை! ஏன்? வாதங்களின் பொருத்தத்தையும் நிலைமை விளக்கத்துக்கான பேச்சின் பொருளையும் உணருபவர்கள், முதலமைச்சர் காட்டும் போக்கினைக் காட்டமாட்டார்கள். ஆனால், முதலமைச்சர் இப்போது உள்ள நிலைமையில் நான் அவரிடம் அதிக அளவு நிதானத்தன்மையை எதிர்பார்ப்பதற்கில்லை.

நிருபர்கள் மாநாட்டிலேகூட ஒரு நிருபர், பதினான்கு மொழிகளும் ஆட்சிமொழிகளாக்கப்பட்டு, பிறகு காலப் போக்கில் மக்களின் முயற்சியால், சர்க்காரின் பலமின்றி, ஒரு மொழி தொடர்பு மொழியாகட்டும் என்று கூறுகிறீர்களே, அந்தக் காலம் வரும்போது, மக்கள் வளமுள்ள மொழியாகப் பார்த்துத்தானே தொடர்பு மொழியாகக் கொள்வார்கள் என்று கேட்டபோது நான், ''ஆமாம்! வளமுள்ள மொழியைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். அதனால்தான் சொல்கிறேன், தமிழ் மொழியைத் தொடர்பு மொழியாகக் கொள்ளுங்கள் என்று. அது

தொன்மையான மொழி—வளமான மொழி'' என்று கூறினேன். வேறோர் நிருபர் குறுக்கிட்டு, ''சமஸ்கிருதத்தைக் கொண்டால் என்ன?'' என்று கேட்டார்; ''அது பேச்சு வழக்கு அற்றமொழி'' என்று பதிலளித்தேன். இவைகளையும் முதலமைச்சர் பக்தவத்சலம் மக்களிடம் எடுத்துக் கூறுவார் என்று நான் எதிர்பார்க்க முடியுமா!! ஆனால், இதனை நான் கூறியிருப்பதை நானே எப்படி மறந்துவிட முடியும்!

இந்துஸ்தான் டைம்ஸ் இதழ் நிருபர் காடிலால், பேட்ரியட். நாளிதழ் நிருபர் கிரிஷ்மதுர், ஸ்டேட்ஸ்மென் நாளிதழ் நிருபர் ரன்ஜித்ராய், டைம்ஸ் ஆப் இந்தியா சுதர்சன்பாடியா, இந்தியன் எக்ஸ்பிரஸ் (டில்லி வெளியீடு) திரிபாதி, இந்துஸ்தான் ஸ்டாண்டார்டு சைலேன் சட்டர்ஜி, பி. டி. ஐ அமைப்பிலிருந்து குப்தாவும் என். பாலசுப்பிரமணியமும், இந்து நிருபர்கள் இ. கே. ராமசாமியும் பட்டாபிராமனும், அமிர்தபஜார் பத்திரிகை நிருபர் தத்தா, ஈவினிங்நியூஸ் சி. பி இராமச்சந்திரன், மெயில் பி. ராமசாமி, அகில இந்திய ரேடியோ நிலையத்திலிருந்து கே. ஜி. ராமகிருஷ்ணன், யூ. என். ஐ. அமைப்பிலிருந்து கணபதி, இன்பா அமைப்பிலிருந்து ராஜேந்திரகபூர், நவபாரத் இதழிலிருந்து ஜெயின். இந்துஸ்தான் இதழிலிருந்து சந்திராகர், இந்துஸ்தான் டைம்சிலிருந்து தார், தினமலர் ராதா கிருஷ்ணன், பிரீ பிரஸ் ஜர்னல் சுவாமிநாதன், நவ்பாரத் டைம்ஸ் ரக்பீர் சகாய், பினான்ஷியல் எக்ஸ்பிரஸ் சந்தானம், சங்கர்ஸ் வீக்லி கோபு, திருச்சூர் எக்ஸ்பிரஸ் ஆர். சுந்தரம், ஜன்மபூமி, சுயராஜ்யாவிலிருந்து ஏ. எஸ் ரகுநாதன், இவர்கள் அன்று வந்திருந்தவர்கள். சிலருடைய பெயர்கள் விடுபட்டுப் போயிருக்கக்கூடும், ஒருமணி நேரத்துக்கு மேலாக அவர்கள் கேள்விகள் கேட்க,நான் பதில் அளிக்க, ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் வாய்ப்பு மிகுந்த விதமாக அந்த மாநாடு நடைபெற்றது.

அத்தனை நிருபர்களை மொத்தமாகச் சந்திப்பது எனக்கு முதல் முறை. அவர்கள் ஒவ்வொருவரும் இது போன்ற நிகழ்ச்சிகள் பலவற்றிலே பலமுறை கலந்து பழக்கப்பட்டிருப்பவர்கள். என்றாலும், அவர்கள் அனைவருமே என்னிடம் மிகவும் நட்புரிமையுடன் நடந்து

கொண்டனர். என் நன்றி அவர்களுக்கு. ஒரு சிலர், என் திறமையைப் பரீட்சிக்க வேண்டும் என்ற முறையில் கேள்விகளைக் கேட்கிறார்களோ என்ற எண்ணம் எழத் தக்கவிதமான பிரச்சினைகளைக் கிளப்பினார்கள் என்றாலும், மொத்தத்தில் எனக்கு, நமது நிலைமையைத் தெளிவு படுத்தவும், கொள்கையை வலியுறுத்தவும் அவர்கள் நல்ல முறையில் வாய்ப்பளித்தார்கள். இது எனக்காக அவர்கள் செய்த உதவி என்பதனைவிட, நாம் ஈடுபட்டிருக்கும் தூய காரியத்துக்குத் துணை செய்திருக்கிறார்கள் என்று கூறுவதுதான் பொருத்தம் என்று எண்ணுகிறேன்.

வந்தமர்ந்த சில விநாடிகளுக்குள்ளாகவே ஒரு நிருபர் —டில்லி இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர் என்று நினைவு— ''என்ன சொல்லப் போகிறீர்கள்? ஆரம்பிக்கலாமே!'' என்றார்.

''என் கருத்தினை மாநிலங்கள் அவையில் கூறியிருக்கிறேன். மேற்கொண்டு ஏதாகிலும் தேவை என்றால் கேளுங்கள், கூறுகிறேன்'' என்று நான் கூறினேன். கேள்விகள் புறப்பட்டன. ஒருமுறை எதிரே இருப்பவர், அடுத்தது வலப்பக்கத்தில் ஒருவர். திடீரெனக் கோடியிலிருந்து மற்றொருவர், அதைத் தொடர்ந்து இடப்புறத்திலிருந்து ஒருவர், பிறகு மூன்றாவது வரிசைக்காரர், இப்படிக் கணைகள்! சுவையும் இருந்தது, சூடும் தென்பட்டது. அன்பு ததும்பிடும் போக்கும் கண்டேன், அருவருப்பை அடக்கிக்கொள்ளும் போக்கும் இருந்தது.

ஜனவரி 26-ம் நாள், தி. மு. கழகம் என்ன திட்டம் மேற்கொண்டது? விளைவு என்ன? விளக்கம் என்ன? என்று ஒரு நிருபர் கேட்டார்.

ஜனவரி 26-ம் நாள், இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழி என்று ஆக்கிவிடுவதைக் கண்டிக்கத் துக்க நாள் நடத்த, தி. மு. க. திட்டமிட்டது, துவக்கத்திலிருந்தே முதலமைச்சரும் காமராஜர் உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்களும், வன்முறைச் சூழ்நிலை எழக்கூடிய விதமான முறையில் பேசலாயினர். காங்கிரஸ் இதழ்களில் அந்தப் பேச்சுகள் வந்துள்ளன. கறுப்புக் கொடிகள் அறுக்கப்படும், கொளுத்தப்படும், கறுப்புக் கொடி கட்டு

பவன் கரம் வெட்டப்படும் என்பன போன்ற பேச்சுகள் பேசப்பட்டன. பல காங்கிரஸ் அமைப்புகள், இத்தகைய வன்முறையில் ஈடுபடப் போவதாக இதழ்களிலேயே அறிவித்தன. போலீஸ் கமிஷனர், பொது இடங்களில் கறுப்புக் கொடி கட்டக்கூடாது, அமளி ஏற்படும்; உங்கள் கட்சிக் காரியாலயத்தில், வீடுகளில் கட்டிக்கொள்ளுங்கள் என்று எங்களிடமும், கறுப்புக் கொடியைக் கண்டால் அறுக்காதீர்கள், எங்களிடம் கூறுங்கள் நாங்கள் அகற்றிவிடுகிறோம் என்று காங்கிரஸ் தலைவர்களுக்கும் சொன்னார். நாங்கள் அதுபோலவே பொது இடங்களில் கறுப்புக் கொடி கட்டவில்லை; எங்கள் வீடுகளில்தான் கட்டினோம். ஆனால், காங்கிரஸ் படையினரும், போலீசாரும் எங்கள் கட்டடங்களிலே அத்துமீறி நுழைந்து கொடிகளை அறுத்தனர்; சிலர் கொளுத்தினர். இந்தவிதமான வன்முறைச் செயல் எழக் காரணமாக இருந்தவர்கள் காங்கிரஸ் தலைவர்களே—என்று கூறினேன்.

விவரமாக நான் இந்தச் சம்பவங்களை விளக்கியது கேட்டு, பல வட இந்திய இதழ் நிருபர்கள், முதல் முறையாக இந்த விவரம் கிடைக்கிறது; இதுவரை தெரியாதிருந்தது என்று கூறி வியப்படைந்தனர்.

இன்னும் தெரியவேண்டியது நிரம்ப இருக்கிறது; நள்ளிரவில் மாணவர் விடுதிகள் தாக்கப்பட்டதும், அங்குக் கண்ணீர்ப்புகைக் குண்டு வீசப்பட்டதும், அமைதியாக இருந்த மாணவர்களின் கிளர்ச்சி அமளியாகிட வழி வகுத்த அடாத நடவடிக்கைகளும், இவ்விதம் பல உள்ளன. இவைகளெல்லாம் அனைவருக்கும் தெரிய வேண்டும், உண்மை அப்போதுதான் துலங்கும், எங்கள் கழகத்துக்கும் இந்த நடவடிக்கைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது மெய்ப்பிக்கப்படும். கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், விடுதித் தலைவர்கள், இதழாசிரியர்கள், வழக்கறிஞர்கள் போன்றோர்கள் சான்றளிக்கத் தயாராக உள்ளனர். ஆகவேதான் நீதி விசாரணை வேண்டுமென வற்புறுத்துகிறோம் என்று விளக்கமளித்தேன்.

அடுத்தபடியாக ஒரு நிருபர், ''முதலமைச்சர்கள் மாநாடுபற்றி என்ன கருதுகிறீர்கள்?'' என்று கேட்டார்.

முதலமைச்சர்கள் மாநாட்டிலும், காங்கிரஸ்காரியக் கமிட்டியிலும். பிரச்சினைபற்றிப் பேசி, சில சிபாரிசுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில், அங்குக் காட்டப்பட்ட கருத்தோட்டத்தை ஒட்டி, எந்த விதமான மசோதா என்ன வார்த்தைகள் கொண்டதாகத்தயாரிக்கப் படுகிறது என்பதனைப் பார்த்த பிறகுதான் எங்கள் கருத்தைக் கூறமுடியும். பொறுத்திருந்து பார்க்க வேண்டும். மற்றொன்று; முதலமைச்சர்கள் காட்டிய மனோபாவத்திற்கு ஏற்றவிதமாகவே மசோதா கொண்டு வரப்படுகிறது என்றாலும், அது ஒரு தற்காலிகமான பரிகாரமாகத்தான் கொள்ளப்படும்; கோரிக்கையும் குறிக்கோளும் நிறைவேறி விட்டதாக மக்கள் கருதமாட்டார்கள்...நாங்கள் (தி. மு. க.) விரும்புகிற பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்ற இலட்சியப் பாதையில், அது ஒரு படி என்று மட்டுமே நாங்கள் கருதுவோம் என்று கூறினேன்.

ஆட்சிமொழிகள் சட்டத்தில் எந்தவிதமான திருத்தம் வரும் என்பது, இங்கு இத்தனை நாள் இருந்த பிறகும், என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதுபற்றி சர்க்கார் எந்த அளவு சிந்தனை செய்திருக்கிறார்கள் என்றுகூட அறிந்துகொள்ள முடியவில்லை. போன காரியம் முடிந்தது; நூற்றுக்கு நூறு வெற்றி என்று எங்கள் முதலமைச்சர் டில்லியிலிருந்து திரும்பியதும் கூறியிருக்கிறாரே என்று நான் கூறும்போது, இங்குள்ள சிலர் கண் சிமிட்டுகிறார்கள், கேலியாக!!

''ஆட்சிமொழிகள் சட்டத்தில் திருத்தம் உடனடியாகக் கொண்டுவரச் சொல்லி, வற்புறுத்தப் போகிறீர்களா?'' என்று ஒரு நிருபர் கேட்டார்.

பாராளுமன்றப் பேச்சில் லால்பகதூர், இதிலே அவசரம் காட்டக்கூடாது; அவரவர்களும் தத்தமது கருத்துக்களைக் கூறியபடி இருக்கக்கூடாது என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார். ஆயினும், எல்லாக் கட்சிகளின் தலைவர்களையும் அழைத்துப் பேசப்போவதாகவும் தெரிவித்திருக்கிறார். அவ்விதம் அழைக்கப்பட்டால், நான் வலியுறுத்திப் பேசுவேன் என்று கூறினேன்.

இடையில் இதனையும் கூறிவிடுகிறேன். இங்கு பல கட்சித் தலைவர்களையும் கலந்து பேசும் முயற்சி இருக்கும் அறிகுறியே காணோம்—பத்திரிகைகளில் வந்த செய்தியைத் தவிர!!

''சௌரி சௌரா கலகம்பற்றிக் கூறினீர்கள். அந்தக் கலகம் நடந்தது கண்டதும் மகாத்மா, கிளர்ச்சியை வாபஸ் பெற்றுவிட்டாரே, நீங்கள் ஏன் அதுபோலச் செய்யவில்லை?'' என்று ஒரு நிருபர் கேட்டார்.

கிளர்ச்சி என் தலைமையில் நடைபெறவுமில்லை, கழகக் கிளர்ச்சியுமல்ல அது, நான் வாபஸ் பெற. எங்கள் கிளர்ச்சி, 26-ம் நாள் மட்டும், துக்க நாள் நடத்துவது. 25-ம் நாள் நள்ளிரவே நாங்கள் கைது செய்யப்பட்டு, பிப்ரவரி 2-ம் நாள்தான் விடுதலை செய்யப்பட்டோம்.

நாங்கள் உள்ளே இருந்தபோதும் பிறகும் தொடர்ந்து நடைபெற்ற மாணவர் கிளர்ச்சி, கழகம் நடத்தியது அல்ல. ஆகவே, அதனை நிறுத்திவிட எனக்கு எப்படி வாய்ப்பு இருக்கமுடியும்? நாங்கள் திட்டமிட்டு, எங்கள் கழகத்தின் சார்பில் கிளர்ச்சி நடத்தினால், இன்னின்னார் மட்டும் இன்னின்ன முறையில் கிளர்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டு, வரையறை வைத்திருப்போம். தீய சக்திகள் நுழையக் கண்டால் தடுத்து அப்புறப்படுத்தி இருப்போம் என்று கூறினேன்.

ஒரு நிருபர் கேட்டார், ''இந்தி ஆதரவாளர்களாக உள்ள சில தலைவர்கள் தங்கள் குழந்தைகளை ஆங்கில மொழி மூலம் கல்வி கற்பிக்கும் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்களா? உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்.

லால்பகதூர் அவர்களின் பேரப்பிள்ளை, டில்லியில் அவ்விதமான பள்ளிக்கூடத்தில் படிப்பதாகக் கேள்விப்பட்டேன் என்று கூறினேன்.

உண்மையில், இங்கு நான் இதுபோலக் கேள்விப்பட்டேன்.

நான் கூறினதை எந்த நிருபரும் அன்றும் மறுக்கவில்லை: இன்றும் மறுக்கவில்லை.

தெரியுமா! தெரியுமா! உங்கள் அண்ணாதுரை என்ன சொன்னான் தெரியுமா! என்று சிலம்புபோடும் சீலர்கள், இந்தி ஆதரவாளர் லால்பகதூர் தமது பேரப்பிள்ளையை ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பி இருக்கிறார் என்பதனைக் கூறவா செய்வார்கள், எப்படி எதிர்பார்க்க முடியும்? சிலர் பசுவிடமிருந்து பால் பெறுகிறார்கள்; சிலர் 'கோமயம்' மட்டும் சிரமப்பட்டுச் செம்புப் பாத்திரத்தில் பிடித்து வைத்துக்கொள்கிறார்கள், அது அவரவர்களின் விருப்பம், தேவையைப் பொருத்தது?

''திராவிட முன்னேற்றக் கழகம் ஏதாவது கிளர்ச்சி செய்யப்போகிறதா?'' என்று ஒரு நிருபர் கேட்டார்.

பொதுக்குழு கூடித்தான் இதுபற்றித் தீர்மானிக்கும். என்றாலும், இப்போது சூழ்நிலை கெட்டுக்கிடக்கிறது. இந்தச் சூழ்நிலையில் கிளர்ச்சி துவக்கினால் தீயசக்திகள் நுழைந்துவிடும் என்ற அச்சம் எனக்கு இருக்கிறது என்றேன்.

''அப்படியானால் மக்களிடம் உங்களுக்கு இருந்த செல்வாக்கும் பிடியும் குறைந்துவிட்டது என்று பொருளா?'' என்று ஒரு நிருபர் மடக்கினார்.

மக்களிடம் செல்வாக்கு இருந்ததாகவாவது ஒப்புக் கொள்கிறீரே, மெத்த மகிழ்ச்சி. அந்தச் செல்வாக்கு அப்படியேதான் இருக்கிறது. ஆனால், நாம் பேசிக் கொண்டது மக்களைப்பற்றி அல்ல; தீயசக்திகளைப் பற்றி!!—என்று நான் கூறினேன். அவர் விடவில்லை. ''ஆக தீயசக்திகளை அடக்கிட முடியாது என்று அஞ்சுகிறீர்கள்?'' என்று குறுக்குக் கேள்வி கேட்டார். ஆமய்யா ஆம்! சர்க்காரால் முடியாததுபோலவே, தீயசக்திகளை அடக்கிட என்னாலும் முடியாமற் போய்விடும் என்று அஞ்சுகிறேன் என்று பதிலளித்தேன்.

''மொழி விஷயமாக உமது கொள்கை என்ன?'' என்ற பொதுப் பிரச்சினையை ஒருவர் எழுப்பினார்.

தேசிய மொழிகளெல்லாம் ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். அந்தக் கட்டம் வரையில்

ஆங்கிலம் ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருந்து வர வேண்டும். இதற்கு நாமாக ஒரு காலக்கெடு வைத்துக் கொள்ளக்கூடாது.

''பிறகு, ஒரு தொடர்பு மொழி வேண்டுமே. அது எது?''

அது எது என்பது மக்களாகப் பார்த்து, காலப் போக்கில், இயற்கையான சூழ்நிலையில், தீர்மானித்துக் கொள்ளவேண்டும். சர்க்கார் இன்ன மொழிதான் தொடர்பு மொழி என்று ஆணையிடக்கூடாது; ஆதரவு தரக்கூடாது; மக்களே தீர்மானிக்க வேண்டும்.

பதினான்கு மொழிகளில், எது தொடர்பு மொழி யாகும் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்? என்று கேட்டார் நிருபர்.

பதினான்கு மொழிகளில் ஏதாவது ஒன்று. தமிழுக்கு என்ன! வளமான மொழி! தொன்மையான மொழி! இலக்கியச் செறிவுள்ளது! தொடர்பு மொழியாகத் தமிழ் இருக்கலாமே என்று நான் கூறினேன்.

''தொடர்பு மொழியாக சமஸ்கிருதம் இருக்கலாமல்லவா?'' என்று கேட்டார் மற்றொருவர். 'சமஸ்கிருதமா, அது பேச்சு வழக்கு அற்ற மொழியாயிற்றே!' என்றேன். மேலால் அவர் அந்தப் பிரச்சினையைத் தொடரவில்லை.

இந்தி ஆட்சிமொழி என்ற திட்டத்தைச் சர்க்கார் விட்டுவிட்டால், பிறகு இந்தி பரப்பப்படுவதுபற்றி உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே? என்று ஒருவர் கேட்டார்.

இல்லை! ஆனால், அந்தப் பரப்பும் காரியத்தைச் சர்க்கார் செய்யக்கூடாது. மக்களின் அமைப்பு (அதிகார பூர்வமல்லாதது) செய்யவேண்டும் என்று கூறினேன்.

அப்போதுதான் அந்த நிருபர், கேட்டார், ''நீங்கள் உதவி செய்வீர்களா?'' என்று. நான் உடனே கூறினேன்,

''நான் அந்த அறைகூவலை ஏற்றுக்கொள்கிறேன். இந்தி ஆட்சிமொழி அல்ல என்று சர்க்கார் அறிவிக்கட்டும்; இந்தியைப் பரப்பும் காரியத்தில் சர்க்கார் ஈடுபடாமல் இருக்கட்டும்'' என்று கூறினேன்.

இதுதான் முதலமைச்சர் கரத்துக்குப் பந்து ஆயிற்று! என்ன வேடிக்கையான இயல்பு!!

இந்தியை ஆட்சி மொழி ஆக்கும் திட்டத்தைச் சர்க்கார் விட்டுவிட வேண்டும் என்றேனே அது?

இந்தியைப் பரப்பும் வேலையில் சர்க்கார் ஈடுபடக் கூடாது என்றேனே, அது?

பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்றேனே, அது?

தொடர்பு மொழி என்று எதனையும் சர்க்கார் அறிவிக்கக்கூடாது என்றேனே, அது?

தொடர்பு மொழியாக, தொன்மையும் வளமையும் மிக்கதமிழ் ஏன் கொள்ளப்படக்கூடாது என்று கேட்டேனே, அது?

அவை ஒன்றுகூட முதலமைச்சருக்கு, முக்கியமானவையாகப் படவில்லை!! ஏன் என்று கேட்க நான் யார்!! அவரோ முதலமைச்சர்!! நானோ கருணாநிதிக்கு அண்ணன்? நான்போய்க் கேட்கலாமா அவ்வளவு பெரியவரை, இந்தச் சங்கடமான கேள்வியை!!

ஒரு நிருபர் கேட்டார், ''ஆங்கிலத்தை வெள்ளைக்காரன் புகுத்திய போது ஏற்றுக்கொண்டீர்களே, இந்தியை அதுபோல ஏற்றுக்கொண்டால் என்ன?'' என்று.

உம்முடைய கேள்வியின் தோரணையே அச்சமூட்டுகிறதே ஐயா! வெள்ளைக்காரன் எப்படி ஆங்கிலத்தைக் கற்கச் சொன்னானோ அதுபோல இந்தியை ஏற்கச் சொல்கிறோம் என்றால் என்ன பொருள்? வெள்ளைக்

காரன்போல இந்திக்காரர் ஆட்சி செய்யத் திட்டமிடுகிறார்கள் என்பதல்லவா? இதைத்தான் இந்தி ஏகாதிபத்தியம் என்பது. மற்றொன்று, ஆங்கிலத்தை வெள்ளைக்காரன் திணிக்கவில்லை. நான் அறிந்த அளவில் ராஜாராம் மோகன்ராய் போன்ற சான்றோர்கள் ஆங்கிலக் கல்வி வேண்டும் என்று முறையிட்டு, பிறகே ஆங்கிலம் கற்பிக்கப் பட்டது என்றேன்.

''பன்மொழிகள் ஆட்சி மொழிகளாவது நடைமுறைக்கு ஒத்துவராது என்கிறேன்'' என்றார் ஒருவர்.

கடினம்—சங்கடம் என்றெல்லாம் சொல்லுங்கள்; நடைமுறைக்கு ஒத்துவராது என்று கூறிவிடமுடியாது. பல மொழிகள் உள்ள இடத்தில், வேறுமார்க்கம் இல்லையே! என்று கூறினேன்.

மறுபடியும் ஒருவர் அடிப்படைக் கேள்வியைத் துவக்கினார். ''என்ன காரணத்துக்காக இந்தியை வேண்டாமென்கிறீர்கள்'' என்றார்.

பலமுறை பல காரணங்களைக் கூறியாகிவிட்டது. ஒன்றுமட்டும் மறுபடியும் வற்புறுத்துகிறேன். இந்தி சிலருக்கு, தாய்மொழி — தன்னாலே வருவது — பரம்பரைச் சொத்து—அந்த மொழியை நாங்கள் கற்றுத் தேறி இந்திக்காரருடன் போட்டியில் வென்று இடம் பிடிப்பது, நிரந்தரமான இடையூறு—இது அநீதி என்றேன்.

''இயற்கையான சக்திகளால் மொழிகள் வளர வேண்டும், பிறகு அவைகளிலிருந்து தொடர்புமொழி கிடைக்கவேண்டும் என்கின்றீர்? இயற்கையான சக்தியை என்ன செய்து பெறுவது?'' என்று கேட்டார்.

சக்தி இன்னவிதம் பெறக்கூடியது என்று திட்டமிட்டுக் கூறமுடியாது. பொதுவான சில யோசனைகள் கூறுகிறேன். சகிப்புத்தன்மை வேண்டும், மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளிக்கும் இயல்பு வளரவேண்டும், ஆதிக்க நோக்கம் அகலவேண்டும், வெறித்தனம் என்

கிறார்களே அது ஒழிய வேண்டும். ஒரு உதாரணம் தருகிறேன். நான் நண்பர்களுடன் மோட்டாரில் வட இந்தியப் பகுதிகள் சென்றிருக்கிறேன்—மத்தியப் பிரதேசம் போன்ற இடங்கள். அங்கு வடஇந்தியர்கள், ஆங்கிலம் தெரிந்தவர்கள், எங்களுக்கு இந்திதெரியாது என்று தெரிந்த பிறகும், வேண்டுமென்றே பிடிவாதமாக, நாங்கள் கேட்பவைகளுக்கு, இந்தியில் தான் பதில் அளித்தார்கள். இது என்ன மனோபாவம் என்றேன். அவர் புரிந்துகொண்டார் என்று எண்ணுகிறேன்.

டில்லி இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர், வரும்போதே சொன்னார் ''நான் இந்திவாலா'' என்று, நான் கேட்காமலிருக்கும்போதே. அவர்தான், சில கேள்விகளை வேண்டுமென்றே, என் பொறுமையைக் கண்டறியும் முறையில் கேட்டார்.

அவர் கேட்ட கேள்வி இது.

''எவ்வளவுதான் நீங்கள் மறுத்தாலும், பொது மக்கள், தி. மு. கழகமும் வேறுசில அரசியல் கட்சிகளுந்தான் வன்முறைச் செயலுக்குக் காரணம் என்று எண்ணுகிறார்கள். அந்த நிலையில், தமிழ்நாடு, இந்தியாவின் மற்றப் பகுதியை மிரட்டிப் பணியவைக்க முயலுகிறது, இது முறையா?'' என்று கேட்டார்.

ஐயா! உம்முடைய கேள்வியின் அடிப்படையே தவறு. தி. மு. கழகம் வன்முறையைச் செய்யவில்லை, தூண்டவில்லை, பங்கு இல்லை, என்று நான் பன்னிப் பன்னி மறுத்த பிறகும், நீர், அந்தத் தவறான எண்ணத்தை விட்டுவிடாமல், அதை அடிப்படையாக்கிக் கொண்டு, வாதங்களை அடுக்கும் போதே, உமக்கு நான் பதில் கூறமுடியாது என்று கூறும் உரிமை எனக்கு இருக்கிறது. என்றாலும், கேட்டதற்குச் சொல்கிறேன்: தமிழ்நாடு, இந்தியாவின் மற்றப் பகுதியை மிரட்டிப் பணியவைக்கக் கிளம்பவில்லை. சொல்லப்போனால், இந்தியாவிலேயே, பலம்குறைந்த பகுதியாகத் தமிழ்நாடு இருக்கிறது என்று கூறினேன். கூறிவிட்டு, ஐயா! வன்முறைக்குக் காரணம் தி. மு. கழகம் என்று முதலமைச்சர் கூறியதை வைத்துக்கொண்டு பேசுகிறீரே, அதே முதலமைச்சர் சில நாட்களுக்குப் பிறகு, கள்ளச்

சாராயம் காய்ச்சுவோரும், கள்ளக்கடத்தல் பேர்வழிகளும் போலீசாரிடம் தங்களுக்கு இருந்து வந்த வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்று அறிக்கை விடுத்திருப்பது தெரியுமா என்று கேட்டேன். அப்படி ஒரு அறிக்கை வெளிவந்ததாகவே அந்த நிருபர் காட்டிக்கொள்ளவில்லை. கெட்டிக்காரர்!

''பாராளுமன்றக் கூட்டம் ஒரு தொடராவது தெற்கே நடத்தப்பட வேண்டும் என்று ஒரு யோசனை கூறப்படுகிறதே, அது பற்றி என்ன கருதுகிறீர்கள்?'' என்று ஒரு நிருபர் கேட்டார்.

ஆமாம், மேலும் பல யோசனைகள் கூடக் கூறப்படுகின்றன. பிரதமமந்திரி வடக்கே இருந்தால், குடியரசுத் தலைவர் தெற்கே வசிக்க வேண்டும், கடற்படைத் தலைமைக் காரியாலயம் வடக்கே இருந்து தெற்கு மாற்றப் பட்டு கொச்சியில் அமைக்கப்பட வேண்டும், இத்தகைய அமைப்புகள் இந்தியாவில் பல் வேறு இடங்களிலே பரவலாக்கப்படவேண்டும் என்றெல்லாம் யோசனைகள் கூறப்படுகின்றன. இவைகள், தென்னக மக்களின் மனத்துக்கு ஒருவிதமான ஆறுதல் அளிக்கலாம்—என்று கூறினேன்.

''மும்மொழித் திட்டப்படி இந்தி கட்டாய பாடமாக்கப்பட்டால், உமது போக்கு எப்படி இருக்கும்?'' என்று ஒரு நிருபர் கேட்டார்.

நான் என் எதிர்ப்பைத் தெரிவிப்பேன். இப்போதே அங்கு இந்தி கற்றுத் தரப்படுகிறது. இந்தி தவிர வேறு எந்த இந்திய மொழி கற்பதற்கும வகை செய்யப்படாததால் மறை முகமாக இந்தி கட்டாயப்படுத்தப்பட்டு வருகிறது வடக்கே உள்ளவர்களோ, தென்னக மொழியைக் கற்க முன்வரவில்லை. மூன்றாவது மொழியாக சமஸ்கிருதம் படிக்கிறார்கள். இந்தியைக் கட்டாய பாடமாக்கினால் எங்கள் மக்கள் வேதனைப்படுவார்கள்; எதிர்ப்பார்கள், என்று தெரிவித்தேன்.

''மத்திய சர்க்கார் அலுவல்களுக்கான பரீட்சை சம்பந்தமாக என்ன கருதுகிறீர்'' என்று கேட்டார் ஒரு

நிருபர்; அதுபற்றித் தெளிவான எந்தத் திட்டமும் வெளியிடப்படவில்லை, ஆகவே, அதுபற்றி நான் கருத்தைச் செலுத்தவில்லை என்று பதிலளித்தேன்.

''தொடர்பு மொழி இயற்கையான சூழ்நிலையில் வரவேண்டும் என்கிறீரே, மக்கள் ஒரு சிறுபான்மை மொழியைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு விடக் கூடுமல்லவா?'' என்று ஒருவர் கேட்டார்,

அப்படியும் நடக்கலாம். மற்றும் ஒன்று. வளமானதாக இருக்கிறதா என்று பார்த்து அத்தகைய மொழியை மக்கள் தொடர்பு மொழியாகக் கொள்ளக்கூடும் அதற்காகத்தான் நான் தமிழுக்காக வாதாடுகிறேன். தமிழ் அத்தனை வளமான மொழி!—என்று கூறினேன்.

ஒருவர், ''வங்காள மொழியும் தான்'' என்றார், சரி! தமிழ் போன்றே வங்காள மொழியும்; இருக்கட்டும் என்றேன். அவருடைய வங்காள மொழி ஆர்வம், பாராட்டத்தக்கது என உணர்ந்தேன்

''சௌரி சௌரா பற்றிச் சொன்னீர்கள்— அங்கு வன்முறை நடந்து, கிளர்ச்சியை மகாத்மா வாபஸ் பெற்றுக்கொண்டார். ஆனாலும் அதற்காக, காங்கிரஸ், கிளர்ச்சி செய்யும் உரிமையை இழந்துவிடவில்லை அல்லவா?'' என்று கேட்டார்.

உண்மை நாங்கள்கூட கிளர்ச்சி செய்யும் உரிமையை இழந்துவிடச் சம்மதிக்கவில்லை, வன்முறையைக் கண்டிக்கிறோம், வன்முறை எழமுடியாத முறையில் கிளர்ச்சிகள் அமையவேண்டும் என்பதில் கண்ணுங் கருத்துமாக இருக்கிறோம் ஆனால், கிளர்ச்சி நடத்தும் உரிமையை விட்டுவிடவில்லை என்று கூறினேன்.

''இந்தி ஒழிக! என்று முழக்கமிடுகிறீர்களே, இந்தி ஆதிக்கம் ஒழிக என்பதுதானே முழக்கமாக இருக்க வேண்டும்?'' என்று ஒருவர் கேட்டார்.

இலட்சிய முழக்கங்கள் எடுப்பாக, சுருக்கமாக அமையவேண்டும். சர்க்காரின் இந்தி ஆட்சி மொழி ஆக்கும் திணிப்பு ஒழிக!-என்று நீட்டி முழக்கிக் கொண்டிருக்க முடியாது. அதன் காரணமாகத்தான் இந்தி ஒழிக என்று சுருக்கமான முழக்கம் இருக்கிறது. மகாத்மா காந்தி வெள்ளையனே வெளியேறு! என்ற இலட்சிய முழக்கம் தந்தார். அவர் விரும்பியது வெள்ளைக்காரர்கள் வெளியேற வேண்டும் என்பது அல்ல; வெள்ளையர் நடத்தும் ஆட்சி ஒழியவேண்டும் என்பது. வெள்ளையர் இந்தியாவை ஆட்சி செய்வது வெளியேற வேண்டும் என்று விரித்துக் கூறவில்லை, சுருக்கமாக வெள்ளையனே வெளியேறு! என்றார். செய் அல்லது செத்துமடி என்பது அவர் தந்த மற்றொரு சுலோகம். என்ன செய்ய வேண்டும், எப்போது, எப்படி. ஏன் சாகவேண்டும் என்றெல்லாம் விளக்கமாக்கி, விரிவாகக் கூறவில்லை. சுருக்கமாக, செய் அல்லது செத்துமடி என்றார். இலட்சிய முழக்கங்கள் அவ்விதந்தான் சுருக்கமாக அமையும் என்று கூறினேன்.

''இந்தி எதிர்ப்பு உணர்ச்சி காரணமாகக் கழகத்துக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே உள்ள வேற்றுமை ஓரளவு குறைந்துவிட்டது உண்மையா?'' என்று ஒருவர் கேட்டார்.

உண்மைதான். பல காங்கிரஸ்காரர்கள் நாங்கள் கூறும் கருத்துக்களைப் பேசுகிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னை சட்டசபையில் ஒரு காங்கிரஸ் உறுப்பினர் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அரசியல் கட்சிகள் அமைத்துக் கொண்டுள்ள அரண்களை உடைத்துக் கொண்டு இந்தி எதிர்ப்புணர்ச்சி பீறிட்டுக் கிளம்பிவிட்டது என்று கூறினேன்.

வேறொரு நிருபர், ''பல ஆட்சிமொழித் திட்டமும் கூறுகிறீர், தொடர்புமொழித் திட்டம்பற்றியும் கூறுகிறீர்; இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரண் அல்லவா?'' என்று கேட்டார்.

எப்படி முரண்? முரண் அல்லவே! பல மொழிகள் இருப்பதனால்தான் ஒரு தொடர்பு மொழிப் பிரச்சினை எழுகிறது. இரண்டு திட்டமும் ஒன்றுக்கொன்று முரண் அல்ல; துணை என்று கூறினேன்.

இந்தவிதமாக ஒரு மணி நேரம் நடந்தது அந்த மாநாடு. பயனுள்ளதாகவே எனக்குத் தோன்றுகிறது.

சில நிருபர்கள் கேள்விகள் கேட்டது, அந்தப் பிரச்சினை புரியாததால் அல்ல, நான் என்ன சொல்லுகிறேன் பார்க்கலாம் என்ற நோக்கத்துடன். முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களுக்கும் தெரியாதா, நான் பேசியிருப்பதன் பொருளும் பொருத்தமும், தெரியும். தெரிந்தும் வேறுவிதமாகப் பேசுவானேன்? காரணம், யாருக்குத் தெரியாது. எதையாவது பிடித்துக் கொண்டு கரையேற எண்ணுவது தண்ணீரில் மூழ்கித் தத்தளிப்பவருக்கு எழும் எண்ணம்; துடிப்பு. நெடுநாட்களாக, கழகத்தை அழித்திட, என்ன கிடைக்கும், என்ன கிடைக்கும் என்று காங்கிரஸ் தலைவர்கள் துடியாய்த் துடிக்கிறார்கள், எதை எதையோ பேசுகிறார்கள், பிறகு எல்லாம் வீண் என்பது கண்டு விம்முகிறார்கள். இது அவர்களின் இயல்பு. இதனைக்கண்டு நான் வியப்படையவில்லை. இதுவும் ஒரு நன்மைக்குத்தான் என்ற முறையில் எடுத்துக் கொண்டு இங்கு நான் கலந்துகொண்ட நிகழ்ச்சி குறித்துத் தெரிவித்திருக்கிறேன். மணி மூன்று, தூங்க முயலுகிறேன். நன்றி, வணக்கம்.

அண்ணன்,

அண்ணாதுரை

21-3-'65

பின் குறிப்பு:

நான் தில்லியிலிருந்து அனுப்பிய கடிதம் 12-3-65 அன்றுதான் காஞ்சிபுரம் வந்து சேர்ந்தது. அக்கடிதம் வந்து சேருவதற்குமுன் சென்ற கிழமை 14-3-'65 இதழ் அச்சாகிவிட்டமையால், அதனை இந்தக் கிழமை (21-3-65) இதழில் காணுகின்றீர்கள்.

அன்பன்.

அண்ணாதுரை

தமிழ் நூல் காப்பகம்
09214
தமிழ் நகர் விருத்தாசலம் - 606 001